மார்க்சிய
தத்துவ – அரசியல்
பாடக்குறிப்புகள்

வெளியீடு:
இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
தமிழ் மாநில குழு

வெளியீடு : இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
தமிழ் மாநில குழு
28, தேரடி தெரு, திருவல்லிக்கேனி,
சென்னை–5

முதல் பதிப்பு : அக்டோபர் 1990

லேசர் கோர்வை : சென்னை மீடியா & பிரிண்ட்ஸ்
சென்னை–2

தயாரிப்பு : சென்னை புக்ஸ்,
சென்னை–2

ரூ. 8.00

உள்ளே. . .

பாடக்குறிப்புகள் குறித்து......

மார்க்சிய தத்துவம், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் திட்டம், கட்சி அமைப்பு–அரசியல் பொருளாதாரம், வெகுஜன அரங்கில் கட்சிப் பணி ஆகிய ஐந்து விஷயங்களைக் குறித்து வகுப்பு நடத்துவதற்கான குறிப்புகள் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் விரிவான அளவில் வக்ப்பு நடத்துவதற்காக இக்குறிப்புகள் வெளியிடப்படுகின்றன. இக்குறிப்பிலுள்ள விஷயங்களையும் விபரங்களையும் மேலும் விள்க்கமாகக் கூறுவதற்குத் தேவையான ஆதாரங்களையும் உதாரணங்களையும் வகுப்பு நடத்தும் தோழர்கள் சேகரித்துக்கொள்ள வேண்டும். இதற்கு மார்க்ஸீய நூல்களையும் கட்சியின் தஸ்தாவேஜுகளையும் சுயமாகக் கற்றறிவதும் பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்தில் ஆழமான ஈடுபாடும் அதன் அனுபவங்களும் வகுப்பு நட்த்துவதற்கு இன்றியமையாதது, அப்போது தான் அடிப்படைக்கோட்பாடுகளைச் சரியாகவும் சுலபமாகவும் எளியமுறையிலும் விளக்க முடியும்.

ஒவ்வொரு பாடக்குறிப்பிலும் உள்ள விஷய்ங்கள் அனைத்தையும் ஒரு சில மணி நேரத்திலோ அல்லது ஒரே நாளிலோ நடத்தி முடிக்க முயற்சிக்க வேண்டாம். பல பகுதிகளாகப் பிரித்து நடத்தலாம். வகுப்பில் பங்கு கொள்ளுவோரின் தரத்திற்கேற்ப பல பகுதிகளாகப் பிரிக்கலாம். ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கு முதலில் சுலபமாகப் புரியக்கூடிய பகுதிகளை நடத்தலாம். உதாரணமாக மார்க்சிய தத்துவ வகுப்பில் வரலாற்று ரீதியான பொருள் முதல்வாதம்–சமூக வளர்ச்சியின் வரலாறு – கதை போல் முதலில் கூறலாம். அதேபோல் கட்சித்திட்டம் பற்றிய பகுதியில் கட்சித்திட்டம் உருவான வரலாற்றுப் பின்னணி கட்சியின் வரலாறு பற்றிய பகுதி முதலில் கூறலாம். அதற்கான விபரங்களை மேலும் சேகரித்துக் கொள்ள வேண்டும். தொழில், விவசாயம், முதலாளித்துவ வளர்ச்சி பற்றிய கட்சித் திட்டப்பகுதிகளை விளக்க அண்மையில் வேலையின்மை எதிர்ப்பு இயக்கத்தை

யொட்டி சி.சி.ஏ.யு. வெளியிட்டுள்ள ‘வேலை இனியும் கனவல்ல’ என்ற பிரசுரத்திலுள்ள விபரங்களைப் பயன்படுத்தலாம். இவ்வாறு ஒவ்வொரு பாடக்குறிப்பிலும் முதல் பகுதி இரண்டாம் பகுதி மூன்றாம் பகுதி என்று பிரித்து வகுப்பு நடத்துவது பயனுள்ளதாக இருக்கும். தத்துவார்த்தப் பிரச்சினைகளை போதிப்பதும் கற்பதும் கடினமான காரியம். கூடுமானவரை எளிய முறையில் போதிக்க வேண்டும். கற்பவர்க்கும் சிரமம் பாராமல் கவனமாக கற்க வேண்டும். ஆழமான அரசியல் –தத்துவார்த்தப் பயிற்சியும் ஞானமும் இல்லாமல் பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கப்பணிகளை சரியாகச் செய்வதும், கொள்கைத் தெளிவுடன் உறுதியாக இயக்கத்தில் நீடித்து இருப்பதும் சாத்தியமல்ல. அடிப்படையான சமுதாய மாற்றத்தை லட்சியமாகக் கொண்டுள்ள ஒரு கட்சி இத்தகைய உணர்வுள்ள லட்சக்கணக்கானவர்களை உருவாக்க வேண்டியுள்ளது. இப்பணியினை ஆயிரக்கணக்கான தோழர்கள் மேற்கொள்ள வேண்டும். அதற்கு உதவும் முறையில்தான் இக்குறிப்புகள் வெளியிடப்படுகிறது. முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

வாழ்த்துக்கள்,

தமிழ் மாநில செயற்குழு
1.8.1990. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

மார்க்சிய தத்துவம் – ஒரு தொடக்கப் பாடம்

பி.ஆர்.பரமேஸ்வரன்

பாடக் குறிப்பு

பாகம்–1
பொருள்முதல்வாதமும், கருத்துமுதல்வாதமும்

1. "புரட்சிகரமான தத்துவம் இல்லாமல் புரட்சிகர மான இயக்கம் இல்லை"

லெனின்

தொழிலாளி வர்க்கப் புரட்சி இயக்கத்தின் தத்துவ ஞானம் "மார்க்சீயம்". முதலாளித்துவத்தை எதிர்த்துப் போராடும் பாட்டாளி வர்க்கம் ஏக காலத்தில் மும்முனைக ளில் போராட வேண்டுமென்று மார்க்ஸ் போதித்தார். ஒன்று, வாழ்க்கைத் தரத்தைப் பாதுகாப்பதற்கான பொருளாதார கோரிக்கைகளுக்கான போராட்டம். இரண்டு, அரசியல் உரி மைகளுக்கான – அரசியல் அதிகாரத்திற்கான அரசியல் போராட்டம். மூன்று: இவைகளில் வெற்றி பெற சுரண்டும் வர்க்கங்களின் தத்துவார்த்த – அரசியல் செல்வாக்கிலுள்ள மக்களை பாட்டாளி வர்க்க அணிக்கு வென்றெடுப்பதற்கான தத்துவார்த்தப் போராட்டம். இவை மூன்றும் இணைந்ததே பாட்டாளிவர்க்கப் புரட்சி இயக்கம். இவைகள் ஏக காலத்தில் நடத்தப்பட வேண்டும்.

தத்துவம் தோன்றிய வரலாற்றுப் பின்னணி

2. மனித சமுதாயத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்கில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தனிச்சொத்துடைமை ஏற்பட் டது. அக்காலத்தில் ஏற்பட்ட உற்பத்திக் கருவிகளின் வளர்ச் சியின் காரணமாக அவைகளைக் கொண்டு உழைப்பவன் அவனுடைய அவசியத் தேவை போக, உபரியை உண்டாக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டது. இந்த வளர்ச்சியின் காரண மாக கருவிகள் உள்ளவர்கள் இல்லாதவர்களைக் கட்டாயப் படுத்தி வேலை வாங்கும் நிலை – அடிமைப்படுத்தும் நிலை ஏற்பட்டது. அடிமைகள்–ஆண்டைகள் என்று இரு வர்க்கங் கள் வளரத் தொடங்கின. அடிமைகளின் உழைப்பால் உற்பத்

தியாகும் உபரியில் அடிமைச் சொந்தக்காரர்கள் சமூகம், வாழும் நிலை ஏற்பட்டது. உடலுழைப்பில் ஈடுபடாமல் வாழும் வாய்ப்பு எஜமானர்களுக்குக் கிடைத்தது. இந்நிலை யில், இவர்களில் பலர் அறிவுத் துறையில் மட்டும் முழுமை யாக ஈடுபடும் வாய்ப்பு பெற்றனர். கலை, இலக்கியம், தத்து வங்கள் தோன்றுவதற்குச் சாதகமான சூழ்நிலை ஏற்பட்டது.

மனித சமுதாயத்தில் வர்க்கப் பிரிவினை தோன்றிய பின்னணியில்தான் தத்துவம் பிறந்தது. முரண்பட்ட வர்க்க நலன்களும், மோதல்களும், தத்துவத்தில் பிரதிபலித்தது. ஆதிக்க வர்க்கத்தின் தத்துவ ஞானிகள் உருவாக்கிய தத்துவம் அவர்களின் ஆதிக்கத்தைப் பாதுகாக்கப் பயன்படுவதாக இருந்தது. இயற்கையிலும், சமுதாயத்திலும் ஏற்படும் நிகழ்ச்சி கள், மாறுதல்கள் அனைத்தும் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒரு சக்தியை–பரமாத்மாவை சார்ந்துள்ளது. அதனை மனிதனால் அறிய முடியாது, மாற்ற முடியாது என்ற கருத்தை அவர்கள் மக்களுக்கு போதித்தனர். இவர்கள் 'கருத்து முதல் வாதிகள்' என்று அறியப்படுகின்றனர். இதனை ஏற்காதவர்க ளும், அதே காலத்தில் தோன்றினர். இயற்கையிலும், சமூகத் திலும் ஏற்படும் எல்லா நிகழ்ச்சிகளும் இயற்கைக்கு அப்பாற் பட்ட சக்தியினால் ஏற்படுவதல்ல. இயற்கை, சமூக வளர்ச்சி விதிகளுக்கேற்பவே ஏற்படுகின்றன. இவைகளை மனிதனால் அறிய முடியும், மாற்றியமைக்க முடியும் என்ற தத்துவத்தை அவர்கள் முன்வைத்தனர். இது அடிமைகளின் நலன்களுக்கும், போராட்டத்திற்கும் உதவி செய்தது. தத்துவத்தில் இது "பொருள்வாதம்" என்று அறியப்படுகிறது.

கடந்த மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சமுதாயத் தில் நடைபெறும் வர்க்கப் போராட்டம், தத்துவத்திலும் தொடருகிறது. இக்காலத்தில், மனித சமுதாயமும் மேலும் வளர்ச்சியடைந்துள்ளது. தத்துவமும் வளர்ச்சியடைந்துள் ளது. இந்த வளர்ச்சிப் போக்கில்தான் 19–வது நூற்றாண்டின் மத்தியில் முதலாளித்துவம் வளர்ந்து வந்த பின்னணியில், தொழிலாளி வர்க்கத்தின் தத்துவ ஞானமான மார்க்சிஸம் தோன்றியது. ஆகவே, தத்துவமும் வர்க்க சார்புடையது. வர்க்க நலன்களைக்கொண்டது. வர்க்கப் போராட்டத்தில் வலுவான ஆயுதமாக செயல்படுகிறது. எந்த ஒரு தத்துவத்தை யும் அது தோன்றிய காலத்தோடும், சமூகப் பின்னணியோடும்

இணைத்துப் பார்க்க வேண்டும். அதன் வர்க்க சார்பு நிலையைக் கண்டறிய வேண்டும். தத்துவங்களின் பொதுவான விதிகளை விளக்குவதோடு அதனுடைய வர்க்கத் தன்மையையும் தெளிவுபடுத்த வேண்டும். வர்க்க சமுதாயத்தில், வர்க்க சார்பற்ற தத்துவங்கள் என்று ஏதும் இருக்க முடியாது.

சமுதாயத்திலுள்ள மிகப் பெரும்பாலான மக்கள் படிக்காத பாமரர்கள், படித்தோர் என்ற வேறுபாடின்றி ஆதிக்க வர்க்கத்தினால் நீண்ட நெடுங்காலமாக பரப்பப்பட்டு வரும் ஆன்மீகவாத தத்துவங்களுக்கு இரையாகியுள்ளனர். தாங்கள் படும் கஷ்டங்களுக்கு சுரண்டல் சமுதாய முறையே காரணம் என்று அறியாத மக்கள், தலையெழுத்து, முன் பிறப்பில் செய்த பாவத்தின் பலன், எல்லாம் அவன் செயல், வாழ்வே மாயை, உலகே மாயை என்பது போன்ற தத்துவங்களைப் பேசுவதை கேட்கிறோம். இந்த மக்களுக்கு உண்மையை உணர்த்த வேண்டும். இந்த மக்களைக் கொண்டுதான் இந்த சமுதாயத்தை மாற்ற முடியும். இன்றைய நிலைமை எவ்வாறு ஏற்பட்டது என்பதையும், மனித சக்தியினால் அவைகளை மாற்ற முடியும் என்ற பாட்டாளி வர்க்க தத்துவ ஞானத் தெளிவை அவர்களுக்கு ஊட்ட வேண்டும். அதற்கு பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்தின் முன்னணிப் பகுதி, இதில் தெளிவு பெறுவது மிக அவசியமானது.

தத்துவ ஞானம் என்றால் என்ன?

3. பல்வேறு துறைகள் பற்றிய விஞ்ஞானங்கள் வளருவதற்கு முன் தத்துவ ஞான சிந்தனையின் மூலம்தான் மனிதர்கள் உலகையும், சமூகத்தையும் புரிந்துகொள்ள முயன்றனர். இதனுடைய வளர்ச்சிப் போக்கில்தான் விஞ்ஞானங்கள் வளர்ந்தன. இன்று விஞ்ஞானங்கள் தத்துவ ஞான சிந்தனையின் வளர்ச்சிக்கு உதவி செய்கிறது.

"இயற்கை–சமுதாயம்–சிந்தனை" ஆகியவற்றின் வளர்ச்சியின் மீது ஆட்சி செய்யும் மிகப் பொதுவான விதிகளைக் குறித்த விஞ்ஞானமே 'தத்துவ ஞானம்'.

தத்துவ ஞானத்தின் பிரச்னை என்ன?

4. உலகில் முதலில் நாகரீகம் வளர்ச்சியடைந்த நாடுகளில்தான் தத்துவ ஞான சர்ச்சை முதன் முதலாக தோன்றி

யது. இந்தியா, சீனா, கிரீஸ் போன்ற சில நாடுகளை முக்கியமாக குறிப்பிடலாம். பிறகு அது உலகம் முழுவதும் பரவியது.

தத்துவ ஞானத்தில் முன்னுக்கு வந்த முக்கியமான பிரச்னை என்ன?

பொருள்	— .. .. —	உணர்வு
இயற்கை	— .. .. —	இதைப் பற்றிய சிந்தனை
பொருளியல் வாழ்க்கை	— .. .. —	வாழ்க்கையைப் பற்றிய சிந்தனை

எது முதன்மையானது?

இன்னொரு வகையில் கூறினால் வாழ் நிலைக்கும். சிந்தனைக்கும் இடையேயான உறவு பற்றிய பிரச்னையே தத்துவ ஞானத்தின் அடிப்படை பிரச்னையாக முன்னுக்கு வந்தது.

தத்துவ ஞானிகள் ஒரு பிரிவினர் – பொருள், இயற்கை, பொருளியல் வாழ்க்கை இவைகள் முதன்மையானது, இவைகளின் பிரதிபலிப்பே உணர்வு, சிந்தனை அல்லது கருத்து என்று கூறினர். இவர்கள் பொருள்முதல்வாதிகள் என்று அறியப்படுகின்றனர்.

மற்றொரு பிரிவினர் – சிந்தனை, உணர்வு அல்லது ஆன்மாதான் முதன்மையானது இவைகளின் பிரதிபலிப்பே பொருள், இயற்கை, பொருளியல் வாழ்க்கை என்று கூறினர். இவர்கள் ஆன்மீக வாதிகள் அல்லது கருத்துமுதல்வாதிகள் என்று அறியப்படுகின்றனர்.

எங்கல்ஸ் இவ்வாறு குறிப்பிடுகிறார்:– "சிந்தனைக்கும், வாழ்வுக்கும் உள்ள உறவு என்ன என்கிற கேள்வி, இந்த கேள்விதான் தத்துவம் முழுவதிலும் கேட்கப்படும் மூல முதல் கேள்வி; எல்லா கேள்விகளுக்கும் மேலான கேள்வி. இந்த கேள்விக்கு தத்துவவாதிகள் கொடுத்த விடைகளே அவர்களை இரண்டு மாபெரும் முகாம்களாகப் பிரித்துவிட்டன."

(மார்க்ஸ் – எங்கல்ஸ் நூல் தொகுப்பு முதல் பாகம்)

இதுதான் தத்துவ ஞானம் தோன்றிய காலத்திலிருந்தே தொடர்ந்து வரும் பிரச்னை. இந்தியாவிலும் இவ்விரு தரப்பினரும் அன்று முதல் இன்றுவரை இருந்து வருகின்றனர். இந்தியா ஆன்மீகவாதத்தின் நாடு. பொருள் முதல்வாதம் அன்னியச் சரக்கு என்று கூறுவது அறியாமையாகும்.

கருத்துமுதல்வாதம் என்றால் என்ன? என்பதை முதலில் பார்ப்போம். அவைகளிலேயே பல ரகமுண்டு. அகநிலை கருத்து முதல்வாதம், புறநிலைக் கருத்துமுதல்வாதம், இருநிலைவாதம் என்று அவைகளைப் பிரிக்கலாம். இந்திய தத்துவ ஞானத்திலும் இப்போக்குகள் உள்ளன.

அகநிலை கருத்து முதல்வாதத்தின் சாராம்சம்

5. "பொருள் வகைப் புலப்பாடுகள் என்று கருதப்படுகின்ற அனைத்தும் மனிதனின் உணர்வில்தான், அதாவது அகநிலையில்தான் இருக்கிறது என்று கூறுகிறது இந்த போதனை. எனவே, இது "அகநிலை கருத்து முதல்வாதம்" என்று அழைக்கப்படுகிறது.

17–வது நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்த பெர்க்லி மிக அழுத்தமாக இவ்வாறு கூறுகிறார்:

"உலகத்தில் வலிமை மிக்க கட்டமைப்பாய் அமையும் எல்லாப் பொருள்களும் மனத்தில் அன்றி வெளியே வாழ முடியாது."

இந்தியாவில் இத்தகைய கருத்துக்கள் நீண்ட காலத்திற்கு முன்னாலேயே மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. வேத கால ரிஷிகளில் பலர் துவங்கி வைத்த இப்பணியை, 1200 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்த ஆதி சங்கரர் அதன் உச்ச கோடிக்கே எடுத்துச் சென்றார். பொருள்முதல்வாதக் கருத்துக்களை முன்வைத்த புத்த, சாங்கிய, வைசேஷிக தத்துவங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளி, ஆன்மீகவாதம் வெற்றிபெறச் செய்ததில் அவர் பெரும் பங்காற்றினார்.

அவருடைய தத்துவ விளக்கத்திற்கு "அத்வைதம்" என்று பெயர் சூட்டினார். இரண்டல்ல ஒன்று அல்லது ஏகம் என்பது அதன் பொருள். அந்த ஒன்று என்பது பிரம்மம் – "பரபிரம்மம்"தான். அது ஒன்றுதான் உண்மை. ஜகத் – உலகம் மாயை, மற்றதெல்லாம் மாயை. பிரம்மம் ஒன்றுதான் உண்மை மற்றதெல்லாம் வெறும் மாயை என்று அறிவதே முக்திக்கு – மோட்சத்திற்கான மார்க்கம். இவைகளை ஏராளமான உதாரணங்களோடு சங்கரர், பாதராயணனின் பிரம்ம சூத்திரம் என்னும் நூலுக்கு எழுதிய பல விளக்க உரைகளிலும் எடுத்துக்கூறியுள்ளார். இந்தியாவின் தென் கோடியில் கேரளத்தில் காலடி என்னும் ஊரில் பிறந்து 32 வயது வரை மட்டும் வாழ்ந்த சங்கரர் இத் தத்துவ விளக்கங்களை உருவாக்கியதோடு, அவைகளை மக்களிடம் பரப்ப இந்தியாவின் வட கோடி வரை பயணம் செய்தார். இறுதியில் பனியினால் மூடப்பட்ட இமய மலை மீது கேதார்நாத்தில் மரணமடைந்தார்.

உலகமே மாயை என்று போதித்தவர், தனக்கும் பின் தனது தத்துவங்களைப் பரப்ப இந்தியாவின் நான்கு பகுதிகளில் – சிங்கேரி(–மைசூர்) துவாரகா(–குஜராத்), பூரி(–ஒரிசா), பத்ரிநாத்(–இமயமலை அடிவாரம்) ஆகிய இடங்களில் மடங்களையும் நிறுவினார். அவர் தொடங்கிய பணி இன்றும் இத்தகைய அமைப்புகள் மூலம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கருத்துமுதல்வாதத்திற்கும், நடைமுறைக்கும் உள்ள முரண்பாடு இங்கு வெளிப்படுகிறது.

விசிஷ்ட அத்வைதம் – ஒருமையில் பன்மை

6. சங்கராச்சாரியர் ஒன்று மட்டும்தான் உண்மை என்று கூறிய "பரப் பிரம்மம்" "நிர்க்குணமானது" குண விசேஷங்கள் சிறப்பியல்புகள் ஏதுமில்லாதது என்றும் கூறினார். அதற்கு உருவமில்லை. கோப–தாபமில்லை. ஆசைகள் அபிலாஷைகள் ஏதுமில்லை. பசி தாகம் இல்லை. இவ்வாறு உருவமோ குணங்களோ ஏதுமற்ற ஒன்றுதான் சங்கராச்சாரியர் சர்வவல்லமை மிக்க ஒரே உண்மை என்று அவர் வலியுறுத்திய "பரபிரம்மம்" ஆனால் சங்கரருக்கு 200 ஆண்டுகளுக்குப் பின்னால் வாழ்ந்த புகழ் பெற்ற வேதாந்தியான ராமானுஜாச்சாரியார் சங்கரரின் கூற்றை ஏற்கவில்லை. ராமானுஜரும் அத்வைதவாதிதான். நிலையானதும் உண்மையானதுமான பிரம்மம்தான் ஒரே உண்மை என்று அவரும் வாதாடினார். ஆனால் ஒருமையில் பன்மை அடங்கியுள்ளது. பொருளும் உணர்வும்– உணர்வற்ற பொருளும் (அசித்) உணர்வுள்ள ஆன்மாவும், (சித்) உணர்வும்–உணர்வின்மையும் இரண்டுமே பிரம்மத்தின் பிரிக்கமுடியாத அம்சங்கள். ராமானுஜரின் "பிரம்மம்" சற்குணமானது, அதற்கு வேறுபட்டதன்மைகள் உள்ளன. அதற்கு சர்வசக்தியும் சகல குணங்களும் உண்டு. அதற்கு ஞானம், சக்தி, ஐசுவரியம், ஒளி, கருணை, அன்பு முதலிய குணங்கள் உள்ளன. இந்த விசேஷ குணங்களை அங்கீகரித்து அதன் முக்கியத்தை எடுத்துக் கூறுவதனால்தான் ராமானுஜரின் அத்வை

தம்–"விசிஷ்ட அத்வைதம்" என்று அறியப்படுகிறது.

உடல் உயிர் ஆகிய இரண்டு அம்சங்கள் கொண்டவன் மனிதன். இரண்டும் பிரம்மத்தின் பாகங்கள்தான். கடவுள் இப்படி பல வடிவங்களில் பிரகாசிக்கிறார். அனைத்திலும் கடவுளின் அம்சங்கள் உள்ளன. படைக்கப்பட்டுள்ள அனைத்திலும் கடவுள் இருக்கிறார். பிரம்மத்தை ஆதாரப்பட்டே அவை இருக்கின்றன. ராமானுஜரின் கருத்தில் படைக்கப்பட்டுள்ள பன்முக குணம் கொண்ட உலகம் பிரம்மத்தைப் போலவே உண்மையானது. அவைகள் இருப்பது பிரம்மத்தை ஆதாரப்பட்டுள்ளது. பிரபஞ்சமும் ஜீவான்மாக்களும் சுதந்திரமாக நிலைபெற்றுள்ளன. இவைகளும் பிரம்மமும் ஒன்றல்ல. பிரம்மம் சர்வ சுதந்திரமானது. குறைகளேது மற்றது. நேர்மாறாக பௌதீக உலகம் உணர்வற்றது. அசைவற்றது. ஜீவாத்மாக்கள் அறியாமைக்கும் துக்கங்களுக்கும் உட்பட்டிருப்பார்கள். இக்குறைகள் இருந்தாலும் அவைகள் நிலைபெற்றுள்ளன. மாயையல்ல. இவ்வாறு படைப்பும் படைக்கப்பட்ட உலகமும் மாயை என்ற சங்கரரின் வாதத்தை ராமானுஜர் நிராகரித்தார்.

இவ்வாறு சங்கராச்சாரியரின் அகநிலைக்கருத்து முதல் வாதத்திலிருந்து ராமானுஜர் மாறுபடுகிறார். அகநிலைக்கருத்து முதல் வாதத்திற்கும் புறநிலைக்கருத்து முதல் வாதிகள் நிலைக்கும் இடைப்பட்ட ஒன்று ராமானுஜரின் "விசிஷ்ட அத்வைதம்".

புறநிலைக் கருத்து முதல்வாதம்

7. பரம கருத்து–பரமாத்மா – அதன் படைப்பே இயற்கை, மனிதன் சிந்தனை அனைத்தும் என்பது புறநிலைக் கருத்து முதல்வாதிகளின் நிலை. மனித உணர்வைச் சாராமலேயே புற உலகம் உள்ளது என்பதை இவர்கள் ஒத்துக் கொள்கின்றனர். ஆனால், முதன்மையானது பரம கருத்து தான். தத்துவ ஞானத்தில் புறநிலைக் கருத்துமுதல்வாதமும் உலக ரீதியாக பரவியுள்ளது.

இந்தியாவில் இதன் முக்கிய பிரதிநிதியாக மாதவாச்சாரியாரைக் குறிப்பிடலாம். அவரும் ஒரு வேதாந்திதான். ஆனால், அவருடையது அத்வைதம் அல்ல. துவைதம். ஒன்றல்ல, இரண்டு என்பதே இதன் பொருள். பாதராயணனின்

பிரம்ம சூத்திரத்திற்கு இவரும் ஒரு பாஷ்யம் – வியாக்யானம் எழுதியிருக்கிறார்.

இவரது கருத்துப்படி மூன்று நிலையான உண்மைகள் உள்ளன. கடவுள், ஆன்மா, உலகம், இவை மூன்றும் சுதந்திரமாக நிலைபெற்றுள்ள உண்மைகள். சங்கரரின் ஆன்மாவும், பிரம்மமும் ஒன்று என்ற கருத்தை இவர் ஏற்கவில்லை. ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றுதான் என்றால், பிரம்மத்தை அறியும் முயற்சிக்கு என்ன அர்த்தமிருக்கிறது என்று கேட்டார் அவர். பிரபஞ்சத்தின் பொருளியல் காரணமாக மாதவாச்சாரியார் இயற்கையை அங்கீகரிக்கிறார். இயற்கைதான் உலகின் காரணம். இயற்கையில் ஏற்படும் பரிணாம வளர்ச்சியின் காரணமாகவே மற்ற பொருட்கள் எல்லாம் உண்டாகின்றன. அனைத்து குணங்களுக்கும் ஊற்று இயற்கைதான்.

ஆனால், இயற்கை கடவுளின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஆன்மாவும், உலகமும் உண்மையாக இருந்தாலும் அவை கடவுளுக்குட்பட்டது. கடவுள்தான் மேலான உண்மை. உலகம் கடவுளின் படைப்பு. அனைத்து ஜீவராசிகளிலும் கடவுள் பிரகாசிக்கிறார். வேதம் பயிலுவதன் மூலமாக கடவுளை – உருவத்தை சரியாகப் புரிந்துகொள்ள முடியும்.

இயற்கையும், ஜீவான்மாவும், பரமத்திலிருந்து – கடவுளிலிருந்து சுதந்திரமானவை, ஆனால் அதன் கட்டுப்பாட்டில் உள்ளதாக மாதவாச்சாரியாரின் 'துவைதம்' கூறுகிறது.

பிளேட்டோ–கிரேக்க நாட்டில் புறநிலை பொருள்வாதத்தின் பிரதிநிதியாக இருந்தார். "புலனுணர்வுக்கு உட்படும் பொருள் கொண்ட பிரபஞ்சமும் கருத்துக்களின், பிரபஞ்சமும் அதாவது பொருள்களின் பருமையற்ற நுண் வடிவங்கள் கொண்ட பிரபஞ்சமும் எதிர் எதிராக நிலவுவதாக அவர் கூறினார்.

வில்லியம் ஹெகல் ஜெர்மனியில் புறநிலைக் கருத்து முதல் வாதத்தின் பிரதிநிதியாக இருந்தார். இயக்கவியலை, புறநிலைக் கருத்துமுதல்வாதத்துடன் பொருத்திச் சேர்க்க அவர் முயற்சி செய்தார்.

"இயக்கவியலை செம்மைப்படுத்தி, பிரபஞ்சம் அனைத்தும் – இயற்கை, சமூக வாழ்வு, சிந்தனை யாவும் முடிவுற்ற இயக்கமும் மாறுதலும் வளர்ச்சியும் கொண்ட நிகழ்முறை என்று காட்டுவதற்கு ஹெகல் முயற்சி செய்தார். இயக்கவிய

லின் அடிப்படைக் கோட்பாடுகளையும், விதிகளையும், வகைப் பிரிவுகளையும் அவர் தனித்தனியாகக் குறித்தார். இயற்கை, சமூகம், சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சி இயக்கவியலின் ஒரே விதிகளுக்கு உட்பட்டது என்ற அவரது கருத்து பெரும்பயன் விளைவிப்பதாக இருந்தது.

எனினும், புறநிலைக் கருத்துமுதல்வாதியாக இருந்த ஹெகல், பிரபஞ்சத்தின் எல்லா நிகழ்ச்சிகளிலும் அடிப்படையாக, இயற்கை, சமூகம் ஆகியவற்றின் அடிப்படையாக பரம கருத்து, பிரபஞ்ச ஆன்மா எனப்படுவதை எடுத்துக்கொண்டார். நிலவுபவை யாவற்றுக்கும் எல்லா இருத்தலுக்கும் அடிப்படையாகவும், அதே சமயம் செயல்படும் தொடக்கமாகவும் இந்த பரம கருத்து ஹெகலின் சித்தாந்தத்தில் முன்வைக்கப்படுகிறது."

அகநிலைக் கருத்துமுதல்வாதம், புறநிலைக் கருத்துமுதல்வாதம் ஆகிய இரண்டுமே பொருள்தான் முதன்மையானது என்பதை மறுப்பவர்கள். அனைத்து ரகமான கருத்துமுதல்வாதங்களும் விஞ்ஞானத்திற்கும், நடைமுறைக்கும் பொருத்தமற்றது. நடைமுறையில் யாரும் பொருளின், இயற்கையின் உண்மை நிலையை மறக்க முடியாது. பாதையில் நடந்து செல்லுகின்றபோது ஒரு கருத்துமுதல்வாதி, எதிரே வருகின்ற பஸ் வெறும் மாயா தோற்றம் என்று நேராகச் செல்லமாட்டார். பசிக்கின்ற நேரத்தில், பசி ஒரு மாயை, உணவும் ஒரு மாயை என்று யர்ரும் ஒதுக்குவதில்லை. இப்படி எத்தனை உதாரணங்கள் வேண்டுமானாலும் சொல்லலாம்.

பொருள் முதல்வாதம்

பொருள் என்றால் என்ன ?

8. இயற்கை, பொருள் உண்மையானது, பொருளின் பிரதிபலிப்பே உணர்வு, பொருள் முதன்மையானது, உணர்வற்ற பொருள் உண்டு, பொருளற்ற உணர்வு இல்லை, உணர்வு ஆன்மா கருத்து என்பதை ஐம்புலன்களால் உணரப்படுகிற பொருளோடு இணைந்துள்ளது. லெனின் இதனை இவ்வாறு குறிப்பிடுகிறார்:–

"நமது ஐம்புலன்களையும் தாக்கி இயங்க வைத்து உணர்ச்சியை சிருஷ்டிப்பது எதுவோ, அதுவே பொருள் என்பது. உணர்ச்சியின் வாயிலாக நுகர்ந்து பெறப்படும் புற உண்மையே பொருள் என்பது. பொருள், இயற்கை, வாழ்வு, பௌதீக சம்பந்தமானவை," இவைதான் மூலமும் முதலும்.

"ஆத்மா, உணர்வு, உணர்ச்சி, மனம்" சம்பந்தமானவை இரண்டாம் பட்சமானவை,

(நூல் – "பொருள் முதல்வாதமும் அனுபவ விமர்சனமும்)

"மூளை என்பது சிந்தனையின் உறுப்பு" சிந்தனை செய்கிற பொருளிலிருந்து சிந்தனையை பிரிப்பது என்பது அசாத்தியம்" – லெனின்.

இந்திய பொருள்முதல்வாதம்

9. நாம் இந்த விளக்கத்தை அளித்தவுடன் ஆன்மீகவாதிகள் பொருள் எங்கிருந்து வந்தது? எப்போது தோன்றியது? யார் படைத்தது? என்பது போன்ற பல கேள்விக்களை எழுப்புவர். ஆதிகால பொருள்முதல்வாதிகள் அனுமான் அறிவின் மூலம் இக் கேள்விகளுக்கு விடையளித்தனர். இன்று விஞ்ஞானம் இக் கேள்விகளுக்கு ஆதாரபூர்வமான விடையளித்துள்ளது. 2,500 ஆண்டுகளுக்கு முன்னாலேயே இந்திய – கிரேக்க தத்துவ ஞானிகளில் பலர் பொருள் முதல்வாதிகளாக இருந்துள்ளனர் என்பதை வரலாறு வெளிப்படுத்துகிறது.

2,500 ஆண்டுகளுக்கு முன்னாலேயே, உலகில் உள்ளவை அனைத்தும் – ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டுள்ள பொருட்கள் – இடைவிடாமல் மாறிக்கொண்டு இருக்கிறது. இதுதான் நிரந்தரமாக நடக்கும் நிகழ்ச்சி போக்கு என்று புத்தர் கூறினார்.

இந்திய தத்துவ ஞானங்களில் ஒன்றான "சாங்கிய தரிசன"த்தின் மூலவர்– கபில முனிவர், உலக நிகழ்ச்சிப் போக்கினை இவ்வாறு விளக்கினார்:–

"நிரந்தரமானது எதுவும் இல்லை. வெற்றிடத்திலிருந்து எதுவும் தோன்றுவதுமில்லை. அழிந்து விட்ட மற்ற பொருள்களிலிருந்து தோன்றுகிறது. அழிகின்ற மற்ற பொருள்கள் ஒன்றுமில்லாமல் போவதில்லை, படைக்கப்பட முடியாத, அழிக்கப்பட முடியாத பொருள் இருந்து வருகிறது."

19 வது நூற்றாண்டில் விஞ்ஞானம் இதனை நிரூபித்துள்ளது.

வைசேஷக தத்துவத்தின் மூல ஆசிரியர் கணாத முனி
வர் அனைத்திற்கும் மூலம் அணுவே என்று அனுமான அறி
வின் மூலம் 2,500 ஆண்டுகளுக்கு முன்னாலேயே கூறினார்.
இன்று விஞ்ஞானம் அதனை நிரூபித்துள்ளது.

லோகாயதவாதிகள் – இந்திய தத்துவ ஞானங்களில்
லோகாயதம் மிக முக்கியமானது. இது பொருள் முதல்வா
த்தை அடிப்படையாகக் கொண்டது. இவர்கள் அறிவின்
ஆதாரம் வேதங்கள் என்பதை எதிர்த்தனர். முன் பிறப்பு, பின்
பிறப்பு, சொர்க்கம், நரகம் ஆகியவைகளை நம்பவில்லை.
யாகங்களையும், உயிர் பலிகளையும் எதிர்த்தனர். உடலிலி
ருந்து வேறுபட்ட ஆன்மா இல்லை என்று கூறினர் கடவுளை
மறுத்தனர். இயற்கை மட்டுமே உண்மை என்றனர். மண்,
தண்ணீர், நெருப்பு, காற்று ஆகியவையே பிரபஞ்சத்தின் மூலப்
பொருள்கள் என்று கூறினர்.

இவர்கள் வேதகால ரிஷியான பிரகஸ்பதியின் சீடர்கள்
என்று கருதப்படுகிறார்கள்.

“பௌதீக பொருட்களிலிருந்து உயிர்
தோன்றுகிறது.
உயிரின் ஒரே உண்மைப் பொருள் உடல்
மட்டுமே.
ஆன்மா என்பது மாயை தவிர வேறு
ஒன்றுமில்லை.”

என்று கூறினார் பிரகஸ்பதி. அன்று இது அனுமான
அடிப்படையில் கூறப்பட்டது. இன்று இது விஞ்ஞான ரீதி
யாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் பிறந்து அமெரிக்
கக் குடிமகனாக மாறியுள்ள விஞ்ஞானி ஹர்கோவிந்த
கரோனா சில ஆண்டுகளுக்குமுன் தனது ஆராய்ச்சி சாலை
யில் உயிரற்ற பொருள்களிலிருந்து உயிருள்ள செல்களை
உண்டாக்கிக் காட்டியுள்ளார். இதற்காக அவருக்கு நோபல்
பரிசு வழங்கப்பட்டுள்ளது.

மற்றொரு வேதகால ரிஷி உத்தாலகன் இவ்வாறு கூறி
யுள்ளார்:–

“இயற்கையே முதன்மையான படைப்புச் சக்தி, பிரபஞ்
சத்தில் நிலவுபவையாவும் (உயர்வு உட்பட எல்லா

உடல், உள நிகழ்வு முறைகளும் பொருளியல் மூலங்க
ளின் விளைவே ஆகும். ஆன்மா என்பதும் மனிதனின்
பொருளியல் அடிப்படையே.”

புத்த–ஜைன தத்துவங்கள்

10. இந்திய தத்துவ ஞானங்களில் மிகப் பிரபலமாகியுள்ள லோகாயதம், சாங்கியம், நியாயம் (இது தர்க்கவாதத்தை அடிப்படையாகக் கொண்டது) வைசேஷிகம் பொருள் முதல்வாதப் பிரிவைச் சார்ந்தவை. புத்த, ஜைன தத்துவங்களும் அதன் ஆரம்ப காலத்தில் பிரதானமாகப் பொருள்முதல் வாதத்தையே சார்ந்திருந்தன. ஜைன தத்துவ போதகர் வர்த்தமான மஹாவீரரும் புத்த தத்துவ போதகர் கௌதம புத்தரும் சமகாலத்தவர்கள். 2,500 ஆண்டுகளுக்கு முன்னால் வாழ்ந்தவர்கள். பிராமண மத ஆதிக்கத்தில் அடிமைத்தனம் நீடித்து வந்த காலம்.

ஜைன தத்துவம் பிரபஞ்சத்தை இவ்வாறு விளக்குகிறது:

உயிருள்ளவைகளும், உயிரற்றவைகளும், இரண்டும் நிரந்தமானது. இரண்டும் சுதந்திரமாக நிலை பெற்றுள்ளன. ஆனால் இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளவை. ஒவ்வொரு உயிரும் ஒரு ஆன்மாவாகும். ஆனால் ஆன்மா உயிரற்ற பொருட்களுடன்தான் வாழ முடியும். ஆகவே உயிரை அல்லது ஆன்மாவை புரிந்துகொள்ள வேண்டுமென்றால் உயிரற்ற பொருட்களுடன் பொருத்தி அதனை பரிசோதிக்க வேண்டும். அதே போல உயிருடன் அல்லது ஆன்மாவுடன் பொருத்திப் பார்க்கிறபோதுதான் உயிரற்ற பொருட்களையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

உயிர் அல்லது ஆன்மாவை பொருளுடன் பொருத்தியே ஜைன தத்துவம் விளக்குகிறது. இது போன்ற ஏராளமான கருத்துக்கள் ஜைன தத்துவத்தில் உள்ளடங்கியுள்ளன.

புத்த தத்துவம் – பொருளியல், கருத்தியலான எந்த அடிப்படை அம்சங்களையும் நிரந்தரமானவைகளாக ஏற்கவில்லை. அனைத்து அடிப்படைகளையும் நிராகரிக்கும் ஒரு வகையான சூன்ய வாதத்தையே அது முன்வைக்கிறது.

பிரபஞ்சத்தில் சர்வசராசரங்களும் இடைவிடாமல்

மாறிக்கொண்டிருக்கிறது, தோன்றிக் கொண்டும் அழிந்து கொண்டும் இருக்கிறது. இந்நிகழ்ச்சிப்போக்கு காரிய காரண விதிகளுக்குட்பட்டது. இந்த விதிகளுக்கு மேலானது ஒன்றும் இல்லை. எது ஒன்றும் நிலையானதல்ல. மனிதனில் ஆன்மா என்ற ஒரு நிலையான அம்சம் உள்ளதென்றும் அது உடலின் மாறுதல்களையும் மரணத்தையும் மீறி நிலை பெற்றுள்ளதென்றும், அது ஒரு உடலிலிருந்து இன்னொரு உடலுக்குள் நுழைகிறது என்றும் கூறப்பட்டு வந்ததை புத்தர் மறுத்தார். அத்தகைய ஒரு ஆன்மா இல்லையென்று உறுதியாகக் கூறினார். ஆன்மீகமானாலும், பௌதீகமானாலும் நிலையான எந்த பொருளும் இல்லையென்று அவர் தெளிவுபடுத்தினார்.

சாங்கிய, புத்த தத்துவங்களில் ஆரம்பகால இயக்க இயல் பார்வை உள்ளடங்கியிருந்ததை தெளிவாகப் பார்க்கமுடிகிறது.

கிரேக்க பொருள் முதல்வாதிகள்

11. இதே காலத்தில் வாழ்ந்த கிரேக்க தத்துவ ஞானிகளும் பொருள்வாத அடிப்படையில் பல கருத்துக்களைக் கூறியுள்ளனர். குறிப்பாக கி.மு. 624–547–ல் வாழ்ந்த தேல்ஸ் நீர்தான் முதன்மையானது. அனைத்தும் நீராகவே மாறுகிறது என்று கூறினார்.

டிமாகிரடஸ் அணுதான் அனைத்திற்கும் மூலம் என்று கூறினார். இதே காலத்தில் இந்தியாவில் சணாத முனிவர் இதே கருத்தை வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஹிராக்ளிடஸ் (கி.மு. 544–483): பொருளியல் அடிப்படை நெருப்பு. "எல்லாம் ஒருமையான பிரபஞ்சம் தேவர்களில் எவராலும் மனிதர்களில் எவராலும் படைக்கப்பட்டதல்ல. விதிமுறைகளுக்கிணங்க அணைவதும், உயர்ந்து இயங்குவதுமான நெருப்பாக அது இருந்தது, இருக்கிறது, என்றும் இருந்து வரும்.''

ஹிராக்ளிடஸ் அறிவித்துள்ள இந்த இயக்க இயல் விளக்கத்தை லெனின் பாராட்டியுள்ளார். இது போன்ற ஏராளமான உதாரணங்களை கிரேக்க, இந்திய தத்துவ ஞானங்களிலிருந்து சுட்டிக்காட்ட முடியும். உதாரணத்திற்காக சிலதை மட்டுமே இங்கு குறிப்பிட்டுள்ளோம்.

12. விஞ்ஞான கண்டு பிடிப்புகள்: இயற்கை, பொருள், உண்மையானது, முதன்மையானது என்ற தத்துவக் கண்ணோட்டம் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உதவியது. விஞ்ஞானத்தை வலுப்படுத்தியது. நாம் வாழும் பூமி இன்றைய நிலையில் எந்த சக்தியினாலும் படைக்கப்பட்டதல்ல. சுமார் 500 கோடி ஆண்டுகளின் பரிணாம வளர்ச்சியே இன்றைய பூமியின் தன்மை என்பதை புவி இயல் விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. சுமார் 400 கோடி ஆண்டுகள் வரை செடி, கொடிகள், ஜீவராசிகள் ஏதும் தோன்றக்கூடிய நிலையில் நமது பூமி இருக்கவில்லை என்பதையும் விஞ்ஞானம் இன்று கண்டறிந்துள்ளது.

பூமியின் வடிவம் உருண்டை என்பதைக் கூட 16–வது நூற்றாண்டில் கோபர் நிகஸ்ஸும் , கலீலியோவும் கண்டுபிடிக்கும்வரை பூமி தட்டையானது என்றே நம்பி வந்தனர். பிரபஞ்சத்தின் மையம் பூமியல்ல, சூரியன் பூமியை சுற்றி வரவில்லை. மாறாக பூமிதான் சூரியனைச் சுற்றி வருகிறது. என்ற உண்மையை கண்டுபிடித்துக் கூறியதற்காக கத்தோலிக்க திருச்சபை கலிலியோவை சாகும் வரை வீட்டுச் சிறையிலிருக்க வேண்டுமென்று தண்டனை வழங்கியது. அவர் ஒன்பது ஆண்டுகள் சிறையிலிருந்து மரணமடைந்தார். புரூனோ உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார்.

13. உயிர்கள் – செடி கொடிகள் முதற்கொண்டு மனிதன் வரையிலான உயிரினங்கள் எதுவும் இன்றுள்ள வடிவில் எந்த சக்தியினாலும் படைக்கப்பட்டதல்ல. மாறாக பூமியின் வளர்ச்சிப் போக்கில் நிலமாக, நீராக, வாயு மண்டலமாக மாறிய காலத்திற்குப் பின்னர் தான் உயிரணுக்கள் தோன்றக் கூடிய சாதக நிலை உருவாகியது. அதற்குப்பின் தோன்றிய ஜீவராசிகளின் மிக உயர்ந்த பரிணாம வளர்ச்சியே இன்றைய மனிதன் என்று உயிரியல் விஞ்ஞானம் – குறிப்பாக 19–வது நூற்றாண்டில் சார்லஸ் டார்வின் கண்டுபிடிப்புகள் நிரூபித்துள்ளன. 10 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வரை இன்றைய வடிவில் மனிதர்கள் பூமியில் இருந்ததற்கான ஆதாரம் ஏதும் இல்லை. அதற்கு முன் வாழ்ந்து வந்த ஒரு வகை குரங்கினமே அதனுடைய வாழ்க்கைப் போக்கில் – உழைப்பின் போக்கில் இன்றைய மனித இனமாக மாறியது என்று உயிரியல் விஞ்ஞானம்,

கூறுகிறது. எங்கல்ஸ் இதனை விளக்கமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

14. மனிதனின் சமூக வாழ்க்கையும் இன்றைய நிலையில் ஆரம்பத்தில் இருக்கவில்லை. இன்றுள்ள குடும்பம், திருமண முறை, ஒழுக்க நெறி முறைகள், கடவுள்கள், மதங்கள், தத்துவங்கள், ஆசாரங்கள், அனுஷ்டானங்கள், தனிச் சொத்து, அரசு-ஆட்சி முறைகள் ஏதுமற்ற நிலையில் நீண்ட நெடுங்காலம் ஆரம்ப கால மனித வாழ்க்கை அமைந்திருந்தது. லட்சக்கணக்கான ஆண்டுகளின் வளர்ச்சிப் போக்கில்தான் அவன் இன்றைய நிலையை அடைந்துள்ளான். இன்றைய நிலையும் மேலும் உயர்ந்த நிலையை நோக்கி மாறுதலடைந்துகொண்டே போகும். மனிதன் சமூக வாழ்க்கை நிலையை எப்படி எட்டினான் என்பதை ஆராய்ந்த அமெரிக்க சமூக இயல் விஞ்ஞானி **லூயிஸ் மோர்கன்** நீண்ட கால ஆய்வில் இந்த உண்மைகளைக் கண்டறிந்து எடுத்துக் கூறினார். எங்கல்ஸ் எழுதிய "குடும்பம், தனிச் சொத்து, அரசு" எனும் நூலில் இவைகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

15. கருத்து முதல் வாதிகளின் உலகக் கண்ணோட்டம் விஞ்ஞானத்துக்கும் உண்மை நிலைக்கும், நடைமுறைக்கும் புறம்பானது. எந்த பொருளையும் சூன்யத்திலிருந்து உண்டாக்க முடியாது. அதேபோல், எதனையும் இறுதியாக அழிக்கவும் முடியாது. ஆகவே இன்றைய பூமியோ, பிரபஞ்சமோ சூன்ய நிலையிலிருந்து யாராலும் படைக்கப்பட்டதல்ல. பிரபஞ்சம்- இயற்கை என்றென்றும் இருந்து வருவது. அது இடைவிடாமல் இயங்கிக் கொண்டும், மாறிக் கொண்டும், வளர்ந்துகொண்டும் இருக்கிறது. இந்த இயக்கப் போக்கில் இன்றைய நிலை உருவாகியுள்ளது. பொருட்களில் அழியாத் தன்மை குறித்து 2,500 ஆண்டுகளுக்கு முன் இந்திய-கிரேக்க பொருள் முதல்வாத தத்துவஞானிகள் அனுமான அறிவின் அடிப்படையில் கூறினார்கள். இன்று விஞ்ஞானம் பொருட்களின் இருத்தல், ஆற்றல், மாறுதல், விதிகளைக் கண்டறிந்து நிரூபித்துள்ளது. பொருட்கள் திட, திரவ, வாயு நிலைகளில் உள்ளன. அவைகளை ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாற்றவும் முடிகிறது.

16. பொருள்முதல்வாதமும், விஞ்ஞானமும் இதுவரை இயற்கையின் பல இரகசியங்களைக் கண்டறிந்துள்ளது. அவைகளால் மனித வாழ்வில் ஏற்பட்டுள்ள முன்னேற்றமும், மாறுதலும் அளவிட முடியாதது. இன்னும் அறிய வேண்டியவை ஏராளம். ஆனால் அவைகளை அறிய முடியும் என்பதே பொருள்முதல்வாத தத்துவ நிலை. இயற்கையின் இரகசியங்களை மனிதனால் கண்டறிய முடியாது என்பதே கருத்துமுதல்வாதிகளின் நிலையாக இருந்தது. இன்று விஞ்ஞான கண்டுபிடிப்புகளை மறுக்க முடியாத நிலையில் சில மதவாதிகள் இவ்வாறு கூறுகின்றனர்: "கண்ணால் காண முடிகிற, அறிவால் செய்ய முடிகிற விஷயங்களை மட்டுமே விஞ்ஞானம் ஆய்வு செய்கிறது. கண்ணால் காண்கிற உலகத்தைத் தவிர கண்ணால் காண முடியாத வேறு ஒரு உலகம் இருக்கிறது. விஞ்ஞானத்தால் அதை எட்ட முடியாது. கடவுள் நம்பிக்கையால்தான் எட்ட முடியும்".

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த தலைமை பாதிரியார் நிக்கோலாய்தான் இப்படிக் கூறியவர். விஞ்ஞான முன்னேற்றத்தின் முன் கருத்து முதல் வாதத்தையும், கடவுளையும் பாதுகாக்க முன் வைக்கப்படும் புதிய விளக்கங்கள். இவை.

17. மார்க்சீய தத்துவம்:- மார்க்சீயம் இயற்கையை பற்றிய, சமுதாயத்தைப் பற்றிய ஒரு முழுமையான தத்துவ ஞானம். அது மூன்று அடிப்படையான பிரிவுகளைக் கொண்டது. தத்துவம், பொருளாதாரம், அரசியல் அல்லது சோஷலிசம் ஆகியவைகளே இந்த மூன்று பிரிவுகள். "மார்க்சீயத்தின் மூன்று மூலக் கூறுகளும் அவைகளின் தோற்றுவாய்களும்" என்ற சிறு நூலில் லெனின் இதனை விளக்கியுள்ளார். நாம் இங்கு பிரதானமாக தத்துவம் பற்றியே விளக்க முயற்சிக்கிறோம். மார்க்சீயம் பொருள் முதல் வாதத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், மார்க்ஸுக்கு முந்தைய பொருள் முதல் வாதமும், மார்க்சீயப் பொருள் முதல் வாதமும் ஒன்றல்ல.

18. மார்க்சீய பொருள்முதல்வாதம், இயக்க இயல் பொருள் முதல்வாதம். இயக்க இயலும், பொருள்முதல்வாதமும் மார்க்ஸுக்கு முன்னாலேயே நெடுங்காலமாக இருந்து வந்தது.

மார்க்ஸ் காலத்தில் இந்த இரு தத்துவத் துறைகளிலும் பெரிய அளவு முன்னேறியிருந்த நாடு ஜெர்மனி. அவருக்கு முன்னால் பொருள் முதல் வாதத்தை பெரும் அளவுக்கு வளர்த்தவர் பாயர் பாக். இயக்க இயல் தத்துவத்தை முழுமையாக உருவாக்கியவர் வில்லியம் ஹெகல். ஆகவே, மார்க்சீய தத்துவ பிரிவின் தோற்றுவாயாக ஜெர்மனியும், மார்க்ஸ்–எங்கல்ஸுக்கு முன் அவைகளின் தலைசிறந்த பிரதிநிதிகளாக பாயர் பாக்கும், ஹெகலும் அறியப்படுகின்றனர். ஆனால், அவர்கள் தத்துவ நிலைகள் முழுமையானதாகவோ, சரியானதாகவோ இருக்கவில்லை.

19. ஹெகல் இயக்க இயலின் பலவீனம் – அவர் ஒரு கருத்து முதல்வாதி. அவரை பொறுத்த வரை பொருளின் பிரதிபலிப்பல்ல கருத்து. கருத்தின் பிரதிபலிப்பே பொருள். ஆகவே அவர் இயக்கத்தை பொருளில் காணவில்லை. கருத்தில் கண்டார். அவரது தத்துவம் இதுதான் கருத்துருவின் சாராம்சமே பொருள். பொருளின் சாராம்சமல்ல கருத்து. இயற்கையைப் பற்றிய, பொருளைப் பற்றிய இந்த கருத்துருவம் மனித மனதில் பரம கருத்தினால் உருவாக்கப்படுகிறது. இயற்கையை பற்றி, பொருள்களைப் பற்றி எங்கும் ஒரே விதமான கருத்து நிலவுவதை அவர் இதற்காதாரமாகக் கொண்டார். சர்வ வியாபகமான கருத்து – பரம கருத்து சதா இயங்கிக் கொண்டே இருக்கிறது. மாறிக்கொண்டே இருக்கிறது. ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்குச் செல்லுகிறது என்று அவர் தனது இயக்க இயலை விளக்கினார். அவர் இயக்கத்தை பொருளில் பார்க்கவில்லை, மாறாக, பரம கருத்தின் செயலாக இயக்கத்தை விளக்கினார், அவரது இயக்க இயல் பார்வை புரட்சிகரமானது. ஆனால், பொருளிலிருந்து அது பிரிக்கப்பட்டதனால் அது தலை கீழாக மாறியது. மார்க்ஸ் அதைப் பற்றி இவ்வாறு எழுதினார்:

> "என்னுடைய இயக்கவியல் அணுகுமுறை ஹெகலின் இயக்கவியல் அணுகுமுறையினின்று மாறுபட்டது மட்டுமல்ல, அதற்கு நேர் எதிரானதாகும். ஹெகல் கருத்து என்றதன் பெயரில் சிந்தனையின் இயக்கப் போக்கையே ஒரு சுயேச்சையான பொருளாக மாற்றி விடுகிறார். மேலும், இந்த சிந்தனையின் இயக்கமே யதார்த்த உலகைப் படைத்துவிடுகிறது என்றும், யதார்த்த உலகம் என்பதே கருத்தின் வெளித் தோற்றம் என்றும் கூறுகிறார். ஆனால், உலகைப் பற்றிய என் பார்வை இதற்கு நேர் மாறானதாகும். பொருளியல் உலகத்தை மனித மூளை பிரதிபலித்து எண்ணங்களாக மாற்றுகிறது. மன திலிருக்கும் எண்ணம் என்பது, பொருளியல் உலகததின் பிம்பமே தவிர வேறு எதுவுமில்லை" (நூல்: மூலதனம் – முதல் பாகம்).

இதே நூலில் இயக்கவியலை உருவாக்கியதில் ஹெகலின் சிறப்பான பங்கினையும் சுட்டிக்காட்டி இவ்வாறு எழுதியுள்ளார்.

> "இயக்கவியலின் பொதுவான வடிவங்களைப் பற்றிய முழுமையான, உணர்வு பூர்வமான சித்திரத்தை ஹெகல் தான் முதன் முதலாகத் திரட்டித் தந்தார்."

இயக்க மறுப்பியல் பொருள் முதல்வாதம்

20. பாயர் பாக் பொருள்முதல்வாதத்தைப் பெரும் அளவில் வளர்த்தார். கருத்துமுதல்வாதிகளை எதிர்த்துப் போராடி பொருளின் உண்மை நிலையை நிலைநாட்டினார். ஆனால், அவரது பொருள்முதல்வாத சித்தாந்தத்தால், இயற்கையில், சமுதாயத்தில், சிந்தனையில் ஏற்பட்டு வரும் மாறுதலை விளக்க முடியவில்லை. ஒரே முறையில் மீண்டும் மீண்டும் நிகழும் ஒன்றாக இயந்திரவியல் முறையில் செயல்படும் ஒன்றாகவே அவரால் பொருட்களை விளக்க முடிந்தது. ஒவ்வொரு பொருளிலிலும் உள்ளடங்கியுள்ள முரண்பாட்டையும் இயக்கப் போக்கையும் மார்க்ஸுக்கு முந்திய பொருள முதல்வாதிகள் பார்க்கவில்லை. 19வது நூற்றாண்டின் மூன்று முக்கிய கண்டுபிடிப்புகள் இயக்க இயல் பொருள்வாதத்தின் வளர்ச்சிக்கு மிகவும் பயன்பட்டது.

ஹெகல் இயக்கத்தில் பொருளைப் பார்க்கவில்லை. பாயர் பாக் பொருளில் இயக்கத்தைப் பார்க்கவில்லை. இயக்கமும் பொருளும் பிரிக்க முடியாதது. "எங்கு பொருள் இருக்கிறதோ அங்கு இயக்கம் இருக்கிறது. எங்கு இயக்கம் இருக்கிறதோ அங்கு பொருள் இருக்கிறது" என்றார் மார்க்ஸ்.

21. 19வது நூற்றாண்டின் மூன்று கண்டுபிடிப்புகள்: இயற்கையின், பொருளின் உயிரினங்களின் இயங்கும் தன்மையை நிலைநாட்ட 19வது நூற்றாண்டின் மூன்று முக்கிய கண்டுபிடிப்புகள் பயன்பட்டன.

1. உயிருள்ள ஜீவிகள் எல்லாம் உயிரணுக்கூட்டமைப்பு உள்ளவை என்ற கண்டுபிடிப்பு. உயிரியல் தன்மையில் ஏற்படும் பலவித மாறுதலின் அடிப்படையில் தாவரங்களிலும், விலங்குகளிலும் வளர்ச்சியின் பொதுவிதிகள் நிலவுகின்றன என்பதை இது வெளிப்படுத்தியது.

2. பொருளின் அழியாத்தன்மையும் ஆற்றலின் மாற்றத்தையும் விளக்கும் விதிபற்றிய கண்டுபிடிப்பு. இயற்கையின் பொருளியல் ஒருமைக்கும் அதன் பல்வேறு விதமான செயல்முறைகளின் பரஸ்பர தொடர்பையும் வெளிப்படுத்திய இயற்கை விஞ்ஞான சான்றாக இக்கண்டுபிடிப்பு விளங்கியது. இயந்திர இயக்கம், வெப்பம், மின்சாரம், இரசாயன ஆற்றல், ஆகியவை போன்ற நிகழ்ச்சிகள் பிரிக்க முடியாதபடி ஒருங்கிணைந்தவை. ஒன்று மற்றொன்றாக மாறக்கூடியவை என்பதை இது வெளிப்படுத்தியது. பொருட்கள் நித்தியமானது, அழிக்க முடியாதது என்ற பொது தத்துவ முடிவை இக்கண்டுபிடிப்பு உறுதிப்படுத்தியது.

3. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சிபற்றிய டார்வினுடைய கண்டுபிடிப்பு. மனிதன் உள்ளிட்ட எல்லா அங்க ஜீவிகளின் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் ஒருமையை அது வெளிப்படுத்தியது. தாவரங்கள் முதல் மனிதன் வரை இயற்கையுலகம் முழுவதும் இடையறாத இயக்கத்திலும் வளர்ச்சியிலும் இருப்பதை டார்வின் ஏராளமான ஆதாரங்களுடன் நிரூபித்தார்.

இதற்குப்பின்னால் வந்த பல்வேறு விஞ்ஞான கண்டுபிடிப்புகளும் இயற்கையும் பொருட்களும், இடையறாது இயங்கி வருவதையும், மாறிவருவதையும் நிரூபித்துள்ளன.

இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் இயக்க இயல் பொருள்முதல்வாதத்தை தத்துவ வளர்ச்சிக்கு ஆதாரமாயுள்ளன.

விஞ்ஞானிகளின் ஆன்மீகப் பார்வை

22. ஆன்மீக வாதமும் நடைமுறையும் – தத்துவ ஞானப் பார்வையில் ஆன்மீக வாதிகளாக இருப்போர் எவரும் நடைமுறையில் பொருளின் இருத்தலையோ அதன் தேவையையோ மறுப்பதில்லை. உதாரணமாக இன்று விஞ்ஞானம் பல்வேறு துறைகளில் வளர்ச்சியடைந்துள்ள நிலையில், ஒருவர் குறிப்பிட்ட துறையில் விஞ்ஞானியாகிறார். இதனாலேயே அவர் பிரபஞ்சம், மனித வாழ்க்கை பற்றிய ஒட்டுமொத்தப் பிரச்னைகளில் விஞ்ஞானப் பார்வை பெற்றுவிடுவதில்லை. பல விஞ்ஞானிகள் ஆன்மீக வாத கருத்து கொண்டவர்களாகவே உள்ளனர். அதே நேரத்தில் அவரவர் ஆய்வு செய்கின்ற விஞ்ஞானத் துறைகளில் ஆய்வுக் கூடங்களில் முழுக்க முழுக்கப் பொருள்முதல்வாதிகளாக உள்ளனர். கருத்தே எல்லாம் – பரம கருத்தே எல்லாம் – பரப்பிரம்மமே எல்லாம், மற்றெதெல்லாம் மாயை என்று கூறுகிற ஆன்மீகவாதிகள் யாரும் நடைமுறை வாழ்க்கையில் பொருளை நிராகரிக்கவில்லை. எவ்வளவு அதிகமான பொருளை சுருட்டிக்கொள்ள முடியுமோ அவ்வளவையும் சுருட்டிக்கொள்கின்றனர். அதற்காக எந்த அக்கிரமத்தையும் செய்யத் தயங்குவதில்லை. ஆன்மீகவாதம், நடைமுறை வாழ்க்கையோடு இணைவதில்லை.

பொருளும் கருத்தும்

23. மார்க்சீயம் – இயற்கை, பொருள், வாழ்க்கை முதன்மையாவது, அவைகளின் பிரதிபலிப்பே கருத்து என்று கூறுகிற நேரத்திலேயே கருத்தின் பாத்திரத்தை மறுக்கவில்லை. பொருளியல் வாழ்க்கையிலிருந்து மனிதன் உருவாக்கிக் கொள்ளுகிற கருத்து மீண்டும் அதன் மீது செயல்படுகிறது. மேலும் மேலும் தனக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்க மனிதன் முயற்சிக்கிறான். கருத்தின் பாத்திரத்தைப் பற்றி மார்க்ஸ் இவ்வாறு கூறினார்.

> "ஒரு கருத்து மனித சமூகத்தைப் பற்றிக்கொண்டால் அதுவே ஒரு பௌதீக சக்தியாக மாறும்."
> "வளர்ந்துகொண்டிருக்கும் பௌதீகப் பொருட்களின் செயல்வடிவமே ஆன்மா"
>
> (மார்க்ஸ்)

மார்க்ஸுக்கு முந்தைய பொருள்முதல்வாதத்தால் புரிந்

துகொள்ள முடியாத, விடையளிக்க முடியாத கேள்விகளுக் கெல்லாம் மார்க்சீய பொருள்முதல்வாதம் விடையளித்தது. மனித வாழ்க்கை - பொருளியல் - கருத்தியல் - அல்லது பௌதீக ஆன்மீக அம்சங்கள் இரண்டும் இணைந்ததே. எது முதன்மையானது என்பதிலேதான் வேறுபாடு. கருத்து எவ்வ ளவு வலுவான பாத்திரத்தை வகிக்கிறது என்பதை மார்க்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார். கருத்துப் போராட்டத்தின் அவசி யத்தை இது நன்கு உணர்த்துகிறது.

பாகம் – 2
மார்க்சீய இயக்க இயல் பார்வையின் அடிப்படை அம்சங்கள்

24. இந்த பிரபஞ்சம், உலகம், செடிகொடிகள், ஜீவரா சிகள், மனிதன், மனித சமுதாய வாழ்க்கை அனைத்தும் இடைவிடாமல் இயங்கிக் கொண்டும், வளர்ந்து கொண்டும், மறைந்துகொண்டும், தோன்றிக்கொண்டும் இருக்கிற இயக்கப் போக்கிலேயே உள்ளது.

எங்கல்ஸ் இதனை இவ்வாறு குறிப்பிடுகிறார்:–

"சிறிய நுட்பமான பொருள் முதலாக மிகப் பெரிய பொருள் ஈறாக, சிறு மண் துகள் முதலாக, சூரியன் ஈறாக, உயிரணு முதல் மனிதன் ஈறாக, இயற்கையில் உள்ள எல்லாப் பொருள்களும் இடையறாது தோன்றி வளர்ந்து, மறைந்துகொண்டேயிருக்கிறது. எந்நேரத்தி லும் இயங்கிக் கொண்டேயிருக்கிறது. இடையறாது இயங்கி வரும் நிலையிலும் மாறிக் கொண்டேயிருக்கும் நிலையிலும் உள்ளது"

(நூல்: இயற்கையின் இயக்க இயல்)

எது ஒன்றை பரிசீலிக்கின்ற போதும் அதனுடைய இயக்கப் போக்கில், வளர்ச்சிப் போக்கில், மாறுதல் போக்கில் பார்க்க வேண்டும். நாம் பரிசீலிக்கும் எந்த ஒரு பரிசிலனையி லும் சரியான முடிவுக்கு வர இது அவசியமானது.

முரண்பாடு

25. அனைத்தும் இடைவிடாமல் இயங்கிக் கொண்டும் மாறிக்கொண்டும் இருப்பதற்கு அடிப்படையான காரணம் அனைத்துப் பொருள்களிலும் முரண்பட்ட அம்சங்கள் உள் ளடங்கியுள்ளதே. லெனின் இதைப் பற்றி இவ்வாறு குறிப்பிட் டுள்ளார்.

"சரியான அர்த்தத்தில் சொல்ல வேண்டுமென்றால் இயக்க இயல் எனப்படுவது பொருட்களின் உள்ளுக் குள்ளேயிருக்கும் சாராம்சத்தில் பொதிந்துள்ள முரண் பாடுகளை ஆராய்வதுதான்"

(நூல்: "சித்தாந்தம் பற்றிய குறிப்புகள்")

கண்ணுக்கெட்டாத சின்னஞ்சிறு அணுவிலிருந்து அனைத்துக்குள்ளும் முரண்பட்ட சக்திகள் மோதிக் கொண்டி ருக்கின்றன என்று விஞ்ஞானம் இன்று நிரூபித்துள்ளது. அணு வில் எலக்ட்ரான் - புரோட்டான், நியூட்ரான், மின்சாரத்தில் பாசிட்டிவ் நெகட்டிவ், கணிதத்தில் கூட்டல்–கழித்தல், எந்தி ரவியலில் செயல்–எதிர் செயல், இரசாயனத்தில் பிரித்தலும் – சேர்த்தலும், உயிரியலில் உட்கொள்ளுதல் – வெளித்தள்ளு தல், கருணை–கொடுமை, அன்பு–வெறுப்பு, இப்படி எத்த னையோ உதாரணங்களைக் கூறலாம். தத்துவத்தில் – பொருள் முதல்வாதம், கருத்து முதல்வாதம், சமுதாயத்தில் சுரண்டும் வர்க்கத்தினர் – சுரண்டப்படும் மக்கள் சமுதாயத் தின் ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு அமைப்பிலும் பரஸ் பரம் மோதுகின்ற சக்திகள்.

நாம் எது ஒன்றையும் சரியாக புரிந்து கொள்ள அவை களுக்குள் உள்ளடங்கியுள்ள முரண்பாடுகளைக் கண்டறிய வேண்டும். முரண்பாடுகள் தான் இயக்கத்தின் அடிப்படை யாக உள்ளன.

எதிர்மறைகளின் ஒற்றுமை

26. ஒவ்வொன்றிலும் அடங்கியுள்ள உள்முரண்பாடு கள் எதிர்மறைச் சக்திகளாகச் செயல்படுகின்றன. இடைவிடா மல் போராடுகின்றன. இந்த போராட்டம் அவசியமானது. லெனின் இவ்வாறு கூறுகிறார்:

"வளர்ச்சி என்பது எதிர் மறைகளிடையே நடக்கும் போராட்டத்தையே குறிக்கிறது."

முரண்பட்ட சக்திகள் – எதிர்மறை சக்திகள் இடைவிடாமல் போராடிக்கொண்டேயிருக்கின்றன. அதே நேரத்தில் வளர்ந்து கொண்டும் இருக்கின்றன. இதனை எதிர்மறைகளின் ஒற்றுமை என்கிறோம். உதாரணமாக உயிரியலில் உள்ளே செல்லுதலும், வெளியே தள்ளுதலும், மூச்சு உள்ளுக்கு இழுப்பதும் வெளியே விடுவதும் இவைகளுக்கிடையே கிட்டதட்ட சமநிலை நீடிக்கும் வரை உயிர் வாழமுடியும். முதலாளித்துவ சமுதாயத்தில் சுரண்டுவோர் – சுரண்டப்படுவோருக்கிடையிலான முரண்பட்டு மோதும் சக்திகள் கிட்டதட்ட சம நிலையில் நீடிக்கும்வரைதான் முதலாளித்துவ சமுதாயமாக நீடிக்க முடியும். சுரண்டப்படும் மக்களின் சக்தி மேலோங்கிவிட்டால் முதலாளித்துவ சமுதாயம் என்னும் வாழ்நிலை மறைந்துவிடும்.

இங்கே நாம் பிரச்னைகளை பரிசீலிக்கின்றபோது எதிர்மறை சக்திகளின் பலாபலத்தைப் கணக்கிலெடுத்துக்கொள்ளுவது அவசியம் என்று உணருகிறோம்.

27. அளவும், குணமும் ஒரு பொருளின் குணத்தோடு இணைந்தது. அதன் அளவு. அளவு மாறுபடுகின்றபோது குணம் மாறுபடும். கப்பல் என்பதற்கு ஓரளவுண்டு, கப்பல் அளவில் படகும், படகு அளவில் கப்பலும் இருக்க முடியாது. கல் என்பது ஒரு தனி அளவு கொண்டது. பாறை முற்றிலும் மாறுபட்ட வேறு அளவு கொண்டது. ஒரு சில கற்கள் தண்ணீரைத் தேக்கும் அணையாகாது. பெரும் அளவிலான கற்கள் அணையாக மாறும். இரண்டு பரமாணுக்கள் சேர்ந்தால் பிராணவாயு, மூன்று பரமாணுக்கள் சேர்ந்தால் குணத்தில் முற்றிலும் மாறுபட்ட ஓசோன் என்னும் வாயு உருவாகிறது. விதை உப்பி முளையை தள்ளி செடியாகிறது. முட்டை முதிர்ந்து குஞ்சாகிறது. தண்ணீரில் வெப்பநிலை 100 டிகிரியை எட்டியதும் ஆவியாக மாறிவிடுகிறது. தூக்க மாத்திரை – குறைந்த அளவில் உறக்கம் – அதிக அளவில் சாப்பிட்டால் சாவு. அளவு மாற்றம், குண மாற்றம் குறித்து அன்றாட வாழ்க்கையிலிருந்து எத்தனையோ எளிய உதாரணங்களைக் கூறலாம். அளவு மாறுபாடு குணமாறுபாட்டிலிருந்து பிரிக்க முடியாதது.

அளவு மாற்றம் படிப்படியாக நடைபெறுகிறது. குண

மாற்றம் திடீர் பாய்ச்சலாக ஏற்படுகிறது. சமுதாயத்தில் முரண்பட்ட சக்திகளுக்கிடையிலான மோதல்கள் படிப்படியாக வளர்ச்சியடைகிறது. ஒரு குறிப்பிட்ட அளவை எட்டியவுடன் குண மாற்றமாக – திடீர் பாய்ச்சலாக – புரட்சியாக வெடிக்கிறது. முதலாளித்துவ சமுதாயம் என்ற தன்மை மாறிவிடுகிறது. அதற்கேற்ற அளவு – புரட்சி சக்திகளின் பலத்தின் அளவு மாறுதல் ஏற்படுவதற்குமுன் செயற்கையாக குண மாற்றத்தை – புரட்சியை உண்டாக்க முயற்சிப்பது, கருச்சிதைவுக்கு ஒப்பானதாகும். அளவு மாற்றத்தோடு இணைந்தே குண மாற்றம் ஏற்படுகிறது. ஏற்பட முடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மறுப்பு–மறுப்பின் மறுப்பு

28. பழைய நிலை மறக்கப்பட்டு புதிய நிலை தோன்றுவது, மீண்டும் அந்நிலை மறுக்கப்பட்டு புதிய நிலை. இவ்வாறு ஒரு நிலை மறுக்கப்பட்டு இன்னொரு நிலை தோன்றும். நிகழ்ச்சிப் போக்கு இயற்கையிலும், சமுதாயத்திலும் இடைவிடாமல் நடைபெற்று வருகிறது. பழையது மறுக்கப்பட்டு புதியது தோன்றுகிறது இந்தப் புதியது மறுக்கப்பட்டு மீண்டும் புதியது; இப்படி புதியது தோன்றுகிறபோது பழையதை முற்றாக நிராகரித்தல்ல. பழையதன் சிறப்பான சாராம்சத்தை உட்கொண்டு புதியது தோன்றுகிறது. இந்த ஒவ்வொரு மறுப்பும் அடுத்த கட்ட வளர்ச்சியை ஏற்படுத்துகிறது. திரும்ப திரும்ப நிகழும் ஒரே விதமான நிகழ்ச்சியல்ல. மேல் மட்டத்தை நோக்கிய வளர்ச்சிப் போக்கு.

உதாரணமாக ஒரு மா விதையை மறுத்து மாஞ்செடி முளைக்கிறது. செடியை மறுத்து மரமாகிறது. மரத்தில் இலைகள் – அடுத்த கட்டம் பூக்கள் – இலைகள் உதிர்கின்றன –அடுத்த கட்டம் பூக்களை மறுத்து காய்கள். ஆனால் ஒரு மா விதையிலிருந்து மீண்டும் ஒரு மாங்காய் அல்ல. தரத்தில் அதிக சிறப்பான ஆயிரக்கணக்கான மாங்காய்கள். இதுதான் வளர்ச்சியின் விதி.

மனித சமுதாயத்திற்கு இது பொருந்தும். ஆதி காலத்தில் புராதன பொதுவுடைமைச் சமுதாயம், மிகவும் பின் தங்கிய வாழ்க்கை நிலை – அதனை மறுத்து அடிமைச் சமுதாயம் தோன்றியது. அதனை மறுத்து சமுதாயத்தின்

அடுத்த கட்ட முன்னேற்றம் – நிலப் பிரபுத்துவ சமுதாயம் தோன்றியது. மீண்டும் அதனை மறுத்த அடுத்த கட்ட வளர்ச்சி – முதலாளித்துவ சமுதாயம் தோன்றியது. மீண்டும் முதலாளித்துவம் மறுக்கப்பட்டு அதைவிட மேலான சோஷலிஸ சமுதாயம், உலகின் ஒரு பகுதியில் ஏற்பட்டுள்ளது. இன்று உலகம் முழுவதும் அந்த பாதையில் செல்லுகிறது. நவீன பொதுவுடைமை சமுதாயத்தை நோக்கி நடைபெறுகிறது. ஆதிகால பின் தங்கிய பொதுவுடைமை வாழ்க்கையிலிருந்து மனித வாழ்க்கையை மகோன்னதமாக்கக்கூடிய நவீன பொதுவுடைமை சமுதாயம் தோன்றுகிறது.

ஒரு நிலையை மறுக்காமல் இன்னொரு நிலையை அடைய முடியாது. முதலாளித்துவத்தை மறுக்காமல் சோஷலிஸத்தை அடைய முடியாது என்ற உண்மையை இந்த வளர்ச்சி பற்றிய மறுப்பின் – மறுப்பு நியதி நமக்கு உணர்த்துகிறது. பழையது இடையறாது மறுப்புக்கு உள்ளாவதும் புதியதால் மாற்றப்படுவதுமாக இருக்கும் செயல்முறையே வளர்ச்சி எனப்படுவது. இது இல்லாவிடில் வளர்ச்சி இல்லை. காரல் மார்க்ஸ் பின் வருமாறு கூறினார். "எந்த வளர்ச்சியையும், அதன் உள்ளடக்கம் எதுவாக இருப்பினும், ஒன்று மற்றொன்றின் நிலை மறுப்பாக விளங்கும் விதத்தில் ஒன்றோடொன்று தொடர்புள்ள வெவ்வேறு வளர்ச்சிக் கட்டங்களின் வரிசையாகக் கருதலாம். தான் நிலவிய முந்திய வடிவங்களை மறுக்காமல் வளர்ச்சி ஒரு துறையிலும் நிகழமுடியாது."

பரஸ்பர சார்பு

29. இயற்கை சமுதாயம் மனித வாழ்க்கை அனைத்தும் பரஸ்பர சார்புடையவை. ஒன்றோடு ஒன்று சம்பந்தமில்லாதது எதுவுமில்லை. பெற்றோருக்கு சம்பந்தமில்லாத பிள்ளையில்லை, மண்ணுக்குச் சம்பந்தமில்லாத மரமில்லை, சமுதாயத்திற்குச் சம்பந்தமில்லாத மனிதன் இல்லை, தொழிலுக்குச் சம்பந்தமில்லாத தொழிலாளி இல்லை. எது ஒன்றை எடுத்துக் கொண்டாலும் இவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். நம் பலம் எவ்வளவு என்பது எதிரியின் பலத்தோடு சம்பந்தப்பட்டது. ஆகவே எது ஒன்றை பரிசீலிக்கின்றபோதும் அதைப் பற்றிய சரியான முடிவினை எட்ட அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து அம்சங்களையும் இணைத்துப் பார்க்க வேண்டுமென்பதே இதன் சாராம்சம்.

இவைகள்தான் இயற்கை, சமுதாயம் ஆகியவைகளின் இயக்கம் வளர்ச்சிப் போக்குகள் பற்றிய இயக்க இயல் சிந்தனையின் முக்கிய அம்சங்கள்.

30. இந்த உலகம், இயற்கை – பிரபஞ்சம் – சமூகம் பற்றி பிரச்னைகள் அனைத்தும் அறியத்தக்கன. அறிய முடியாததல்ல. எல்லையற்ற அறிவு வளர்ச்சிக்கு மார்க்சீயக் கண்ணோட்டம் வழி திறந்துவிடுகிறது. கருத்து முதல்வாதம் உலகை அறியும் சிந்தனையின் பாதையை அடைத்துவிடுகிறது. பிரபஞ்சம்-உலக, இயற்கை, சமுதாயம்-விதிகளின்படி இயங்கிக் கொண்டும், மாறிக்கொண்டும் இருக்கிறது, இந்த இயக்கத்திற்கு எந்த ஆத்மாவோ, பரமாத்மாவோ பொறுப்பல்ல, தேவையும் இல்லை. இயங்காத, அசையாத, மாறாத எதுவும் இல்லை. "எல்லாம் மாற்றத்திற்குட்பட்டது என்ற ஒரு விதியை தவிர மற்றதெல்லாம் மாற்றத்திற்குட்பட்டது" என்றார் மாமேதை மார்க்ஸ்.

இதுதான் மார்க்சீய உலகக் கண்ணோட்டத்தின் சாராம்சம். ஒருங்கிணைந்த இயக்க இயல் பொருள்முதல்வாதம் தத்துவ ஞானத்துறையில் மார்க்ஸ்-எங்கல்ஸின் மகத்தான சாதனையாகும்.

பாகம்–3
வரலாற்று ரீதியான பொருள் முதல் வாதம்

31. மார்க்ஸ்-எங்கல்ஸ் காலம் வரை வரலாறு என்பது தனிப்பட்ட நிகழ்ச்சிகளின் தொகுப்பாகவே இருந்து வந்தது. குறிப்பாக மன்னர்கள், வீரர்கள், தளபதிகள் வரலாறாக, நாடுகளுக்கிடையே நடைபெற்ற போர்கள், அவைகளின் வெற்றி தோல்விகளின் வரலாறாகவே சித்தரிக்கப்பட்டது. இவ்வாறு எழுதப்பட்ட வரலாற்று நூல்களை எவ்வளவு பயின்றாலும் எத்தனை பட்டங்கள் பெற்றாலும் மனித சமுதாயத்தில் ஏற்பட்டு வரும் தொடர்ச்சியான மாறுதலுக்கும், வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படைக் காரணம்

என்ன என்பதை விளக்க முடியாது, புரியாது. உலகம் இது வரை ஐந்து வகையான சமுதாய அமைப்புகளைக் கண்டுள் ளன.

* புராதன பொதுவுடமை சமுதாயம்
* அடிமைச் சமுதாயம்
* நிலப்பிரபுத்துவ சமுதாயம்
* முதலாளித்துவ சமுதாயம்
* சோஷலிஸ சமுதாயம்

இவை ஒவ்வொன்றும் முற்றிலும் மாறுபட்ட சமூக அமைப்புகள். அத்தகைய சமூக அமைப்புகள் ஏன் ஏற்பட் டன? இதற்கு மார்க்ஸ்– எங்கல்ஸுக்கு முந்தைய சரித்திர ஆசிரியர்களால் விடையளிக்க முடியவில்லை. வரலாறு என் பது ஒரு இருட்டறையாகவே இருந்தது. மார்க்ஸ்–எங்கல்ஸ் தான் இயக்க இயல் பொருள்முதல்வாத அடிப்படையில் வர லாற்றை விளக்கிக் கூறினர். இன்னொரு வகையில் சொல்லப் போனால், மனித வாழ்க்கைக்கு அவசியமான பொருள் உற் பத்தி முறையிலும் வினியோக முறையிலும் ஏற்பட்டுவரும் மாறுதலின் அடிப்படையில் வரலாற்று வளர்ச்சியினை – சமூக மாறுதலை விளக்கினர். ஆகவே, இதனை வரலாற்று ரீதியான பொருள் முதல் வாதம் என்று அழைக்கிறோம். மனித சமுதாய வரலாறு குறித்த மார்க்ஸ் – எங்கல்ஸ் கண்டு பிடிப்பே வரலாற்று ரீதியான பொருள் முதல் வாதம்.

உற்பத்தி சக்திகளும் உற்பத்தி உறவுகளும்

32. "ஒரு சமுதாயத்தின் தன்மை அந்த சமுதாயத்தில் வாழும் மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை எவ் வாறு உற்பத்தி செய்கிறார்கள், அவைகளை தங்களுக்குள் எவ்வாறு விநியோகித்துக் கொள்ளுகிறார்கள் என்பதைப் பொறுத்து தீர்மானிக்கப்படுகிறது" என்று கூறினார் மார்க்ஸ்.

உற்பத்தியின் தன்மையை தீர்மானிப்பது? உற்பத்திக்குப் பயன்படுத்தும் கருவி, உற்பத்திக் கருவியும் அதைப் பயன்படுத் தும் ஞானமுடைய மனிதனும் இணைகிறபோது உற்பத்திச் சக்தி உருவாகிறது. இவ்வாறு உற்பத்தியில் ஈடுபடுகிற மனிதர் களுக்கிடையே ஏற்படுகிற உறவுக்கு – உற்பத்தி உறவு அல்லது சமுதாய உறவு என்று கூறுகிறோம். உற்பத்திக் கருவிகளின் – சக்திகள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து – கொண்டும் மாறிக்

கொண்டும் வருகிறது. அதற்கேற்ப மனிதனுடைய சமுதாய உறவும் மாறித் தீர வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இதன் விளைவே இதுவரையிலான சமுதாய மாற்றங்கள். உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகள் – சமுதாய உறவுகளுக்கும் இடையில் வளர்ந்து வரும் முரண்பாடுகள் – மோதல்கள்தான் சமுதாய மாறுதலைத் தவிர்க்க முடியாததாக்குகிறது. இது வரை ஏற்பட்ட சமுதாய மாறுதல்கள் அனைத்தும் இதற்கேற் பவே நடந்துள்ளன. இன்றைய சமுதாயத்திற்கும் இது பொருந் தும் இவைகளின் வளர்ச்சிக்கேற்ப மனிதர்கள் மேற்கொள் ளும் உணர்வு பூர்வமான முயற்சியும் இணைகிறபோதே சமு தாயமாறுதல் ஏற்படும்.

33. ஆதிகால சமூக அமைப்பை, புராதன பொதுவுடை மைச் சமுதாயம் என்று அழைக்கின்றோம். இச் சமுதாய காலத்தில் உலகில் நாடுகள், நகரங்கள், ஊர்கள், வீதிகள், வீடுகள் என்று ஏதும் தோன்றியிருக்கவில்லை. தனிச் சொத்து, குடும்பம், அரசு என்று ஏதும் இருக்கவில்லை. மக்கள் மிருகங் களைப்போல் காடுகளில் வாழ்ந்தனர். அவர்களின் கருவிகள், ஆயுதங்கள், கல்லும், வில்லும்தான். இதனைக் கொண்டுதான் மிருகங்களைக் கொன்று உணவாக்கிக் கொள்ள வேண்டும். அதே மிருகங்களிடமிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டும். இந்நிலையில் யாரும் தனித்து வாழ முடியாது. தனித்து உணவு தேட முடியாது, தற்காத்துக் கொள்ள முடி யாது. கூட்டாகவே இம்முயற்சிகளில் உழைப்பில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாயிற்று. ஆக, ஒரு கூட்டத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் கூட்டாக, உழைத்தனர். வேட்டையில் ஈடுபட்டனர். கிடைத்த மாமிசத்தையும் கூட்டாக பகிர்ந்து கொண்டனர். இதுதான் இச் சமுதாயத்தின் உற்பத்தி விநி யோக முறையாக அமைந்தது. இதனாலேயே இதற்கு புராதன பொதுவுடைமைச் சமுதாயம் என்ற பெயர் அமைந்தது.

34. இச்சமுதாயத்தில் ஆரோக்கியமான ஆண்களும், பெண்களும் உழைப்பில் ஈடுபட்டனர். இப்படி இவர்கள் உழைத்தபோது, வேட்டையாடியபோது ஒரு கூட்டத்திற்கு வழிகாட்டும் பொறுப்பு அக் கூட்டத்தின் தலைவியான பெண் ணுடையது. ஒரு கூட்டம் முழுவதும் ஒரு பெண்ணின் மூல

மாக-தாயின் மூலமாகவே அறியப்பட்டது.

அன்று பெண் பலவீனமானவளாக இருக்கவில்லை. தந்தை வழியை பற்றி யாரும் அறிந்திருக்கவில்லை. ஏனெனில் திருமண முறையோ, குடும்ப முறையோ தோன்றியிருக்க வில்லை. இந்த கூட்டு உழைப்பின்போது அவர்கள் எழுப்பிய ஓசைகள்தான் பின்னர் மொழியாகவும், இசையாகவும் வளர்ச் சியடைந்தன. இத்தகைய கூட்டத்தினரிடையில் உள்ளோர் - இல்லாதோர், உயர்ந்தோர் - தாழ்ந்தோர், ஆளுவோர் - ஆளப்படுவோர் - அரசு ஏதும் இருக்கவில்லை. அவர்களிடம் மறைத்து வைக்க எந்த உடைமையும் இருக்கவில்லை. அவர்க ளுக்கு பொய், சூது, வாது, வஞ்சனை, ஏதும் தெரியாது. இன்றுள்ள ஜாதிகள், மதங்கள், கடவுள்கள், தத்துவங்கள் ஏதும் இருக்கவில்லை. இவைகளையெல்லாம் தோற்றுவிக்கக் கூடிய அளவுக்கு மனிதன் அன்று வளர்ந்திருக்கவில்லை. இந்த பின்னணியிலேயே அவனது ஒழுக்க உணர்வுகள் உருவாயின.

"மனிதனின் உணர்வு அவனது சமுதாய வாழ்க்கையை தீர்மானிக்கவில்லை, மாறாக சமுதாய வாழ்க்கைதான் அவ னது உணர்வை தீர்மானிக்கிறது" என்று மார்க்ஸ் கூறியது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

35. இந்த சமுதாயத்தில் இத்தகைய நல்ல அம்சங்கள் எல்லாம் இருந்தபோதிலும் மிகமிக பின் தங்கிய வாழ்க்கை நிலை. இயற்கையை அறியாத மனிதன், இயற்கைக்கு அஞ்சி அஞ்சி வாழ்ந்த மனிதன். நிலமும், நீரும், நெருப்பும், காற்றும், மிருகங்களும் அவனது வாழ்க்கைக்கு ஆதாரமாக இருந்தன. இவைகளே அவனது பேரழிவுக்கும் காரணமாக பல நேரங்க ளில் அமைந்தன. இதனால் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாக இவைகளை வணங்கவும் - வழிபடவும் தொடங்கினான். இன்று உலகம் முழுவதும் ஏதாவது ஒரு வகையில் வழிபடும் தெய்வங்களாக இவைகளே உள்ளன. மற்றவைகள் எல்லாம் உள்ளூர் தெய்வங்களே.

இயற்கையின் சீற்றத்திற்கு பல நேரங்களில் செத்து மடிந்தனர். பல நேரங்களில் மாமிசமோ, காய், கனிகளோ கிடைக்காமல் பட்டினிக்கிரையாயினர். வேட்டையாடலிலும், காய் கனி சேகரிப்பிலும் ஈடுபட்டபோது பல நேரங்களில் மாற்றுக் கூட்டத்தோடு மோதி மடிந்தனர்.

36. இக்கடுமையான நிலையிலிருந்து முன்னேற்றம் காண அவர்கள் அயராது முயற்சித்தனர். கால்நடைகளை அவ்வப்போது கொன்று தின்னும் நிலையிலிருந்து வளர்க்கும் நிலைக்கு முன்னேறினர். பழங்களைப் பயிரிடும் நிலைக்கு வளர்ச்சியடைந்தனர். தொடர்ச்சியான தீவிர முயற்சியில் உலோகங்களைக் கண்டெடுத்தனர். கத்தியும், கூர்வாளும் கோடாரியும் உருவாகியது. கல், வில், கம்புக்குப் பதிலாக புதிய உற்பத்திக் கருவிகள் உருவாகின. காடுகளை கழனி யாக்க முடிந்தது. வீடுகள் அமைக்க முடிந்தது. புதிய வேலைப் பிரிவினைகள் தோன்றின. விவசாயம் வளரத் தொடங்கியது. குழந்தை வளர்ப்பு, வீட்டுப் பராமரிப்பு, பெண்களின் பொறுப்பாகியது, சமுதாய உழைப்பிலிருந்து பெண் அகற்றப் பட்டாள்.

மனித சமுதாயத்தில் ஏற்பட்ட முதல் வேற்றுமை: உலோகக் கருவி உள்ளவர்கள் - இல்லாதவர்கள்; முதல் அடிமைத்தனம்: ஆணுக்குப் பெண் அடிமைப்பட்டது. அதே நேரத்தில் சமுதாயம் அடுத்த கட்டத்தை நோக்கி முன்னேறும் வாய்ப்பு தோன்றியது. "கோடாரி வரலாற்றில் ஏற்படுத்திய மாறுதல் மகத்தானது" என்று குறிப்பிட்டார் எங்கல்ஸ். குடும் பமும், தனிச் சொத்தும் தோன்றும் நிலை ஏற்பட்டது.

அடிமைச் சமுதாயம்

37. உள்ளவர்கள், இல்லாதவர்களை அடிமைப்படுத்தும் நிகழ்ச்சிப் போக்கு ஆரம்பமாகியது. கருவிகளைக் கொண்டு மற்றவர்களை உழைக்கச் செய்தால் அவனுக்குத் தீனி போட் டது போக மிச்சம் வரும் என்ற நிலை ஏற்பட்டது. ஒருவனது உழைப்பின் மூலம் உபரி உற்பத்தி ஏற்படாமலிருந்திருந்தால் அடிமைச் சமுதாயமே தோன்றியிருக்காது. சமுதாய முன் னேற்றமும் ஏற்பட்டிருக்காது. அடி பணிய மறுத்தவர்களை அடக்கி ஒடுக்கிப் பணியவைத்தனர். இதற்கான அடியாளர் கூட்டம் உருவாக்கப்பட்டது. ஆண்டைகள்-அடிமைகள் என்ற தெளிவான வர்க்க வேற்றுமை தோன்றியது. ஆண்டை கள் அடிமைகளை அடக்கி ஒடுக்குவதற்கான அடக்கு முறைக் கருவியாக அரசு தோன்றியது. அடிமைகளைக் கொல்லவும், விற்கவும் ஆண்டைகளுக்கு உரிமையிருந்தது. ஒரு பக்கம் கடு

மையான சுரண்டல் அடக்குமுறை, மறுபக்கம் விவசாயம், குடியிருப்பு, கைத்தொழில்களின் வளர்ச்சி, பண்டப் பரிவர்த்தனை முறைகளும் தோன்றின. ஆண்டை வர்க்கத்தைச் சேர்ந்த பலர் உடலுழைப்பிலேயிருந்து விடுபட்டு அறிவுத் துறையில் முழுமையாக ஈடுபடும் நிலை ஏற்பட்டது. மொழி வளர்ந்தது. எழுத்தும், இலக்கணமும், இலக்கியங்களும், தத்துவங்களும் தோன்றின.

38. சிறுபான்மையினரான ஆண்டைகள், பெரும்பான்மையோரான அடிமைகளை அடக்கி ஒடுக்க அடக்குமுறை மட்டும் போதவில்லை. அவர்களை மயக்கி வைக்கும் அபின் தேவைப்பட்டது. புதிய மதங்கள், கடவுள்கள், தலையெழுத்து, முன் பிறப்பு, மறுபிறப்பு நரகம் – சொர்க்கம், எல்லாம் அவன் செயல் போன்றவைகள் அனைத்தும் இக்காலத்தில் சுரண்டும் கூட்டத்தைச் சேர்ந்த அறிவாளிகளால் உருவாக்கப்பட்டன.

ஒட்டு மொத்தத்தில் புராதன பொதுவுடமைச் சமுதாயத்துடன் ஒப்பிடுகிறபோது அடிமைச் சமுதாய அமைப்பில் சமுதாயம் மேலும் ஒரு படி முன்னேறியது என்றே கூறலாம். உலகெங்கும் இத்தகைய அடிமை சமுதாய முறை ஒரு காலத்தில் இருந்து வந்தது. ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரே விதமான வடிவில் ஏற்படவில்லை. சில நூற்றாண்டுகளில் தான் உலகம் முழுவதும் இம் மாறுதல் ஏற்பட்டது. மாறுபட்ட வடிவங்களில் ஏற்பட்டது. உதாரணமாக இந்தியாவில் வருணாசிரம தர்ம-நான்கு வருண முறை அதன் வடிவமாக அமைந்தது. இது நிலப் பிரபுத்துவ காலத்தில் எண்ணற்ற ஜாதிகளாக பரிணமித்தது.

அடிமை முறையில் சமுதாயம் ஒரு குறிப்பிட்ட கட்டத்திற்கு மேல் முன்னேற முடியவில்லை. ஒரு பக்கம் அடிமைகளின் கலகம், மறு பக்கம் சமுத்தாய முன்னேற்றத்திற்கு உணர்வுபூர்வமாகச் செயல்படும் சுதந்திர மனிதன் தேவைப்பட்டான்.

சமுதாயம் மேலும் முன்னேற அடிமைமுறை ஒழிய வேண்டுமென்ற கருத்து பரவியது. உடமை வர்க்க அறிவு – ஜீவிகளிலேயே சிலர் இக்கருத்தினை முன் வைத்தனர். இதற்கு ஆதரவான கலைகளும், இலக்கியங்களும், தத்துவங்களும்

தோன்றி. அடிமைகளின் கலகமும் வலுத்தது. இறுதியில் அடிமைமுறை வீழ்ச்சியுற்றது. இதுவும் நீண்ட காலப் போக்கிலேயே பல்வேறு வடிவங்களில் உலகெங்கும் நடைபெற்றது. அடிமைகள் விடுதலை பெற்றனர். அவர்களை இப்போது கொல்ல முடியாது. அவர்களின் உயிருக்கு சுதந்திரம் கிடைத்தது. நிலப்பிரபுத்துவ அமைப்பின் வளர்ச்சி கட்டத்தில் விற்க முடியாது என்ற நிலையும் ஏற்பட்டது. ஆண்டைகள் நிலத்திற்கு உடமையாளர்களாக-நிலப் பிரபுக்களாக மாறினர்.

நிலப் பிரபுத்துவம்

39. பழைய அடிமைகள் நிலப் பிரபுக்களின் பண்ணைகளில் விவசாயிகளாக மாறினர். துண்டு துக்காணி நிலத்தில் சொந்தமாகவும் பயிரிடலாம். அவர்களின் பிள்ளைகள் பண்ணையில்தான் வேலை செய்ய வேண்டுமென்ற கட்டாயமில்லை. அவர்கள் பல்வேறு கைத் தொழில்களில் ஈடுபட உரிமை பெற்றனர். இது வரலாற்றில் ஏற்பட்ட பெரிய முன்னேற்றம். விவசாயமும், கைத் தொழில்களும் பெரும் அளவில் வளர்ந்தன. பட்டறைகள் தோன்றின. அதனதன் உடமையாளனே உற்பத்தியாளராகவும் இருந்தான். விவசாயீகளின் பிள்ளைகள் அங்கு பயிற்சி பெற்றனர். தொழிலாளர்களாக மாறினர்.

நிலப் பிரபுக்களில் பலர் குறுநில மன்னர்களாக, முடிமன்னர்களாக, மாமன்னர்களாக, சக்கரவர்த்திகளாக வளர்ச்சியடைந்தனர். நாடுகளும், சாம்ராஜ்யங்களும் தோன்றின. சில நூற்றாண்டுகளில் உலகெங்கும் இம்முறை பரவியது.

40. விவசாயமும், கைத்தொழிலும் வளர்ந்தபோது, உற்பத்திப் பொருட்களைப் பரிவர்த்தனை செய்வதையே தொழிலாகக் கொண்டு ஒரு வணிகக் கூட்டம் தோன்றியது. பொதுவான பரிவர்த்தனைக்குத் தேவைப்பட்ட பொது நாணயங்கள் – மன்னர்களின் முத்திரையுடன் தோன்றின. பண்ட உற்பத்தி மேலும் வளர வேண்டிய தேவையேற்பட்டது. ஆனால், பட்டறை உடமையாளர்களிடம் அதற்கு போதுமான மூலதனமோ, வேலையாட்களோ இருக்கவில்லை. வணிகர்கள் பலர் பட்டறைகளில் முதலீடு செய்யத் தொடங்கினர். பல பட்டறை உற்பத்தியாளர்களும், வணிகர்களும் இணைந்து நாளா

வட்டத்தில் பெரும் அளவில் விற்பனைச் சரக்கை உற்பத்தி செய்யும் பூர்ஷ்வா வர்க்கமாக உருவாகினர். நிலப் பிரபுத்துவ அமைப்பில் ஒரு புதிய வர்க்கம் பிறந்தது.

41. பண்ட உற்பத்தி அதிகரித்தது. நீராவியினால் இயங்கும் இயந்திரங்களின் கண்டுபிடிப்பு இதற்கு மேலும் உத்வேக மூட்டியது. ஆனால் இதற்கு மேலும் அதிக மூலதனம் தேவைப் பட்டது. நிலப்பிரபுத்துவ ஆட்சி முறை இதில் அக்கரை காட்டவில்லை. நிலப்பிரபுத்துவ வர்க்கத்திற்கும் பூர்ஷ்வா வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைந்தது. ஜனநாயக கோஷங்களை முன்வைத்து பூர்ஷ்வாக்கள் மக்களை மன்னர்களுக்கு எதிராக திரட்டினர். அதற்காதரவாக புதிய தத்துவங்களையும், அரசியல் கோஷங்களையும் உருவாக்கினர். கலகம், வலுத்தது, மன்னர்களின் தலை சீவப்பட்டது, அரண்மனைகள் தீயிட்டு பொசுக்கப்பட்டன. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளின் முடியாட்சிகள் சரிந்தன. முதலாளி வர்க்க ஆட்சி தோன்றின.

முதலாளித்துவ சமுதாயம்

42. உலகம் முழுவதும் இம்மாறுதல் சில நூற்றாண்டுகளில், வெவ்வேறு வடிவங்களில் நடந்தேறியுள்ளன. முதலாளித்துவ அமைப்பில் எந்திர உற்பத்தி முறை வளர்ச்சியடைந்தது. வரலாறு கண்டிராத அளவில் செல்வம் குவிந்தது. மாநகரங்கள் தோன்றின, போக்குவரத்துத் துறையில் பெரும் புரட்சியே ஏற்பட்டது. மனித சமுதாயம் அன்றுவரை கண்டிராத மகத்தான மாறுதலை முதலாளித்துவம் ஏற்படுத்தியது. தொழிலும், விஞ்ஞானமும் பெருமளவில் வளர்ந்தன. அதே நேரத்தில் ஒரு பக்கம் செல்வம் குவிந்தபோது மறுபக்கம் வறுமை வளர்ந்தது. அதிலும் குறிப்பாக காணும் செல்வத்தையெல்லாம் உழைத்துக் குவித்தோரிடம் வறுமையும், உடலுழைப்பில் ஈடுபடாத மூலதனச் சொந்தக்காரர்களிடம் செல்வமும் குவிந்தது? இது ஏன்? ஒரு பக்கம் தொழில் வளர்ச்சி, மறுபக்கம் வேலையின்மை, ஏன்?

43. பொருளாதாரத் துறையில் இது ஒரு அடிப்படையான கேள்வி. மார்க்ஸ்–எங்கல்ஸ்"க்கு முன்னால் பொருளாதாரத் தத்துவம் பெரும் அளவிற்கு வளர்ச்சியடைந்திருந்த நாடு பிரிட்டன். அதன் தலைசிறந்த பிரதிநிதிகளாக ஆடம் ஸ்மித்தும், டேவிட் ரிக்கார்டோவும் இருந்தனர். பொருளாதாரத் துறையில் மார்க்ஸ"க்கு முந்தைய தலைசிறந்த பிரதிநிதிகளாக இவர்கள் விளங்கினர். இவர்கள் பொருளாதாரம் சம்பந்தமாக ஆய்ந்தனர். அதன் பல்வேறு விதிகளை விளக்கினர். உழைப்புதான் புதிய மதிப்பினை–செல்வத்தைப் படைக்கிறது என்பதை அவர்கள் எடுத்துக்காட்டினர். உழைப்பு என்னும் தந்தையும், இயற்கை என்னும் அன்னையும் இணைகிறபோது புதிய செல்வம் பிறக்கிறது என்று அவர்கள் விளக்கினர். அப்படியானால், உழைப்பாளிகளுக்கு வறுமையும், உழைக்காதவர்களிடம் செல்வமும் குவிய காரணம் என்ன என்ற கேள்விக்கு அவர்கள் விடையளிக்கவில்லை. அப்பணியினை வரலாறு மார்க்ஸிடம் விட்டுவிட்டது.

உபரி மதிப்பு

44. முதலாளித்துவ சமுதாயத்தில் உழைக்கும் தொழிலாளி பெறுகின்ற ஊதியம் அவனது உழைப்பின் மதிப்பல்ல. மாறாக, அவன் ஒவ்வொரு நாளும் இழக்கின்ற உழைப்புச் சக்தியின் விலை – அவனுக்குப் பின்னால் உழைப்பதற்கான உழைப்பாளியை உருவாக்க ஒரு சிறிய குடும்பம் நடத்துவதற்கான செலவு–இவ்வகள் எல்லாம் இணைந்ததே உழைப்புச் சக்தியின் விலை என்பது. இதற்காகும் செலவு–அல்லது விலை என்ன என்பதே உழைப்பாளிக்கும் மூலதனச் சொந்தக்காரனுக்கும் இடையே நடைபெறும் பேரம். இதன் அடிப்படையில் இறுதியாக ஒரு தொகை தீர்மானிக்கப்படுகிறது. அதற்கு அவன் எட்டு மணி நேரம் அல்லது பத்து மணி நேரம் உழைக்க வேண்டுமென்று ஒப்பந்தம் செய்யப்படுகிறது. அவனுக்கு நிச்சயிக்கப்பட்ட ஊதியத்திற்கான செல்வத்தை முதல் மூன்று அல்லது நான்கு மணி நேரத்தில் அளித்துவிடுகிறான் அத்தோடு அவன் வேலையை முடித்துக்கொண்டு திரும்பமுடியாது. ஒப்பந்தப்படி அவன் மீண்டும் நான்கு–ஐந்து மணி நேரம் உழைக்க வேண்டும்'' இந்த உழைப்பை மார்க்ஸ் உபரி உழைப்பு என்றார். இந்த உபரி உழைப்பில் உற்பத்தியாகும் செல்வத்தை உபரி மதிப்பு என்றார். இதுதான் லாபமாக–மூலதனமாக குவிகிறது என்பதை எடுத்துக் காட்டினார். இதனால் தான் உழைப்பாளிக்கு வறுமையும். மூலதனச் சொந்தக்கார

னிடம் செல்வமும் குவிகிறது என்பதை எடுத்துக் காட்டினார். பொருளாதாரத்தில் உபரி மதிப்புச் சிந்தாந்தம் மார்க்ஸின் கண்டுபிடிப்பு.

கற்பனா சோஷலிசம்

45. முதலாளித்துவ சமுதாயத்தில் முன்னுக்கு வந்த இந்த முரண்பாடு புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்தது. முதலாளித்துவ சமூகத்தில் உற்பத்தி சமூக ரீதியாக நடைபெறுகிறது. உபயோகமும் சமூக ரீதியாகிவிட்டது. ஆனால், இடையிலே உள்ள தனி உடைமையின் காரணமாக அதன் பலன் முழுவதும் சமூகத்திற்கு கிடைக்காமல் போகிறது. ஆகவே; உடமையும் சமூக மயமாக வேண்டும்-சோஷலிஸமாக ஆக வேண்டும் என்ற கருத்து பிறந்தது. முதலாளித்துவம் முதலில் வளர்ச்சியடைந்த மேற்கு ஐரோப்பாவில் குறிப்பாக பிரான்சில் இக்கருத்து வலுவாக முன்னுக்கு வந்தது-பிரான்சில் செயின்ட் சைமனும், பியூரியரும்; இங்கிலாந்தில் ராபர்ட் ஓவனும் இக்கருத்தின் தலைசிறந்த பிரதிநிதிகளாக இருந்தனர். இத்தகைய சமூக மாறுதலால் யாவருக்கும் நன்மை கிடைக்கும், யாரும் பாதிக்க மாட்டார்கள். ஆகவே இதன் நியாயத்தை எடுத்துக் கூறினால் முதலாளிகளும், ஆட்சியாளர்களும்கூட அதனை ஏற்பர் என்று அவர்கள் எதிர்பார்த்தனர். அனைவருக்கும் வேண்டுகோள் விட்டனர். விண்ணப்பங்கள் அனுப்பினர். ஏமாற்றமே அவர்கள் கண்ட பலன். மார்க்ஸ்-எங்கல்ஸ் இதனை கற்பனா சோஷலிஸம் என்று அழைத்தனர்.

விஞ்ஞான சோஷலிஸம்

46. மார்க்ஸ்-எங்கல்ஸ் "கம்யூனிஸ்ட் அறிக்கையில்" சோஷலிஸத்தை விஞ்ஞான ரீதியாக விளக்கினர். உற்பத்தி உடமைகளை சமுதாய உடமையாக்க வேண்டுமானால், அதனைப் பாதுகாத்து நிற்கும் அவர்களின் அரசு அமைப்பை வீழ்த்த வேண்டும். தொழிலாளி வர்க்க ஆட்சி அதிகாரம் அமைய வேண்டும். அதற்காக தொழிலாளி வர்க்கமும் இதர உழைப்பாளி வர்க்கங்களும் ஒன்றுபட்டு போராட வேண்டும். ஒரு சமுதாயப் புரட்சியின் மூலம் பாட்டாளி வர்க்க ஆட்சி அதிகாரத்தை அமைக்க வேண்டும் அதன் மூலம் உற்பத்திச் சாதனங்களை பறிமுதல் செய்ய வேண்டும்; சமுதாய உடைமையாக்க வேண்டும். சுரண்டும் வர்க்கம் தானாக தனது சுரண்டலையோ, அரசு ஆதிக்கத்தையோ விட்டுத் தராது என்ற உண்மைகளை எடுத்துக் கூறி-சோஷலிஸத்தை விஞ்ஞான ரீதியாக விளக்கினர்.

47. ஏகாதிபத்தியம் - முதலாளித்துவம் முதலில் வளர்ச்சியடைந்த நாடுகளில் தன்னாட்டு மக்களை சுரண்டி மூலதனத்தைப் பெருமளவில் குவித்தபோது, சந்தைக்காகவும், முதலீடு செய்வதற்காகவும் மூலப் பொருட்களுக்காக பிற நாடுகளைச் சுரண்டும் தேவை ஏற்பட்டது. இதற்காக வளர்ச்சியில் பின் தங்கியிருந்த நாடுகளின்மீது முதலில் வியாபார படையெடுப்பு, அதனைத் தொடர்ந்து இராணுவ படையெடுப்பின் மூலம் அந்நாடுகளை அடிமைப்படுத்தினர். இவ்வாறு முதலாளித்துவம் அதன் உச்சகட்டத்தை-ஏகாதிபத்திய கட்டத்தை எட்டியது. இந்த வளர்ச்சிப் போக்கினை விளக்கி தோழர் லெனின் "ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்-அதன் அழிவு கட்டம்" என்ற நூலினை எழுதியுள்ளார். ஏகாதிபத்திய நாடுகள் உலகை பங்குபோட்டு முடித்தபின் அவர்களுக்கிடையே போட்டியும், முரண்பாடும், மோதலும் தீவிரமாகியது. அதன் விளைவாகவே 1914-ல் முதல் உலக யுத்தம் வெடித்தது.

48. ஏகாதிபத்திய காலகட்டத்தில் தொழிலாளி வர்க்கப் புரட்சிகள் வெற்றி பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று லெனின் எடுத்துக்காட்டினார். இதே காலத்தில் தேச விடுதலைப் போராட்டங்களும் வளர்ந்து வந்தன. 1917 அக்டோபரில் ருஷ்யாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெற்றது. பாட்டாளி வர்க்க அரசு அமைந்தது. கடந்த 72 ஆண்டுகளில் உலகில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேல் மக்கள் வாழும் நாடுகள் சோஷலிஸப் பாதையில் வந்துள்ளன. சோஷலிஸம் இன்று ஒரு உலக அமைப்பாக மாறியுள்ளது. சோஷலிஸ அமைப்பில் உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் சமூக உடைமையாக்கப்படும். மனிதனை மனிதன் சுரண்டும் முறைக்கு சோஷலிஸத்தில் இடம் இல்லை. அனைவரும் உழைத்துதான் வாழவேண்டும். ஒவ்வொருவரும் சக்திக்கேற்ற உழைப்பை சமூகத்திற்கு அளித்து உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறுவான். சோஷ

லிஸத்தின் உயர்ந்த கட்டமான கம்யூனிஸ சமூகத்தில் ஒவ்வொருவம் தன்னாலியன்ற உழைப்பை சமூகத்திற்கு அளித்து தனக்குத் தேவையானது அனைத்தையும் பெறுவான்.

49. சோஷலிஸ சமுதாயத்திற்கான போராட்டத்தில் முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள மிகவும் புரட்சிகரமான வர்க்கமாகிய தொழிலாளி வர்க்கம்தான் இதர பகுதி உழைப்பாளி மக்களை – ஜனநாயக சக்திகளை அணிதிரட்டி தலைமையேற்றுப் போராட வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி – கம்யூனிஸ்ட் கட்சி. இதில் முக்கிய பங்கு பெறுகிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலில் தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில்தான் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிஸத்திற்கு – கம்யூனிஸத்திற்கு மனித சமுதாயம் செல்ல முடியும்.

50. இதுதான் புராதன பொதுவுடைமையிலிருந்து சோஷலிஸ சமுதாயம்வரை மனித சமுதாயம் கடந்துவந்த பாதையின் சுருக்கம். இந்த மாறுதல் தவிர்க்க முடியாதது. சமுதாய வளர்ச்சி விதிகளின்படி ஏற்படுவது எந்த சக்தியினாலும் தடுக்க முடியாதது. ஆனால், தானாகவும் நடக்காது. அதனைச் சாதிப்பதில் சமுதாயத்தின் புரட்சிகரமான வர்க்கமும், புரட்சியாளர்களும் உணர்வுபூர்வமாக செயல்பட வேண்டும். விவசாயிகளையும் இதர உழைப்பாளிகளையும் அணிதிரட்ட வேண்டும். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நீடித்து வரும் சமூகக் கொடுமைகளுக்கு முடிவு கட்டும் இப்போரில் அர்ப்பணித்துக்கொள்ளுவது வாழ்க்கையைப் பயனுள்ளதாகச் செய்கிறது. மனித சமுதாயத்தின் மகத்தான முன்னேற்றத்திற்கான போரில் மகிழ்ச்சியோடு ஈடுபடுவோமாக.

குறிப்பு : படிக்க வேண்டிய நூல்கள்

1. கம்யூனிஸ்ட் அறிக்கை–மார்க்ஸ்–எங்கல்ஸ்
2. இயற்கையின் இயக்க இயல்–எங்கல்ஸ்
3. குடும்பம், தனிச் சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் எங்கல்ஸ்
4. இயக்க இயல் பொருள்முதல்வாதமும், வரலாற்றுப் பொருள் முதல்வாதமும்–ஸ்டாலின்
5. மார்க்சிஸத்தின் மூன்று உள்ளடக்கங்களும் அவைகளின் மூலக் கூறுகளும்–லெனின்.

இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் திட்டம் பற்றிய ஒரு பாடக் குறிப்பு

பி.ஆர். பரமேஸ்வரன்

பாடக் குறிப்பு

முன்னுரை

இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் திட்டத்தை விளக்குவதற்கான ஒரு விரிவான பாடக் குறிப்பு இது. புரட்சியின் கட்டங்கள், யுத்த தந்திரம், நடைமுறைத் தந்திரம், நமது கட்சித் திட்டம் உருவான வரலாற்றுப் பின்னணி, திட்டத்தின் முக்கிய அம்சங்கள், சி.பி.ஐ திட்டத்தின் வலது திருத்தல்வாத நிர்ணயிப்புகள், இடது அதிதீவிரவாதம் – நக்சலிஸத்தின் தவறான நிர்ணயிப்புகள் ஆகியவைகள் இதில் அடங்கியுள்ளது. இவைகள் அனைத்தையும் நமது கட்சித் தோழர்களுக்கு விளக்கமாக, விபரங்களுடன் எடுத்துக் கூற வேண்டும். இதற்கு தேவையான விபரங்கள் அனைத்தையும் வகுப்பு நடத்தும் தோழர்கள் சேகரித்துக்கொள்ள வேண்டும்.

உதாரணமாக நமது கட்சித் திட்டம் சுட்டிக்காட்டியிருப்பதுபோல, முதலாளித்துவ வளர்ச்சி–குறிப்பாக ஏகபோக முதலாளித்துவ வளர்ச்சி, நிலப்பிரபுத்துவம் நீடித்து வரும் நிலை, நிலமற்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது, இந்திய பொருளாதாரம் அன்னிய மூலதனத்தைச் சார்ந்து நிற்பது, அன்னிய மூலதனம், கடன் அதிகரித்து வருவது, பொருளாதார நெருக்கடி தீவிரமடைதல், ஐந்தாண்டு திட்டங்கள், பொதுத்துறை, வங்கி–இன்சூரன்ஸ் தேசிய மயமாக்கம் எவ்வாறு முதலாளித்துவ வளர்ச்சிக்கு பயன்பட்டது – இது போன்ற பல்வேறு விஷயங்களை, கட்சித் திட்டத்தை விளக்க உதாரணங்களாக எடுத்துக் கூறவேண்டும். அதற்கான விபரங்களை வகுப்பு நடத்தும் தோழர்கள் சேகரித்துக்கொள்ள வேண்டும்.

இந்த வகுப்பின் எல்லா அம்சங்களையும் ஒரு சில மணி நேரத்திலோ அல்லது ஒரு நாளிலோ விளக்க முடியாது. நேரத்திற்கும், வகுப்பில் பங்குகொள்ளும் தோழர்களின் தரத்திற்கும் ஏற்ப வகுப்புகள் பல பிரிவுகளாக பிரித்துக் கொள்ளலாம். கட்சித் திட்டம் சம்பந்தமான பல அடிப்படை அம்சங்கள் இதில் விரிவாக விளக்கப்பட்டுள்ளதால், கட்சித்

திட்டத்திலிருந்து மிகக் குறைவாகவே மேற்கோள்கள் தரப்பட்டுள்ளது. ஆகவே, வகுப்பு நடத்தும் தோழர்கள் இத்துடன் கட்சித் திட்டத்தையும் கையில் வைத்துக்கொண்டு முக்கிய பகுதிகளை படித்துக்காட்டி விளக்க வேண்டும்.

1. கட்சித் திட்டம் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தொழிலாளி வர்க்கம், அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான யுத்த தந்திரமே கட்சித் திட்டம் என்பது.

புரட்சியின் பிரதான குறிக்கோள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது. இதை வெற்றிகரமாக சாதிக்க வேண்டுமானால், சமுதாயத்தில் எந்தெந்த வர்க்கங்கள் அரசியல் அதிகாரத்தில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அவைகளிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்ற எந்தெந்த வர்க்கங்கள் இணைந்து போராட வேண்டும், எந்த வர்க்கம் தலைமைப் பாத்திரம் வகிக்க முடியும் என்பதில் தெளிவு வேண்டும்.

சமுதாய வளர்ச்சிக்கேற்ப புரட்சியின் கட்மை என்ன? புரட்சியின் கட்டம் என்ன? என்பதிலும் புரட்சி இயக்கத்திற்கு தெளிவு வேண்டும்.

இந்தியப் புரட்சியின் இத்தகைய பிரச்னைகளை பரிசீலனை செய்வதே நமது கட்சித் திட்டம். சுருக்கமாக கூறினால் இந்திய சமூக பொருளாதார அரசியல் நிலைமைகளைப் பற்றிய மார்க்சீய ஞானமே கட்சித் திட்டம்.

2. இந்திய புரட்சியின் யுத்த தந்திரமும், நடைமுறைத் தந்திரோபாயங்களும்: யுத்த தந்திரம் என்றால் என்ன? "யுத்த தந்திரம் என்பது, புரட்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தொழிலாளி வர்க்கம் பிரதான தாக்குதலை எத்திசையில் தொடுக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதும், புரட்சி சக்திகளை (முன்னணிப் படையையும், இதர படை வரிசைகளையும்) அதற்கேற்றாற் போல் எப்படி எப்படி அமைத்து? எங்கெங்கு நிறுத்துவது? என்று விரிவாக திட்டம் வகுப்பதும், புரட்சியின் அந்த குறிப்பிட்ட கட்டம் பூர்த்தியாகும்வரை அந்த திட்டத்தை நிறைவேற்ற போராடுவதுமேயாகும்" என்று தோழர் ஸ்டாலின் கூறுகிறார்.

புரட்சியின் எதிரிகள் யார்? நண்பர்கள் யார்? என்

பதை விவரிப்பதே யுத்த தந்திரத்தின் அடிப்படை அம்சம்.

புரட்சி யாருக்கெதிராக- எதிரி வர்க்கங்கள் எவை?

புரட்சியில் பங்குகொள்ளக்கூடிய வர்க்கங்கள் எவை? முன்னணி வர்க்கம் எது? துணை வர்க்கங்கள் எவை?

இவைகள்தான் யுத்த தந்திரத்தின் முக்கிய பிரச்னைகள்.

3. தந்திரோபாயம்: இயக்கத்தின் ஏற்றத்தையும், இறக்கத்தையும் ஒட்டி பொதுவாக ஒரு குறுகிய காலத்திற்கான தொழிலாளி வர்க்கத்தின் நடைமுறைக் கொள்கை பற்றியது. புரட்சி இயக்கத்தின் ஏற்றத்திற்கும், இறக்கத்திற்கும் ஏற்ப போராட்டத்தில் பழைய வடிவங்களுக்குப் பதிலாக புதிய வடிவங்களை பின்பற்றுவது, பழைய அமைப்புகள், பழைய கோஷங்களுக்குப் பதிலாக புதிய அமைப்புகள், புதிய கோஷங்கள் உருவாக்குவது, பழையதையும், புதியதையும் இணைக்கும் வடிவங்கள் முதலியன.''

> ''தந்திரோபாயம், போராட்டம் வடிவங்களைப் பற்றியது: தொழிலாளி வர்க்கத்தின் ஸ்தாபன அமைப்புகளைப் பற்றியது; அவைகளின் கட்டமைப்பும், மாற்றங்களும் உட்பட புரட்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் தந்திரோபாயம் பலமுறை மாறலாம். புரட்சியின் ஏற்றத்திற்கும், இறக்கத்திற்கும், பெருக்கத்திற்கும், வடிவத்திற்கும் ஏற்ப அது நிகழும்.''

4. யுத்த தந்திரமும், புரட்சியின் கட்டங்களும்: ஒரு குறிப்பிட்ட யுத்த தந்திரம், புரட்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்துடன் இணைந்தது. சமுதாயப் புரட்சிகள் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை கடந்துதான் அடுத்த கட்டத்திற்கு செல்ல முடியும். இதற்கேற்ப வர்க்கங்களின் அணி வரிசையிலும் மாறுதல் ஏற்படும்.

ரஷ்ய, சீனப் புரட்சிகளின் அனுபவங்களிலிருந்து இவைகள் பற்றிய உதாரணங்களைப் பார்ப்போம்.

ரஷ்ய புரட்சி-முதல் கட்டம் 1903–விருந்து 1917 பிப்ரவரி வரையில், இலட்சியம்: ஜார் ஆட்சியை வீழ்த்துவது, மத்திய கால சமுதாய மிச்ச சொச்சங்களை அடியோடு ஒழிப்பது.

இக்கால கட்டத்தில் கட்சியின் யுத்த தந்திரத்தைப் பற்றி

தோழர் லெனின் இவ்வாறு கூறினார்:

> ''ஏதேச்சாதிகாரத்தின் எதிர்ப்பை, பலாத்காரத்தைக் கொண்டு நசுக்கவும், பூர்ஷ்வா வர்க்கத்தின் ஊசலாட்டம் செயலற்று நிற்கும்படிச் செய்யவும், விவசாயி வர்க்கத்துடன் கூட்டு அணி அமைப்பதன் மூலம் ஜனநாயகப் புரட்சியை தொழிலாளி வர்க்கம் இறுதிவரை நடத்திச் செல்ல வேண்டும்.''

இதுதான் ரஷ்ய புரட்சியின் முதல் கட்டத்தில் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் இலட்சியமாகவும், யுத்த தந்திரமாகவும் இருந்தது. 1917–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் நடைபெற்ற-ஜார் ஆட்சியை வீழ்த்திய புரட்சியின் மூலம் இந்த இலட்சியம் நிறைவேறியது. யுத்த தந்திர இலக்கும், திட்டத்தின் குறிக்கோளும் பூர்த்தியாகிவிட்டது.

5. இதனைத் தொடர்ந்து ரஷ்ய புரட்சியின் இரண்டாவது கட்டம் ஆரம்பமாகிறது. இந்த கட்டத்தின் இலட்சியமும், யுத்த தந்திரமும் முதல் கட்டத்திலிருந்து மாறுபடுகிறது.

> ''இரண்டாவது கட்டம்:– 1917 மார்ச் முதல் அக்டோபர் வரை. புரட்சியின் இலட்சியம்:– ரஷ்யாவில் ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவது, ஏகாதிபத்திய யுத்தத்திலிருந்து வெளியேறுவது, இதனைச் சாதிக்க பூர்ஷ்வா வர்க்கத்தின் எதிர்ப்பை பலாத்காரத்தைக் கொண்டு நசுக்கவும், அதன் விஷயத்தில் உறுதியின்றி விவசாயிகளும், குட்டி பூர்ஷ்வாக்களும் ஊசலாடுவது பயனற்றுப் போகும்படி செய்யவும் அரைகுறை புராலிடேரியன்களான மக்கள் பகுதிகளைத் தன்னுடன் சேர்த்துக்கொள்வதன் மூலம், தொழிலாளி வர்க்கம் சோஷலிஸ்ட் புரட்சியை நடத்தி முடிக்க வேண்டும்.''
>
> (மேற்கோள்கள்: லெனின்–நூல் ''லெனினிஸத்தின் அடிப்படை அம்சங்கள்)

சோஷலிசம், ரஷ்ய புரட்சியின் இரண்டாவது கட்டத்தின் இலட்சியமாக இருந்தது. முதலாளித்துவத்தை உறுதியாக எதிர்ப்பதில் ஊசலாடக்கூடிய விவசாயிகளையும், குட்டி பூர்ஷ்வாக்களையும் சமாளிக்க சொத்துடைமையற்ற இதர பகுதி பாட்டாளி மக்களுடன்–செமி புராலிடேரியட்–கூட்டு அணி அமைப்பது இக்கட்டத்தில் ரஷ்ய கட்சியின் யுத்த

தந்திரமாக இருந்தது.

6. அக்டோபர் புரட்சியைத் தொடர்ந்து ரஷ்ய புரட்சியின் மூன்றாவது கட்டம் ஆரம்பமாகிறது. மூன்றாவது கட்டத்தின் குறிக்கோள்:

> "தொழிலாளி வர்க்க சர்வாதிகாரத்தின்கீழ் ஏழை விவசாயிகளுடனும், நடுத்தர விவசாயிகளுடனும் உறுதியான உடன்பாடு ஏற்படுத்தி அதனை ஆதாரமாகக் கொண்டு சோஷலிஸ நிர்மானத்தை நோக்கி முன்னேறுவது."

ரஷ்ய புரட்சியின் மூன்று கட்டங்கள் இவ்வாறு அமைந்தன.

7. இதேபோல், சீனப்புரட்சியும் வேறுபட்ட மூன்று கட்டங்களைக் கடந்துள்ளது. சீன கம்யூனிஸ்ட் கட்சியினாலும், கம்யூனிஸ்ட் அகிலத்தினாலும் அவைகள் இவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளன:

முதல் கட்டம்: புரட்சியின் இலக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பாக இருந்தபோது, ஏகாதிபத்தியத்தை எதிர்க்கக்கூடிய அனைவரும் ஒன்றுபடக்கூடிய ஐக்கிய முன்னணி.

இரண்டாவது கட்டம்: தரகு முதலாளி–நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் அரசு அதிகாரத்திற்கெதிராக தொழிலாளி வர்க்கம்; விவசாயிகளுடனும், நடுத்தர வர்க்கத்துடனும், பெரும் தரகு முதலாளிகளல்லாத முதலாளி வர்க்கத்துடனும் கூட்டு சேர்ந்து நடத்துகிற புதிய ஜனநாயகப் புரட்சி அல்லது மக்கள் ஜனநாயகப் புரட்சி கட்டம்.

மூன்றாவது கட்டம்: மக்கள் ஜனநாயக அரசு அதிகாரம் அமைக்கப்பட்டு, அதன் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்காகவும், தொழில்களையும், விவசாயத்தையும் சோஷலிஸ முறையில் கட்டியமைக்க நடவடிக்கை எடுக்கும் கட்டம்.

8. மார்க்சீய கோட்பாட்டின் அடிப்படையில் புரட்சியின் கட்டங்கள் எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது?

ஏகாதிபத்திய காலகட்டத்தில்–சோஷலிஸ புரட்சியின் காலகட்டத்தில், தேசிய, சர்வதேசிய அரங்கில் வர்க்க சக்திகளின் பலாபலத்தைப் பற்றிய மதிப்பீட்டின் அடிப்படையிலேயே புரட்சியின் கட்டத்தை தீர்மானிக்க முடியும்.

சம்பந்தப்பட்ட தேசத்தில் உள்ள சமூகப் பொருளாதார நிலைமைக்கேற்ப புரட்சியின் கட்டத்தை தீர்மானிக்க வேண்டும்.

வேறு வார்த்தைகளில் கூறினால்; உற்பத்தி சக்திகளின் தன்மைக்கும், அதனை ஒட்டிய உற்பத்தி உறவுகளையும் அடிப்படையாகக் கொண்டு புரட்சியின் கட்டங்கள் தீர்மானிக்க வேண்டும்.

இறுதியாக, புரட்சியின் கட்டத்தை தீர்மானிக்கிறபொழுது தொழிலாளி வர்க்கத்தின் உணர்வு மட்டத்தையும், அதன் ஸ்தாபன அமைப்பையும், அதனுடைய நேச சக்திகளுடன் ஏற்பட்டுள்ள ஒற்றுமையின் அளவு மட்டத்தையும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும்.

புரட்சியின் பல்வேறு கட்டங்களை தவிர்த்து ஒரேயடியான சோஷலிஸப் புரட்சியை நடத்தலாம் என்று வாதாடிய வர்களை தோழர் லெனின் கடுமையாகச் சாடினார். ஒவ்வொரு புரட்சிக்கும் சம்பந்தப்பட்ட சமுதாய அமைப்பின் அக நிலைக்கும், புற நிலைக்கும் பொருத்தமான, திட்டவட்டமான கட்டங்கள் உண்டு என்பதை எடுத்துக்காட்டினார்.

மேலும், ஒரு புரட்சியின் கட்டத்தைப் பற்றி தீர்மானிக்கிறபொழுது கணக்கிலெடுத்துக் கொள்ளவேண்டிய மிக முக்கியமான அம்சம், குறிப்பாக இந்த புரட்சி ஒரு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ, ஏகாதிபத்திய நாட்டைப் பற்றியதா அல்லது ஒரு காலனி–அரை காலனி அல்லது புதிதாக விடுதலை பெற்ற நாட்டில் நடப்பதா என்பது.

9. **முதல் கட்டம்:** நமது இந்திய புரட்சியின் பிரச்னையை எடுத்துக்கொண்டால், நாம் முதல் கட்டத்தை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிராக அனைவரும் ஒன்று சேரக்கூடிய முதல் கட்டத்தை ஏற்கனவே கடந்துவிட்டோம். தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர வர்க்கத்தினர், முதலாளிகள்–பெரு முதலாளிகள் உட்பட ஒன்று சேர்ந்து 1947–ல் அரசியல் சுதந்திரம் அடைந்ததுடன் இந்தியப் புரட்சியின் முதல் கட்டம் முடிவடைந்தது. இரண்டாவது கட்டம் ஆரம்பமாகியது. தேசிய விடுதலை கட்டத்தில் தேசத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாக முன்னுக்கு வருகிறது.

இரண்டாவது கட்டம்: இரண்டாவது கட்டத்தில்–ஜனநாயகக் கட்டத்தில் விவசாயிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் இடையிலான முரண்பாடு பிரதான முரண்பாடாகச் செயல்படுகிறது. எனவே இந்தக் கட்டத்தை விவசாயப்புரட்சி அல்லது ஜனநாயகப் புரட்சி கட்டம் என்று அழைக்கிறோம்.

மூன்றாவது கட்டம்: சோஷலிஸப் புரட்சிக் கட்டம். முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் அல்லது நகரங்களிலும், கிராமப்புறங்களிலும் உள்ள சுரண்டுவோருக்கும். சுரண்டப்படுவோருக்கும் இடையிலான முரண்பாடு புரட்சியின் இந்த கட்டத்தில் பிரதான முரண்பாடாக முன்னுக்கு வருகிறது. இவைகளைப் பற்றிய தத்துவார்த்த தெளிவு முதலாளித்துவ ஏகாதிபத்தியச் சங்கிலியின் எந்தத் தொடர் வெடிக்கும் தருவாயிலுள்ளது என்பதை நிர்ணயிக்க மிகவும் அவசியமானது. நமது நாட்டில், புரட்சியின் இரண்டாவது கடமைகள் இன்னும் நிறைவேறவில்லை. அதனை நிறைவேற்றுவதற்கே நிலப்பிரபுத்துவத்தையும், அன்னிய மூலதனத்தையும் பாதுகாத்து நிற்கும் அரசு அமைப்பையும், அதில் ஆதிக்கம் செலுத்தும் பெருமுதலாளித்துவத்தையும் ஒழிக்க வேண்டியுள்ளது. புரட்சியின் இக்கடமைகளை தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் நடைபெறும் மக்கள் ஜனநாயகப் புரட்சி என்று கட்சித் திட்டம் வரையறுத்துள்ளது. கட்சித் திட்டம் பாரா–92 முதல் 104 வரையிலான பகுதியில் இது விளக்கப்பட்டுள்ளது.

10. புரட்சியின் வெவ்வேறு கட்டங்களைப் பற்றி ஏன் தெளிவாக வரையறுக்க வேண்டும்? ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் முக்கியத்துவத்தை ஏன் வலியுறுத்த வேண்டும்? புரட்சியின் எல்லா கட்டங்களிலும் சோஷலிஸம் என்பதை ஏன் பிரதான கோஷமாக முன்வைக்கக் கூடாது? சோஷலிஸப் புரட்சி என்ற ஒரே கட்டமாக ஏன் இருக்கக் கூடாது? புரட்சியின் வெவ்வேறு கட்டங்களை நிர்ணயிக்க இவ்வளவு சிரமத்தை ஏன் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்கலாம்.

நமது நாட்டில் உள்ள பார்வர்டு பிளாக், புரட்சிகர சோஷலிஸ்ட் கட்சி, எஸ்.யு.சி.ஐ போன்ற சில கட்சிகளும், குழுக்களும், உடனடியாகவும், நேரடியாகவும் சோஷலிஸப் புரட்சி என்ற கோஷத்தை எழுப்புகிறார்கள். புரட்சியின்

பல்வேறு கட்டங்களை நிராகரிக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதனை ஏற்க முடியாது. இது சமூக விஞ்ஞானத்திற்குப் புறம்பானது. மார்க்சிஸத்திற்கு மாறுபட்டது. இதனை நாம் நிராகரிக்கிறோம்.

மார்க்சிஸ–லெனினிஸ தத்துவத்தால் வழிகாட்டப்படுகிற ஒரு தொழிலாளி வர்க்கப் புரட்சிக் கட்சி, ஒரு குறிப்பிட்ட காலத்தின் சூழ்நிலையையும், தன்மைகளையும் பற்றிய திட்டவட்டமான ஆய்வின் அடிப்படையில் அதனுடைய கோஷங்களையும், கிளர்ச்சிப் பிரச்சாரத்தையும், நடவடிக்கைகளையும் அமைத்துக்கொள்ளுவது அதன் கடமையாகும். திட்டவட்டமான நிலைமையைப் பற்றிய திட்டவட்டமான ஆய்வுதான் மார்க்சீய இயக்கவியலின் சாராம்சம்.

புரட்சியின் கட்டங்களைப் புறக்கணித்து, சோஷலிஸப் புரட்சியும், அதற்கான செயல் திட்டமும் உடனடி கோஷமாக முன்வைப்பது, இதர பகுதி உழைப்பாளி மக்களை தொழிலாளி வர்க்கம் சோஷலிஸத்தை நோக்கி அழைத்துச் செல்ல உதவாது. மாறாக, அதிலிருந்து அவர்கள் விலகிச் செல்லும் நிலைமையை ஏற்படுத்தும். வெகுஜனங்கள், தங்கள் சொந்த அனுபவத்தின் மூலமாகவே உணர்வு பெறுகிறார்கள். தத்துவத்தின் மூலமாக மட்டும் இதனை உருவாக்க முடியாது என்பதை எப்போதும் நினைவில்கொள்ள வேண்டும். தொழிலாளி வர்க்கத்திற்கு மிக முக்கியமான அதனுடைய உணர்வான சோஷலிஸம், இதர அனைத்து வர்க்கங்களின்–மக்களின் உணர்வாக கருத முடியாது. ஆகவே, புரட்சியின் இதர கட்சிகளைப் புறக்கணித்து, நேரடியாக சோஷலிஸப் புரட்சி என்ற கோஷம் எழுப்புவது இயக்கத்திற்கு பெரும் பாதகம் ஏற்படுத்தும்.

புரட்சியின் கட்டத்தையும், தந்திரத்தையும் பற்றிய இந்த மார்க்சீய ஞானம் நமது கட்சியின் 7–வது காங்கிரஸ் நிறைவேற்றிய கட்சி திட்டத்தின் வடிவில் ஸ்தூலமாக்கப்பட்டுள்ளது.

11. மார்க்சிஸ்ட் கட்சியும், அதன் திட்டமும்: கட்சி திட்டம், இந்தியப் புரட்சியின் தன்மை, அதன் இன்றைய கட்டம், யுத்த தந்திரம் ஆகியவைகளைப் பற்றி பரிசீலிக்கும் அடிப்படையான தஸ்தாவேஜாகும்.

மார்க்சிஸ்ட் கட்சியின் இன்றைய திட்டம், ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் நீண்ட காலம் நீடித்து நடைபெற்ற உட்கட்சிப் போராட்டத்தின் மூலமாக உருவானதாகும்.

1964 அக்டோபர் 31 முதல் நவம்பர் 7 வரை கல்கத்தாவில் நடைபெற்ற கட்சியின் 7–வது காங்கிரசில் உருவாக்கப்பட்டது இந்த திட்டம். வலது கம்யூனிஸ்ட் கட்சி பிரதிநிதித்துவப்படுத்தும் வலது திருத்தல்வாதத்திலிருந்தும், நக்சலிஸத்தின் பல்வேறு இடது அதிதீவிர கோஷ்டிகள் பிரதிநிதித்துவப்படுத்துகிற இடதுசாரி தன்மை வாதத்திலிருந்தும் முற்றிலும் மாறுபட்டது நமது திட்டம்.

நமது நாட்டிற்குள் தோன்றிய வலதுசாரி, இடதுசாரி திருத்தல்வாத திரிபுகளுக்கெதிரான போராட்டத்தின் மூலமாக மட்டும் நமது திட்டம் உருவாகவில்லை. இந்திய நிலைமையை பற்றிய சோவியத், சீன கம்யூனிஸ்ட கட்சிகளும் வேறு சில கம்யூனிஸ்ட் கட்சிகளும் கொண்டிருந்த கருத்துக்களை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தின் மூலமாகவுமே நமது கட்சித் திட்டம் உருவாகியது.

திட்டமும், அதன் அடிப்படையான நிர்ணயிப்புகளும் புரட்சியின் கட்டம், அதன் யுத்த தந்திரம், இந்திய புரட்சியின் கடமைகள் ஆகியவைகள் இந்தியாவின் ஸ்தூலமான சமூக பொருளாதார நிலைமைகளை மார்க்சிஸ-லெனினிஸ ஞானத்தின் அடிப்படையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரையறுத்துள்ளது என்பதை நமது திட்டம் உருவாக்கப்பட்டு இது வரையிலான வாழ்க்கை அனுபவத்தில் நமது திட்டம் மட்டும் தான் சோதனைகளில் தேறியுள்ளது என்பதை நிரூபித்துள்ளது. இதே காலத்தில் வலது திருத்தல்வாதிகளுடையவும், இடது அதிதீவிரவாதிகளுடையவும் திட்டங்களின் சூன்யத் தன்மையும் வெளிப்பட்டுள்ளது. இந்திய அரசு பெருமுதலாளிகள் அல்லாத முற்போக்கு முதலாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படுகிற தேசிய முதலாளித்துவ அரசு என்கிற வலது சித்தாந்தம் நொறுங்கிப்போய்விட்டது. இதேபோல், இந்திய அரசு ஒரு பக்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், மறுபக்கம் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கும் அடிபணியக்கூடிய தரகு முதலாளி வர்க்கம் தலைமை தாங்குகிற அரசு என்கிற இடது வறட்டு தத்துவவாதிகள் சித்தாந்தமும் பரிகாசத்திற்குரியதாக ஆகிவிட்டது. அவர்கள், பல கூறுகளாகப் பிரிந்து

சிதைந்துள்ளனர். சி.பி.ஐ தனது திட்டம் பற்றி மறு பரிசீலனை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். குழப்பமான நிலையில் உள்ளனர்.

12. சுருக்கமான சரித்திரப் பின்னணி:– நமது கட்சி உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் கடந்த பத்தாண்டுகளில் கட்சியில் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வரலாறு தெரியாது. ஒரு சரியான மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் திட்டத்திற்கான போராட்டத்திலும் அவர்கள் பங்குகொண்டவர்கள் அல்ல. இவைகளைப் பற்றிய சில தகவல்கள் கட்சி வரலாற்றை ஆழமாக பயிலும் சிந்தனையை தூண்டலாம்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, நமது கட்சியின் மத்திய கமிட்டியின் நிர்ணயிப்பின்படி 1920–ல் அமைக்கப்பட்டது. தாஷ்கண்டில் அமைக்கப்பட்ட முதல் கிளையுடன் அது ஆரம்பமாகியது. ஆனால், சி.பி.ஐ. 1925–ல் தான் கட்சி ஆரம்பமாகியது என்று நிர்ணயித்துள்ளது. இவைகள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 60–65 ஆண்டுகளுக்கு முன்னால் தோன்றியது என்பதை தெரிவிக்கிறது. ஆனால், இதில் பெரும்பாலான ஆண்டு காலம் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு திட்டம் இல்லாமல் இருந்தது என்பதை கவலையோடு பார்க்க வேண்டும்.

திட்டத்தின் சில அம்சங்களை உள்ளடக்கிய சில அறிக்கைகள், பிரகடனங்களை தவிர 1928 வரை ஒரு திட்டத்திற்கான நகல்கூட தயாரிக்கப்படவில்லை. 1928–ல் தயாரிக்கப்பட்ட அந்த நகலும் செயல் மேடைக்கான நகல் என்று அது அழைக்கப்பட்டது. எந்த மாநாட்டினாலும், கட்சி காங்கிரசினாலும் அங்கீகரிக்கப்படவோ, ஒரு திட்டத்தின் தேவையை பூர்த்தி செய்யவோ இல்லை, நமது கட்சியின் அமைப்பு விதியில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

> "கட்சி திட்டத்தையும், சட்ட திட்டத்தையும் ஏற்றுக்கொள்ளுகிற இந்தியாவில் வசிக்கிற 18 வயதான யார் ஒருவரும் கட்சியில் உறுப்பினராக தகுதியுடையவர்."

ஆனால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அதனுடைய 60–65 ஆண்டுகால வரலாற்றில் நீண்ட காலம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தெளிவான திட்டம் இல்லாமலேயே செயல்

பட வேண்டியிருந்தது. இருப்பினும், அவ்வப்பொழுது நிறைவேற்றப்படுகிற அரசியல் தீர்மானங்கள், அறிக்கைகள் பிரகடனங்கள் திட்டத்தின் சில அம்சங்களைக் கொண்டதாக இருந்தது. ஆனாலும், அப்படிப்பட்ட தஸ்தாவேஜுகள் எதுவும் நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு திட்டத்திற்கு மாற்றாக ஆகாது.

13. நீண்ட காலம் அதிகாரபூர்வமான ஒரு திட்டம் இல்லாமல் இருந்த நிலைமை கட்சியின் ஒற்றுமையையும், வளர்ச்சியையும் பாதிக்கக்கூடியது. இத்தகைய நிலை புரட்சி இயக்கத்தின் மீது அதனுடைய அனைத்து விளைவுகளையும் ஏற்படுத்தும். இந்த வருந்தத்தக்க நிலை, நமது நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சியில் ஏன் ஏற்பட்டது? என்று கேட்கலாம். இதற்கு திருப்திகரமான பதில் அளிப்பது சிரமமானது. ஆனால், சில உண்மைகள் இதைப் பற்றி ஆராய பயன்படலாம்.

"முதலாவதாக; மார்க்சிஸமும், நவீன தொழிலாளி வர்க்கப் புரட்சி இயக்கமும் நமது நாட்டில் மிகவும் காலம் கடந்து வந்தது.

இரண்டாவதாக; இந்திய முதலாளி வர்க்கம், தேசிய விடுதலை இயக்கத்தில் அதன் பாத்திரம் பற்றிய விஷயமும் கடுமையான சர்ச்சைக்குரியதாகவே இருந்து வந்தது. அது இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒருங்கிணைந்த சிந்தனையையும், செயலையும் பாதித்தது. கம்யூனிஸ்ட் அகிலமும், அதன் பிரதிநிதிகளும்கூட ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டத்தில் இந்திய முதலாளி வர்க்கத்தின் பாத்திரம் பற்றி சரியாக் மதிப்பீடு செய்யும் சிக்கலான பிரச்னையிலிருந்து விடுபட்டிருக்கவில்லை. அதைப் பற்றிய பிரச்னைகளும், சச்சரவுகளும் இன்றைய வளர்ச்சிகட்டத்திலும்கூட இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் உலக கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் வேறுபாடுகளும், பிளவுகளும் முக்கிய காரணமாக உள்ளது என்று சற்றும் மிகைப்படுத்தாமல் கூற முடியும். இந்திய அரசின் வர்க்கத் தன்மை சமாதானத்திற்கான உலகப் போராட்டத்தில் அதன் பங்கு, ஜனநாயகம் மற்றும் தேசிய விடுதலை இயக்கம் ஆகியவைகளில் அதன் பங்கு பற்றி ஒரு சரியான அணுகுமுறையைப் பின்பற்றுவது சம்பந்தமாக இந்தியாவிலுள்ள கம்யூனிஸ்டுகளுக்கிடையிலும், அயல்நாடுகளிலுள்ள ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கிடையிலும் கடுமையான கருத்து வேறுபாடுகள் இப்போதும் நீடித்து வருகின்றன.

இன்னும் பல காரணங்கள் இருக்கலாம்"(கட்சித் திட்டம் பற்றிய பசவபுன்னையாவின் குறிப்பிலிருந்து)

1928–ல் ஒரு திட்டத்திற்கான நகல் தயாரிக்கப்பட்டது பற்றி ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. அது நகலாகவே இருந்துவிட்டது. நிறைவேற்றப்படவோ, செயல் திட்டமாக மாறவோ செய்யவில்லை.

மீண்டும் 1951–வது ஆண்டு ஒரு நகல் திட்டம் வெளியிடப்பட்டது. விநியோகம் செய்யப்பட்டது. அதே ஆண்டு அக்டோபர் மாதம் கல்கத்தாவில் விசேஷமாக கூட்டப்பட்ட மாநாட்டிலும் இறுதியாக 1953–ம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற 3–வது காங்கிரசிலும் அது நிறைவேற்றப்பட்டது.

ஆனால், 1955–ம் ஆண்டு மத்தியில், இந்த திட்டம் அங்கீகரிக்கப்பட்டு நான்கு ஆண்டு காலத்திற்குள், அது சர்ச்சைக்குரியதாக ஆகியது. அதனுடைய சில அடிப்படையான நிர்ணயிப்புகள் முன்னுக்கு வந்த அரசியல் எதார்த்தங்களுக்கு பொருத்தமானதல்ல என்று வாழ்க்கை அனுபவம் உணர்த்தியது. 1955–ல் ஒரு மத்திய கமிட்டி தீர்மானத்தின் மூலமாகவும், பின்னர் 1956–ல் பாலக்காட்டில் நடைபெற்ற நான்காவது கட்சி காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்தின் மூலமாகவும் இத்திட்டத்தை ஒதுக்கி வைப்பது என்றும், அதன் செயல்பாட்டை நிறுத்தி வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. கட்சி காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்தின் அடிப்படையில் செயல்படுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

14. 1964 நவம்பர் வரையிலும் ஒரு கட்சித் திட்டத்தை உருவாக்கும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்படவில்லை. மார்க்சிஸ்ட் கட்சி 1964 நவம்பர் முதல் வாரத்தில் அதன் திட்டத்தை நிறைவேற்றியது. சி.பி.ஐ. 1964 டிசம்பர் பிற்பகுதியில் அதன் திட்டத்தை நிறைவேற்றியது.

நீண்டகால கட்சி சரித்திரத்தில் 1951–55 பிறகு 1964–65 வது ஆண்டுக்குப்பின் மட்டுமே திட்டவட்டமாக வரையறுக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் இந்திய கம்யூனிஸ்ட்

இயக்கம் செயல்பட்டுள்ளது. இது ஒரு கம்யூனிஸ்ட் கட்சிக்கு மிக அசாதாரணமான ஒரு நிலை.

15. நமது திட்டத்தின் பின்னணி : ஏற்கனவே தெளிவுபடுத்தப்பட்டதுபோல, மார்க்சிஸ்ட் கட்சியின் இன்றைய திட்டம் ஒரு தனி நபராலோ அல்லது இதற்காக நிர்ணயிக்கப்பட்ட சில தோழர்களைக்கொண்ட ஒரு குழுவினாலோ உருவாக்கப்பட்டதல்ல. இது நீண்ட காலம் நீடித்து நடைபெற்ற உட்கட்சிப் போராட்டத்தில் உருவாகியது. குறிப்பாக 1947–ல் அரசியல் சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து நடைபெற்ற உட்கட்சிப் போராட்டத்தில் உருவாகியது.

உட்கட்சிப் போராட்டம், அதிகாரம் மாற்றத்தின் வர்க்க உள்ளடக்கம் என்ன என்பதை மையமாகக் கொண்டு, பல்வேறு கட்டங்களில் நடைபெற்றது. 47–வது ஆண்டு அதிகாரம் மாற்றம் பற்றிய மத்திய கமிட்டி தீர்மானம் புதிதாக பெற்ற சுதந்திரத்திற்கு ஒரு வலது திருத்தல்வாத வர்க்க வியாக்கியானமும், அதற்கேற்ப இந்திய புரட்சியின் எதிர்காலத்தையும் கட்சியின் கடமைகளையும் தீர்மானித்தது.

1948 மார்ச்சில், கல்கத்தாவில் நடைபெற்ற இரண்டாவது கட்சி காங்கிரசின் தீர்மானம் மிகச் சரியாகவே அதிகார மாற்றம் பற்றிய சீர்திருத்தவாத, திருத்தல்வாத வியாக்கியானத்தை நிராகரித்தது. ஆனால், இன்னொரு கோடிக்குச் சென்று முற்றிலும் இடது தனிமைவாத (செக்டேரியன்) அடிப்படையில் அனைத்துப் பிரச்னைகளையும் அணுகியது.

மீண்டும் மத்திய கமிட்டி 1950 ஜுன் மாதம் நடைபெற்ற அதன் கூட்டத்தில், இரண்டாவது கட்சி காங்கிரஸ் தீர்மானத்தை பரிசீலனை செய்து அதன் இடது தனிமைவாதத் தவறுகளை சுட்டிக்காட்ட முயற்சித்தது. ஆனால், அவ்வாறு செய்த நேரத்திலேயே அந்த மத்திய கமிட்டி உருவாக்கிய புதிய தீர்மானமும் அடிப்படையில் இடதுசாரி செக்டேரியன் தன்மை கொண்டதாகவே இருந்தது. சரியான மார்க்சிஸ–லெனினிஸ அடிப்படையில் கட்சிக் கொள்கையை உருவாக்க அதுவும் தவறிவிட்டது.

16. அதைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதத்தின் அடிப்படையில் கட்சியின் ஒரு பிரதிநிதிகள் குழு தோழர்

ஸ்டாலின் தலைமையில் சோவியத் கட்சியின் ஒரு பிரதிநிதிக் குழுவுடன் 1951–வது ஆண்டின் முதல் பகுதியில் விவாதம் நடத்தியது. இந்த விவாதத்தின் சாராம்சங்கள் 1951–ம் ஆண்டு கட்சித் திட்டத்திலும் "கொள்கை அறிக்கை" என்ற இன்னொரு தஸ்தாவேஜிலும் உள்ளடங்கியுள்ளது.

தேசிய, சர்வதேசிய வளர்ச்சிகள், மிக வேகமாக நிகழ்ந்துகொண்டிருந்தபோது முன்னுக்கு வந்த எதார்த்த நிலைமைக்கு *1951* –வது ஆண்டு திட்டத்தின் சில நிர்ணயிப்புகள் பொருத்தமாக இருக்கவில்லை. உள்நாட்டிலும், உலகிலும் வளர்ந்து வந்த நிலமைகளின் தேவைகளை அது சந்திக்க முடியவில்லை.

சில வளர்ச்சிப் போக்குகளை விசேஷமாக குறிப்பிடுவது அவசியமாகிறது. கொரிய யுத்தத்தில், அமெரிக்கப் படைகளின் தோல்வி; வியட்நாமிலிருந்து, பிரெஞ்சுப் படைகள் விரட்டப்பட்டது; திபெத் உடன்பாடு; இந்தியாவும், சீன மக்கள் குடியரசும் பஞ்சசீல ஒப்பந்தம் செய்துகொண்டது; இந்திய– சோவியத், இந்திய–சீன நட்புறவு, வளர்ச்சியடைந்து வந்தது; சீன, இந்தியா, இந்தோனேஷியா தலைமையில் பாந்தூங் மாநாடு கூட்டப்பட்டது. அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், அதனுடைய "சென்டோ" "சியோடோ" போன்ற இராணுவக் கூட்டணிகளுக்கும் எதிராக இந்திய அரசின் நடுநிலைமைக் கொள்கை உறுதிப்பட்டது. ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் தேசிய விடுதலை இயக்கங்களில் வேகமான வளர்ச்சி முதலியன குறிப்பிடத்தக்கவைகளாகும்.

1955 ஜுன் மத்திய கமிட்டி தீர்மானத்தைத் தொடர்ந்து சரியான கட்சித் திட்டத்திற்காகவும், அரசியல் கொள்கைக்காகவும் மீண்டும் கட்சிக்குள் உட்கட்சிப் போராட்டம் வெடித்தது.

17. 1951 –ம் ஆண்டு திட்டத்தின் முக்கிய அம்சங்களும், குறைபாடுகளும்:–

அரசியல் சுதந்திரம் உண்மையானதல்ல.

'காங்கிரஸ் தலைவர்களையும், லீக் தலைவர்களையும்; இந்தியாவிலும், பாகிஸ்தானிலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆட்சியில் அமர்த்தியுள்ளது.

பிரதான எதிரி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம். ஆகவே, பிரிட்டிஷ் மூலதனத்தைப் பறிமுதல் செய்ய வேண்டுமென்று மட்டும் கோரினோம். அனைத்து அன்னிய மூலதனங்களையும் பறிமுதல் செய்ய வேண்டுமென்று கோரவில்லை.

பெரு முதலாளிகள் உட்பட இந்திய பூர்ஷ்வாக்கள் அனைவரும் புரட்சியில் பங்குகொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆகவே, பெரு முதலாளிகளின் மூலதனத்தை பறிமுதல் செய்ய வேண்டுமென்று கோரவில்லை.

தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை வலியுறுத்தப்பட்டது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கெதிராக பெரும் பூர்ஷ்வாக்கள் உட்பட அனைவரும் கொண்ட ஐககிய அணி என்று கூறப்பட்டிருந்தது.

அயல்நாட்டுக் கொள்கை, அமெரிக்க சார்புடையது என்றும், இரு முகாம்களுக்கு இடையிலான போலித்தனமான விளையாட்டு என்றும் வர்ணிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு, புரட்சியின் கட்டம் ஏகாதிபத்தியத்திற்கெதிரான பொது ஐக்கிய முன்னணி கட்டமாகவே வரையறுக்கப்பட்டிருந்தது.

18. மீண்டும் உட்கட்சிப் போராட்டம்:- 4–வது கட்சி காங்கிரஸுக்கு முன் மத்திய கமிட்டி உறுப்பினர்கள், பல்வேறு மாநில கமிட்டிகளின் மாறுபட்ட அரசியல் கருத்துக்கள், கட்சிக் கடிதங்கள் மூலம் வெளியிடப்பட்டன. கட்சிக் காங்கிரஸுக்கு முன் நடைபெற்ற மாநில மாநாடுகளில் மாறுபட்ட அரசியல் கருத்துக்கள் மோதும் போர்க்களமாக மாறின.

1956 ஏப்ரலில் நடைபெற்ற 4–வது கட்சிக் காங்கிரஸில் மாறுபட்ட மூன்று அரசியல் பாதைகள் முன்வைக்கப்பட்டன. ஒன்று, மத்திய கமிட்டியின் பெரும்பான்மையினால் முன்வைக்கப்பட்டது. இரண்டாவது, பி.சி. ஜோஷி, ராஜேஸ்வர ராவ் மற்றும் சிலரால் முன்வைக்கப்பட்டு, கட்சி காங்கிரஸில் மூன்றில் ஒரு பங்கு பிரதிநிதிகளின் ஆதரவு பெற்ற தீவிர சீர்திருத்தவாதப் பாதை. மூன்றாவது, சுந்தரய்யா, பசவபுன்னையா, சுர்ஜித், ஹனுமந்தராவ், பிரசாத் ராவ் ஆகிய ஐந்து மத்திய கமிட்டி உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டது. மத்

திய கமிட்டியின் பெரும்பான்மை தீர்மானத்தில் சில திருத்தங்கள் சேர்க்கப்பட்ட பிறகு இது வாபஸ் பெறப்பட்டது.

1955 –க்கும் 61–க்கும் இடையில் காணப்பட்ட உட்கட்சி ஒற்றுமை சம்பிரதாய பூர்வமானதாக இருந்தது. 1961–ல் விஜயவாடாவில் நடைபெற்ற 6–வது காங்கிரஸில் மீண்டும் ஒரு கடுமையான உட்கட்சிப் போராட்டம் வெடித்தது. பிரதிநிதிகள் சரிசமமாக பிளவுபட்டிருந்தனர். ஒரு ஸ்தாபன ரீதியான ஒட்டு வேலையுடன் கட்சி காங்கிரஸ் முடிவடைந்தது. ஒரு பிளவை அச்சுறுத்தி கடுமையான அரசியல் வேறுபாடுகள் நீடித்தன.

உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் பரவியிருந்த தத்துவார்த்த வேறுபாடுகள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வந்த அரசியல் தத்துவார்த்த வேறுபாடுகளை மேலும் தீவிரப்படுத்தியது. இந்திய–சீன எல்லைத் தகராறும், தேசிய கவுன்சிலின் பெரும்பான்மையினரின் தேசிய இனவெறிப் போக்கும், உட்கட்சிப் போராட்டத்தை மேலும் கடுமையாக்கியது. "சீன ஏஜெண்டுகள்" என்று அழைக்கப்பட்டவர்கள் 62 நவம்பரில் சிறையிலடைக்கப்பட்டபோது "தேச பக்த கம்யூனிஸ்ட் தலைவர்கள்" ஆளும் வர்க்கத்தினரால் பாராட்டப்பட்டனர்.

இவ்வாறு கட்சி பிளவுபடுவதற்கான சூழ்நிலை உருவாகியது. கட்சி ஒற்றுமையை பாதுகாக்க ஒன்றுபட்ட கட்சி காங்கிரஸ் கூட்டுவதற்கான சகல முயற்சிகளும் தோல்வியடைந்து பின் 1964 மத்தியில் தெனாலியில் நாம் நடத்திய கன்வென்ஷனுடன் இரு கட்சியாக செயல்பட தொடங்கியது.

19. இரண்டு திட்டங்கள்– இரண்டு கட்சிகள்:– இவ்வாறு பத்தாண்டு கால உட்கட்சிப் போராட்டம் ஒன்றுக்கு ஒன்று எதிரான இரண்டு அரசியல், தத்துவார்த்தக் கொள்கைகளை தோற்றுவித்தது. சி.பி.ஐ பிரதிநிதித்துவப்படுத்திய சீர்திருத்தவாத வலது திருத்தல்வாதக் கொள்கைகளை நிராகரித்துவிட்டு ஒரு பகுதி அதனிடமிருந்து முறித்துக்கொள்ள வேண்டியிருந்தது. அதனுடைய முடிவுகள் மார்க்சிஸ்ட் கட்சியின் திட்டத்தில் உள்ளடங்கியுள்ளது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் இடதுசாரி தனிமைவாதிகள் என்றும் பிளவுவாதிகள் என்றும் வலது திருத்தல்வாதிகள் தூற்றினர். ஒன்றுபட்ட கட்சி ஏற்கனவே பின்பற்றி

வந்த கொள்கையிலிருந்து அவர்கள் விலகிச் சென்றதை ஒத்துக்கொள்ள அவர்கள் தயங்குகிறார்கள். ஆனால், அவர்கள் எவ்வாறு ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் நிலையிலிருந்து விலகிச் சென்றார்கள் என்பதை 1964–ல் அவர்கள் வெளியிட்ட திட்டமே தெளிவுபடுத்துகிறது. அவர்களது திட்டத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:–

> "கடந்த பத்து ஆண்டுகளாக நாட்டில் நடைபெற்றுள்ள ஜனநாயக இயக்கங்கள், வெகுஜனப் போராட்டங்கள் ஆகியவைகளில் நமக்குக் கிடைத்துள்ள அனுபவங்களின் விளைவாகவும் 1960–ம் ஆண்டில் வெளியான உலக கம்யூனிஸ்ட் இயக்கத்தின் அறிக்கையில் கண்டுள்ளபடி இந்த புதிய சகாப்தத்தில் புதிதாக விடுதலையடைந்துள்ள நாடுகளுக்கு முன்னால் வழி திறந்து நிற்கும் புதிய வாய்ப்புக்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, நமது கட்சி இன்றைய இந்திய அரசாங்கத்தின் வர்க்கத் தன்மையைப் பற்றியும், சுதந்திரமான தேசியப் பொருளாதாரத்தை நிர்மாணிப்பதிலும் சமாதானம், கூட்டு சேராமை என்ற சுதந்திரமான வெளிநாட்டுக் கொள்கையை நீடித்து நிலைநாட்டி வருவதிலும் ஒரு குறிப்பிட்ட அளவு ஜனநாயகத்தை நிலைநாட்டி வருவதிலும் இந்த அரசாங்கத்தின் பங்கு பற்றி மறு மதிப்பீட்டிற்கு வந்திருக்கிறது"
>
> (இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் இலட்சிய திட்டம் – பக்கம்: 88; அழுத்தம் நம்முடையது)

20. இந்திய அரசின் வர்க்கத் தன்மையை பற்றி இத்தகைய முற்றிலும் மாறுபட்ட கருத்து கட்சிக்குள் இருந்து வந்தது. இதன் அடிப்படையில் பத்து ஆண்டுகாலம் நடைபெற்ற உட்கட்சிப் போராட்டம், கட்சி பிளவுபடுவதில் முடிவடைந்தது என்பதுதான் உண்மை. சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தூண்டுதலின் காரணமாக மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர்கள் கட்சியை பிளவுபடுத்தினார்கள் என்பது பச்சையான பொய்யாகும்.

தேசிய கவுன்சிலின் திருத்தல்வாதம் பெரும்பான்மையினரால் பிளவு திணிக்கப்பட்டது என்பதுதான் உண்மை. இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தை வலது சீர்திருத்தல்வாதத்திலிருந்தும், பாதுகாப்பது என்ற சரித்திர ரீதியான தேவையின் காரணமாகவே பிளவு ஏற்பட்டது. மார்க்சிஸம்–லெனினிஸம், தொழிலாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவைகளை பாதுகாக்க இந்த பிளவு தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது.

சில விபரமறியாத அப்பாவிகளான கம்யூனிஸ்ட் ஆதரவாளர்கள், 64–லிலும், 68–லும் பிளவு ஏற்படாமல் இருந்திருந்தால் இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் பெரும் முன்னேற்றம் அடைந்திருக்கும் என்று கருதுகிறார்கள். ஆனால், உண்மை முற்றிலும் மாறுபட்டது. மார்க்சீய–லெனினிய வாதிகள் ஒன்றுபட்டு வலதுசாரி, இடதுசாரி தாக்குதல்களை எதிர்த்துப் போராடாமல் இருந்திருந்தால், இந்திய தொழிலாளி வர்க்கப் புரட்சி இயக்கத்தின் இலட்சியத்திற்கே பெரும் தீங்கும் ஏற்பட்டிருக்கும். கடந்த இருபது ஆண்டுகளின் சரித்திரம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கி, செயல்படுத்தி வரும் திட்டமும், அரசியல் கொள்கையும் எவ்வளவு சரியானது என்பதை நிரூபித்துள்ளது? இதே காலத்தில், வலது திருத்தல்வாதமும், இடது அதிதீவிர திருத்தல்வாதமும் எவ்வளவு அபத்தமானது–பயனற்றது? என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

21. நமது திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:– இந்தியா எவ்வாறு சுதந்திரம் அடைந்தது? இன்றைய தேசிய, சர்வதேசிய நிலைமையில் முக்கியத்துவம் என்ன? சமரசத்தின் மூலம் சுதந்திரம்? (கட்சித் திட்டம் பாரா–1 முதல் 6 வரை இதை விளக்குகிறது)

22. மக்களின் ஆசை அபிலாஷைகளும், நம்பிக்கைகளும் நிறைவேறவில்லை. நாட்டின் பின்தங்கிய நிலை நீங்கவில்லை. பூர்ஷ்வா வர்க்கம் தேசிய ஜனநாயகப் புரட்சியின் கடமைகளை நிறைவேற்றவில்லை. இவைகள் எதனால் என்பதை (பாரா–7 முதல் 10 வரை இதை விளக்குகிறது)

23. முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையும், நவீன காலனி ஆதிக்க அபாயமும். (பாரா–11 முதல் 13 வரை)

24. சோஷலிஸ்ட் நாடுகளின் உதவியை பயன்படுத்துவது பற்றி (பாரா–14), இந்திய பூர்ஷ்வா வர்க்கத்தின் இரட்

டைத் தன்மை (பாரா–15).

25. திட்டமிட்ட பொருளாதாரம், பொதுத்துறை, பேங்க், இன்சூரன்ஸ் போன்ற நிறுவனங்கள் தேசியமயமாக்கு தல், கன இயந்திரத் தொழில்கள், அரசாங்கத்தின் நிதிக் கொள்கை அனைத்தும் முதலாளித்துவ வளர்ச்சிக்கு உதவும் குறிக்கோளைக் கொண்டதே. (பாரா–16 முதல் 23 வரை இதனை குறிப்பிடுகிறது).

26. அன்னிய மூலதனத்துடன் கூட்டு சேர்ந்து பெருமு தலாளித்துவம் வளர்கிறது (பாரா–24,25)

27. அன்னிய மூலதனத்தையும், கடனையும் சார்ந்து நிற்கும் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதை நாட்டின் அரசுரி மைக்கே ஆபத்து ஏற்படுத்தும் (பாரா–26 முதல் 33 வரை).

28. நிலப்பிரபுத்துவச் சுரண்டலிலிருந்து விவசாயிக ளுக்கு விமோசனம் இல்லை. உழுபவனுக்கு நிலத்தை சொந்த மாக்கும் நிலச்சீர்திருத்தம் இல்லை. புதிய முதலாளித்துவ–நிலப்பிரபுத்துவம் உருவாக்கப்படுகிறது. உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், கிராமப்புறங்களில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டவும், நிலப்பிரபுக்களையும், பணக்கார விவசாயி களையுமே இந்திய பூர்ஷ்வா வர்க்கம் ஆதாரப்பட்டுள்ளது (பாரா–34 முதுல் 36 வரை இவைகளை விளக்குகிறது).

29. அயல்நாட்டுக் கொள்கை–உள்நாட்டுக் கொள்கை யின் விஸ்தரிப்பே அயல்நாட்டுக் கொள்கை ஆரம்பத்தில் ஏகாதிபத்தியத்துடன் இணைந்து நின்றனர் ஏன்? பின்னர் ஊசலாட்டங்கள் இருப்பினும், கூட்டு சேராக் கொள்கை, சமாதானக் கொள்கையை பின்பற்றி வருகின்றனர் ஏன்? (பாரா–47 முதல் 55 வரை).

30. இந்திய அரசின் வர்க்கத் தன்மை என்ன? (கட்சித் திட்டம் பாரா–56ல் இது இவ்வாறு வரையறுக்கப்பட்டுள் ளது:–

"இன்றைய இந்திய அரசு, முதலாளிகள், நிலப்பிரபுக் கள் ஆகியோரின் வர்க்க ஆட்சியின் கருவியாகும். இந்த அரசு பெரும் பூர்ஷ்வாக்களினால் தலைமை தாங்கப்ப டுகிறது. இப்பெரும் பூர்ஷ்வாக்கள், முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையை பின்பற்றுவதினால், அன்னிய நாட்டு நிதி மூலதனத்தோடு அதிகமான அளவில் ஒத் துழைத்துக்கொண்டிருக்கிறார்கள். நம் தேச வாழ்வில் இன்றைய அரசின் பாத்திரத்தையும், அலுவல்களையும் இந்த வர்க்கத் தன்மைதான் பிரதானமாக தீர்மானிக்கி றது."

31. இந்த வர்க்க அரசின் அமைப்பும், செயல்முறையும் என்ன? என்பதை கட்சித் திட்டம் விவரிக்கிறது. (பாரா–57 முதல் 69 வரை).

32. நமது நாட்டில் இன்றுள்ள பூர்ஷ்வா ஜனநாயகத் தைப் பற்றியும், அதன் பலஹீனங்களைப் பற்றியும் நாம் அவைகளை எந்த அளவுக்கு பயன்படுத்த முடியும் என்பதை யும் கட்சித் திட்டம் தெளிவுபடுத்துகிறது (பாரா–70,71,72).

33. இந்திய அரசின் கொள்கைகளினால் பல்வேறு பகுதி–வர்க்க மக்கள் எவ்வாறு பாதிக்கிறார்கள் என்பதை கட்சித் திட்டம் விவரிக்கிறது (பாரா – 73 முதல் 82 வரை)

34. இந்தியப் புரட்சியின் இன்றைய கட்டம், மக்கள் ஜனநாயக கட்டம் ஏன்? மக்கள் ஜனநாயகப் புரட்சியின் திட்டம் என்ன? (பாரா: 83 முதல் 87 வரை).

35. **தேசிய இனப் பிரச்னை** (பாரா–88):– இந்திய கம்யூ னிஸ்ட் இயக்கம், இந்திய சமூக – பொருளாதார – அரசியல் நிலமைகளைப் பற்றிய துல்லியமான பரிசீலனையின் அடிப் படையிலான ஒரு திட்டம் இல்லாமலேயே நீண்ட காலம் செயல்பட்டு வந்தது என்பதை ஏற்கனவே பார்த்தோம். ரஷ்ய பாதையில் அல்லது சீனப் பாதையில் புரட்சி நடத்துவது பற்றியே சிந்தித்து வந்தோம். இதேபோல், இந்தியாவின் தேசிய இனப் பிரச்னை சம்பந்தமாகவும், மார்க்சீய கண் ணோட்டத்தின் அடிப்படையில் இந்திய நிலைமையை பற்றிய ஒரு துல்லியமான பார்வை இருக்கவில்லை. இதன் காரண மாக ரஷ்யாவில் தேசிய இன பிரச்னைக்குத் தீர்வுகாண முன்வைக்கப்பட்ட முறையே இந்தியாவுக்கும் பொருந்தும் என்ற கருத்து, கட்சிக்குள் நிலவி வந்தது. 1951 –ல் உருவாக்

கப்பட்ட கட்சி திட்டத்தில் "தேசிய இனங்களுக்கு பிரிந்து போகும் உரிமை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமை வழங்கப்படும்" என்று கூறப்பட்டிருந்தது.

ஆனால், பின்னர் நடைபெற்ற துல்லியமான பரிசீலனையில் இந்திய நிலைமைக்கு இது பொருந்தாது என்று தெளிவாகியது. ஒரு தேசிய இனத்தால் இதர தேசிய இனங்கள் ஒடுக்கப்படும் நிலை இந்தியாவில் இல்லை. மாறாக, அனைத்து இனங்களையும் சேர்ந்த பெருமுதலாளிகள், நிலப்பிரபுக்களின் ஆதிக்கத்திற்கு இந்திய மக்கள் அனைவ்ரும் உட்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், அன்னிய மூலதனச் சுரண்டலும்; இந்தியாவை துண்டாடுவதற்காக ஏகாதிபத்திய ஆதரவுடன் சீர்குலைவு சக்திகளின் முயற்சிகளும் இந்தியாவில் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இவைகளுக்கெதிராக இந்திய மக்களின் ஒற்றுமையை வளர்ப்பதே இந்திய புரட்சியின் தேவை. ஆகவே, நமது கட்சித் திட்டத்தின் 88-வது பாராவில் இன பிரச்னை பற்றி இவ்வாறு கூறப்பட்டுள்ளன:-

> "மக்களின் ஜனநாயக இந்தியா என்பது இந்தியாவின் பல்வேறு தேசிய இன மக்கள் இஷ்டபூர்வமாக இணைந்த ஒன்றியமாக இருக்கும்.
>
> ஆளும் வர்க்கங்கள் சுயாட்சியை மறுத்துக்கொண்டு மத்தியில் அதிகாரங்களைக் குவிக்கும் போக்கிற்கு இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி எதிரானது; அதைப் போன்றே, அனைத்து வகையான சீர்குலைவு, பிரிவினைவாத இயக்கங்களுக்கும் அது எதிரானது."

இந்த பாராவின் 20 உப பாராக்களிலும் தொடர்ந்து 91-வது பாரா வரையிலும் மக்கள் ஜனநாயக இந்தியாவின் அரசு அமைப்பின் தன்மை எவ்வாறு இருக்கும் என்பது விளக்கப்பட்டுள்ளது.

தேசிய இனங்கள் பிரிந்து போவதற்கு ஆதரவான நிலையை கட்சி எடுத்திருந்தால், ஏகாதிபத்திய ஆதரவுடன் தோன்றியுள்ள காலிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையையும், வடகிழக்கு மாநிலங்களில் உருவாகியுள்ள பிரிவின்னை இயக்கங்களையும் நமது கட்சி ஆதரித்துத் தீரவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அது எதிர்ப்புரட்சி சக்திகளுக்கு - ஏகாதிபத்திய சக்திகளுக்குச் சாதகமாக இருந்திருக்கும்.

தொழிலாளி வர்க்கத்தைப் பொருத்தவரையிலும்,

தேசிய இன பிரச்னை என்பது, தொழிலாளி வர்க்க நலனுக்கும், அதன் ஒற்றுமைக்கும் உட்பட்ட ஒரு ஜனநாயகப் பிரச்னையாகவே மார்க்சிஸம் பார்க்கிறது. ஒரு நாட்டிலுள்ள துல்லியமான நிலைமைக்கு ஏற்பவே அதைப் பற்றிய கொள்கையை பின்பற்ற வேண்டும். லெனின் இவ்வாறு கூறுகிறார்:-

> "எந்த ஒரு சமூகப் பிரச்னையையும் ஆராயும்பொழுது, அதை திட்டவட்டமான வரலாறு எல்லைகட்குள்தான் ஆராய வேண்டும். பிரச்னை ஒரு குறிப்பிட்ட நாட்டைப் பற்றியதாக இருந்தால் (உதாரணமாக ஒரு குறிப்பிட்ட நாட்டிற்கான தேசிய செயல் திட்டம்) அதே வரலாற்று காலகட்டத்தில் அந்நாட்டை இதர நாடுகளிலிருந்து வேறுபடுத்தும் ஸ்தூலமான விசேஷ அம்சங்களைக் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும் என்று மார்க்சீய சித்தாந்தம் உறுதியாக தவிர்க்க முடியாத முறையில் கோருகிறது."
>
> (தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்க சர்வதேசியமும்-சில பிரச்னைகள். பக்கம்: 79-80)

36. மக்கள் ஜனநாயக அணியை எவ்வாறு கட்டுவது, இதன் முதன்மை வர்க்கம் எது? துணை வர்க்கங்கள் எவை? எதிரி வர்க்கங்கள் எவை? புரட்சியின் பிரதான கடமைகள் என்ன? இவைகளை கட்சித் திட்டம் வரையறுத்துள்ளது. (பாரா: 92-104)

37. பூர்ஷ்வா வர்க்கத்திற்கும், ஏகாதிபத்தியத்திற்கும் இடையில் முரண்பாடு நீடிக்கிறது. இந்திய பூர்ஷ்வாக்களுக்கிடையிலும் முரண்பாடுகள் உள்ளன.

மக்கள் ஜனநாயக அணியைக் கட்ட இந்திய அரசு அமைப்புடன் மோதுகிற அதே நேரத்தில்; இந்த முரண்பாடுகளையும் கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும் (பாரா: 105-108).

38. மக்கள் ஜனநாயக அணியைக் கட்டுவதும், புரட்சி நடத்துவதும் ஒரு நீண்ட கால நடவடிக்கையாகவும், சிக்கலும், நெருக்கடியும் நிறைந்ததாகவும் இருக்கும். அதனை சாதிக்க எத்தகைய புரட்சிகரமான கட்சி வேண்டும்? மக்கள் ஜனநாயக புரட்சி நடைபெறுவதற்கு முந்தைய காலத்தில் மக்களுக்கு

நிவாரணமளிக்கவும் அவர்களை அணிதிரட்டவும், அரசியல் உணர்வை வளர்க்கவும், இடைக்கால அரசுகள் அமைக்கவும் வாய்ப்புகள் ஏற்படுமா? பயன்படுத்தலாமா? மக்கள் ஜனநாயகப் புரட்சியும், சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதும் அமைதியான முறையில் சாத்தியமா? இக்கேள்விகளுக்கும் கட்சித் திட்டம் விடையளித்துள்ளது. (பாரா: 111,112,113.)

39. கட்சித் திட்டம் முன்வைத்துள்ள இந்த இலட்சியங்களை அடைய வலுவான கட்சி அமைப்பை உருவாக்குவது முதல் கடமையாகும். முதலாளித்துவ செல்வாக்கிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும். இதற்கு ஆழமான தத்துவார்த்தப் போராட்டம் இன்றியமையாதது. மக்களுக்கு விஞ்ஞான சோஷலிஸத்தை போதிக்க வேண்டும். ஜாதி, மத மூட நம்பிக்கைகள் பத்தாம் பசலி சம்பிரதாயங்கள், முதலாளித்துவ தேசியவாதம், தேசிய இனவெறி இவைகளிலிருந்து மக்களை விடுவிக்க வேண்டும்.

தொழிலாளி வர்க்க சர்வதேசிய உணர்வு வளர்க்கப்பட வேண்டும். மார்க்சீய–லெனினிய அடிப்படையில் செயல்படும் ஒரு வலுவான புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியை கட்டுவதன் மூலம் மட்டுமே இவைகளை சாதிக்க முடியும் என்று கட்சித் திட்டம் கூறுகிறது (பாரா: 144–120)

நமது கட்சித் திட்டத்தின் முக்கிய பகுதிகளையும், பிரதான நிர்ணயிப்புகளையும் விளக்கிக் கூறவேண்டும். அதற்குத் தேவையான விபரங்களையும், உதாரணங்களையும் கூற வேண்டும். கட்சித் திட்டம் உருவாக்கிய காலத்தில் தரப்பட்ட திட்டத்தின் பின் சேர்க்கையில் இணைக்கப்பட்டுள்ள விபரங்கள் மட்டும் போதாது. அதற்கு பின்னர் ஏற்பட்டுள்ள நிகழ்ச்சி மாறுதல்கள் பற்றிய விபரங்களையும், உதாரணங்களையும் கொண்டு நமது திட்டத்தை விளக்க வேண்டும். வகுப்பு எடுக்கக்கூடிய தோழர்கள் இதற்கான விபரங்களை சேகரித்துக் கொள்ள வேண்டும்.

40. சி.பி.ஐ. திட்டம் பற்றி:– இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திட்டத்தின் அடிப்படையான அம்சங்கள் முழுக்க முழுக்க திருத்தல்வாதத் தன்மை கொண்டது. இந்திய எதார்த்த நிலைமைகளுக்கு முற்றிலும் புறம்பானது. அரசியல் நடைமுறை

அனுபவங்கள் அதனை நிராகரித்துள்ளது. இருப்பினும், சி.பி.ஐ. தலைமை சுயவிமரிசன ரீதியாக பரிசீலனை செய்து அதனை கைவிட மறுக்கிறது. இப்போது கமிஷன் அமைத்து பரிசீலனை செய்கிறார்கள்.

இந்திய சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகளைப் பற்றியும், இந்திய புரட்சியைப் பற்றியும் நமது திட்ட நிர்ணயிப்புகளுக்கு முற்றிலும் மாறுபட்டது அவர்களது நிர்ணயிப்புகள். இதனை விளக்க அவர்கள் தமிழில் வெளியிட்டுள்ள "இலட்சிய திட்ட"த்திலிருந்து சில மேற்கோள்களை கீழே தருகிறோம். நமது திட்டத்துடன் ஒப்பிட்டு இவைகளை விளக்க வேண்டும்.

41. இந்திய அரசின் பொருளாதாரக் கொள்கையைப் பற்றிய வலதுசாரி திருத்தல்வாத நிர்ணயிப்பு:

"இந்திய பூர்ஷ்வா வர்க்கத்தின் குறிக்கோளோ, அது அரசாங்க அதிகாரத்தை அடைந்து அதை உறுதிபடுத்திக் கொண்ட பின்னர் தங்களுடைய சொந்த வர்க்க நலன்களால் உந்தப்பட்டு ஒரு முதலாளித்துவ அடிப்படையில் சுயேச்சையான பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்துகொள்வதாக இருந்தது.

"இருந்தபோதிலும் பொருளாதார சுதந்திரத்திற்கும் அடிப்படைத் தொழில்களை நிறுவுவதற்கான இந்தியாவின் போராட்டம் முதலாளிகளால் நடத்தப்படுவதாக இருந்தபோதிலும் அது ஏகாதிபத்தியத்தின் நலன்களுக்கு எதிராக இருந்தது. எனவே, அது ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளடக்கம் கொண்டதாகயிருந்தது. இந்தப் போராட்டம் நிலப் பிரபுத்துவ நலன்களுடனும், சமஸ்தான மன்னர்களின்– குடும்பங்களின் நலன்களுடனும் முரண்பட்டு மோதியது. அவற்றிற்கு கடிவாளமிட்டுக் கட்டுப்படுத்தியது. எனவே, அது நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு திசைவழியைக் கொண்டதாக இருந்தது. மூலதன செல்வாதாரங்கள் திரட்டுவதற்கு உள்நாட்டு மார்க்கெட்டை விரிவுபடுத்துவதற்கும் பூர்ஷ்வா வர்க்கமே ஓரளவிற்கு நிலச் சீர்திருத்த நடவடிக்கைகள் எடுப்பதிலும் விவசாயத்தில் நிலப்பிரபுத்துவ உதவிகளைக் கட்டுப் படுத்துவதிலும் முக்கியமான அக்கறை கொண்டிருந்தது."

"எல்லா கேந்திரமான தொழில்களையும் அரசாங்கத் துறைக்கு ஒதுக்குவது என்று வகுக்கப்பட்டிருந்த 1948–ம் வருடத்திய தொழில் கொள்கைத் தீர்மானம் 1949–ம் ஆண்டில்

இந்திய ரிசர்வ் வங்கி தேச உடமையாக்கப்பட்டது. 1953-ம் ஆண்டில் இம்பீரியல் பாங்கும், விமானப் போக்குவரத்தும் தேசவுடமையாக்கப்பட்டது. 1956-ம் ஆண்டில் ஆயுள் காப்பீட்டுக் கம்பெனிகளும், தங்கச் சுரங்கங்களும் தேசவுடமையாக்கப்பட்டது போன்ற இந்த நடவடிக்கைகள் ஏகாதிபத்தியவாதிகளின் கொள்கைகளுக்கு ஒத்ததாக இல்லை. ஏனென்றால், இந்த நடவடிக்கைகள் திட்ட வளர்ச்சிக்காக உள்நாட்டு செல்வாதாரங்களை சேகரிப்பதற்கு முயன்றன: நிதித் துறையின் மீது சர்க்காருக்கு ஒரு பிடிப்பை கொடுத்தன. தொழிலில், அரசாங்கத் துறை நிறுவப்படுவதை துவக்கி வைத்தன. இந்த நடவடிக்கைகள், இந்திய முதலாளிகளின் மேல்தட்டிலுள்ள ஏகபோகக் குழுக்களின் விருப்பத்திற்கு ஏற்றதாக இல்லை.

"இவ்வாறாக அரசாங்கத்துறை சுதந்திரமான தேசிய பொருளாதாரத்தைக் கட்டுவதற்கும் **அன்னிய ஏகபோக மூலதனப் பிடிப்பை பலவீனப்படுத்துவதற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு இந்திய ஏகபோகங்களின் பிடிப்பை பலவீனப்படுத்துவதற்கும்** தனது பங்கை **ஆற்றியது.**" (அழுத்தம் நம்முடையது) (பக்கம்: 17-19)

42. விவசாயக் கொள்கையைப் பற்றிய திருத்தல்வாத மதிப்பீடு:- "காங்கிரஸ் சர்க்கார்கள் பல்வேறு சட்ட நடவடிக்கைகள் மூலம் **கணிசமான அளவில் நிலப்பிரபுத்துவ** எதேச்சாதிகார **நிலவுரிமைகளை கட்டுப்படுத்தியுள்ளது.** வாரம், குத்தகை நிர்ணயச் சட்டங்கள், நிலவுடமைக்கு உச்சவரம்புச் சட்டங்கள், சாகுபடி நில அளவை உறுதிப்படுத்துவது, விவசாயத் தொழிலாளருக்கு குறைந்தபட்ச கூலி முதலியவை பற்றிய சட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

ஜாமீன்தாரி முறை, ஜாகீர்தாரி முறைகள், இனாம்கள் முதலியனவும் இன்னும் இதைப் போன்ற பல்வேறு நிலப்பிரபுத்துவ, அரை நிலப்பிரபுத்துவ முறைகள் ஒழிக்கப்படுவதற்காக நிறைவேற்றப்பட்ட பல்வேறு சட்டங்களினால் தேசத்தின் பல பாகங்களில் **கோடிக்கணக்கான விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வில் மாறுதல் ஏற்பட்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.**

"விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றுவது போன்ற எண்ணற்ற தொல்லைகளிலிருந்து விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைத்தது. **இத்தகைய காரணங்களால் விவசாயிகளின் நிலைமை உறுதிப்பட்டது என்பதில் சந்தேகமில்லை.**"

(பக்கம் -43,44)

43. இந்திய அரசாங்கத்தின் வர்க்கத் தன்மை பற்றிய திருத்தல்வாத நிர்ணயிப்பு:-

"இந்திய அரசாங்கம் தேசிய பூர்ஷ்வா வர்க்கம் முழுவதினுடைய வர்க்க ஆட்சியின் கருவியாகும். இதில் பெரும் பூர்ஷ்வா வர்க்கம் சக்தி வாய்ந்த செல்வாக்கைக் கொண்டிருக்கிறது. இந்த வர்க்க ஆட்சி நிலப்பிரபுக்களுடன் பலமான பிணைப்புகளைக் கொண்டிருக்கிறது. இவை அரசாங்கம் பிற்போக்கான திசை வழிகளில் இழுக்கப்படுவதற்கு இடமளிக்கிறது."

(பக்கம்-56)

44. புரட்சியின் இலட்சியம், பாதை பற்றிய திருத்தல்வாத நிர்ணயிப்புகள்:- சோஷலிஸப் பாதையை மேற்கொள்ளுவதற்கும், ஒரு சோஷலிஸ சமுதாயத்தை நிர்மாணிக்கத் தொடங்குவதற்கும் **இந்திய நாடு ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு ஜனநாயகப் புரட்சியை** முழுமையாக நிறைவேற்ற வேண்டிய கட்டத்தைக் கடந்து செல்ல வேண்டும்.

"தற்போதைய முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையை மாற்றவல்ல, மாற்றுவதற்கு உறுதி கொண்டுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகபோக முதலாளித்துவ எதிர்ப்பு வர்க்கங்களையும், சக்திகளையும் கொண்ட சர்க்காரை அமைப்பது என்பதாகும். இது ஒரு தேசிய **ஜனநாயக** சர்க்காராக இருக்கும். **இந்த சர்க்கார், நாட்டின் வளர்ச்சியை முதலாளித்துவமல்லாத பாதையில் வழிநடத்திச் செல்லும்.**"

(பக்கம்-77)

45. தேசிய ஜனநாயக அணியின் வர்க்க சேர்க்கையும், தலைமையும் பற்றிய திருத்தல்வாத நிலை:-

"முதலாவதாகவும், முதன்மையாகவும் உள்ளது தொழிலாளி வர்க்கம்." "இரண்டாவதாக சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள்." "மூன்றாவதாக நகரங்களில், கிராமப் புறங்களிலும் வளர்ந்து வரும் நடுத்தர படிப்பாளி வர்க்கம்." "கடைசியாக தேசிய பூர்ஷ்வா வர்க்கம்":- "இந்த வர்க்கக் கூட்டணியில் தொழிலாளி வர்க்கத்தின் தனித் **தலைமை இன்னும்**

நிறுவப்படுவதில்லை. அதே சமயத்தில், அதில் பூர்ஷ்வா வர்க்கத்தின் தனித் தலைமையும் ஒருபோதும் இருப்பதும் இல்லை.'' (பக்கம்–80,81,87)

ஆக தொழிலாளி வர்க்கமும், முதலாளி வர்க்கமும் கூட்டாக தலைமை தாங்குவதே தேசிய ஜனநாயக அணி என்பது தெளிவாகிறது.

46. அதிகாரத்தைக் கைப்பற்றும் திருத்தல்வாதப் பாதை:– "தேசிய ஜனநாயக முன்னணியானது காங்கிரசை ஆதரித்து நிற்கும் வெகுஜனங்களை மட்டுமின்றி காங்கிரசுக்குள்ளேயுள்ள முற்போக்கு பகுதியினரையும் அணியின் கீழ் கொண்டு வரும்.

"தேசிய ஜனநாயக முன்னணியானது வளர்ந்துகொண்டேயிருக்கும் தீவிரமான எழுச்சிமிக்க வெகுஜன இயக்கத்தையொட்டி மேலும் மேலும் அதிகமான என்றுமில்லாதபடி விரிவான அடிப்படையிலும், தீவிரமானதாகவும், வலுவுள்ளதாகவும் ஆகும்போது அவ்வியக்கம் ஆளும் கட்சிக்கு உள்ளேயும், வெளியேயும் உள்ள பிற்போக்கு சக்திகளை முறியடித்து தனது கைகளிலேயே அரசாங்க அதிகாரத்தை எடுத்துக் கொள்ளும் நிலைக்கு வருகிறது.

"அப்போது அரசாங்கம் பூர்ஷ்வா வர்க்கத்தின் வர்க்க ஆட்சியின் கருவியாக ஒரு போதும் இருக்காது.'' (பக்கம்–86,87)

வலது கட்சியின் திருத்தல்வாத நிலைக்கு இன்னும் ஏராளமான உதாரணங்களை அவர்களுடைய திட்டத்திலிருந்தே தர முடியும். ஆனால், இதுவே போதுமானது. அவர்களது கருத்தின்படி,

47. தேசிய முதலாளி வர்க்கம் வேறு, பெருமுதலாளி வர்க்கம் வேறு என்பது வலதுசாரி வியாக்கியானம்.

அரசு–தேசிய முதலாளித்துவ அரசு, பெருமுதலாளிகளும், நிலப்பிரபுக்களும் இதில் தங்கள் செல்வாக்கை செலுத்த முயற்சிக்க மட்டுமே செய்கின்றனர். அரசு அதிகாரத்தில் அவர்கள் இல்லை என்று கூறுகின்றனர்.

தேசிய முதலாளித்துவ அரசு ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புக் கொள்கைகளைப் பின்பற்றி

சுயேச்சையான பொருளாதாரத்தை வளர்க்கின்றனர். இதற்கு பெருமுதலாளிகள் இடைஞ்சலாக உள்ளனர்.

ஆட்சிப் பொறுப்பிலுள்ள தேசிய முதலாளி வர்க்கத்துடன், தொழிலாளி வர்க்கம் கூட்டு சேர்ந்து ஏகாதிபத்திய எதிர்ப்பு, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, தேசிய ஜனநாயகப் புரட்சியை பூர்த்தி செய்யவேண்டும்.

இதற்காக தொழிலாளி வர்க்க–தேசிய பூர்ஷ்வா வர்க்க கூட்டு தலைமையில் தேசிய ஜனநாயக அணியினை அமைக்க வேண்டும்.

இந்த அணியின் மூலமாக இந்தியா முதலாளித்துவமற்ற பாதையில் சோஷலிசத்தை அடைய முடியும்.

48. காங்கிரசிலுள்ள முற்போக்காளர்களுடன் கூட்டு சேர்ந்து அரசு அமைப்பிலிருந்து பிற்போக்காளர்களை அப்புறப்படுத்தி அரசு அதிகாரத்தை அமைதியான முறையில் கைப்பற்ற முடியும். அதைக் கொண்டு தேசிய ஜனநாயகப் புரட்சியின் கடமைகளை நிறைவேற்ற முடியும்.

இன்றைய அரசு அமைப்பை தகர்த்தெறிந்து தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் புதிய அரசு அமைப்பை உருவாக்க வேண்டியதில்லை.

தேசிய பூர்ஷ்வா வர்க்கம் நிலச் சீர்த்திருத்த நடவடிக்கைகளைப் பெரும் அளவு பூர்த்தி செய்துவிட்டது.

அன்னிய மூலதனத்திற்கும், ஏகபோக முதலாளிகளுக்கும், நிலப்பிரபுக்களுக்கும் எதிராகச் செயல்பட்டு வருகிறது.

சுயேச்சையான பொருளாதாரத்தை வளர்த்துள்ளது, உள்நாட்டுச் சந்தையை விரிவுபடுத்தியுள்ளது.

இதுதான் வலது திட்டத்தின் சாராம்சம். இந்திய நாட்டின் உண்மை நிலைக்கும், இவைகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை இதுவரையிலான அனுபவம் நிரூபித்துள்ளது.

49. இடதுசாரி திருத்தல்வாதத்தைப் பற்றி:– இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தோன்றிய மற்றொரு திரிபு, இடதுசாரி திருத்தல்வாதம் அல்லது அதிதீவிரவாதம், நக்சலிசம் என்ற பெயரில் இது பிரபலமாகியுள்ளது. வலது திருத்தல்வாதத்தை நிராகரித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தனியாக செயல்

படத் தொடங்கிய காலத்தில் கட்சிக்குள் இடதுசாரி திரிபு தலைதூக்கத் தொடங்கியது. 1968-ல் இத்திரிபுக்கு இரையானவர்கள் கட்சியிலிருந்து வெளியேறி 1969-ல் தனிக் கட்சியாக செயல்படத் தொடங்கினர். வலது திருத்தல்வாதத்திற்கு சோவியத் தலைமையின் ஆதரவு கிடைத்ததுபோல், இவர்களுக்கு சீன தலைமையின் ஆதரவு கிடைத்தது.

இடது அதிதீவிரவாதப் பாதையில் சென்றவர்கள் ஒரே கொள்கையுடனோ, அமைப்புடனோ, தலைமையுடனோ என்றும் செயல்படவில்லை. ஆரம்பத்திலிருந்தே அவர்கள் பல கோஷ்டிகளாக செயல்பட்டு வந்தனர். இப்போது, மேலும் பல கோஷ்டிகளாக பிளவுபட்டுள்ளனர். ஆரம்பத்தில் இருந்த சீன ஆதரவும் இப்போது இவர்களுக்கில்லை.

ஆரம்ப காலத்தில், இவர்களில் பிரதான பகுதியினரான சாரு மஜூம்தார் குழுவினர் கொண்டிருந்த பிரதான அரசியல் நிலைகள் உதாரணத்திற்காக இங்கு சுட்டிக் காட்டுகிறோம்.

50. இந்திய முதலாளி வர்க்கம் தரகு முதலாளி வர்க்கம் இந்திய அரசு தரகு முதலாளித்துவ அரசு.

இந்தியா ஒரு சுதந்திர நாடல்ல. அரை நிலப்பிரபுத்துவ அரை காலனி நாடு. தேர்தல்களிலும், சட்டரீதியான நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடாது.

உடனே ஆயுதமேந்திய போரட்டத்தின் மூலம் இந்திய அரசை தூக்கியெறிய வேண்டும்.

சீனாவின் பாதையே இந்தியப் புரட்சியின் பாதை.

வெகுஜன அமைப்புகள், வெகுஜன இயங்கங்கள் கூடாது. புரட்சியாளர்களின் இரகசிய குழுக்கள்தான் பிரதான ஸ்தாபன வடிவம்.

வர்க்க விரோதிகளை தீர்த்துக் கட்டுவதன் மூலம் மக்கள் எழுச்சியை உண்டாக்க முடியும். செஞ்சேனை உருவாகும்.

51. சோவியத் யூனியன் சோஷலிஸ்ட் நாடல்ல. அது ஒரு சமூக ஏகாதிபத்தியம். இவைகள்தான் நக்சலிஸத்தின் ஆரம்ப கால அடிப்படைக் கொள்கைகள்.

இவைகள் அனைத்தும் எதார்த்தத்திற்கு புறம்பானவை-அர்த்தமற்றவை என்பதை கடந்த கால அனுபவம் நிரூபித்துள்ளது. அவர்களில் பலர் இதை உணர ஆரம்பித்துள்ளனர்.

இருப்பினும், சில குழுக்கள் வரட்டுத்தனமான அதிதீவிரக் கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றி வருகின்றனர். பலர் அரசியலிலிருந்து விலகிவிட்டனர். சிலர் சாமியார்களாக ஆகியுள்ளனர். சிலர், காங்கிரஸ், சி.பி.ஐ. கட்சிகளில் சேர்ந்தனர். ஒட்டுமொத்தமாக சின்னாபின்னமாகி சீர்குலைந்துள்ளனர்.

இவர்களின் பிரதான பிரிவினரான சாரு மஜூம்தார் கோஷ்டி "இன்றைய சூழ்நிலையும் நமது கட்சியின் வழியும்" என்ற தலைப்பில் 1979-ல் வெளியிட்ட அவர்களது திட்டத்திலிருந்து சில அம்சங்களை கீழே தருகிறோம். அவர்களது நிலையைப் புரிந்துகொள்ள இது ஓரளவு உதவும்.

52. உலக நிலையைப் பற்றிய இடதுசாரி திருத்தல்வாத கணிப்பு:- "இன்றைய உலகில் அமெரிக்க ஏகாதிபத்தியமானது தற்காத்துக்கொள்ளும் நிலைக்கு தாழ்ந்தும் சோவியத் சமூக ஏகாதிபத்தியமானது தாக்குதல் நிலைக்கு வளர்ந்தும் உள்ளது."

(பக்கம் 9)

இந்திய ஆளும் வர்க்கம் பற்றிய கணிப்பு:-"இந்தியாவில் தரகு முதலாளி வர்க்கம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பாதுகாப்பின் கீழ் வளர்ந்தது. பிறகு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடனான அவர்களுடைய உறவுகள் புதிய வடிவங்களை மேற்கொண்டன. அதிகாரம் கைமாற்றம் செய்யப்பட்ட பிறகு அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனான அவர்களுடைய உறவுகள் மேலும் புதிய வடிவங்களை மேற்கொண்டன. சோவியத் சமூக ஏகாதிபத்தியத்துடனான அவர்களுடைய உறவுகளின் வடிவம் இன்னும் விநோதமாக இருக்கிறது. அது தவிர சோவியத் நிதி மூலம் ஒரு புதிய தரகு முதலாளி வர்க்கத்தை உருவாக்கியுள்ளது."

(பக்கம்-25)

"பல விசேஷ அம்சங்கள் இருந்தாலும், இந்திய ஏகபோக முதலாளிகள் தன்மையில் தரகர்களாக உள்ளனர். 'பல விசேஷ அம்சங்கள் இருந்தாலும் இந்திய சமூக அமைப்பு அரை நிலப்பிரபுத்துவ, அரை-காலனிய அமைப்பாகும். பல குறிப்பிட்ட குணாம்சங்கள் இருந்தாலும், இந்திய அரசு அமைப்பு நவீன காலனியத் தன்மை கொண்டதாகும்.

"நமது நாட்டில் இரு வல்லரசுகளுக்கெதிரான, குறிப்பாக சோவியத் சமூக ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில், எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட சட்டத்தில் ஒரு

குறிப்பிட்ட காலம் பெரும் முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியுடன் ஐக்கிய முன்னணியைக் கட்டுவதற்கான சாத்தியப்பாட்டை நாம் மறுப்பதில்லை." (பக்கம்-26)

53. இந்தியப் புரட்சியின் பாதையைப் பற்றி இடது தீவிரவாதிக் கணிப்பு:-

"இந்திய புரட்சி, சீனப் பாதையை பின்பற்றியாக வேண்டும். அதாவது, விவசாய மக்களை சார்ந்திருந்து கிராமப்புறங்களில் தளப் பிரதேசங்களை ஏற்படுத்தி, கிராமப்புறங்களைக்கொண்டு நகரங்களை சுற்றி வளைத்து இறுதியில் அவற்றை விடுவிப்பது."

"நமது போராட்டத்தின் வளர்ச்சியோடு, முதலாளி வர்க்கத்தின் ஒரு பகுதியோடு ஐக்கிய முன்னணி அமைப்பதற்கும், முற்போக்கு முதலாளித்துவ தேசியவாதத்தை பயன்படுத்துவதற்குமான நிலைமைகள் பக்குவமடைந்து வருகின்றன."

"ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் நாம் முற்போக்கு முதலாளித்துவ தேசியவாதத்தை பயன்படுத்தியாக வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் **"சீனத்தின் தலைவர் நமது தலைவர்"** என்ற நமது கோஷம் ஏகாதிபத்திய எதிர்ப்பு தேச பக்த சக்திகளின் ஏகப் பெரும்பான்மையை ஐக்கியப்படுத்துவதில் தடைகளை உருவாக்கி அதனால் பாதக விளைவுகளை ஏற்படுத்தலாம்.

"நாம் ஐக்கிய முன்னணி காட்டும் பாதையை சுத்தப்படுத்துவதற் காக, **"சீனத்தின் தலைவர் நமது தலைவர்"** என்ற கோஷத்தை வாபஸ் பெறவேண்டும். (அழுத்தம் நம்முடையது) (பக்கம்:-30,32)

54. பயங்கரவாத பாதை:- "ஆயுதப் படைகளின் உதவியால் புரட்சிகரத் தளப் பகுதிகளைக் கட்டுவதன் மூலமாக வெகுஜன எழுச்சியை உண்டாக்கும் அடிப்படை வேலையை விட்டுவிட்டு வெகுஜன அபிப்பிராயத்தை உண்டாக்கும் கடமை வேகத்தை அடைய முடியாது என்பதோடு அது எதிரியின் அடக்குமுறைக்கு முன் நிச்சயமாக சிதறும்.

"விவசாயிகளின் பலவகைப்பட்ட பொருளாதார அரசியல் போராட்டங்களை வளர்ப்பதன் மூலம், விரோதியான கொடுமைக்கார நிலப்பிரபுக்களை அழித்தொழிப்பதன் மூலம்

தான் நிலப்பிரபுத்துவத்தை ஒரு வர்க்கம் என்ற முறையில் வீழ்த்த முடியும்." (பக்கம்-54-56)

இந்தப் பாதையை பின்பற்றி அந்த இயக்கம் முழுமையாக சீரழிந்தது. "மக்கள் யுத்த பிரிவினர்" என்னும் ஒரு குழு இப்போது பயங்கரவாத நடவடிக்கைகளில் ஆந்திரா, பீஹார் அங்கும் இங்குமாக ஈடுபட்டு வருகின்றனர். மற்றவர்கள் எல்லாம் தேர்தலில் போட்டியிட முனைந்துள்ளனர். பி.ஜே.பி.யுடனும் கூட்டு சேரத் தயார் என்று கானு சன்யால் கோஷ்டி அறிவித்துள்ளது.

சி.பி.எம். எதிர்ப்பு, சோவியத்-சீனா உட்பட சோஷலிஸ முகாமை எதிர்ப்பது பிரிவினைவாத, சீர்குலைவு சக்திகளுடன் கூட்டு என்பதே இவர்களின் இன்றைய அரசியல். ஆகவே, இவர்கள் ஒரு அரசியல் கட்சியாகவோ, இடதுசாரி சக்தியாகவோ அங்கீகரிக்கவில்லை.

இத்தகைய போக்குகள் மீண்டும் மீண்டும் தோன்றுவதற்கான வாய்ப்புகள் உண்டு. நமக்கெதிராக ஆளும் வர்க்கம் அதனை ஊக்குவிக்கும். ஆகவே, நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி – அமைப்பும் செயல் முறையும்

பி.ஆர்.பரமேஸ்வரன்

பாடக் குறிப்பு

முன்னுரை

இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி பின்பற்றி வரும் கட்சி ஸ்தாபன விதிகளையும், கோட்பாடுகளையும் விளக்குவதற்காக நடத்தப்படும் வகுப்புக்கான ஒரு சிறு குறிப்பு இது. இந்த ஸ்தாபனக் கோட்பாடுகள் உருவானதற்கு ஒரு வரலாற்றுப் பின்னணி உண்டு. பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்திற்கு, சித்தாந்தத்தைப் போலவே ஸ்தாபன மும் இன்றியமையாதது. முதலாளித்துவத்தின் வளர்ச்சிப் போக்கில் தீவிரமடைந்த முதலாளி–தொழிலாளி வர்க்க முரண்பாடுகள்– மோதல்கள் பின்னணியில் 19–வது நூற் றாண்டின் மத்தியில் பாட்டாளி வர்க்கத்தின் தத்துவ ஞான மாக மார்க்சீய தத்துவத்தை மார்க்ஸும், எங்கல்ஸும் வளர்த் தனர். வர்க்கப் போராட்டத்தின் தத்துவ அடிப்படையாக அது அமைந்தது. சுரண்டும் வர்க்கத்தினரின் சமூக, பொருளா தார, அரசியல் ஆதிக்கத்திலிருந்து முழு விடுதலை பெற, புதிய சமுதாயம்– சோஷலிஸ சமுதாயம் அமைக்க உழைப்பாளி மக்களை அணிதிரட்டி வழிநடத்திச் செல்ல ஓர் அமைப்பு – தொழிலாளி வர்க்கத்திற்கென ஒரு கட்சியும் தேவை என்பதை மார்க்ஸும்–எங்கல்ஸும் உணர்ந்தனர். அதனை உருவாக்க வும் செய்தனர். 1847–ல் "கம்யூனிஸ்ட் லீக்" தோன்றியது. அதன் கொள்கை அறிக்கையாக "கம்யூனிஸ்ட் அறிக்கை" வெளியிடப்பட்டது.

கம்யூனிஸ்ட் இயக்கம் வளர்ந்துவந்த காலத்தில் – லெனின் காலத்தில் ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியில் – கட்சியின் விதிகள், ஸ்தாபனக் கோட்பாடுகள் பற்றிய விரிவான விவா தம் நடைபெற்றது. 1903–ல் நடைபெற்ற ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டாவது காங்கிரசில் இது தீவிரமடைந்தது. மென்ஷ்விக்குகள் (சிறுபான்மையோர்) கட்சியைத் தெளிவான வர்க்கக் கொள்கையில்லாத, ஸ்தாபன கட்டுப்பாடில்லாத, தொளதொளப்பான ஒரு அமைப்பாக ஆக்கச் செய்த முயற்சி யினை, லெனினைப் பின்பற்றி போல்ஷ்விக்குகள் (பெரும்

பான்மையோர்) முறியடித்தனர். ஒரு புரட்சிகரமான கட்சிக் குரிய ஸ்தாபனக் கோட்பாடுகளையும், விதிகளையும் உருவாக் கினர். இத்தகைய ஒரு அமைப்பின் அவசியத்தை லெனின் இவ்வாறு விளக்கினார்:–

"சரியான ஒரு நிறுவனம் இல்லாது, தொழிலாளி வர்க் கத்தின் அரசியல் உணர்வு பெற்ற படையாகக் கட்சி இயங்க முடியாது. இலட்சக் கணக்கான உழைப்பாளி மக்களை ஒரு தொழிலாளி வர்க்கப் படையாக இறுக இணைக்கும் ஸ்தாபனத்தின் பௌதிக ஐக்கியத்தால் கெட்டிப்படுத்தப்பெற்று, மார்க்சீய கோட்பாடுகளின் அடிப்படையில் உருவான சித்தாந்த ஒற்றுமையின் மூலமே, தொழிலாளி வர்க்கம் வெல்ல முடியாத சக்தி யாக முடியும்; இதைத் தவிர்க்க முடியாததாகவும் ஆக்க முடியும்."

(நூல்–லெனின் வகுத்த கட்சி வாழ்க்கை நியதிகளும் கோட்பாடுகளும்: பக்கம்–17)

கட்சி ஸ்தாபனக் கோட்பாடுகளை விளக்கி லெனின் பல கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். குறிப் பாக "செய்ய வேண்டியது என்ன?", "ஓரடி முன்னே ஈரடி பின்னே" என்ற நூல்களில் இதைப் பற்றி விரிவாக எழுதியுள் ளார். அவர் காலத்தில் 1921–ல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் அகிலத்தின் மூன்றாவது காங்கிரசில் அங்கீகரிக்கப்பட்ட, லெனினால் தயாரிக்கப்பட்ட "கட்சி ஸ்தாபனக் கோட்பாடு கள்" என்னும் தஸ்தாவேஜில், கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஸ்தா பன அமைப்பின் அடிப்படைக் கொள்கைகள் வரையறுக்கப் பட்டுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் அமைப் புச் சட்டமும் அதை அடிப்படையாகக்கொண்டே உருவாக் கப்பட்டுள்ளது. கட்சியின் வளர்ச்சிப் போக்கில் நடைமுறை யில் முன்னுக்கு வந்த பல பிரச்னைகள், பலஹீனங்கள் குறித்து 1968–ல் கள்ளிக்கோட்டையில் நடந்த சி.சி. கூட்டத்திலும், 1978 இறுதியில் சால்கியாவில் (மேற்கு வங்கம்) நடைபெற்ற பிளீனத்திலும் விவாதிக்கப்பட்டது. கட்சி அமைப்பைப் புரட் சிகரமாக ஆக்குவதற்கான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. சித்தாந்த, அரசியல் துறைகளில் வலது–இடது திரிபு வாதங் களை எதிர்த்து போராடுவதைப் போலவே ஸ்தாபனத் துறை

யிலும் இப்போக்குகளுக்கெதிராகப் போராடுவது அவசியமானது. அதன் மூலமே ஒரு புரட்சிகரமான வெகுஜன கட்சியைக் கட்ட முடியும். "ஒரு கொள்கையை உருவாக்கியபின் அது எவ்வளவு சரியான கொள்கையாக இருந்தாலும் அதன் வெற்றி–தோல்வியைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சம் கட்சி ஸ்தாபனம்தான்" என்று தோழர் ஸ்டாலின் கூறியுள்ளதை கவனத்தில் கொண்டு மார்க்சிஸ–லெனினிஸ சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட புரட்சிகரமான தொழிலாளி வர்க்கக் கட்சியைக் கட்டுவது அவசியம் என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

1. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி. உழைப்பாளி வர்க்கத்தினரின் நலன்களுக்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்ளக் கூடியவர்கள் மட்டுமே கட்சியில் உறுப்பினர்களாக தகுதி உடையவர்கள். மனிதனை மனிதன் சுரண்டும் முறைக்கு முடிவு கட்டுவது கட்சியின் இலட்சியமாகும்.

இன்றைய சூழ்நிலையில் இந்திய சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்துள்ள அன்னிய முதலாளிகள், இந்திய பெருமுதலாளிகள், நிலப்பிரபுக்களின் சுரண்டலுக்கு முடிவு கட்டும் "மக்கள் ஜனநாயகப் புரட்சி" மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உடனடியான இலட்சியம். இதனைத் தொடர்ந்து எல்லாவிதமான சுரண்டலுக்கும் முடிவு கட்டி சோஷலிஸ்ட் சமுதாயத்தை உருவாக்குவதும், அதனுடைய அடுத்த கட்டமாக கம்யூனிஸ சமுதாயத்தை அமைப்பதும் அதனுடைய இறுதி இலட்சியமாகும்.

கட்சியின் தன்மையையும், இலட்சியத்தையும் பற்றி கட்சியின் அமைப்புச் சட்டத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:–

"இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகர முன்னணிப் படையாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் அரசை அமைப்பதன் மூலம் சோஷலிஸத்தையும், கம்யூனிஸத்தையும் ஏற்படுத்துவது கட்சியினுடைய குறிக்கோளாகும். மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும், உழைக்கும் மக்களின் முழு விடுதலைக்கும் இட்டுச் செல்வதற்கான சரியான பாதையை எடுத்துக் காட்டுகிற ஒரே தத்துவமான மார்க்சிஸ–லெனினிஸத்தையும் அதன் கோட்பாடுகளையும் தன்னுடைய எல்லா நடவடிக்கைகளிலும் கட்சி தன்னுடைய வழிகாட்டியாகக் கொண்டிருக்கிறது. தொழிலாளி வர்க்க சர்வதேசியம் என்ற பதாகையை கட்சி உயர்த்திப் பிடிக்கிறது." (கட்சி அமைப்புச் சட்டம் – பிரிவு–2)

இன்றைய அரசு அமைப்பை தகர்த்தெறிந்து தொழிலாளி வர்க்கத்தின் தலைமையிலான அரசு அமைப்பை நிறுவாமல் நாடும், தொழிலாளி வர்க்கமும் முன்னேற முடியாது என்பதை சுதந்திர இந்தியாவின் இதுவரையிலான அனுபவம் நிரூபித்துள்ளது.

சுரண்டலுக்கெதிராகவும், அரசியல் அதிகாரத்திற்கான போராட்டத்திற்கும் உழைப்பாளி மக்களை அணிதிரட்டி, வழிகாட்டி தலைமை தாங்க சக்தி வாய்ந்த தொழிலாளி வர்க்கக் கட்சி இன்றியமையாதது.

2. இதர கட்சிகள்:– இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் கட்சி என்றால், இதர கட்சிகளெல்லாம் எந்த வர்க்கத்தின் கட்சிகள்? அவர்கள், தங்களை ஒரு குறிப்பிட்ட வர்க்கத்தின் கட்சி என்று கூறிக்கொள்வதில்லை. பொதுவாக, மக்கள் கட்சி என்றே கூறிக்கொள்கின்றனர். ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு வர்க்க அடிப்படை இருக்க வேண்டுமென்பது கட்டாயமா? இத்தகைய பல கேள்விகள் எழக்கூடும்.

இவைகளை பற்றிய நமது அனுபவ விளக்கத்தை கூறுவதற்குமுன் மாமேதை லெனினுடைய தத்துவ விளக்கத்தை எடுத்துக் கூறுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறோம்.

"நீதி மதம், அரசியல், சமுதாயம் சம்பந்தமாக எல்லாவித சொல்லடுக்குகளுக்கும், பிரகடனங்களுக்கும், வாக்குறுதிகளுக்கும் பின்னே ஏதாவது ஒரு வர்க்கத்தின் நலன்கள் ஒளிந்து நிற்பதைக் கண்டுகொள்ள, மக்கள் தெரிந்துகொள்ளாத வரையில் அரசியலில் அவர்கள் முட்டாள்தனமான ஏமாளிகளாகவும், தம்மைத்தாமே

ஏமாற்றிக்கொள்வோராகவும் இருந்தனர், எப்போதும் இருப்பார்கள்.''

(பக்கம்–13 ''மார்க்சீயத்தின் மூன்று உள்ளடக்கக் கூறுகளும் தோற்றுவாய்களும்'' – லெனின்)

கொள்கைப் பிரகடனங்கள், சொல்லடுக்குகள், அவைகளை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகள், இயக்கங்கள் அனைத்திற்கும் பின்னால் ஏதாவது ஒரு வர்க்கத்தின் நலன் பொதிந்துள்ளது என்பதை தோழர் லெனின் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். நமது அனுபவமும் அதையே நிரூபிக்கிறது.

''இந்திய தேசிய காங்கிரஸ்'' – இந்திய நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான கட்சி என்று சொல்லப்பட்டது. இல்லை, இல்லை அது இந்திய முதலாளி வர்க்க நலனை அடிப்படையாகக் கொண்ட கட்சி என்று கம்யூனிஸ்டுகள் கூறி வந்தனர். ஆரம்பத்தில் இது மற்றவர்களுக்கு புரியவில்லை. ஆனால், அவர்களின் இதுவரையிலான ஆட்சி அதனுடைய முதலாளித்துவத் தன்மையை நிரூபித்துள்ளது. ஜனதாவின் குறுகிய கால அனுபவமும் அதன் முதலாளித்துவத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. இருப்பினும், அவைகளின் வர்க்கத் தன்மையை இன்னும் பெரும்பாலான மக்கள் புரிந்துகொள்ளவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள தி.மு.க., அ.இ.அ.தி.மு.க., ஆந்திராவில் உள்ள தெலுங்கு தேச கட்சி போன்றவைகளும் பிரதேச முதலாளித்துவ கட்சிகளே. இவைகளின் கொள்கையிலும், நடைமுறையிலும் இந்த வர்க்க தன்மை பிரதிபலிக்கவே செய்யும். பல்வேறு வர்க்கங்களாக மக்கள் பிரிந்துள்ள வர்க்க சமுதாயத்தில் மக்களின் நலன்கள் முரண்படுகின்றன. ஆகவே, அனைத்து வர்க்கத்திலிருக்கும் பொதுவான கட்சி என்று எதுவும் இருக்க முடியாது.

தொழிலாளி வர்க்க இயக்கத்தில்கூட சில கட்சிகள் மார்க்சீயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலிருந்து விலகி வலதுசாரி திருத்தல்வாத – இடதுசாரி அதிதீவிர பாதைகளில் செல்லுகின்றபோது, முதலாளித்துவ செல்வாக்கிற்கு இரையாகின்றனர். தொழிலாளி வர்க்க நலனுக்கு ஒவ்வாத நிலைகளை மேற்கொள்கின்றனர். இத்தகைய போக்குகளும், பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்தை பாதிக்கக் கூடியது. சி.பி.ஐ.,

நக்சலைட்டுகளின் கடந்த கால நடைமுறையைக் கொண்டு இதனை விளக்க முடியும்.

முதலாளி வர்க்கத்திற்கும், பழைய அமைப்பிற்கும் சாதகமாக செயல்படுபவர்களில் பல ரகமுண்டு. இவர்கள் உணர்வுபூர்வமான முதலாளி வர்க்க ஆதரவாளர்கள், உணர்வுபூர்வமாக அல்லாமலும் முதலாளித்துவக் கருத்தோட்டம்–கண்ணோட்டத்திற்கு இரையாகி முதலாளி வர்க்கத்திற்கு ஆதரவாகச் செயல்படுவோர் என்ற பல பிரிவுகள் உண்டு. வர்க்க சமுதாயத்தில்; வர்க்க கண்ணோட்டத்திலிருந்தும், செல்வாக்கிலிருந்தும் விடுபட்டோர் யாரும் இருக்க முடியாது.

சாராம்சத்தில் இவையனைத்தும் தொழிலாளி வர்க்க நலனுக்கு விரோதமானது. இதனை நமது தொழிலாளி வர்க்கம் உணராதவரை தொழிலாளி வர்க்கம் சுயமாக ஒரு அரசியல் சக்தியாக வளர முடியாது. லெனின் கூறியதுபோல், மக்கள் இன்றைக்கு ஆதரித்து வரும் பல்வேறு அமைப்புகளின் முதலாளித்துவத் தன்மையைப் புரியாத ஏமாளிகளாகவே இருப்பர்.

3. முதலாளித்துவ செல்வாக்கிலிருந்து விடுபட்டு தொழிலாளி வர்க்கம் தன்னையே ஒரு அரசியல் சக்தியாக ஆக்கிக் கொண்டாலன்றி அது விடுதலை பெற முடியாது என்று மாமேதை மார்க்ஸ் தெளிவாகவே கூறியுள்ளார். பழைய கட்சிகளையெல்லாம் நிராகரித்துவிட்டு தன்னுடைய சொந்த அரசியல் கட்சியை நிறுவிக்கொள்ள வேண்டுமென்று தொழிலாளி வர்க்கத்திற்கு அவர் அறைகூவல் விடுத்தார். அத்தகைய கட்சியை – கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்கவும் செய்தார்.

முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டத்தில் பாட்டாளி மக்களின் ஒரே ஆயுதம் அதனுடைய அரசியல் கட்சி என்று கூறினார் தோழர் லெனின். மார்க்சிஸ–லெனினிஸத்தை அடிப்படையாகக் கொண்டு, தொழிலாளி வர்க்க நலனுக்காக உறுதியாகப் போராடும் கட்சிதான் புரட்சிகரமான தொழிலாளி வர்க்கக் கட்சியாக இருக்க முடியும். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஒன்றுதான் நமது நாட்டில் இந்த அடிப்படையில் செயல்பட்டு வரும் ஒரே கட்சி என்பதை கடந்த கால வரலாறு நிரூபித்துள்ளது.

4. புரட்சிகரமான கட்சி:– தொழிலாளி வர்க்கத்தின் கட்சி இதர கட்சிகளைப் போன்ற ஒன்றல்ல. படிப்படியான மாற்றங்கள் அல்லது சில்லறை சீர்திருத்தங்களைக் கோரும் முதலாளித்துவக் கட்சிகளுக்கு முற்றிலும் மாறுபட்டது. இன்றைய சமுதாயத்தை தலை குப்புற கவிழ்க்கும் ஒரு சமுதாயப் புரட்சியை லட்சியமாகக் கொண்ட கட்சி, புரட்சிகரமான கட்சி, வெகுஜன புரட்சிக் கட்சி.

புரட்சிகர தத்துவமின்றி புரட்சிகரமான இயக்கம் இல்லை – நம் காலத்தின் புரட்சிகரமான தத்துவம் மார்க்சிஸம்–லெனினிஸமே என்று கூறினார் தோழர் லெனின்.

ஆகவே, கட்சி ஸ்தாபனம் புரட்சிகரமானதாக இருக்க வேண்டுமானால் மார்க்சிஸம்–லெனினிஸத்தை அடிப்படையாகக் கொண்டு அது அமையவேண்டும். மார்க்சிஸ–லெனினிஸ தத்துவ உணர்வுடன் வர்க்கப் போராட்டத்தில் தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் இணைந்து உறுதியாக நிற்பவர்கள் மட்டுமே புரட்சிக்காரரர்களாக–கம்யூனிஸ்டுகளாக இருக்க முடியும். அன்னிய வர்க்கக் கருத்துக்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

தொழிலாளிவர்க்கக் கட்சி; புரட்சியை இலட்சியமாகவும், தொழிலாகவும் கொண்டவர்களின் கட்சியாக இருக்க வேண்டும்.

அதிகாரத்திற்கான போராட்டத்தில் உழைப்பாளி மக்களுக்கு தலைமை தாங்க தகுதியும், திறமையும், உறுதியுமிக்க கட்சியை உருவாக்க வேண்டும்.

மார்க்சிஸ–லெனினிஸ தத்துவப் பயிற்சி பெற்ற நடைமுறை அனுபவ ஞானம் கொண்ட லட்சக் கணக்கான உறுப்பினர்களைக் கொண்ட வெகுஜன புரட்சிக் கட்சியை உருவாக்க வேண்டும்.

5. கட்சி – தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் தலைமை:– கட்சி தொழிலாளி வர்க்கத்தின் பல்வேறு அமைப்புகளில் ஒன்றல்ல. தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் தலைமை. முன்னணிப் படை.

கட்சி தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் தலைமையாகவும், முன்னணிப் படையாகவும் திகழ வேண்டுமானால் அது எத்தகைய சிறப்பான குணாம்சங்களை பெற்றிருக்க வேண்

டும்? அத்தகைய சிறப்பான தன்மையை கட்சி எவ்வாறு பெற முடியும் என்பவைகளைப் பற்றி தோழர் ஸ்டாலின் கூறியுள்ள கருத்துக்களில் முக்கியமானவைகளை கீழே குறிப்பிடுகிறோம்.

"முதலாவதாக தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படை இது. தொழிலாளி வர்க்கத்திலிருந்து உயர்ந்து வரக்கூடிய மிகச் சிறந்த நபர்கள், அவர்களுடைய அனுபவ ஞானம், புரட்சிகர மனோபாவம், சுயநலமற்ற தொழிலாளி வர்க்கப் பற்று இவைகளை எல்லாம் கட்சி உட்கொண்டிருக்க வேண்டும். புரட்சிகர சித்தாந்தம், சமுதாய இயக்கங்கள் – சமுதாய மாறுதல்கள் பற்றிய நியதிகளைப் பற்றிய ஞானம், புரட்சியின் விதிகளைப் பற்றிய ஞானம் – இவைகளால் கட்சி ஆயுதபாணியாக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படியிருந்தால் மட்டுமே சாதாரண தொழிலாளர்களைவிட தூரப் பார்வையுடன் தற்காலிக உணர்ச்சிகளுக்கும், நலன்களுக்கும் மேலாக நிரந்தரமான நலன்களைப் பற்றிய கண்ணோட்டத்துடன் தொழிலாளி வர்க்கத்துக்கு தலைமை தாங்க கட்சி தகுதியுள்ளதாக இருக்கும்.

"இரண்டாவதாக, தொழிலாளி வர்க்கத்தின் ஸ்தாபன ரீதியாக திரட்டப்பட்ட பகுதி கட்சி. எதிரிக்கெதிராக தாக்குதலை தொடுக்கவேண்டிய நிலைமை பக்குவமாகும்போது, முன்னேறித் தாக்கவும், பின்வாங்கவேண்டிய கட்டத்தில் பின்வாங்குவதற்கும் உள்ள திறமையுடன், ஸ்தாபன ரீதியாக திரட்டப்படாத லட்சக் கணக்கான தொழிலாளர்களை ஸ்தாபனத்தில் திரட்டவும் கட்சி திறமை உள்ளதாக இருக்க வேண்டும். இதற்கு கட்சி ஸ்தாபன ரீதியானதாகவும், கட்டுப்பாடுள்ளதாகவும் இருக்க வேண்டும்.

"மூன்றாவதாக, தொழிலாளி வர்க்கத்தின் பல்வேறு ஸ்தாபன வடிவங்களில் மிகவும் உயர்ந்தது கட்சி. தொழிற்சங்கங்கள், கூட்டுறவு சங்கங்கள், பாக்டரி அமைப்புகள், பாராளுமன்றக் குழுக்கள், மாதர் சங்கங்கள், கல்வி–கலாச்சார ஸ்தாபனங்கள், வாலிபர் சங்கங்கள், பத்திரிகை பிரசுர வெளியீட்டு நிலையங்கள், பகிரங்கமான புரட்சிப் போராட்டங்கள் நடக்கக்கூடிய காலத்தில் உருவாகின்ற அமைப்புகள், தொழிலாளி

வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றும்போது உருவாகின்ற அரசு அமைப்புகள் இவைகளெல்லாம் தொழிலாளி வர்க்கத்தின் ஸ்தாபனங்கள்தான்.

"முதலாளித்துவத்திற்கெதிரான போராட்டத்தில், இவைகள் தவிர்க்க முடியாதது. இவைகளில் பெரும்பாலும் கட்சிக்கு அப்பாற்பட்டவர்கள்தான் உறுப்பினர்களாக இருப்பார்கள். இந்த தன்மையை பாதுகாத்துக் கொண்டே, அவைகளையெல்லாம் ஒன்றுபடுத்தி ஒரு குறிப்பிட்ட லட்சியத்தை நோக்கி அழைத்துச் செல்லக் கூடிய திறமை கட்சிக்கு மட்டுமே உண்டு."

6. திறமைமிக்கக் கட்சி:– இத்தகைய திறமை மிக்க ஒரு கட்சியின்றி, புரட்சி வெற்றி பெறுவது சாத்தியமல்ல. கட்சியின் அடிப்படையான கடமைகள் பற்றி தோழர் ஸ்டாலின் இவ்வாறு குறிப்பிடுகிறார்:–

"(அ) முதலாளி வர்க்கத்திற்கெதிராக தொழிலாளி வர்க்கம் நடத்துகின்ற மிகச் சாதாரண போராட்டங்களிலும் அதற்கான ஸ்தாபனங்களிலும் கட்சி வேரூன்றியிருக்க வேண்டும். இந்த ஆரம்ப வேலையை உதாசீனப்படுத்தக் கூடிய எந்த அரசியலும் புரட்சிகரமான அரசியல் அல்ல. இதில் வேரூன்றி நிற்காமல் செய்கின்ற எந்த சோஷலிஸ்ட் பிரச்சாரமும் சோஷலிஸ்ட் பிரச்சாரமாக இருக்காது.

(ஆ) இதை செய்கின்றபோதே தொழிலாளி வர்க்கத்திடம் சோஷலிஸ்ட் உணர்வை வளர்க்க–முதலாளி வர்க்கத்துடன் பேரம் பேசுவதல்ல; முதலாளித்துவத்தின் அஸ்திவாரமான உற்பத்திக் கருவிகளின் தனி உடமையை ஒழிப்பதுதான் தங்களுடைய வர்க்க நலன் என்ற உணர்வு உண்டாக்க கட்சி முயற்சி செய்யவேண்டும்.

இதற்கான ஸ்தாபன ரீதியான பணிகளின் மூலமாக – பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளியை சோஷலிஸத்திற்காகப் போராடும் போர் வீரனாக மாற்ற வேண்டும்.

(இ) பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான போராட்டங்களில் மட்டுமின்றி; அமலில் உள்ள அரசியல் அமைப்புக்கு எதிராக யார் பக்கத்திலிருந்து எவ்வளவு சிறிய அசைவு ஏற்பட்டாலும், அதிலும் கவனம் செலுத்த தொழிலாளி வர்க்கத்திற்கு அரசியல் உணர்வூட்ட வேண்டும். இதன் மூலமாக சொந்த நலனுக்காகப் போராடக்கூடிய தொழிலாளி வர்க்கத்தை அமுலில் உள்ள அரசியல் அமைப்புக்கெதிராகப் போராடக்கூடிய இதர எல்லா மக்கள் பகுதியினுடைய தலைவனாக உயர்த்த வேண்டும்.

(ஈ) இந்தக் காரியத்தைச் செய்யக்கூடிய அதே நேரத்தில், இதர வர்க்கங்களில் இருந்து வளர்ந்து வரக்கூடிய புரட்சிக்காரர்களுக்கு தொழிலாளி வர்க்க கண்ணோட்டத்தை ஏற்படுத்த வேண்டும் இவ்வாறு தொழிலாளி வர்க்கக் கட்சியின் செல்வாக்கை மேலும் மேலும் விரிவுபடுத்துவதுடன் இதர மக்கள் பகுதியினர் மீது தொழிலாளி வர்க்கத்தின் தலைமைப் பாத்திரத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

(உ) கட்சி தொழிலாளி வர்க்க எண்ணங்களை பிரதிபலித்தால் மட்டும் போதாது. தானாகத் தோன்றும் இயக்கங்களுக்குப் பின்னால் வால் பிடித்துச் செல்லும் நிலையில் இருக்கக் கூடாது. **உடனடிப் பிரச்னைகளில் மூழ்கி அரசியல், தத்துவார்த்தப் போராட்டங்களிலிருந்து ஒதுங்கிவிடக் கூடாது.** (அழுத்தம் என்னுடையது)

கட்சித் தொழிலாளி வர்க்கத்திற்கு முன்னால் நிற்க வேண்டும். தொழிலாளி வர்க்கத்தைக் காட்டிலும் முன்னோக்கிப் பார்க்க வேண்டும்.

இத்தகைய கட்சிதான் தொழிற்சங்க வாதத்திலிருந்து விடுபட்டு அரசியல் சக்தியாக மாற முடியும்."

(நூல் – லெனினிஸத்தின் அடிப்படை அம்சங்கள்)

நமது கட்சித் தோழர்கள் சிறந்த போர்க் குணமிக்கவர்களாகவும், போராட்ட அனுபவமுள்ளவர்களாகவும், ஸ்தாபன அமைப்பாளர்களாகவும், மார்க்சிஸ–லெனினிஸ தத்துவத்தின் தெளிந்த ஞானமுள்ளவர்களாகவும் இருந்தால்தான் அரசியல் தலைவனின், முன்னணிப் படையின் கடமையை நிறைவேற்ற முடியும்.

இத்தகைய தகுதிகள் இருந்தால்தான் மற்றவர்கள் நம்மை தலைவர்களாக ஏற்றுக் கொள்வார்கள்.

7. யார் கட்சி உறுப்பினர்?:– மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக என்ன தகுதிகள் வேண்டும்? எப்படி சேர்ப்பது அல்லது சேருவது?

கட்சிக் கொள்கையை பொதுவாக ஆதரிப்பவர்களுக்கெல்லாம் கட்சி அங்கத்தினர் அந்தஸ்து வழங்குவதில் இதர கட்சிகளில் தடையேதும் இல்லை. சில கட்சிகளில் போலி அங்கத்தினர்களும் உண்டு.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக ஆவதற்கு பொதுவாக கட்சிக் கொள்கையை ஆதரித்தால் மட்டும் போதாது. தொழிலாளி வர்க்கக் கட்சி என்பதால், எல்லா தொழிலாளர்களையும் கட்சி உறுப்பினர்களாக சேர்க்கலாமா? அல்லது, பொருளாதாரக் கோரிக்கைகளுக்கான வேலைநிறுத்தப் போராட்டங்களில் பங்குகொள்ளக்கூடியவர்களையெல்லாம் கட்சி உறுப்பினர்களாக சேர்க்கலாமா? அல்லது தொழிலாளர்களை மட்டும் கொண்ட கட்சி என்று பொருளா? இல்லை. பிறப்பால் இதர வர்க்கங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் வாழ்க்கையால், சிந்தனையால், செயலால் தொழிலாளி வர்க்க அணியில் உறுதியாக நிற்கின்ற எல்லா புரட்சிக்காரர்களுக்கும் கட்சியில் இடமுண்டு.

கட்சி உறுப்பினராக இருப்பதற்கு கீழ்க்கண்ட மூன்று நிபந்தனைகளை வலியுறுத்தினார் தோழர் லெனின்.

(அ) ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் புரட்சிக்காக கட்சி முன்வைத்துள்ள திட்டத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) தன்னுடைய வருவாயிலிருந்து கட்சி நிர்ணயித்துள்ள லெவியை முறையாக செலுத்த வேண்டும்.

(இ) ஒரு கட்சி அமைப்பில் உறுப்பினராக இருந்து அதனுடைய முடிவுகளுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும். கட்சி நிர்ணயிக்கிற பணிகளை நிறைவேற்ற வேண்டும்.

இன்றைக்கும் – கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியில் உறுப்பினராவதற்கு இவைகள் அடிப்படை அம்சங்களாக உள்ளன.

இத்துடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) கீழ்க்கண்ட உறுதி மொழியையும் கோருகிறது.

"கட்சியின் தொலைநோக்கங்களையும், குறிக்கோள்களையும் ஏற்றுக்கொள்கிறேன். கட்சியின் அமைப்புச் சட்டத்தின்படி நடப்பதற்கும், கட்சியின் முடிவுகளை விசுவாசமாக நிறைவேற்றுவதற்கும் நான் ஒப்புக் கொள்கிறேன்.

கம்யூனிஸ லட்சியங்களுக்கு ஏற்றமுறையில் வாழ்வதற்கு பாடுபடுவேன். என்னுடைய சொந்த நலன்களை கட்சியின் நலன்களுக்கும், மக்களுடைய நலன்களுக்கும் எப்போதும் உட்படுத்திக்கொண்டு தொழிலாளி வர்க்கத்திற்கும், உழைப்பாளி மக்களுக்கும், நாட்டிற்கும் தன்னலமற்ற முறையில் சேவை செய்யப் பாடுபடுவேன்."

(கட்சி அமைப்புச் சட்டம் பிரிவு–5)

8. உறுப்பினர் சேர்க்கும் முறை:– மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் யாரும் நேரடியாக உறுப்பினராக சேர்க்கப்படுவதில்லை. பல்வேறு வெகுஜன இயக்கங்கள் மூலமாக கட்சியின் பக்கம் நெருங்கி வரக்கூடியவர்களையும், கட்சி கொள்கையை ஏற்று கட்சி ஆதரவாளராக வரக்கூடியவர்களையும் கட்சிக் கிளைக் கமிட்டிகள் மூலம் – துணைக் குழுக்களில் முதலில் சேர்க்க வேண்டும். குறிப்பிட்ட வேலைகள் நிர்ணயிக்க வேண்டும். கட்சி பத்திரிக்கைகள், பிரசுரங்கள் வாங்குவது– படிப்பது, விற்பனை செய்வது, கட்சிக்கு நிதி கொடுப்பது, வசூல் செய்வது, வெகுஜன ஸ்தாபனங்களில் குறிப்பிட்ட பணிகள் நிறைவேற்றுவது, இத்தகைய குறைந்தபட்சக் கடமைகளை எந்த அளவில் நிறைவேற்றுகிறார்கள் என்பதைப் பொறுத்து சில மாதங்களுக்குப் பின் கட்சியின் பரிட்சார்த்த உறுப்பினராக சேர்க்க சிபாரிசு செய்யலாம்.

ஒருவரை பரிட்சார்த்த உறுப்பினராக சேர்க்க ஏற்கனவே உறுப்பினராக உள்ள இரண்டு தோழர்கள் சிபாரிசு செய்ய வேண்டும். கிளை அதனை அங்கீகரிக்க வேண்டும். அடுத்த மேல் கமிட்டி அதனை ஊர்ஜிதம் செய்யவேண்டும். அப்போதுதான் ஒருவர் கட்சியில் பரிட்சார்த்த உறுப்பினராகிறார்.

ஓராண்டு காலம் பரிட்சார்த்த உறுப்பினராக இருக்க வேண்டும். வாக்களிக்கும் உரிமை, தேர்ந்தெடுக்கப்படும் உரிமை தவிர கட்சி அங்கத்தினருக்குரிய எல்லா உரிமைகளும், கடமைகளும் பரிட்சார்த்த உறுப்பினருக்கு உண்டு.

ஓராண்டு காலத்திற்குப் பின் இவர்களது பணிகளை பரிசீலனை செய்து கட்சி உறுப்பினராக ஆக்க கிளை சிபாரிசு செய்யலாம். அடுத்த மேல் கமிட்டி ஊர்ஜிதம் செய்தபின் கட்சி உறுப்பினராக ஆவார்கள்.

9. செயல் முறை:– கட்சியையும், பொதுமக்களையும் இணைக்கும் பாலமாக கட்சிக் கிளைகள் அமைந்துள்ளன. ஆயிரக் கணக்கான கிளைகளின் மூலமாகத்தான் லட்சக் கணக்கான கட்சி உறுப்பினர்கள் கட்சிக் கொள்கையை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டியுள்ளது.

கிளைகள் முறையாக செயல்படுவது நமது கட்சி நடவடிக்கைகளில் மிக முக்கியமான அம்சமாகும்.

கிளைக் கூட்டங்களும், நடவடிக்கைகளும்:– நமது கிளைக் கூட்டங்கள் சாதாரணமாக இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை கூடவேண்டும். தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மாதம் ஒரு முறை கூடவேண்டும். கிளைச் செயலாளர், உறுப்பினர்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அனைவருக்கும் வசதியான நேரத்திலும், இடத்திலும் கிளையைக் கூட்ட வேண்டும். அவசரப் பிரச்னைகளில் தவிர போதுமான அவகாசம் கொடுத்து கிளையைக் கூட்டவேண்டும். ஒரு கிளையில் 15 உறுப்பினர்களுக்கு மேல் இருக்கக் கூடாது.

கிளைக் கூட்டங்களில் சாதாரணமாக கீழ்க் கண்ட விஷயங்களை விவாதிக்க வேண்டும்:

(அ) மேல் கமிட்டியின் சுற்றறிக்கைகள் – முடிவுகள்.

(ஆ) கடந்த கூட்ட முடிவுகள் அமுல்படுத்தியது சம்பந்தமாக செயலாளரின் அறிக்கை.

(இ) அடுத்து செயல்படுத்த வேண்டிய வேலைத் திட்டம்.

(ஈ) அரசியல் பிரச்னைகள் பற்றிய விவாதம்.

(உ) பத்திரிக்கை–பிரசுர விற்பனை – கட்சித் தோழர்களின் சுய கல்வி.

(ஊ) லெவி, இதர நிதி வசூல்கள், ஒவ்வொரு தோழரும் மத்திய கமிட்டி நிர்ணயித்துள்ளபடி லெவி செலுத்துவதை உத்தரவாதம் செய்யவேண்டும். ஒவ்வொரு மாதமும் இது முறையாக வசூலிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு தோழரும்

செலுத்த வேண்டும், கிளைக் கூட்டங்களில் இதனை பரிசீலிக்க வேண்டும். மேல் கமிட்டிகளுக்குச் செலுத்தவேண்டிய விகிதாச்சாரத்தையும் மாதா மாதம் செலுத்த வேண்டும்.

கிளையின் வரவு–செலவு முறையாக வைக்க வேண்டும். கிளைக் கூட்டங்களில் அடுத்த மேல் கமிட்டி உறுப்பினர் பங்குகொள்ளச் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு உறுப்பினருக்கும் அவரது சக்திக்கும், திறமைக்கும் ஏற்ப வேலைகளை தீர்மானிக்க வேண்டும்.

மேல் கமிட்டிக்கு எழுத்து மூலமாக வேலை அறிக்கையை மாதா மாதம் அனுப்ப வேண்டும்.

கிளைக் கூட்டங்களில் உறுப்பினர்கள் தவறாமல் பங்கு கொள்ள வேண்டும். வரமுடியாமைக்கு தகுந்த காரணங்கள் இருந்தால் எழுத்து மூலமாக முன்கூட்டி தெரிவித்து செயலாளரிடமிருந்து அனுமதி பெறவேண்டும்.

கட்சி லெவி:– கட்சியின் மத்தியக் கமிட்டியால் நிர்ணயிக்கப்பட்டுள்ள முறையில், கட்சியின் ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு மாதாந்திர லெவியைச் செலுத்த வேண்டும். வருடாந்திர முறையிலோ அல்லது பருவகாலங்களின் முறையிலோ வருமானத்தைக் கொண்டிருக்கக்கூடியவர்கள், பருவ காலத்தின் ஆரம்பத்திலோ அல்லது ஒவ்வொரு கால் வருடத்தின் துவக்கத்திலோ அதே விகிதாச்சார அடிப்படையில் தங்களது லெவியைச் செலுத்த வேண்டும்.

> "ஒரு உறுப்பினர் தன்னுடைய லெவியை, அது பாக்கி விழுந்த மூன்று மாதங்களுக்குள் செலுத்தத் தவறினால் அவருடைய பெயர், கட்சிப் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும்."

(அமைப்புச் சட்டம் பிரிவு–10)

மத்திய கமிட்டி நிர்ணயித்துள்ள லெவி:

ரூ.100/– வரையிலான வருமானத்திற்கு 5/– ரூபாய்க்கு ஒரு காசு

அடுத்த நூறு ரூபாய்க்கு, இரண்டு ரூபாய்க்கு ஒரு காசு

அடுத்த நூறு ரூபாய்க்கு, ஒரு ரூபாய்க்கு 1 காசு

அதற்கடுத்த 200/– ரூபாய்க்கு, ஒரு ரூபாய்க்கு 2 காசு

அதற்கடுத்த 500/– ரூபாய்க்கு, ஒரு ரூபாய்க்கு 3 காசு

இந்த கணக்கின்படி ரூ.1,000/– வருமானம் உள்ளவர்கள் ரூ.20.70 காசு செலுத்த வேண்டும். அதற்கடுத்த ஒவ்வொரு

ரூ.100/–க்கும் ஒரு ரூபாய்க்கு 5 காசு என்ற விகிதத்தில் கணக்கிட வேண்டும்.

10. ஒவ்வொரு கட்சிக் கிளையும் தங்கள் பகுதியில் அல்லது அரங்கில் உள்ள மக்களின் நலன்கள்–பிரச்னைகள் குறித்து, தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும். மக்கள் பிரச்னைகளுக்கான இயக்கங்கள், கிளர்ச்சிகள், போராட்டங்கள் நடத்துவது பற்றி முன் முயற்சி எடுக்க வேண்டும், திட்டமிட வேண்டும். மேல் கமிட்டியின் ஒப்புதலுடன் அவைகளை நிறைவேற்ற வேண்டும். ஒவ்வொரு உறுப்பினரும் இதில் பங்குபெற வேண்டும். கிளை அல்லது கட்சி கமிட்டிகளின் முடிவு இல்லாமல் தன்னிச்சையாக யாரும் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது.

11. ஒவ்வொரு கட்சிக் கிளையும், உறுப்பினரும் தங்கள் பகுதியில் வர்க்க, வெகுஜன அமைப்புகளை உருவாக்கவும், அவைகள் செயல்படவும் உதவி செய்ய வேண்டும். ஏதாவது ஒரு வெகுஜன ஸ்தாபனப் பணியில் நேரடியாக பங்குகொள்ள வேண்டும். கட்சியின் தலைமையில் பல்வேறு பகுதி உழைப்பாளி மக்களை அணிதிரட்டும் வழி இதுவே. சால்கியா பிளீனம் சுட்டிக்காட்டியுள்ளதுபோல் இவ்வாறு செயல்படுவதன் மூலம்தான் மக்களுக்கும், கட்சித் தலைமைக்கும் இடையிலான இணைப்புப் பாலமாக கட்சி உறுப்பினர்கள் செயல்பட முடியும். மக்களுக்கு போதிப்பது, மக்களிடமிருந்து கற்றுக்கொள்வது என்ற கம்யூனிஸ்ட் பயிற்சி முறைக்கும், கட்சியின் கொள்கைகளை மக்களிடம் எடுத்துச் செல்வது, மக்களின் விமர்சனங்களையும், கருத்துக்களையும் கட்சித் தலைமைக்கு தெரிவிப்பது – ஆகிய பணிகள் இடைவிடாமல் நடைபெற வேண்டும். இன்றைய செயல்பாட்டில் உள்ள பலஹீனத்தைப் பற்றி சால்கியா அறிக்கையில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

> "கட்சித் தோழர்கள் நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் நமது கட்சி ஸ்தாபன விதிகளுக்கும், கோட்பாடுகளுக்கும் விசுவாசத்துடன் வரையறுக்கப்பட்டுள்ள கடமைகளை கறாராக நிறைவேற்றுவதை வலியுறுத்த வேண்டும். தற்போது பெருவாரியான கட்சித் தோழர்கள் குறைந்தபட்சக் கடமைகளைக்கூட நிறைவேற்றுவதில்லை. இது கட்சி ஸ்தாபனத்தை, பல பேரைக் கொண்ட ஒரு உருவமற்ற கதம்பமாக ஆக்கியிருக்கிறது. கட்சியில் அடிப்படையை இது தகர்க்கிறது."

இவ்விஷயத்தில், பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கும், முறையாக அறிக்கைகளைப் பெறுவதற்கும், நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்கும்; மாநிலக் கமிட்டியும் கீழுள்ள கமிட்டிகளும் நேரடியாகப் பொறுப்பேற்று உத்தரவாதப்படுத்த வேண்டும். (சால்கியா அறிக்கை – பாரா: 158 முதல் மூன்று உப– பாராக்கள்)

12. கிளர்ச்சிப் பிரச்சாரம்:– நமது கட்சிப் பணிகளில் இது மிக முக்கியமானது. இதில் முக்கியமாக பங்கு வகிப்பது நமது பத்திரிகைகள். ஆகவே, பத்திரிகையை வாங்குவது, படிப்பது, பிறரிடம் விற்பனை செய்வது கட்சி உறுப்பினர்களின் மிக முக்கியமான கடமை. இது தவிர அவ்வப்போது முன்னுக்கு வரும் பிரச்னைகளைப் பற்றி கட்சியின் கொள்கையை விளக்கக்கூடிய துண்டு பிரசுரங்களை அச்சிட்டு வீடு, வீடாகவும்; ஆலைகளிலும், அலுவலகங்களிலும் விநியோகம் செய்ய வேண்டும். தட்டிகள் எழுதி வைக்க வேண்டும், தெருமுனைக் கூட்டங்கள்,பொதுக்கூட்டங்கள் நடத்தவேண்டும். அடிப்படை மார்க்சீய நூல்களை படிக்க வேண்டும், மக்களிடம் விற்பனை செய்ய வேண்டும். இவைகள் தொடர்ச்சியாக செய்யவேண்டிய பணிகள். இதற்கு பதிலாக இதர கட்சிகளைப் போல சில ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒரு தலைவரை வரவழைத்து பொதுக் கூட்டம் நடத்துவது மட்டுமே கம்யூனிஸ்ட் பிரச்சார முறையாகாது.

நாம் இன்று பெரும்பாலும் கிளர்ச்சியில் மட்டுமே ஈடுபடுகிறோம். கிளர்ச்சியும்,பிரச்சாரமும் வேறு. இன்றைய சமூக அமைப்பில் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளும், உடனடி நிவாரணம் பெற முயலுவதும் கிளர்ச்சியின் நோக்கம். ஆனால், பிரச்சாரம் பாதிப்புகளுக்குக் காரணமான அடிப்படை அம்சங்கள் இன்றைய சமுதாய அமைப்பு, வர்க்க வேறுபாடு, ஆதிக்கம், சுரண்டல் முறை, சுரண்டல் முறைக்குச் சாதகமாக முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் பல்வேறு விதமான தத்துவங்

களுக்கு எதிராக தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படையான தத்துவார்த்த அரசியல் கருத்துக்களை மக்களுக்கு போதிப்பது அதன் நோக்கமாகும். அதனை நாம் இடைவிடாமல் செய்ய வேண்டும். இன்று இவைகளில் பலவீனம் உள்ளன.

13. அரங்க–பிரதேசவாதம்:– ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் ஒரு அரங்கில் அல்லது ஒரு பிரதேசத்தில்தான் செயல்படுகின்றனர். ஆகவே, சம்பந்தப்பட்ட அரங்க, பிரேதேசப்பிரச்சனைகளில் அதிக அக்கரையும், ஞானமும் இருப்பது இயல்பு. ஆனால் சம்பந்தப்பட்ட பிரச்னைகளில் மட்டும் அக்கரை காட்டுவது, அதைப்பற்றி மட்டும் அறிந்துகொள்ளும் நிலைக்கு யாரும் செல்லக்கூடாது. இது நாளாவட்டத்தில் பிரதேச அரங்கக் கண்ணோட்டத்தை உருவாக்கும். இதர அரங்கங்கள், பிரதேசங்களுக்கெதிராக தனது அரங்கம், பிரதேசத்தை முன் நிறுத்தும் அரங்க, பிரதேசக் கண்ணோட்டம் உருவாகும். இதற்கு மாறாக அனைத்து அரங்கங்கள், பிரதேசங்களின் பிரச்னைகளை அறிந்து அவைகளுக்கும் உதவியாக செயல்பட வேண்டும். மாநில, அனைத்திந்திய கண்ணோட்டத்தில் பிரச்னைகளைப் பார்க்க வேண்டும். இதுவும், கட்சி ஸ்தாபனத்தில் கவனிக்கப்படவேண்டிய ஒரு பிரச்னை.

14. உறுப்பினர் சந்தா:– அனைத்து கட்சி உறுப்பினர்களும், பரிட்சாரத்த உறுப்பினர்களும், துணைக்குழு உறுப்பினர்களும் வருடம் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் சந்தாவாக செலுத்த வேண்டும். இந்த வருடாந்திரச் சந்தா, கட்சியில் சேரும்பொழுதும், ஒவ்வொரு வருட மார்ச் மாத முடிவுக்குள்ளும் சம்பந்தப்பட்ட உறுப்பினரால் கட்சிக் கிளையின் அல்லது யூனிட்டின் செயலாளரிடம் செலுத்தப்பட வேண்டும். உரிய காலத்தில் அவர் சந்தாவை செலுத்தாவிடில், அவரது பெயர் கட்சி உறுப்பினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வேண்டும். கட்சிக் கிளைகளாலோ அல்லது யூனிட்டுகளாலோ வசூலிக்கப்படும் எல்லா கட்சி சந்தாக்களும் மாவட்ட கமிட்டியில் பதிவு செய்தபின், மாநில கமிட்டி மூலம் மத்தியக் கமிட்டியிடம் சேர்ப்பிக்கப்படும்.

15. கட்சி உறுப்பினர்களின் கடமைகள்:– (*1*) உறுப்பினர்களின் கடமைகள் பின்வருமாறு:–

(அ) தாங்கள் சேர்ந்திருக்கும் கட்சி ஸ்தாபனத்தின் வேலைகளில் முறையாக் பங்கெடுத்துக்கொள்ளுவது; கட்சியின் கொள்கை முடிவுகள், கட்டளைகள் ஆகியவற்றைவிசுவாசமாக நிறைவேற்றுவது

(ஆ) மார்க்சிஸ்ம்–லெனினிஸத்தைக் கற்பது; மார்க்சிஸ– லெனினிஸத்தைப் பற்றிய தங்களது அறிவின் வரம்பை உயர்த்திக்கொள்ளப்பாடுபடுவது.

(இ) கட்சிப் பத்திரிக்கைகள், கட்சிப் பிரசுரங்களைப் படிப்பது, ஆதரிப்பது, அவற்றை மக்கள் மத்தியில் பரப்புவது.

(ஈ) கட்சியின் அமைப்புச் சட்டம், கட்சிக் கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைபிடிப்பது; அத்துடன், கம்யூனிஸத்தின் மகோன்னத இலட்சியங்களுக்கு ஏற்பவும் தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தின் உணர்வுடன் நடந்துகொள்ளுவது.

(உ) சொந்த நலன்களை, மக்கள் நலன்களுக்கும், கட்சியின் நலன்களுக்கும் உட்படுத்துவது.

(ஊ) மக்களுக்கு மனப்பூர்வமான சேவை செய்வது; மக்களுடனுள்ள தொடர்புகளை இடைவிடாது பலப்படுத்திக் கொண்டிருப்பது; மக்களிடமிருந்து கற்றுக்கொள்ளுவது; மக்களது அபிப்பிராயங்களையும், கோரிக்கைகளையும் கட்சிக்கு அறிவிப்பது; விதிவில்க்குக் கொடுக்கப்பட்டாலொழிய, கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் வெகுஜன ஸ்தாபனமொன்றில் வேலை செய்வது.

(எ) கட்சித் தோழர்கள் ஒருவருக்கொருவர் தோழமை மிக்க உறவுகளை வளர்த்துக் கொள்ளுவது; கட்சிக்குள் ஒரு சகோதர உணர்வை வளர்க்க இடைவிடாமல் பாடுபடுவது.

(ஏ) ஒருவருக்கொருவர் உதவி செய்யும் நோக்கத்துடன் விமர்சனம்–சுய விமர்சனத்தைக் கடைப்பிடிப்பது. அத்துடன், ஒவ்வொரு நபரின் வேலையையும், கூட்டு வேலையையும் அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் விமர்சனம்– சுயவிமர்சனத்தைக் கடைப்பிடிப்பது.

(ஐ) கட்சியின்பால் திறந்த மனதுடனும், நேர்மையாகவும், உண்மையாகவும் நடந்துகொண்டு கட்சி தன் மீது வைத்துள்ள நம்பிக்கைக்குத் துரோகம் இழைக்காமல் இருப்பது.

(ஒ) கட்சியின் ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் பாதுகாப்பது; தொழிலாளி வர்க்க விரோதிகளுக்கு எதிராகவும், நாட்டின் விரோதிகளுக்கு எதிராகவும் விழிப்புணர்ச்சியுடன்

செயலாற்றுவது.

(ஓ) கட்சி தொழிலாளி வர்க்கம், நாடு ஆகியவற்றின் விரோதிகளிடமிருந்து வரும் தாக்குதல்களிலிருந்து கட்சியை பாதுகாத்துகட்சியின் இலட்சியத்தைக் காத்து நிற்பது.

2. மேலேயுள்ள கடமைகளைக் கட்சி உறுப்பினர்கள் நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துவதும், இந்த கடமைகளை நிறைவேற்றுவதற்குச் சாத்தியமான ஒவ்வொரு வழியிலும் அவர்களுக்கு உதவுவதும் கட்சி ஸ்தாபனத்தின் கடமையாகும்.

(அமைப்புச் சட்டம் பிரிவு–11)

16. **கட்சி உறுப்பினர்களின் உரிமைகள்:–** (1) கட்சி உறுப்பினர்களின் உரிமைகள் பின்வருமாறு:–

(அ) கட்சி அமைப்புகளையும், கட்சி கமிட்டிகளையும் தேர்ந்தெடுப்பது; அவற்றிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவது;

(ஆ) கட்சி , கொள்கையையும், முடிவுகளையும் உருவாக்குவதில் தன் .பங்கைச் செலுத்தும் முறையில் விவாதத்தில் பங்கெடுத்துக்கொள்வது.

(இ) கட்சியில்; தான் செய்யக்கூடிய வேலை குறித்து ஆலோசனைகளை முன்வைத்தல்.

(ஈ) கட்சிக் கூட்டங்களில், கட்சிக் கமிட்டிகளைப் பற்றியும், கட்சி நிர்வாகிகளைப் பற்றியும் விமர்சனம் செய்வது.

(உ) தனக்கெதிராகக் கட்சியின் ஒரு யூனிட் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்கையில், தன்னுடைய யூனிட்டில், தான் நேரில் சொல்வது கேட்கப்பட வேண்டுமென்று கோரும் உரிமையுண்டு.

(ஊ) எந்த ஒரு உறுப்பினரும் ஸ்தாபனப் பிரச்னை குறித்து ஒரு கட்சிக்கமிட்டியின் எந்த ஒரு முடிவிலிருந்தும் மாறுபட்டால்தன்னுடைய அபிப்பிராயத்தை அதற்கு அடுத்த மேல் கமிட்டிக்குச் சமர்ப்பிக்க அவருக்கு உரிமை உண்டு. அரசியல் வித்தியாசம் ஏற்பட நேர்ந்தால் தன்னுடைய அபிப்பிராயத்தை, மத்திய கமிட்டி உள்ளிட்ட எல்லா மேல் கமிட்டிக்கும் சமர்ப்பிக்க அவருக்கு உரிமை உண்டு. இம்மாதிரியான எல்லா நேரங்களிலும் கட்சி உறுப்பினர் கட்சியின் முடிவுகளை எப்போதும் போல் நிறைவேற்ற வேண்டும். நடைமுறையின் சோதனையின் மூலமும், தோழமையான விவாதங்களின் மூலமும் வித்தியாசங்களைத் தீர்த்துக்கொள்ள முற்பட வேண்டும்.

(எ) மத்தியக் கமிட்டி உள்ளிட்ட எந்த ஒரு மேல் கமிட்டிக்கும் எந்த ஒரு அறிக்கையையோ, வேண்டுகோளையோ அல்லது புகாரையோ சமர்ப்பிப்பதற்கு கட்சி உறுப்பினர்களுக்கு உரிமையுண்டு.

(2) இந்த உரிமைகள் மதிக்கப்படுகின்றனவா என்று பார்த்துக் கொள்ள வேண்டியது கட்சி அமைப்புகளுடைய, கட்சி நிர்வாகிகளுடைய கடமையாகும்..

(அமைப்புச் சட்டம் பிரிவு–13)

17. **கட்சிக் கோட்பாடு:–** (1) கட்சியின் ஐக்கியத்தைக்கட்டிக் காக்கவும், உறுதிப்படுத்தவும், அதன் பலத்தையும், போராடும் தன்மையினையும் செல்வாக்கையும் அதிகப்படுத்தவும், ஜனநாயக மத்தியத்துவக் கோட்பாடுகளை செயல்படுத்தவும் கட்டுப்பாடு அத்தியாவசியமானதாகும். கட்சிக் கட்டுப்பாட்டை உறுதியாகக் கடைப்பிடித்தாலன்றி கட்சியானது மக்களைப் போராட்டங்களிலும், இயக்கங்களிலும் தலைமை தாங்கி நடத்திச் செல்லவோ, அவர்கள்பால் தனது கடமையைப் பொறுப்பாக நிறைவேற்றவோ முடியாமல் போய்விடும்.

(2) கட்சியினது இலட்சியங்கள், வேலைத் திட்டம், கொள்கைகள் ஆகியவற்றை உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொள்ளுதல் என்ற அடிப்படையின் மீது கட்டுப்பாடு அமைந்திருக்கிறது. கட்சி ஸ்தாபனத்திலோ பொது வாழ்விலோ ஒருவருக்கு இருக்கும் அந்தஸ்து எதுவாக இருந்தபோதிலும் கட்சியின் சகல உறுப்பினர்களும் கட்சியின் கட்டுப்பாட்டிற்குச் சமமாக உட்பட்டவர்கள் ஆவார்கள்.

(3) கட்சியின் அமைப்புச் சட்டத்தை மீறுதல், கட்சி முடிவுகளை மீறுதல், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் என்ற பொறுப்புக்குத் தகுதியற்ற செயல். மற்றும் நடத்தை முதலியன கட்சிக்கட்டுப்பாட்டை மீறியதாகக் கொள்ளப்படும். அதன் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட ஏதுவாகும்.

(4) ஒழுங்கு நடவடிக்கைகளாவன:–

அ. எச்சரித்தல்

ஆ. கண்டித்தல் (சென்சர்)
இ. பகிரங்கமாகக் கண்டித்தல்
ஈ. கட்சியில் வகிக்கும் பதவியிலிருந்து நீக்குதல்
உ. ஒரு ஆண்டிற்கு மேற்படாதவாறு கட்சியின் முழு உறுப்பினர் பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்கி வைத்தல்
ஊ. வெளியேற்றுதல்

(5) சம்பந்தப்பட்ட தோழரைத் திருத்த அவருடைய தவறை அவர் உணரும்படிச் செய்வதற்கு முயற்சித்தல் என்ற முறைகள் உட்பட இதர முறைகள் பலனற்றுப் போகும்பொழுது, ஒழுங்கு நடவடிக்கை சாதாரணமாக மேற் கொள்ளப்படும். ஆனால், ஒழுங்குநடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்னரும் கூட சம்பந்தபட்ட தோழர் தன்னை திருத்திக்கொள்வதற்கு உதவி செய்யவேண்டிய முயற்சி நீடிக்க வேண்டும். ஆனால், கட்சி நலன்களையும் அல்லது அதன் செல்வாக்கையும் பாதுகாப்பதற்காக உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற அளவிற்கு கட்டுப்பாடு மீறிய குற்றம் இருக்குமேயானால் உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(6) எல்லா ஒழுங்கு நடவடிக்கைகளையும்விட கட்சியிலிருந்து வெளியேற்றுவதுதான் மிகவும் கடுமையான நடவடிக்கையாகும். எனவே, மிகவும் அதிகமான ஜாக்கிரதையுடனும், ஆழ்ந்த ஆலோசனையின்பேரிலும், ஆழ்ந்த முடிவுடனும் இந்த நடவடிக்கை பிரயோகிக்கப்பட வேண்டும்.

(7) ஒரு கட்சி உறுப்பினரை வெளியேற்றும் எந்த ஒரு ஒழுங்கு நடவடிக்கையும், அதற்கு அடுத்த மேல் கமிட்டியின் ஊர்ஜிதம் கொடுப்பதற்கு முன்னுள்ள இடைக் காலத்தில் வெளியேற்றம் என்ற தண்டனைக்குள்ளான கட்சி உறுப்பினர், கட்சியின் சகல நடவடிக்கைகளிலிருந்தும் அகற்றப்படுவார். அடுத்த மேல் கமிட்டியினால் வெளியேற்றம் ஊர்ஜிதப் படுத்தப்படும்வரை, வெளியேற்றப்பட்ட உறுப்பினர் கட்சியின் முழு உறுப்பினர் பதவியில் இருந்து சஸ்பெண்ட் செய்யப்பட்டவராக இருப்பார். மேல் கமிட்டி தனது முடிவை 6 மாதங்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.

(8) ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் தோழருக்கு, அவர் மீதுள்ள குற்றச்சாட்டுகள், குற்றங்கள் மற்றும் இதர தொடர்பான விபரங்களை முழுமையாக தெரியப்படுத்தப்பட வேண்டும். அவர் உறுப்பினராக உள்ள கட்சி யூனிட்டில் நேரில் அவர் சொல்லுவது கேட்கப்பட வேண்டுமென்ற உரிமை அவருக்குண்டு . அவருக்கு எதிராக கட்சியின் வேறொரு யூனிட் நடவடிக்கை எடுப்பதானால் அந்த யூனிட்டிற்கு தன்னுடைய விளக்கத்தை சமர்ப்பிப்பதற்கு அவருக்கு உரிமை உண்டு.

(9) ஒரு உறுப்பினர் ஏக காலத்தில் கட்சியின் இரண்டு யூனிட்டுகளில் உறுப்பினராக இருக்கும்பொழுது அவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படி கீழ்மட்ட யூனிட் சிபாரிசு செய்ய முடியும். ஆனால், அந்த சிபாரிசு அவர் உறுப்பினராகவுள்ள மேல்மட்ட யூனிட் ஏற்றுக் கொண்டாலொழிய அமுலுக்கு வராது.

(10) வேலை நிறுத்தத்தை உடைப்பவர்கள், குடி வெறியர்கள், ஒழுக்கங்கெட்டு சீரழிந்தவர்கள், கட்சியின் நம்பிக்கையைக் காட்டிக் கொடுப்பவர்கள், மிகவும் மோசமான பண ஊழல் குற்றம் செய்தவர்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டு, கட்சி உறுப்பினர்கள், அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கு விளக்கம் பெற்று முடிவுசெய்யப்படும் வரை அவர்கள் சார்ந்துள்ள கட்சி யூனிட்டால் கட்சி உறுப்பினர் பொறுப்பிலிருந்து உடனடியாக நிறுத்தி வைக்கப்படவும், அவர்கள் கட்சியில் வகிக்கும் எல்லா பொறுப்பான பதவிகளிலிருந்தும் உடனடியாக அகற்றப்படவும் முடியும்.

(11) ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட எல்லா தோழர்களுக்கும் மேல் முறையீடு செய்ய உரிமை உண்டு.

(12) எந்த ஒரு கீழ் கமிட்டியாவது தொடர்ச்சியாக கட்சியின் முடிவுகளையும், கொள்கையையும் மீறினாலும், கடுமையாக கோஷ்டிப் பூசலுக்கு உள்ளாகியிருந்தாலும், அல்லது கட்சிக் கட்டுப்பாட்டை மீறினாலும் அந்தக் கீழ் கமிட்டியைக் கலைப்பதற்கும் புதிய கமிட்டியை அமைப்பதற்கும் அல்லது ஒழுங்கு நடிவடிக்கை எடுப்பதற்கும் மத்திய, மாநில

அல்லது மாவட்டக் கமிட்டிக்கு உரிமை உண்டு. ஆனால் மாநில, மாவட்டக் கமிட்டிகள் தேவையானதெனக் கருதி எந்த நடவடிக்கை எடுத்திருந்தாலும் அத்தகைய நடவடிக்கைப் பற்றி அடுத்த மேல் கமிட்டிக்கு உடனடியாக அறிக்கை அனுப்ப வேண்டும்.

(13) விதி விலக்கான சூழ்நிலைமைகளில் கட்சிக் கமிட்டிகள் தங்களுடைய உசிதப்படி மிக மோசமான கட்சி விரோத நடவடிக்கைகளுக்காக உறுப்பினர்களைக் கட்சியை விட்டு வெளியேற்றுவதில் அவசர வழிமுறையைக் கையாளலாம். (அமைப்புச் சட்டம் பிரிவு–19)

18 . ஜனநாயக மத்தியத்துவம்:– நமது கட்சியின் அமைப்பு, ஜனநாயக மத்தியத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. ஜனநாயகம்,மத்தியத்துவம் இரண்டையும் ஆதாரமாகக்கொண்டு நமது கட்சி அமைப்பும், நடவடிக்கைகளும் அமைந்துள்ளன.

(அ) **மத்தியத்துவம்:–** கட்சி முழுவதற்கும் ஒரே திட்டம்; கட்சி உறுப்பினர்கள், குழுக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒரே வகை விதிகள்;ஒரே கட்சி மையம்; கட்சியின் அனைத்து அமைப்புகளும் மேல் அமைப்புகளுக்கு கட்டுப்பட்டு நடத்தல்; அனைவருக்கும் பொதுவான ஒரேவகை கட்சிக் கட்டுப்பாடு; சிறு பான்மை; பெரும்பான்மைக்கு கட்டுப்படுவது; கூட்டு முடிவுக்குத் தனி நபர் கட்டுப்படுவது; மேல் கமிட்டி முடிவுகளைகட்டளையாக ஏற்று கீழ் கமிட்டிகள் நிறைவேற்ற வேண்டும். இவை அனைத்தும் இணைந்தது மத்தியத்துவம்.

(ஆ) **ஜனநாயகம்:–** திட்டம்; விதிகள் முக்கியமான இதர முடிவுகள் ஆகியவை கட்சி உறுப்பினர்களிடையே நடைபெறும் விவாதத்தின் மூலமாக உருவாக்கப்படுவது; தலைமைக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படுவது; மேல் கமிட்டிகளின் முடிவுகள், நடவடிக்கைகள் பற்றிக் கீழ் கமிட்டிகளுக்கு முறையாக அறிவிப்பது; மாற்றுக் கருத்துக்கள் முன்வைக்கும் உரிமை; விமர்சனம் செய்யும் உரிமை; தலைமைக் கமிட்டிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமை – இவை அனைத்தும் உள்ளடக்கியது ஜனநாயகம்.

இந்த இரு அம்சங்களும் இணைந்த முறையில் – ஜனநாயக மத்தியத்துவ முறையில் நமது கட்சி கறாராக செயல்பட வேண்டும். இதுதான் நமது கட்சியில் ஜனநாயகத்தையும், கட்டுப்பாட்டையும் பாதுகாப்பதற்கான ஒரே வழி. இதற்கு மாறாக மத்தியத்துவத்தை மட்டுமே கட்சியின் ஸ்தாபன கோட்பாடாகக் கொண்டால் அதிகார வர்க்க விபரீதங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதாகிவிடும். இதன் விளைவாக, கட்சி உறுப்பினர்களின் முன் முயற்சியும் செயல்பாடும், திறனும், பலவீனமடையும். மாறாக .ஜனநாயகத்தை மத்தியத்துவத்திற்கெதிராக முன்வைத்தால் அதன் விளைவாக ஸ்தாபன விவகாரங்களில் அராஜகம் தலைவிரித்தாடும்; படிப்படியாகக் கட்டுப்பாடு குலைந்து குழுக்கள் தலைதூக்கி இறுதியில் கட்சி ஒழுங்கு சிதைந்துவிடும். இவ்விரு நிலைகளும் கட்சியை பலவீனப்படுத்தும் அபாயம் ஏற்படும்.

19. விமர்சனம்:– ஒவ்வொரு கட்சி உறுப்பினரும், கட்சியின் அரசியல் நிலைப்பாடுகள், கட்சிக் கமிட்டிகளின் செயல்பாடுகள், நடவடிக்கைகள் போன்ற பிரச்னைகளில் விமர்சனம் செய்யும் உரிமை ஒவ்வொரு உறுப்பினருக்கும் உண்டு. ஆனால், கட்சி முறைப்படி அதனைச் செய்யவேண்டும். தான் அங்கம் வகிக்கும் கிளையில் அல்லது கமிட்டியில் தான் அந்த விமர்சனங்களைச் செய்ய வேண்டும். ஒரு தோழரைப் பற்றிய விமர்சனமாக இருந்தால் அவர் முன்னிலையில் செய்ய வேண்டும். அல்லது அவர் 'அங்கம்' வகிக்கும் கிளைக்கு, கமிட்டிக்கு எழுத்து மூலம் அறிக்கை அளிக்க வேண்டும். தனது கட்சிக் கிளைகளில், கமிட்டிகளில் இல்லாத வேறு கிளைகளில், கமிட்டிகளிடம் சென்று விமர்சிக்கக் கூடாது. கிளைக் கூட்டத்தில் அல்லது கமிட்டியில் பிரச்னையை எழுப்புவதற்கு முன் தனித்தனியாக தனது கிளை அல்லது கமிட்டி தோழர்களிடம் முன்கூட்டி ஒரு கருத்தை உருவாக்குவதும் முறையல்ல. கட்சிக்கு வெளியேயும் பேசக் கூடாது

விமர்சனங்களை – அவை தவறாகவும், ஆதாரமற்றவைகளாக இருந்தாலும் தோழர்கள் பொறுமையாக கேட்டு நிதானமாக பதிலளிக்க வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளை ஏற்றுக்கொண்டு, தன்னை திருத்திக் கொள்ள வேண்டும். விமர்சனம் செய்யும் தோழர்களும் தவறுகளை பொறுப்போடும், நிதானமாகவும் சுட்டிக்காட்ட வேண்டும். தவறு

களை திருத்துவதற்கு உதவி செய்யும் முறையில் விமர்சிக்க வேண்டும்.

சுய விமர்சனம்:- மற்றவர்கள் குறைகளைப் பார்ப்பது போலவே, தனக்கு ஏற்படும் குறைகளையும் ஒவ்வொரு கம்யூனிஸ்டும் உணரவேண்டும். தனது தவறுகளை கட்சிக் கிளைகளில், கமிட்டிகளில் முன்வைத்து சுய-விமர்சனம் செய்வது; கட்சிக்கும் தோழர்களுக்கும் பயனுள்ள ஒன்று.

மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரும் விமர்சனத்தை ஊக்குவிக்க வேண்டும்.

எதேச்சாதிகாரப் போக்குகளை எதிர்த்து எல்லா மட்டங்களிலும் இடைவிடாது போராட வேண்டும்.

எந்த ரூபத்திலும் கட்சிக்குள் கோஷ்டி மனப்பான்மையையும், கோஷ்டிகளையும் அனுமதிக்கப்பட முடியாது.

ஒருவருக்கொருவர் சகோதர உறவுகள் மூலமும், ஒருவருக்கொருவர் உதவி செய்வதின் மூலமும் தோழர்களை அனுதாபத்துடன் நடத்தி தவறுகளைத் திருத்துவதன் மூலமும், அங்கொன்றும் இங்கொன்றுமாக தோழர்கள் செய்யும் தவறுகள் அல்லது நிகழ்ச்சிகளின் அடிப்படையில் அல்லாமல், கட்சிக்கு அத்தோழர்கள் செய்திருக்கும் ஒட்டுமொத்தமான சேவையைக் கணக்கிலெடுத்துக்கொண்டு; அவர்களைப் பற்றியும் அவர்களது வேலையைப் பற்றியும் தீர்மானிப்பதின் மூலமும் கட்சி உணர்வைப் பலப்படுத்த வேண்டும். விமர்சனம்-சுயவிமர்சனத்தின் அவசியத்தை சால்கியா அறிக்கையில் கீழ்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது :-

> "பெருவாரியான மாநிலங்களில் கிளைகளுக்கு ரிப்போர்ட் செய்வது, திரும்ப கிளைகளிலிருந்து ரிப்போர்ட் பெறுவது என்ற நடைமுறையே இல்லாமல் இருக்கிறது. வெகுஜனப் போராட்டங்களையும், இயக்கங்களையும் பரிசீலித்தல்; அந்த நடவடிக்கைகளினால் கிடைத்த அனுபவங்களைக் கட்சிக்கு போதிப்பது என்ற நடைமுறையும் காணப்படவில்லை.
> இது கட்சிக்குள் விமர்சனத்தையும், சுயவிமர்சனத்தையும் கைவிடுவதற்கு இட்டுச் செல்கிறது. இதனால் கட்சிக்கு தொடர்ந்து தன்னைத் திருத்திக்கொண்டு , தனது ஞானத்தையும், நடைமுறையையும் மேம்படுத்திக்கொள்வது என்ற கட்சியின் முக்கியமான ஆயுதம் கைவிடப்படுகிறது. தொடர்ச்சியாக பரிசீலனையும், சுயவிமர்சனமும் இல்லாவிட்டால், கட்சியின் நடவடிக்கைகளையும், குறிப்புகளையும் ஒரு சுய திருப்திப் போக்கில் பார்த்து தலைமை செய்யும் ஒவ்வொன்றையும் நியாயப்படுத்தும் ஒரு தலைப்பட்சமான வெற்றிகள் பற்றிய விளக்கங்கள் கட்சியின் வளர்ச்சியைப் பாதிக்கிறது. கூட்டு முடிவுகளையும், ஒற்றுமையையும் தரந்தாழ்த்துகிறது. ஆகவே, விமர்சனம், கட்சிக்குள் சுயவிமர்சனம் ஆகிய நடைமுறையை மீண்டும் செயல்படுத்த வேண்டும்."

(சால்கியா அறிக்கை பாரா-130 உப பாரா: இ)

20. தன்னிச்சையான போக்குகள்:- கட்சிக்குள் ஏற்படக்கூடிய ஒரு தவறான போக்கு இது. கட்சியின் முடிவுக்கு உட்பட்டு செயல்படாத போக்கு, தனக்கு விருப்பமான முடிவுகளை மட்டும் அமுல்படுத்துவது, விரும்பாத முடிவுகளை அமுல்படுத்துவதில் அக்கறையின்மை, தன் கருத்துக்களை கட்சியின் முன்வைத்து ஒப்புதல் பெறாமலேயே செயல்படுத்துவது, கமிட்டிக் கூட்டங்களுக்கும், கிளைக் கூட்டங்களுக்கும் காலா காலத்தில் வராமல் இருப்பது, மற்ற தோழர்களின் கருத்துக்களையும், விமர்சனங்களையும் கேட்டு கற்றுக்கொள்ளாமலேயே செயல்படுவது,கட்சி கமிட்டிக்களில், கிளைகளில் பங்குகொள்வது முக்கிய கடமை என்று உணராத போக்கு, மற்றவர்களின் கருத்தை அலட்சியப்படுத்துவது, இவைகள் எல்லாம் தன்னிச்சையான போக்கின் சில அம்சங்கள் மட்டுமே. இவைகள் நமது கட்சி உறுப்பினர்களிடம் இருக்கக்கூடாத போக்குகள். கட்சியின் எந்த மட்டத்திலும் எவ்வளவு பெரிய தலைவராக இருந்தாலும் இவ்வாறு செயல்படுவது நமது கட்சி முறையல்ல. அதற்கு அனுமதியும் இல்லை. இப்போக்கினை கட்சி கண்காணிக்க வேண்டும்.

21. கூட்டுச் செயல் முறை:- நமது கட்சியின் செயல்முறையின், இயக்கங்களின் பிரச்னைகளைப் பற்றி கூட்டாக விவாதிப்பது, கூட்டு முடிவு, கூட்டுச் செயல் முறை, அதே நேரத்தில் தனிப்பட்ட பொறுப்புகள் என்ற முறையிலேயே நடைபெற வேண்டும். இதற்கு மாறாகச் செயல்படுவது கட்சிக்கு பலன

ளிக்காது. அதற்கு மாறாக, பாதிப்புகளை ஏற்படுத்தும். ஆகவே, நமது கட்சியின் சால்கியா பிளீனம் கூட்டுச் செயல்முறையின் அவசியத்தை வலியுறுத்திக் கூறியுள்ளது. இதன் காரணமாகவே மத்திய், மாநில, மாவட்ட, தாலுகா மட்டங்களில் அன்றாடம் செயல்படும் மையங்கள் வலுப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. எந்த பிரச்னையிலும் ஒருவர் மட்டும் முடிவெடுக்கும் முறையை தவிர்க்க இது இன்றியமையாதது.

> "இம்முறையில் செயல்படும் போக்குகள் ரிப்போர்ட்டுகள் இல்லாமலும், வெகுஜன போராட்டங்கள், அரசியல் நடவடிக்கைகள் பற்றிய பரிசீலனை இல்லாமலும் இயங்கும் முறையானது, மார்க்சிஸ-லெனினிஸ ஸ்தாபன முறைகளில் அடிப்படையான ஒன்றான விமர்சனம், சுயவிமர்சனம் அறவே ஸ்தாபனத்தில் இல்லாமல் செய்துவிடுகிறது.
>
> கூட்டுச் செயல்முறைக் கோட்பாட்டை மீறும் போக்கு ஆழமாக வேரூன்றியிருப்பதை அடிக்கடி காணலாம். இதனால் தவறுகளை திருத்திக்கொள்ள பிடிவாதமாக மறுக்கும் போக்கும், சுயவிமர்சன கண்ணோட்டத்துடன் கட்சிக் கொள்கைகளைப் பரிசீலிக்க மறுப்பதும், சில சமயங்களில் பிடிவாதமாக எதிர்ப்பைக் காட்டுவதையும் காணலாம். சுயவிமர்சனத்திற்குப் பதிலாக, சுயநிலையை நியாயப்படுத்துவதே உள்ளது. இதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும். விமர்சனம், சுயவிமர்சனம் பரிபூரணமாக நடைமுறைக்கு வரவேண்டும். கொள்கைகளை வரையறுப்பது உட்பட, கட்சியின் எல்லா நடவடிக்கைகளிலும் முழுமையாகப் பங்கு கொள்ளும் ஜனநாயக உணரவு ஏற்பட வேண்டும்.
>
> பல்வேறு கமிட்டிகளில் கறாரான வேலை பிரிவில்லாமல், ஓரிரு தோழர்களோ குறிப்பாக செயலாளர் மட்டுமோ, கமிட்டியின் பேரால் இயங்குவது காணப்படுகிறது. இதனால், (1) அதிகாரம் சில தோழர்களிடம் குவிகிறது; (2) திறமையின்மையும் விளைகிறது; (3) கூட்டுத் தலைமை முறை என்ற முக்கியமான ஸ்தாபனக் கோட்பாடுக்கே வேட்டு வைக்கப்படுகிறது."
>
> (சால்கியா அறிக்கை பக்கம்-61 பாரா:158)

22. தோழமை உணர்வு:- நமது கட்சி தோழர்களுக்கிடையே தோழமைபூர்வமான உறவுகள் வலுப்படுத்த வேண்டும். நெருக்கமான முறையில் இதனை வளர்க்க வேண்டும். பாதிக்கப்படும் தோழர்களுக்கு உதவிகள் செய்யவேண்டும். ஆனால், இந்த உதவிகள் கட்சிக் கிளைக்கு, கமிட்டிக்குத் தெரிந்து அனுமதியுடன் செய்யவேண்டும். இல்லையென்றால், சில பிரச்னைகளும், தவறுகளும் ஏற்படவும் வாய்ப்புண்டு. சிறைபடுதல், நோயினால் பாதிப்பு, வேலையிழந்து பாதிக்கும் நேரத்தில் உதவுவது போன்ற பிரச்னைகளையே இங்கு குறிப்பிடுகிறோம். வியாபாரம், பலவிதமான கொடுக்கல்-வாங்கல், சீட்டு பிடிப்பது, சுற்றுலா பண்டு சேர்ப்பது போன்ற பல காரியங்களும் சில இடங்களில் நடந்து ஏற்கனவே பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. ஆகவே, இதைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

அனைத்துக்கும் மேலாக தோழமையாக பழகுவது, வயதில் சிறியவர்களாக இருந்தாலும் கட்சியில், கீழ் கமிட்டிகளில், கிளைகளில் இருந்தாலும் தோழர் என்றுதான் ஒருவருக்கொருவர் அழைத்துக்கொள்ள வேண்டும். வேறுவிதமான வார்த்தைகளில் அழைப்பது, பேசுவது எல்லாம் நமது கட்சிக்கு அப்பாற்பட்டது.

23. வெகுஜன அரங்கில் பணியாற்றுவது – பிராக்ஷன் செயல்பாடு குறித்து:-

இதைப் பற்றியும் தெளிவாக இருக்க வேண்டும். இவைகளில் செயல்படும் தோழர்கள் கட்சியின் வழிகாட்டுதல் பெற்றுதான் செயல்பட வேண்டும். தன்னிச்சையாக செயல்படக் கூடாது. அதே நேரத்தில், வெகுஜன அமைப்புகள் கட்சிக்கு அப்பாற்பட்ட பெருமளவு மக்களைக் கொண்ட அமைப்புகள் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். மத்திய கமிட்டித் தீர்மானம் வலியுறுத்துவதுபோல் கட்சி சார்பற்ற அமைப்புகள் என்ற தோற்றத்துடன் அவைகளைச் செயல்படுத்த வேண்டும். அதே நேரத்தில் கட்சித் தோழர்கள், கட்சி பிராக்ஷன் அல்லது கட்சி கமிட்டியின் வழிகாட்டுதலுடன் செயல்பட வேண்டும். ஒரு வெகுஜன அமைப்பின் நிர்வாகிகளாக உள்ள தோழர்கள் அல்லது நிர்வாக கமிட்டியிலுள்ள

கட்சித் தோழர்கள் ஒரு பிராக்ஷனாக கட்சியின் மேல் கமிட்டிகளால் நியமனம் செய்யப்படுவார்கள். பிராக்ஷன் மிகப் பெரியதாக இருந்தால் அவ்வப்போது கூடுவதற்கு ஒரு சிறு பிராக்ஷன் கமிட்டியை அமைத்துக் கொள்ளலாம். இவைகளின் கூட்டங்கள் உரிய காலத்தில் முறையாக நடத்தப்பட வேண்டும். நமது தலைமையிலுள்ள வெகுஜன அரங்கங்களின் நிர்வாக கமிட்டிகள் கூடுமுன் சம்பந்தப்பட்ட அரங்கில் பிராக்ஷன் இருந்தால் அது முன்கூட்டிக் கூட்டப்பட்டு ஆலோசனைகள் உருவாக்கப்பட வேண்டும். அதன் மீது சம்பந்தப்பட்ட மட்டத்திலுள்ள கட்சி மேல்-கமிட்டிகளின் ஆலோசனையும் பெறவேண்டும். கோரிக்கைகள் முன்வைப்பது, போராட்டங்கள் துவங்குவது, முடிப்பது, ஒப்பந்தங்கள் செய்வது ஆகியவைகளுக்கெல்லாம் இந்த நடைமுறையை கறாராக பின்பற்ற வேண்டும்.

நமது தலைமையில் சங்கம் செயல்படும் இடங்களில் மற்றவர்களையும் இணைத்துகொண்டு போராடக்கூடிய முறையில் நாம் செயல்பட வேண்டும். மற்றவர்கள் தலைமை உள்ள இடங்களில், கட்சி வேறுவிதமாக முடிவு எடுத்தால் தவிர, நாம் மாற்றுத் தலைமையுடன் இணைந்து வெகுஜன அரங்கப் பணிகளில் முழுமையாக ஈடுபடவேண்டும். அதன் மூலமே மக்களுடன் நமது தொடர்பை பலப்படுத்த முடியும். தொழிற்சங்க அரங்கம் பற்றி சால்கியா அறிக்கை இவ்வாறு கூறியுள்ளது:-

"தொழிற்சங்கங்கள் பற்றிய பிரச்னை பற்றி அணுகும் போது, நமது சொந்த வர்க்கத்துடன் அணுகுகிறோம் என்பதை நாம் உணர வேண்டும். இன்றைய தொழிற்சங்க போராட்டத்தின் விளைவாக ஏற்பட்டுள்ள இடதுசாரி ஜனநாயக உணர்வு மட்டத்தை சோஷலிஸ்ட் உணர்வு மட்டமாக வளர்ப்பதற்கு நமது கட்சி தவறுமானால் வேறு யாரும் அதைச் செய்ய முடியாது. தொழிலாளர் வர்க்கத்தின் சிறந்த ஊழியர்களிடையில், புரட்சியின் தலைமைப் பாத்திரத்தை தொழிலாளி வர்க்கம் தான் ஏற்கவேண்டும் என்ற உணர்வை நமது கட்சி மட்டுமே ஏற்படுத்த முடியும். இதற்காகத் தொழிற்சங்கத்தில் தீவிரமானவர்களைத் திரட்டி அவர்களுக்குப் பயிற்சியளித்து, கட்சிக்குள் கொண்டுவர வேண்டிய வேலையைச் செய்யவேண்டும்."

(சால்கியா அறிக்கை பக்கம்:55.
பாரா 54-ல் 5-வது உப பாரா)

24. ஒற்றுமையும், கட்டுப்பாடும்:- நமது கட்சியின் அடிப்படை பலம், கட்சியின் ஒற்றுமையிலும், கட்டுப்பாட்டிலும் அடங்கியுள்ளது. ஒரு மகத்தான லட்சியத்திற்கான புரட்சிகரமான இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்ற முறையில் நாம் கட்டுப்பாட்டை சுயமாக ஏற்றுக்கொள்கிறோம்.

கட்சிக் கிளை அல்லது கமிட்டிக் கூட்டங்களில் முறையாக பங்குகொள்வது, முடிவுகளை நிறைவேற்ற முன்னணியில் நிற்பது, தன்னிச்சையாக எதையும் செய்யாமல் இருப்பது, இயக்க வளர்ச்சிக்குரிய தனது ஆலோசனைகளை கட்சிக் கிளையில் அல்லது கமிட்டியில் முன்வைத்து ஒப்புதல் பெற்று செயல்படுவது போன்ற முறைகள்தான் கட்டுப்பாட்டை பாதுகாக்க உதவி செய்யும்.

இதேபோல், கட்சியின் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படக்கூடிய முறையில் பேசுவதையும், செயல்படுவதையும் கட்டாயம் தவிர்க்க வேண்டும். கட்சி ஒற்றுமைக்கு எதிரான போக்குகள்; எங்கு, எப்போது தலைதூக்கினாலும் அதை உறுதியாக எதிர்க்க வேண்டும்.

25. பரிசீலனை:- நாம் செய்கின்ற அரசியல்-ஸ்தாபன-இயக்கப் பணிகள் குறித்தும் அவ்வப்போது பரிசீலனை செய்யவேண்டும். படிப்பினைகள் வரையறுக்க வேண்டும். கீழ் கமிட்டிகளுக்கும், கிளைகளுக்கும் தொடர்ச்சியாக மேல் கமிட்டிகள் மேற்கொள்ளும் முடிவுகள், செய்கின்ற பணிகள், நடத்துகின்ற இயக்கங்கள் பற்றிய பரிசீலனைகளின் படிப்பினைகள் குறித்து ரிப்போர்ட் செய்யவேண்டும். அனுபவ ரீதியாக அவர்களின் அரசியல் ஞானத்தை உயர்த்த இது மிகவும் பயன்படும். நாம் நடத்துகின்ற முக்கிய போராட்டங்கள் குறித்துகூட பரிசீலனை செய்து படிப்பினைகள் வரையறுக்கப்படாத குறைபாடு இன்று நீடிக்கிறது. இயக்கத்தின் வளர்ச்சியை பாதிக்கக்கூடிய இத் தவறான போக்கு நீடிக்க அனுமதிக்கக் கூடாது.

26. முழுநேர ஊழியர்கள்:– நமது இயக்கப் பணிகளைத் திட்டமிட்டு இடைவிடாமல் செய்துவர முழு நேரமும் கட்சிப் பணிகளில் ஈடுபடக்கூடிய முழுநேர ஊழியர்கள் தேவையான அளவில் ஒவ்வொரு மட்டத்திலும் இருப்பது மிக அவசியம். முழுநேர ஊழியர்கள் இயக்கத்திற்கு வழிகாட்டித் தலைமை தாங்கும் தகுதியுடையவர்களாகவும், கட்சி அமைப்பாளர்களாகவும், கட்சியின் தத்துவ–அரசியல் போதகர்களாகவும் இருக்க வேண்டும். ஓய்வு–ஒழிச்சல் இன்றி சுறுசுறுப்பாக செயல்படக்கூடியவர்களாக இருக்க வேண்டும். கட்சித் தோழர்களிடமும், மக்களிடமும்; அன்பாகவும், தோழமையுடனும் பழகக்கூடியவராக இருக்கவேண்டும்.

இத்தகைய தகுதிகளும், குணாம்சங்களும் உள்ளவர்களைத் தான் முழுநேர ஊழியர்களாகத் தேர்வு செய்யவேண்டும். அதேநேரத்தில், முழுநேர ஊழியர் அவர்களின் குடும்பத்தின் வாழ்க்கைக்கும் கட்சி பொறுப்பேற்க வேண்டும், நிர்ணயிக்கப்படுகிற ஊதியம், குறித்த காலத்தில் அவர்களுக்கு கிடைக்கக் கட்சி ஸ்தாபனம் பொறுப்பேற்க வேண்டும். அவர்களை திட்டமிட வேண்டும். அபிவிருத்தி ஏற்படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டும். முழுநேர ஊழியர்கள் தங்களின் அன்றாட பணிகள் குறித்து கட்சி கமிட்டிக்கு அறிக்கை அளிக்க வேண்டும். கட்சி ஸ்தாபன அமைப்பில் முழுநேர ஊழியர்கள் கேந்திரமான இடத்தை வகிக்கின்றனர். தேவையான அளவுக்குத் தகுதியான முழுநேர ஊழியர்களைத் தேர்வு செய்வதும், அவர்களை முழுமையாக கட்சிக் பணிகளுக்குப் பயன்படுத்துவதும், அவர்களைப் பாதுகாப்பதும் மிக முக்கிய கடமையாகும்.

27. பெண்கள்–சிறுபான்மையோர்:– நமது கட்சி உறுப்பினர்களில், பெண்கள் மிகக் குறைவாகவே உள்ளனர். இது நமது இயக்கத்தின் முக்கிய பலவீனமாக நீடிக்கிறது. அண்மைக் காலத்தில் சிறிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்ற போதிலும் பெண்கள் மிகக் குறைவாகவே கட்சியில் உள்ளனர். சமுதாயத்தின் சரிபாதியினரான பெண்கள், இயக்கத்தில் ஈர்க்காமல் புரட்சி வெற்றியடையாது என்று லெனின் கூறியதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே, பெண்களை கட்சியில் சேர்ப்பதற்கும், தகுதியானவர்களை மேல் கமிட்டிகளுக்குத் தேர்வு செய்யவும் தயங்கக் கூடாது. வெகுஜன இயக்கங்களிலும் தலைமைப் பொறுப்புகளுக்கு பெண்களைத் தேர்வு செய்ய விசேஷ கவனம் செலுத்த வேண்டும். கட்சியை கட்டுகிறபோது கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய கடமையாக இதனை மத்திய கமிட்டி வலியுறுத்தியுள்ளது.

சிறுபான்மையோர்:– நமது நாட்டின் சமுதாய வாழ்க்கையில் மத சிறுபான்மையோர், தாழ்த்தப்பட்டோர் மிக முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டியவர்களாக உள்ளனர். நமது கட்சி நாட்டில் உள்ள அனைத்துப் பிரிவு மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய முறையில் அமைய வேண்டும். இச்சிறுபான்மை மக்கள், பாட்டாளி வர்க்கப் புரட்சி இயக்கத்திலிருந்து பிரிந்து செல்லும் நிலைமை ஏற்படக்கூடாது. ஆகவே, அவர்களை வர்க்க அடிப்படையில் வென்றெடுக்க வேண்டும். இப்பகுதி மக்களிலிருந்து கட்சி உறுப்பினர்களைச் சேர்ப்பதும், வெகுஜன அமைப்புகளில் இப்பிரிவினர் உரிய இடம்பெற கவனம் செலுத்துவதும் கட்சியின் முக்கிய கடமையாகும். கட்சியை கட்டுகிறபோது, இப்பிரச்னைகள் கவனத்தில் இருக்க வேண்டும்.

28. கட்சிக் கல்வி:– நாம் ஒரு வலுவான கட்சியாக வளருவதற்கு, நமது கட்சி உறுப்பினர்கள் அனைவரும் மக்களை அணிதிரட்டி வழி நடத்தும் தலைமைக்குரிய தகுதியை பெறுவதற்கு, கட்சிக் கல்வி இன்றியமையாதது. ஒரு வெகுஜன புரட்சிக் கட்சியை கட்டும் பணி, கட்சிக் கல்வி போதிப்பதிலிருந்து பிரிக்க முடியாதது. கட்சிக் கல்வி பெறுவதற்கு சுய–கல்வி இன்றியமையாதது. ஆகவே, கட்சிக் கிளைகளும், கமிட்டிகளும் கட்சித் தோழர்கள் – பத்திரிக்கைகள், பிரசுரங்கள் படிக்கச் செய்வதுடன் அடிப்படை மார்க்சீய நூல்களைப் படிக்கவும் திட்டமிட்டு ஏற்பாடு செய்ய வேண்டும். அதே நேரத்தில் நிகழ்கால தேசிய, சர்வதேசிய நிலைமைகள் குறித்தும் அடிப்படையான தத்துவார்த்தப் பிரச்னைகள் குறித்தும் அரசியல், தத்துவ வகுப்புகள் நடத்தவும் திட்டமிட்டு ஏற்பாடுகள் செய்யவேண்டும். இதன் அவசியத்தை வலியுறுத்தி சால்கியா பிளீனம் முடிவுகளில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

“வெகுஜனப் புரட்சிக் கட்சியை உருவாக்கும் போராட்டம் கட்சி உறுப்பினர்களை சேர்ப்பதற்கு முன்பும், சேர்ந்த

பின்னும் அவர்களது அரசியல் உணர்வை தொடர்ந்து உயர்த்துவதன் அவசியத்தை உணர்த்துகிறது.

கட்சி . உறுப்பினர்களின் மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் தரத்தை உயர்த்துவதை வலியுறுத்துகிறது.''

(பாரா–49)

"1964–க்குப் பிறகு சேர்ந்த கட்சி உறுப்பினர்கள் உடனடி கவனத்திற்கு உரித்தானவர்களாவர். அவர்களுக்கு மையமும், மாநில கமிட்டிகளும் அரசியல் கல்வி போதிக்கவும், பயிற்சி அளிக்கவும். விசேஷ நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.''

(பாரா–61)

29. மேலிருந்து கட்டப்படும்கட்சி:– நமது கட்சி, சில நபாகளின் விருப்பத்தின் அடிப்படையில் தானாகத் தோன்றுவதல்ல. இது மேலிருந்து திட்டமிட்டு கட்டப்படும் கட்சி. மேலிருந்து தொடர்ச்சியாக வழிகாட்டுதல் பெற்று செயல்படும் கட்சி. எதிரியின் கடுமையான அடக்குமுறைகளையும், அவதூறுகளையும் ஒவ்வொரு நாளும் சந்திக்கவேண்டிய கட்சி. இவையெல்லாம் சமாளித்து புரட்சி இயக்கத்தை வளர்த்துச் செல்ல பலமான கட்சி மையங்கள் இன்றியமையாதது. அனைத்திந்திய அளவிலும், ம்ாநில, மாவட்ட அளவிலும் வலுவான மையங்கள் இருந்தால்தான் கட்சியை முறையாக வழிநடத்தி வளர்க்க முடியும். சால்கியா அறிக்கையில் இதன் முக்கியத்துவம் இவ்வாறு விளக்கப்பட்டுள்ளது:–

"தொழிலாளி வர்க்கத்துப் புரட்சிகரமான கட்சி, மேலிருந்து கட்டப்பட்டு வரும் ஸ்தாபனம் என்ற கோட்பாடு ஸ்தாபனத்துறையின் பாலபாடமாகும். இந்த மார்க்சிஸ – லெனினிஸக் கோட்பாடு எவ்வளவு சரியானது என்ற இன்றைய இந்தியாவின் வர்க்கப் பலாபலன்களின் ஸ்தூலமான நிலைமை ஊர்ஜிதப்படுத்துகிறது. இன்றுள்ள ஆளும் வர்க்கங்கள் மிகவும் பலமாக மையப்படுத்தப்பட்ட பொருளாதார, அரசியல் வாழ்க்கையில் தலையிட விரும்பும் எந்தக் கட்சியும் அரசியல் வர்க்கங்களின் பலமாக மையப்படுத்தப்பட்டுள்ளன. அரசியல், நிர்வாக நடவடிக்கைகளுக்கும், நமக்கும் சம்பந்தமில்லை என்று செயல்பட முடியாது. தொழிலாளிவர்க்

கக் கட்சி, வர்க்க விரோதியைச் சமாளிக்க வேண்டுமென்றால்;அதற்கு மையப்படுத்தப்பட்ட ஸ்தாபனம் தேவை. அந்த ஸ்தாபனம் மார்க்சிஸ –லெனினிஸக் கண்ணோட்டத்துடன் இருப்பதோடு,மார்க்சிஸ–லெனினிஸக் கோட்பாடுகளின் அடிப்படையில் இருக்க வேண்டும்.

(சால்கியா அறிக்கை பக்கம்–64 இரண்டாவது பாரா)

30. பாட்டாளி வர்க்க சர்வதேசியம்:– உலகம் முழுவதும் உள்ள பாட்டாளி மக்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற உணர்வில் பாட்டாளி வர்க்க சர்வதேசிய உணர்வை நாம் வளர்க்க வேண்டும். இன மொழி, பிரதேச உணர்வுகளை நாம் உறுதியாக எதிர்த்துப் போராட வேண்டும். ஜாதி, மத, மூட நம்பிக்கைகளுக்கு எதிராக இடைவிடாத போராட்டத்தை நாம் நடத்த வேண்டும்.

முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவக் கருத்துகளுக்கெதிராக, பத்தாம்பசலி சம்பிரதாயங்களுக்கு எதிராக நாம் சக்தி வாய்ந்த பிரச்சார இயக்கத்தை நடத்த வேண்டும்.

மக்கள் மத்தியில் விஞ்ஞான சோஷலிஸ, கம்யூனிஸ சித்தாந்தங்களையும் நாம் விரிவான அளவில் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

இவைகளை நிறைவேற்றுவதற்கான ஆற்றலை உருவாக்கிக்கொள்ள ஒவ்வொரு கம்யூனிஸ்டும் சுயமுயற்சி செய்ய வேண்டும். அரசியல் சித்தாந்த அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும். சக்தி வாய்ந்த ஒரு வெகுஜன புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தை உருவாக்க உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

அரசியல் பொருளாதாரம் — பாடக் குறிப்புகள்

வே. மீனாட்சிசுந்தரம்

பாடக் குறிப்பு

அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படைகளை, கோட்பாடுகளை, விதிகளை சித்தாந்த பார்வைகளை பரிசீலிக்க முயலும் தோழர்கள் முதலில் கவனிக்க வேண்டியவை கள்:–

1. மனிதன் மற்ற ஜீவராசிகளிடமிருந்து வேறுபட்டு, மனிதனாக வாழத் தொடங்கிய காலத்திலிருந்தே பொருளாதாரம் என்ற ஒன்று இருந்திருக்க வேண்டும். ஆனால் கடந்த மூன்று நூற்றாண்டுகளில்தான் அது ஒரு விஞ்ஞானமாக வளர்ந்து வருகிறது. மிகவும் சர்ச்சைக்குரிய, சிக்கல் நிறைந்த சண்டையில் முடிகிற விவகாரமாய் அரசியல் பொருளாதாரம் இன்றுவரை இருந்து வருகிறது. வர்க்கப் பிரிவினைக்கும், வர்க்க முரண்பாட்டிற்கும் மோதலுக்கும் அடிமுதல் காரணமாய் அரசியல்–பொருளாதாரம் அமைந்துள்ளது. புதிய வர்க்கங்கள் தோன்றுவதும், புதிய சமூக மாறுதல்களின் மாற்றத்தை புரிந்துகொள்ள அரசியல் பொருளாதாரம் உதவுகிறது.

2. எத்தனை புதிய கோட்பாடுகள், விளக்கங்கள் தோன்றினாலும், அரசியல் பொருளாதாரம் இன்று இரண்டு முகாம்களாக மோதுகின்றன என்ற மார்க்சின் வரையறை சரியானது.

3. பொருளாதாரத்தின் அடிப்படை இயல்புகளான உற்பத்தி, பரிவர்த்தனை, விநியோகம், நுகர்தல் ஆகிய நான்கையும், மார்க்சிய உழைப்புக் கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டு ஆராய்கிற முகாமை, தொழிலாளி வர்க்க அரசியல் பொருளாதாரம் என்று அழைக்கிறோம்.

4. இதற்கு எதிராக மார்க்ஸ் உருவாக்கிய மதிப்பு பற்றிய உழைப்புக் கோட்பாட்டை நிராகரித்து; சரக்கு, பணம், தொழில்நுட்பம் போன்ற பொருளாதார பிரிவுகளை மூலதனம் எவ்வாறு ஆட்டிப் படைக்கிறது? இந்த மூலதனத்தின் சுதந்திரமான செயல்பாட்டை அரசு எவ்வாறு உத்தரவாதப்படுத்தவேண்டும்? என்பவைகளை முதலாளித்துவ அரசியல் பொருளாதார முகாம் ஆராய்கிறது.

5. காரல்மார்க்ஸ், பொருளாதார நிபுணர்களை இரண்டு இரகமாக பிரிக்கிறார். இந்தப் பிரிவினை இன்றும் பொருந்தும்:

அ) உண்மையை கண்டறிய ஆராயும் நிபுணர்கள்

ஆ) உண்மையைத் தேடாமல், சுரண்டலை நிலைநாட்ட வாதிடுவோரை மட்டரக பொருளாதார நிபுணர்கள் என்று அழைக்கிறார்.

அரசியல் பொருளாதாரம் ஒரு புரட்சிகரமான உள்ளடக்கம் கொண்டது

அரசியல் பொருளாதாரம் என்றாலே முகம் சுளிப்பவர்கள் பலருண்டு. இது விவரம் தெரியாமல் வருகிற பிரதிபலிப்பாகும். இதனை அறிய விரும்புகிறவர்களுக்கு ஒட்டகத்தின் விடா முயற்சியும், முனிவரின் பொறுமையும் தேவையென்ற கருத்து பரவலாக உள்ளது. உண்மையில் இது பல சுவையான பிரச்சனைகளையும், மனித மனத்தின் விநோதமான பிரதிபலிப்புகளையும், ஆரம்பத்தில் அற்பமாக தெரிகிற விஷயம், ஆராயப் புகுந்தவுடன், அற்புதமான புதிராக மாறிவிடும் விந்தையும் ஒருங்கே பெற்று, அரசியல் பொருளாதாரம் உறவுகொள்ளாத வேறு ஒரு துறையும் பூமியில் இல்லையென பூகோளத்திலிருந்து, உணவியல்வரை, எல்லா விஞ்ஞானத்தோடும் தொடர்புகொண்ட ஒரு துறையாகும். மற்ற விஞ்ஞானத்தில் ஒரு கோட்பாட்டை ஒருவர் உருவாக்கினால் அது தவறு என்று கூறி இன்னொரு சோதனை மூலம் அல்லது விளக்கத்தின் மூலம் எதிற்கும் நிலையை அறிவோம். ஆனால், அரசியல் பொருளாதாரத்தில் எதிர்ப்பு இவ்வாறு மட்டும் நின்றுவிடவில்லை. மார்க்ஸ் என்ன சொல்லுகிறார் என்பதை சற்றுப் படியுங்கள்.

"அரசியல் பொருளாதார ஆராய்ச்சி துறையிலே சுதந்திரமான, விஞ்ஞான ரீதியான, ஆராய்ச்சி என்பது சந்திக்கும் எதிரிகள், மற்ற விஞ்ஞான துறைகளிலே வழக்கமாக சந்திக்கும் எதிரிகள்போல் மட்டுமல்ல, இது கையாளும் விநோதமான விஷயங்கள் மனித நெஞ்சங்களிலே, குடி கொண்டிருக்கும் அற்பத்தனமான குரூரமான பகைமை நிறைந்த உணர்வுகள், அதாவது சொந்த நலன் என்னும் கோபங்கள், வரிந்து

கட்டிக்கொண்டு மோதும் எதிரிகளாக போர் களத்திலே நிறுத்துகிறது. இங்கிலாந்து நாட்டு மடாலயம் ஏற்படுத்தியுள்ள 39 விதிகளில் 38 ஐ சாடினால் கூட அது பொறுத்துக் கொள்ளும், ஆனால் அதற்கு சொந்தமான சொத்தில் 1/39 பாகத்தை தொட நினைத்தால் இது சும்மாவிடாது. கடவுளே இல்லை என்றால்கூட அது ஒரு அற்பத் தவறாக கருதி மன்னித்துவிடும்''.

(மூலதனம் வால்யூம் 1 முகவுரை பக்கம் 21)

கம்யூனிஸ்டுகள் ஏன் அரசியல் பொருளாதாரம் கற்க வேண்டும்?

அரசியல் பொருளாதாரத்தை ஏன் கம்யூனிஸ்டுகள் கற்கவேண்டும் என்ற கேள்விக்கு ஒரு வரியில் விடை கூறமுடியும். "கம்யூனிஸ்டுகள் புரட்சிகரமாக இருக்கவேண்டுமென்றால் அரசியல் பொருளாதாரம் கற்கவேண்டும்'' இல்லையெனில் மாய உலகை சிருஷ்டிக்க நினைக்கும், கற்பனைவாதிகளாகவோ, அல்லது அராஜகவாதிகளாகவோ ஆகிவிடுவர். மார்க்ஸ் எழுத்துக்களில் அழுத்தம், திருத்தமாக குறிப்பிடப்படுவது என்னவெனில் கடந்தகால புரட்சியாளர்களும், தத்துவ மேதைகளும், கற்பனா சோஷலிஸ்ட்டுகளும், உலகை மாற்ற வேண்டுமென விரும்பினர், விளக்கம் கொடுத்தனர். செயல்படவும் செய்தனர். அதற்கு மேலும் போய் உன்னதமான கற்பனைக் கோட்டைகள் கட்டினர். அவைகள் அனைத்தும் கனவாய் போவதற்கு காரணம் அரசியல் பொரளாதாரம் விதிகளையும், அது ஏற்படுத்தும் சமூக விளைவுகளையும் கணக்கில் கொள்ளாமல், அரசியல் அதிகாரத்தை கைப்பற்றினால் மட்டும் போதும் என்று கருதியதே. கம்யூனிஸ்டுகளுக்கும், இதர சோஷலிஸ்ட்டுகளுக்கும் வேறுபாடே அரசியல் பொருளாதார அணுகுமுறையில்தான் அடங்கியிருக்கிறது.

மார்க்சீய அரசியல் பொருளாதாரம் என்பது எதனை ஆராய்கிறது?

உழைப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் கீழ்க்கண்டவைகளை பரிசீலிக்கிறது:

அ) பயனுள்ள பொருட்களை அல்லது மதிப்புகளை

(Values) உற்பத்தி செய்கையில் மனிதர்களுக்கிடையே உருவாகும் உறவு.

ஆ) பயனுள்ள பொருட்கள் எதனடிப்படையில் பரிவர்த்தனை ஆகிறது?

இ) பொருள் உற்பத்தியில் வரலாற்று ரீதியாக ஏற்படும் பலகட்ட சமூக உறவு மாறுதல்கள்.

ஆகிய மூன்றையும், மார்க்சிச-லெனினிச அரசியல் பொருளாதாரம் ஆய்வு செய்கிறது.

கலைச்சொற்கள் பற்றிய விளக்கம்

கீழ்க்கண்ட சொற்கள் என்ன பொருளில் பிரயோகிக்கப்படுகிறது என்பதை முதலில் விளக்கவேண்டும்.

1) உற்பத்தி சக்தி
2) உற்பத்தி
3) உழைப்பு கருவிகள் (Tools)
4) உழைப்பைச் செலுத்தவேண்டிய பொருள்
5) உழைப்பு
6) உற்பத்தி கருவிகள்
7) உற்பத்தி சாதனம்
8) உற்பத்தி உறவுகள்
9) சொத்து உறவு

இந்த கலைச் சொற்களின் பொருள்களை புரிந்து கொள்ளாமல், அரசியல் பொருளாதார கோட்பாடுகளை புரிவது இயலாது.

கலைச் சொற்கள்: விளக்கம்

உற்பத்தி சக்தி

உற்பத்திக்கு பயன்படும் பொருள், கருவி, உழைப்பு மூன்றையும் இணைத்து உற்பத்தி சக்தி என்று பொதுவாக குறிப்பிடுகிறோம். ஏன்?

மனித சமூகத்திற்கும், இதர ஜீவராசிகளுக்குமுள்ள வேறுபாடு என்ன?

பொருள் உற்பத்தியில்லாமல், மனித சமூகம் ஜீவிக்கவே முடியாது. மக்கள் வாழ வேண்டுமானால் குறைந்தபட்சம் உணவு, உடை, குடியிருப்பு மூன்றையும் உற்பத்தி செய்தாக

வேண்டும். இம்மூன்றையும் பெற, உற்பத்திக் கருவிகளை எந்திரங்கள் உற்பத்தி செய்யவேண்டும்.

உற்பத்தி எவ்வாறு நிகழ்கிறது ?

இயற்கையில் கிடைப்பதை மனித உழைப்பால் பயனுள்ள பொருளாக மாற்றம் செய்யப்படுகிறது. அதாவது இயற்கையோடு உறவாட வேண்டியிருக்கிறது. புராதன காலத்திலிருந்து இன்றுவரை உற்பத்தியில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டு இருந்தாலும், மனித சமூகத்திற்கும், இயற்கைக்கும் உள்ள உறவில் மூன்று உறுப்புகள் இணையாமல் உற்பத்தி நடைபெறாது.

அ) உழைப்பு, ஆ) கருவிகள், இ) உழைப்பு செலுத்த வேண்டிய பொருள், உதாரணமாக உழவனின் உழைப்பு, கலப்பை என்னும் கருவி, நிலம் என்னும் இயற்கைப் பொருள் ஆகிய மூன்றும் இணையாமல் உணவு உற்பத்தி நடைபெறாது.

உழைப்பு

இயற்கையில் அகப்படும் பொருளை மாற்ற செலுத்தும் சக்தியை உழைப்பு என்கிறோம். இது வெரும் மனிதனின் அங்க அசைவுகள், தசைகளின் அசைவுகள் என்பது மட்டுமல்ல, மனிதன் இயற்கையில் அகப்படும் பொருளை மாற்ற தனது உழைப்பை செலுத்தும் பொழுது தனது அறிவை, திறனை, லாவகத்தை பெற்றுவிடுகிறார். அதாவது உழைப்பின் திறன் மேம்படுகிறது. ஆரம்ப காலத்தில் அதாவது மனிதன் வேட்டையாடி வாழ்ந்த காலத்தில் காலப்போக்கில், குறி பார்த்து அம்பை எய்யும் திறன் பெற்றுவிடுகிறான். வேட்டையாடும் திறன் எப்படியெல்லாம் வளர்ந்து இருக்கும் என்பதை மனக்கண்ணால் பாருங்கள். முதலில் கல், பின்னர் கோடாரி, வில், அம்பு, இந்த மூன்றிலும் எய்தது திரும்பாது. புராதன மனிதன் இதனோட நின்றுவிடவில்லை. எய்த அம்பை திரும்பப் பெறும் உத்தியை கண்டுகொள்கிறான். போய்த் திரும்பும் ஆயுதத்தை "பூமராங்" என்கிறோம். இதனை முதலில் கண்டபிடித்த ஆதிமனிதன் தமிழகத்தில்தான் இருந்திருக்க வேண்டுமென சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

எங்கெல்ஸ் கூறுகிறார் : "மனிதன் வாழ முதல் நிபந்தனையாக உழைப்பு அமைந்திருக்கிறது. ஒரு அர்த்தத்தில்,

உழைப்புதான் மனிதனை மனிதனாக்கியது என்றே சொல்ல வேண்டும்."

உழைப்பு என்ற சொல், அரசியல் பொருளாதாரத்திலே மிகவும் முக்கியமான, புதிர் நிறைந்த சொல். மனித உழைப்பின் இரட்டைத் தன்மையை முதலில் கண்டவர் மார்க்ஸ், அதுபற்றி பின்னர் அறியப்போகிறோம்.

உற்பத்தி கருவிகள்

கருவிகள், எந்திரங்கள், கம்ப்யூட்டர்கள், தானியங்கி எந்திரங்கள் ஆகிய அனைத்தும், மனிதன் உழைப்பை இயற்கை மீது செலுத்த உதவுபவைகள்.

மார்க்ஸ், கருவிகளை "உற்பத்தியின் எலும்பும் தசைகளும் ஆகும்" என்று குறிப்பிடுகிறார். உழைப்பை செலுத்தும் பொருளை, இயற்கையில் கிடைப்பவைகளை கச்சாப்பொருள் என்கிறோம். நிலமே பொதுவான பொருளாகிறது. ஏதாவது ஒரு பொருள் ஏற்கனவே உழைப்பை செலுத்தியிருந்தாலும், மேலும் பயன்படும் பொருளாக உழைப்பை செலுத்தியிருந்தாலும், மேலும் பயன்படும் பொருள்க உழைப்பை செலுத்தி மாற்றப்பட வேண்டுமானால் அதையும் கச்சாப் பொருள் என்கிறோம். உதாரணம்: பஞ்சு, சணல், சுரங்கத்திலிருந்து எடுத்த தாதுக்கள், இன்று செயற்கையா[illegible]ச்சாப் பொருளையும் , மனிதன் கண்டுவிட்டான். நைலான், பாலியஸ்டர் செயற்கை ரப்பர் உதாரணமாகும்.

உற்பத்தி சாதனம்

உற்பத்திக்கு பயன்படும் பொருளையும், கருவியையும் நாம் உற்பத்தி சாதனங்கள் என்று அழைக்கிறோம்.

உற்பத்தி சக்தி

உற்பத்திக்கு பயன்படும் பொருள், கருவி, அதனை இயக்கும் மனித உழைப்புத் திறன் ஆகிய மூன்றையும் உற்பத்தி சக்தி என மார்க்சிய அரசியல் பொருளாதாரம் குறிக்கிறது.

உற்பத்தி உறவு

இவ்வாறு பொருள் உற்பத்தியாகும்பொழுது மக்களிடையே உறவு உருவாகிறது. இதனை உற்பத்தி உறவுகள் என

அழைக்கப்படுகிறது. மனித உழைப்பால் உருவாகும் பொருளை உடமையாக்க சமூகமே சில நியதிகளை உருவாக்குகிறது. இதனை சொத்துடமை உறவு என்கிறோம்.

மார்க்ஸ் இது பற்றி கூறியதே மிகப் பொருத்தமானது. "உற்பத்தி என்பது தனி நபர் இயற்கையில் அகப்படும் பொருளைப் பயனுள்ளதாக மாற்றிப் பெறுவதுதான் என்றாலும், இந்த தனி நபர் இவ்வாறு பெறுவதற்கு சமூகத்தில் திட்டவட்டமாக ஸ்தாபனத்தின் உதவியுடன்தான் பெறமுடியும்.''

சொத்து உறவு

சொத்துறவுகளில் இரண்டு ரகமுண்டு, ஒன்று சமூக சொத்துடமை, இன்னொன்று தனியார் சொத்துடமை. சமூக சொத்துடமை இன்றி தனியார் சொத்துடமை என்பது இருக்கவே முடியாது. பொதுவாக மேய்ச்சல் தரை இல்லையானால், கிராமங்களில் மாடுகளை தனியார் உடமையாக பலர் வைத்திருக்க முடியாது. ஆறு, கிணறு பொதுவாக இல்லையானால் மக்கள் வாழ்க்கையே சிரமத்திற்கு உள்ளாகும். சாலைகள் பொதுவாக இல்லையானால், பல தனியார் சொத்துக்களை அனுபவிக்கவே முடியாது. அதுபோல் உற்பத்திக்கருவிகள் தனியார் சொத்தாக இருக்கிறவரை, பெரும்பகுதி மக்கள் வறுமையில் சொத்தில்லாதவர்களாக இருப்பதை தவிர்க்கவே முடியாது. இந்த சொத்துறவுதான், உற்பத்தி கருவிக்கும், உழைப்பிற்கும் உள்ள உறவை நிர்ணயிக்கிறது. உற்பத்தி உறவு என்பது, சொத்து உறவும், பரிவர்த்தனை நடவடிக்கையும் இணைந்ததுதான். இந்த இரண்டு உறவுகளையும் மூன்று சரமாக பிரித்து புரிந்துகொள்வது அவசியம்.

1) உற்பத்தியில் ஈடுபடும்பொழுது ஏற்படுகிற உறவு.
2) பரிவர்த்தனையின்போது ஏற்படுகிற உறவு.
3) இவ்விரண்டும் கலந்து ஏற்படும் உறவு.

சமூக மாற்றமும், அதன் அடிப்படை காரணங்களும்

உற்பத்தி சக்திக்கும், உற்பத்தி உறவிற்கும் உள்ள உறவை ஆழமாக பரிசீலித்தால், காலத்திற்கு காலம் மாறுபட்டு வருகி

றது என்பது புலப்படும். இவ்வாறு உற்பத்தி முறைகளில் உள்ள பாகுபாட்டை காலகட்டமாக மார்க்சீய பொருளாதாரம் பார்க்கிறது. ஐந்து வகையான கட்டங்களில் உற்பத்தி முறைகள் தாண்டி முன்னேறியுள்ளது என்கிறோம்.

1) புராதன் பொதுவுடமை உற்பத்தி முறை காலகட்டம்
2) அடிமை கால உற்பத்தி முறை
3) நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை
4) முதலாளித்துவ உற்பத்தி முறை
5) கம்யூனிச உற்பத்தி முறை; இதன் ஆரம்ப கட்டத்தை சோஷலிசம் என அழைக்கிறோம்.

இவ்வாறு பல கட்டமாக தாண்டி வளர்ந்தாலும் சமூகத்தில் இந்த ஐந்து முறைகளும் கலந்துதான் மாறிவரும் சமூக அமைப்பாக இருக்கிறது. ஒன்று முழுமையாக அழிந்து இன்னொன்று தோன்றுவதில்லை. இவைகளும் குறிப்பிட்ட அளவு இருக்கின்றன. பிரதானமாக எந்த முறை நிலவி வருகிறதோ அதனையே காலகட்டமாக குறிக்கலாம்.

உதாரணமாக இந்தியாவில் சில பகுதிகளில் பூர்வ குடி மக்கள் பழைய மாதிரியே வாழ்கிறார்கள். இந்த நில பிரபுத்துவ முறையும் சில துறைகளிலும், சில பிரதேசங்களிலும் இருக்கிறது. சில துறைகளில் நாடு முழுவதிலும் முதலாளித்துவம் செயல்படுகிறது. இருந்தாலும் இன்றைய இந்திய சமூகத்தை முதலாளித்துவ சமூகம் என்றே அழைக்கிறோம்.

நவீன அரசியல் பொருளாதாரத்தின் அடிப்படை சரக்கு உற்பத்தியாகும். இச்சமூகத்தில் செல்வம் என்பது எண்ணத்தொலையாத சரக்குகளின் தொகுப்பு, எனலாம். இதன் பொருள், இதற்கு முன்னர் பொருள் உற்பத்தி என்பது சரக்கு வடிவத்தில் இல்லை என்பதல்ல. அடிமைகள் சமூகத்திலேயே சரக்கு உற்பத்தி தோன்ற ஆரம்பித்துவிட்டது. ஆனால், இன்றுபோல் சரக்கு உற்பத்தி சமூக வாழ்வின் மையமாக அன்று ஆகவில்லை.

சுமார் 300 ஆண்டுகளாக வளர்ந்துவிட்ட முதலாளித்துவ உற்பத்தி முறைக்கும், இந்த நூற்றாண்டில் அரும்பி இருக்கும் சோஷலிச உற்பத்தி முறைக்கும், பொதுவான அம்சமாக சரக்கு உற்பத்தி இருந்தாலும் இவை இரண்டின் அடிப்படைகளும் வேறுபடுகின்றன.

அ) முதலாளித்துவ சமூகத்தில் ஒரு சரக்கின் உபயோக

மதிப்பைவிட அந்த சரக்கின் பரிவர்த்தனை மதிப்பில் அடங்கியிருக்கும் உபரி மதிப்பே, உற்பத்தியின் அடிப்படையாகும். இந்த உபரி மதிப்பை தனியார் சுருண்டுவதை காப்பதாகும்.

ஆ) சோஷலிச சமூகத்தில் ஒரு சரக்கின் உபயோக மதிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. உபரி மதிப்பை தனியார் சுரண்ட அனுமதிக்கப்படுவதில்லை. அது ஜனநாயக கோட்பாட்டின் மூலம் மறுவிநியோகம் செய்யப்படுகிறது. முதலாளித்தவ உற்பத்திமுறை பற்றி கம்யூனிஸ்ட் அறிக்கையில் காரல் மார்க்ஸ் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

"எங்கெல்லாம் முதலாளித்துவ வர்க்கம் ஆதிக்க நிலை பெற்றதோ, அங்கெல்லாம் அது எல்லா பிரபுத்துவ உறவுகளுக்கும் தந்தை வழிச்சமுதாய உறவுகளுக்கும், கிராமாந்திர பாரம்பரிய உறவுகளுக்கும் முடிவு கட்டியது. மனிதனை "இயற்கையாகவே மேலானோருக்கு கீழ்ப்படுத்திக் கட்டிப் போட்ட பல்வேறு வகையான நிலப்பிரபுத்துவ பந்தங்களையும், ஈவிரக்கமின்றி அறுத்தெறிந்துவிட்ட மனிதனுக்கு அப்பட்டமான தன்னலத்தைத் தவிர பரிவு உணர்ச்சியில்லாப் பணப்பட்டுவாடாவைத் தவிர, வேறு ஒட்டுமில்லை, உறவுமில்லை என்றாகிற்று. சமயத்தை பக்தி பரவசம், பேராண்மையின் வீராவேசம், சிறு மதியோரது உணர்ச்சி பசப்பு ஆகிய புனித பேரானந்தங்கள்ள எல்லாம் தன்னலக் களிப்பென்னும் உறைபனிக்குளிர் நீரில் மூழ்கடித்துள்ளது. மனிதனது மாண்பினைப் பரிவர்த்தனை மதிப்பாய் மாற்றி இருக்கிறது. சாசனங்களில் பிரகடனம் செய்யப்பட்ட, விலக்கவோ, துறக்கவோ முடியாத எண்ணிலடங்கா சுதந்திரங்களுக்குப் பதிலாக, வெட்கம் கெட்ட வாணிபச் சுதந்திரமென்னும் ஒரேயொரு சுதந்திரத்தை ஆசனத்தில் அமர்த்தி வைத்திருக்கிறது.

சுருங்கச் சொல்வதெனில், சமயத்துறை–பிரமைகளாலும், அரசியல்–பிரமைகளாலும் திரையிட்டு மறைக்கப்பட்ட சுரண்டலுக்கு பதிலாய், முதலாளித்துவ வர்க்கம் வெட்க உணர்ச்சியற்ற அம்மணமான, நேரடியான மிருகத்தனமாக சுரண்டலை நிலைநாட்டியிருக்கிறது.

அரசியல் பொருளாதார ஆய்வு அதன் அடிப்படை உறுப்பாக இருக்கும் சரக்கு என்பதிலிருந்து தொடங்கவேண்டும். மனித உடல் எவ்வாறு செல்களால் ஆன்து என்கிறோமோ, எவ்வாறு பொருள்கள் அணுக்களால் ஆனது என்

கிறோமோ, அதுபோல் அரசியல் பொருளாதாரத்தின் செல்களாக 'சரக்கு' உள்ளது.

சரக்கு

சரக்கு என்பது சமூகத்தில் வாழும் தனிநபர்களின் தேவைகளையும், ஆசைகளையும் பூர்த்தி செய்கிறவைகளை பரிவர்த்தனை செய்ய ஆக்கப்படுவதாகும். இதிலிருந்து நாம் புரிந்துகொள்ள வேண்டியது:

அ) தேவைகளையும், ஆசைகளையும் பூர்த்தி செய்கிற எல்லாம் சரக்கு ஆகிவிடாது. உதாரணம்: காற்று, ஆற்று நீர். அதாவது மனித உழைப்பைச் செலுத்தி பெறுகிறவைகளே, சரக்கு என்ற அந்தஸ்தை பெற இயலும். அதே நேரத்தில் உழைப்பை செலுத்தி உருவாக்குகிற பண்டங்களும், சரக்கு என கூறிவிடமுடியாது. வீட்டிலே, சொந்த உபயோகத்திற்காக ஆக்கப்படும் பொருட்களை சரக்கு என கூற இயலாது. அதே பொர்ருள் ஹோட்டலில் தயாரிக்கப்படும்பொழுது சரக்கு என அழைக்கப்படுகிறது.

சரக்கில் அடங்கியிருக்கும் இரண்டுவித மதிப்புகள்

சரக்கு என்பது உபயோகமதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு என்ற..இரட்டைத் தன்மை கொண்டது.

உபயோக மதிப்பு

மார்க்ஸ் மூலதனம் என்ற நூலில் ஆரம்பத்தில் இவ்வாறு எழுதுகிறார். "பயன்படும் ஒவ்வொரு பண்டத்தையும் இரண்டுவிதமாக பார்க்கலாம். ஒன்று அதன் அளவு, இன்னொன்று அதன் குணம். ஒவ்வொரு பண்டமும் பலவிதமான குணங்களை கொண்டது. பலவிதமாக பயன்படும் ஒரு பொருளில் பயன்படும் தன்மைகளை ஆராய்வது வரலாற்றின் வேலையாகும். அதுபோல், சமூக ரீதியாக அதன் அளவுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இது பொருளின் தன்மையைய்யும், பழக்கம் காரணமாகவும் இது உருவாகிறது (உதாரணமாக எண்ணெய், பால் போன்ற பொருட்கள் எடையிலும், கிலோவாகவும், லிட்டர் அளவிலும் கூறப்படுகிறது)

இந்த பயன்படும் தன்மையே உபயோகமதிப்பு என்று அழைக்கப்படுகிறது. இந்த உபயோக மதிப்பு என்பது பொருட்களின் தன்மை பொறுத்ததே தவிர, அது உற்பத்தி

செய்யும் உழைப்பிற்கு சம்மந்தப்பட்டதல்ல (மூலதனம் பக்கம் 43,44).

பரிவர்த்தனை மதிப்பு

ஒரு குறிப்பிட்ட அளவு பயன்படும் மதிப்பு, இன்னொரு பயன்படும் மதிப்பும் குறிப்பிட்ட அளவோடு பரிவர்த்தனை செய்யப்படுகிறது. 10 கஜம் தணி, 3 கிலோ கோதுமைக்கு பரிவர்த்தனை ஆவதாகக் கொண்டால்; இந்த பரிவர்த்தனைக்கு அடிப்படை எதுவாக இருக்கும்?

மார்க்ஸ் "இந்த இரண்டு வித்தியாசமான பயன்படும் மதிப்புகளில், அடங்கியிருக்கும் பொதுவான உழைப்பே அடிப்படையாக இருக்கமுடியும். இந்த உழைப்பு காலத்தால், (நேரத்தால்) அளக்கப்படுகிறது. அதாவது, பொருள்கள் அவைகளைச் செய்ய செலவான "உழைப்பு நேர" அடிப்படையில் பரிவர்த்தனை ஆகின்றன" என்கிறார்.

"உபயோக மதிப்பு, அல்லது பயன்படும் பண்டங்கள் மதிப்பை பெறுகிறது, ஏனென்றால் அதனுள் மனித உழைப்பு, என்ற அரூவமான ஒன்று, அதனுள் அடங்கி ஸ்தூல வடிவம் பெருகிறது என்பதினால் மட்டுமே" (மூலதனம் பக்கம் 46)

அப்படியானால் இந்த மதிப்பு எவ்வாறு அளக்கப்படுகிறது. எளிமையாகச் சொன்னால் மதிப்பை உருவாக்கும், உழைப்பு நேரத்தால் அளக்கப்படுகிறது, மணி, நாள், வாரம் என்ற கால அளவால் அது அளக்கப்படுகிறது.

சிலர் கருதலாம், ஒரு பொருளின் மதிப்பு அதனை உருவாக்க செலவான நேரம்தான் என்றால் "அதிக நேரம் தாக்காட்டி அல்லது காலம் தாழ்த்தி திறமைக்குறைவுடன் நீண்ட நேரம் செலவழித்து உருவாக்குகிற பொருளுக்கு மதிப்பு கூடிவிடும். ஏன் என்றால் இதன் மூலம் அதிகம் நேரம் செலவாகிறது. இது புரிந்து கொள்ளாமல் கருதுவதாகும்.

இங்கு ஒரு பொருளின் உள் அடங்கி மதிப்பாக மாறும் உழைப்பு என்பது, ஒரே தரமான, சீரான உழைப்பையே குறிக்கிறோம். ஒரு சமூகத்தின் மொத்த உழைப்பும், அந்த சமூகத்தில் உருவான மொத்த சரக்கிலும் அடங்கியிருக்கிறது. இந்த மொத்த உழைப்பும் எண்ணத்தொலையாத சரக்குகளை உருவாக்கி அதனுள் அடங்கியிருக்கிறது.

அந்த வகையில் ஒவ்வொன்றும் அந்த சமூகத்தின் சராசரி உழைப்பு நேரத்தை கொண்டதாக உள்ளது. ஒவ்வொரு சரக்கும் உற்பத்தியாக இந்த சராசரி நேரமே, அல்லது சமூக ரீதியாக அவசியமான நேரமே மதிப்பாக மாறுகிறது.

அதாவது ஒரு பண்டத்தை உருவாக்க சமூக அளவில் அவசியமான உழைப்பு நேரம் என்றால், சாதாரண நிலையில் சராசரி திறனோடும், அழுத்தத்தோடும் செலவிடுகிற நேரமே ஆகும்,. இங்கிலாந்து நாட்டில் பவர்லூம் வந்தபொழுது கைத்தறியால் நெய்கிறபொழுது ஒரு குறிப்பிட்ட அளவு துணியை நெய்ய நேரம் பிடிக்குமோ அது சரிபாதியாக குறைந்தது. கைத்தறி நெசவாளிக்கோ, அதே நேரம்தான் அதே அவ்வளவு துணியை நெய்ய பிடித்தது. இதனால் இந்த துணி நெய்ய சமூக உழைப்பு நேரம் சரிபாதியாக குறைந்ததால் மதிப்பும் சரிபாதி குறைந்துவிட்டது.

ஒரு சரக்கின் பரிவர்த்தனை மதிப்பிற்கு அடிப்படை "உழைப்பு நேரமே" என்று மார்க்ஸ் கூறுகிற உண்மையை முதலாளித்துவ மட்டரக் பொருளாதார நிபுணர்கள் ஏற்பதில்லை. அவர்கள் "மார்ஜினல் யுட்டிலிட்டி" என்ற கோட்பாட்டை முன்வைத்து, உழைப்புக் கோட்பாட்டை நிராகரிக்கின்றனர்.

எந்த மதிப்பானாலும் அளந்து சொல்லவேண்டும் என்பதால் சரக்கின் குணத்தின்பாற்பட்ட உபயோகமதிப்பை எவ்வாறு அளப்பது என்பது அடுத்த கேள்வியாக எழுகிறது. இதற்கு இந்த மட்டரக பொருளாதார நிபுணர்கள் உபயோக மதிப்பு என்பது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு அளவுதான் இருக்கும். அதற்குமேல் போனால் திகட்டிவிடும். இவ்வாறு மனிதனின் திருப்தியையும், ஆசையையும் வரைபடம் மூலம் கண்டு, மார்ஜினல் யுட்டிலிட்டியை கண்டுபிடிக்க முனைகின்றனர்.

அவர்கள் என்ன வாதிட்டாலும், "உழைப்பு நேரமே" ஒரு பொருளை உருவாக்க ஆகும் செலவை கணக்கிட அடிப்படையாகும் என்பதை அவர்களது அக்கவுன்டென்டுகளே கூறுவர். காரணம் எல்லாத் தொழிற்சாலைகளிலும் உற்பத்தி இவ்வாறுதான் கணக்கிடப் படுகிறது. தொழிலாளிக்கு சம்பளம் வழங்கும் பொழுதும் உழைப்பு நேரமே அடிப்படையா [illegible]

முதலாளித்துவ கோட்பாடும், மார்க்சின் கோட்பாடும்

ரி உழைப்பு நேரத்தை கொண்டதாக உள்ளது. ஒவ்வொரு சரக்கும் உற்பத்தியாக இந்த சராசரி நேரமே, அல்லது சமூக ரீதியாக அவசியமான நேரமே மதிப்பாக மாறுகிறது.

அதாவது ஒரு பண்டத்தை உருவாக்க சமூக அளவில் அவசியமான உழைப்பு நேரம் என்றால், சாதாரண நிலையில் சராசரி திறனோடும், அழுத்தத்தோடும் செலவிடுகிற நேரமே ஆகும்,. இங்கிலாந்து நாட்டில் பவர்லூம் வந்தபொழுது கைத்தறியால் நெய்கிறபொழுது ஒரு குறிப்பிட்ட அளவு துணியை நெய்ய நேரம் பிடிக்குமோ அது சரிபாதியாக குறைந்தது. கைத்தறி நெசவாளிக்கோ, அதே நேரம்தான் அதே அளவு துணியை நெய்ய பிடித்தது. இதனால் இந்த துணி நெய்ய சமூக உழைப்பு நேரம் சரிபாதியாக குறைந்ததால் மதிப்பும் சரிபாதி குறைந்துவிட்டது.

ஒரு சரக்கின் பரிவர்த்தனை மதிப்பிற்கு அடிப்படை "உழைப்பு நேரமே" என்று மார்க்ஸ் கூறுகிற உண்மையை முதலாளித்துவ மட்டரக பொருளாதார நிபுணர்கள் ஏற்பதில்லை. அவர்கள் "மார்ஜினல் யுட்டிலிட்டி" என்ற கோட்பாட்டை முன்வைத்து, உழைப்புக் கோட்பாட்டை நிராகரிக்கின்றனர்.

எந்த மதிப்பானாலும் அளந்து சொல்லவேண்டும் என்பதால் சரக்கின் குணத்தின்பாற்பட்ட உபயோகமதிப்பை எவ்வாறு அளப்பது என்பது அடுத்த கேள்வியாக எழுகிறது. இதற்கு இந்த மட்டரக பொருளாதார நிபுணர்கள் உபயோக மதிப்பு என்பது ஒவ்வொரு, மனிதனுக்கும் ஒரு அளவுதான் இருக்கும். அதற்குமேல் போனால் திகட்டிவிடும். இவ்வாறு மனிதனின் திருப்தியையும், ஆசையையும் வரைபடம் மூலம் கண்டு, மார்ஜினல் யுட்டிலிட்டியை கண்டுபிடிக்க முனைகின்றனர்.

அவர்கள் என்ன வாதிட்டாலும், "உழைப்பு நேரமே" ஒரு பொருளை உருவாக்க ஆகும் செலவை கணக்கிட அடிப்படையாகும் என்பதை அவர்களது அக்கவுன்டென்டுகளே கூறுவர். காரணம் எல்லாத் தொழிற்சாலைகளிலும் உற்பத்தி இவ்வாறுதான் கணக்கிடப் படுகிறது. தொழிலாளிக்கு சம்பளம் வழங்கும் பொழுதும் உழைப்பு நேரமே அடிப்படையா கும்.

முதலாளித்துவ கோட்பாடும், மார்க்சின் கோட்பாடும்

அவரவர் சார்ந்திருக்கும் வர்க்க நலன்களால் முரண்பட்டு நிற்கிறது. அதற்குமேல் விஞ்ஞான ரீதியாக ஒரு சரக்கின் மதிப்பு அதில் அடங்கியிருக்கும், "சமூக ரீதியான குறைந்த பட்ச வேலை நேரமே" என்பதை மறுப்பவர் யாருமில்லை.

பரிவர்த்தனை – பண்டமாற்றல் – பணப்புழக்கம்

சரக்கு தானாக சந்தைக்கு வருவதில்லை. அதை ஒருவர் கொண்டுவந்து கைமாற்றுகிறார். இவ்வாறு கைமாறும்பொழுது என்ன நிகழ்கிறது?

தனக்கு தேவையான ஒன்றை (பயன்படும் உழைப்பே தனக்கு தேவையில்லாத ஆனால் இன்னொருவருக்கு பயன்படுவதை கொடுத்துப் பெறுகிறார். ஆக, இருவரும் பயன்படும் மதிப்பை கைமாற்றுகிறார்கள். எதன் அடிப்படையில் இது நிகழ்கிறது? அதில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரம் இந்த பரிவர்த்தனைக்கு அடிப்படையாகும். ஒரு பொருளை பணத்திற்கு வாங்கி இன்னொரு பொருளை வாங்குவதும், பணமில்லாமலே அப்பொருட்களை கைமாற்றுவதும் ஒன்றுதான். ஆனால் பணம் என்ற ஒன்று ஏன் தோன்றியது. அது சரக்குகளின் பரிவர்த்தனைய லகுவாக்க நடைமுறையில் உருவானது. தங்கமும், வெள்ளியும், நாணயமாக புழக்கத்தில் வந்தது. இவ்வாறு பரிவர்த்தனை கருவியாக பணம் செயல்படும்பொழுது என்ன நிகழ்கிறது. சரக்கு–பணம்–சரக்கு, இங்கு பணமென்பது (தங்கமும், வெள்ளியும்) மதிப்புக்களை அளக்கும் வேலையை செய்கிறது.

அதாவது, 1 டன் இரும்பில் அடங்கியிருக்கும் உழைப்பு சக்தியை, பணமென்றும், கற்பனை வடிவில் அளக்கிறோம்.

300 கிலோ வேஸ்ட் பேப்பரை விற்று (கிலோ ரூபாய்க்கு) 1 கிராம் தங்கம் வாங்கியதாக கொண்டால் என்ன பொருள்? 300 கிலோ வேஸ்ட் பேப்பரை சேகரிக்க செலுத்தப்பட்ட மனித உழைப்பும், 1 கிராம் தங்கம் பெற செலுத்தப்பட்ட உழைப்பும் கைமாறுகிறது என்று பொருளாகும்.

ஆரம்பத்தில் சரக்குகளின் பரிவர்த்தனையை உருவாக்கவே, பணம் அல்லது நாணயம் தோன்றியது. அதாவது சரக்குகள் புழங்க பணம் கருவியானது. இது காலப்போக்கில் தலைகீழான நிலையை உருவாக்கியது. அதாவது பணப் ...

கம், சரக்குகளின் உற்பத்திக்கும், புழக்கத்திற்கு அடிப்படையாக மாறிவிட்டது. வாணிபம் என்பது உற்பத்திக்கு உயிர் நாடியாகியது.

அதாவது அன்றுவரை உற்பத்தியில் இருந்துவந்த நிலை சூத்திர பாணியில் சொன்னால் சரக்கு – பணம் – சரக்கு என்று இருந்தது. இது தலை கீழாக பின்னர் மாறி பணம்–சரக்கு–(அதிகப் பணம் என்ற நிலையை எய்தியது).

இப்பொழுது பணம், மதிப்பை அளக்கும் கருவி மட்டுமல்ல, அது இன்னொரு வேலையையும் செய்யவல்ல ... அடைகிறது. அதுமட்டுமல்ல அது ஒரு முரண்பாட்டிற்கவும் அமைகிறது.

மூலதனத்தின் முரண்பாடு

சரக்கு–பணம்–சரக்கு என்ற கட்டத்தில் நிலைமை என்ன, பரிவர்த்தனையின்போது சமமதிப்புக்களே கைமாறும் என்பதாகும். ஆனால் பணம்–சரக்கு–பணம் என்று ஆனபொழுது நிலைமை என்ன? கொஞ்சபணம் போட்டு கூடுதல் பணம் பெறுவதாகும். 5 ரூபாய் கொடுத்தால் யாராவது 10 ரூபாய் தருவார்களா. பரிவர்த்தனையின்போது சமமதிப்பே கைமாறும் என்ற விதியை மீறமுடியாது போது இங்கு இது எவ்வாறு நிகழ்கிறது?

உதாரணத்துடன் பார்த்தால் விளங்கும்.

திருவாளர் பணமூட்டை, விருத்தகிரி என்பவரிடம் 10 ரூபாய்க்கு ஒரு பொருளை வாங்கி, அருணகிரி என்பவருக்கு 15 ரூபாய்க்கு விற்பதாக கொள்வோம். இதன்மூலம் 10 ரூபாய் போட்ட பணமூட்டைக்கு 15 ரூபாய் கிடைத்தது.. ஐந்து ரூபாய் லாபம் வந்தது. ஆனால் இதே மாதிரி பணமூட்டை தொடர முடியாது. ஒரு கட்டத்தில் அருணகிரி விபரம் தெரிந்தவுடன் அவரே நேரே போய் 10 ரூபாய்க்கு விருத்தகிரியிடம் வாங்குவார். அல்லது அருணகிரியிடம் விருத்தகிரி 15 ரூபாய்க்கு கொடுப்பாரே தவிர பணமூட்டைக்கு 10 ரூபாய்க்கு கொடுக்கமாட்டார். அல்லது பண மூட்டையின் மூலம்தான் பரிவர்த்தனை என்றால், விருத்தகிரி, அருணகிரியிடம் பெற்றதை பண மூட்டையிடம் விடமாட்டார்.

அடுத்து இவ்வாறு பரிவர்த்தனை ஆவதினால் புதிதாக

அவரவர் சார்ந்திருக்கும் வர்க்க நலன்களால் முரண்பட்டு நிற்கிறது. அதற்குமேல் விஞ்ஞான ரீதியாக ஒரு சரக்கின் மதிப்பு அதில் அடங்கியிருக்கும், "சமூக ரீதியான குறைந்த பட்ச வேலை நேரமே" என்பதை மறுப்பவர் யாருமில்லை.

பரிவர்த்தனை — பண்டமாற்றல் — பணப்புழக்கம்

சரக்கு தானாக சந்தைக்கு வருவதில்லை. அதை ஒருவர் கொண்டுவந்து கைமாற்றுகிறார். இவ்வாறு கைமாறும்பொழுது என்ன நிகழ்கிறது?

தனக்கு தேவையான ஒன்றை (பயன்படும் [illegible] தனக்கு தேவையில்லாத ஆனால் இன்னொருவருக்கு பயன்படுவதை கொடுத்துப் பெறுகிறார். ஆக, இருவரும் பயன்படும் மதிப்பை கைமாற்றுகிறார்கள். எதன் அடிப்படையில் இது நிகழ்கிறது? அதில் அடங்கியிருக்கும் உழைப்பு நேரம் இந்த பரிவர்த்தனைக்கு அடிப்படையாகும். ஒரு பொருளை பணத்திற்கு வாங்கி இன்னொரு பொருளை வாங்குவதும், பணமில்லாமலே அப்பொருட்களை கைமாற்றுவதும் ஒன்றுதான். ஆனால் பணம் என்ற ஒன்று ஏன் தோன்றியது. அது சரக்குகளின் பரிவர்த்தனைய லகுவாக்க நடைமுறையில் உருவானது. தங்கமும், வெள்ளியும், நாணயமாக புழக்கத்தில் வந்தது. இவ்வாறு பரிவர்த்தனை கருவியாக பணம் செயல்படும்பொழுது என்ன நிகழ்கிறது. சரக்கு–பணம்–சரக்கு, இங்கு பணமென்பது (தங்கமும், வெள்ளியும்) மதிப்புக்களை அளக்கும் வேலையை செய்கிறது.

அதாவது, 1 டன் இரும்பில் அடங்கியிருக்கும் உழைப்பு சக்தியை, பணமென்றும், கற்பனை வடிவில் அளக்கிறோம்.

300 கிலோ வேஸ்ட் பேப்பரை விற்று (கிலோ [illegible] ரூபாய்க்கு) 1 கிராம் தங்கம் வாங்கியதாக கொண்டால் என்ன பொருள்? 300 கிலோ வேஸ்ட் பேப்பரை சேகரிக்க செலுத்தப்பட்ட மனித உழைப்பும், 1 கிராம் தங்கம் பெற செலுத்தப்பட்ட உழைப்பும் கைமாறுகிறது என்று பொருளாகும்.

ஆரம்பத்தில் சரக்குகளின் பரிவர்த்தனையை உருவாக்கவே, பணம் அல்லது நாணயம் தோன்றியது. அதாவது சரக்குகள் புழங்க பணம் கருவியானது. இது காலப்போக்கில் தலைகீழான நிலையை உருவாக்கியது. அதாவது பணப் [illegible]

எதுவும் மதிப்புத் தோன்றுவதில்லை. 10 ரூபாய் மதிப்புள்ள பொருள் ஒருவர் 15 ரூபாய் மதிப்புள்ள பொருளோடு பரிவர்த்தனை செய்தாலும், மொத்த மதிப்பு 25 ரூபாய் என் பது உயராது.

ஆக பரிவர்த்தனையின் விதியின்படி லாபம் பெறமுடியாது என்றாலும் நடைமுறையில் லாபம் கிட்டுகிறதே அதனை எவ்வாறு விளக்குவது?

ஆரம்ப கால பொருளாதார நிபுணர்கள் பரிவர்த்தனை தான் லாபத்தின் அடிப்படை என்று கருதினர். அவ்வாறே எழுதியும் சாதித்தனர். மார்க்ஸ்தான் லாபத்தின் ஊற்றுக் கண்ணை தெளிவாக்கினார். அவரது உபரிமதிப்பு கோட்பாடே லாபம் எவ்வாறு தோன்றுகிறது என்பதை அறிவுக்குப் பொருத்தமாக விளக்கியது. ஆனால் முதலாளித்துவ மட்டரக பொருளாதார நிபுணர்கள் வேறுமாதிரி வாதித்தனர். மூலதனம் என்பது ஒரு மந்திரசக்தி படைத்தது. அதிலிருந்து லாபம் கொட்டிக் கொண்டே இருக்கும் என்று எழுதிவைத்தனர். மார்க்ஸை மறுக்க வந்த பாம்பவெர்க் என்ற பொருளாதார நிபுணர் தான் முதலில் இவ்வாறு எழுதினார்.

உபரி மதிப்பு

ஒரு பண்டத்தை ஒருவர் செய்து அதனை இன்னொரு பண்டத்திற்கு பரிவர்த்தனை செய்வதின் மூலம் லாபம் உருவாகாது. உபரி மதிப்பு என்பது தொழிலாளி உழைப்பை செலுத்தி உருவாக்கும்பொழுது உபரிமதிப்பையும் அவர் உருவாக்குகிறார். அதனை முதலாளி அபகரிக்கிறார். எவ்வாறு?

அதனை கிழ்க்கண்டவாறு கூறலாம்

கச்சாப்பொருள் எந்திரத்தின் மதிப்பு ரூ.40

தொழிலாளிக்குக் கூலி ரூ.10

தொழிலாளி அந்த எந்திரத்தின் மூலம் உருவாக்கிய பொருளை முதலாளி 60 ரூபாய்க்கு விற்பதாகக் கொள்வோம்.

முதலாளி கூறுவார்: "50 ரூபாய் முடக்கி பொருளைத் தயாரித்து 60 ரூபாய்க்கு விற்று 10 ரூபாய் லாபம் சம்பாதித்தேன்" என்பார்.

தொழிலாளி கூறுவார்: " நான் உன்னிடம் 10 ரூபாய் பெற்றுக்கொண்டு நீ கொடுத்த எந்திரத்தில், நீ கொடுத்த கச்சாப் பொருளில் எனது உழைப்பை செலுத்தி 40 ரூபாய் மதிப்புள்ள பொருளை 60 ரூபாய் மதிப்புள்ள பொருளாக உயர்த்தினேன். அதாவது எனது உழைப்பால் 20 ரூபாய் மதிப்புக் கூடியது. நீ கொடுத்ததோ 10 ரூபாய்தான். நான் கொடுத்ததோ 20 ரூபாய் என்பார்".

இந்த உபரி மதிப்பை சுரண்ட முதலாளி என்ன வாதிட்டாலும், இதனை உருவாக்கியது தொழிலாளியின் உயிருள்ள உழைப்பு என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஆனால் முதாலாளி என்ன கூறுவார்?

பரிவர்த்தனை விதியின்படி உனது உழைப்பின் மதிப்பான ரூபாய் 10 கொடுத்து வாங்கிவிட்டேன். அந்த உழைப்பு எனக்குச் சொந்தமானது. எனவே உபரிமதிப்பை உனது உழைப்பு உருவாக்கினாலும் 'உபரி மதிப்பு' என்னுடையதே, இப்பொழுது தொழிலாளி எதுவும் கூறமுடியாது திகைப்பார்.

சிறிது நேரம் யோசிப்பார், பின்னர் அவர் கூறுவார்:

உபரிமதிப்பை நான் உருவாக்கினாலும் நான் சொந்தம் கொண்டாட முடியாது என்பது எவ்வளவு சரியோ, அதே அளவு உனக்கு சொந்தமல்ல, காரணம் நீ கொடுத்த 10 ரூபாய்க்கு நான் கொடுத்ததிலிருந்து நீ பெற்றுவிடுகிறாய். மீதம் சமூகத்திற்கே சொந்தமானது. காரணம், சமூக முழுமையும் தொழில் முறையால் பிரிந்து, இணைந்து வேலை செய்யவில்லையானால் இந்தப் பொருளை நான் செய்திருக்க முடியாது. எனவே ஒரு தனிப்பட்ட தொழிலாளி உருவாக்கினாலும் அது உழைக்கும் வர்க்கம் முழுமைக்கும் சொந்தமாகிவிடுகிறது என்று முதலாளியின் சுரண்டலுக்கு முற்றுப் புள்ளி வைப்பான்.

உழைப்பு சக்தியும் — அதனுடையமதிப்பும்

உழைப்பு சக்தி என்பது உற்பத்தியின்போது பயன்படும் உடல், அறிவு இரண்டின் திறனாகும். எல்லா சமூகத்திலும் உழைப்பு சக்தி மனிதனுக்கு இருந்தது. ஆனால் ஒரு சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில்தான் அது ஒரு சரக்காக மாறுகிறது.

ஒருவர் தனது உழைப்பை யாருக்கு வேண்டுமானாலும்

விற்கும் உரிமை இருக்க வேண்டும்., இப்படி ஒரு நிலை ஆதிகாலத்தில் கிடையாது.

உழைப்பு சக்தியை தனி வாழ்விற்கு தேவையானதையும்,, உற்பத்தி கருவியையும் இணைந்து நிற்கவேண்டும். வாழ்வதற்கு உழைப்பு சக்தியை விற்காமல் வேறு வழியில்லை, என்ற நிலையை அடைந்து இருக்க வேண்டும்.

மற்ற சரக்கைப் போலவே உழைப்பும் இரட்டைக்குணம் கொண்டதாகும். பயன்படும் மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு என்று இரண்டு குணங்களையும் கொண்டதாகும். உழைப்பு என்பது உபரி மதிப்பை உருவாக்கும் சரக்காகும்.

முதலாளித்துவ சமூகத்தின் அடிப்படை விதிகள்: சுரண்டலை அளப்பது எப்படி

தொழிலாளர்களின் உழைப்பின் உபரி மதிப்பையும் பெறுவதே முதலாளித்துவத்தின் அடிப்படை பொருளாதார விதியாகும்.

ஒரு தொழிலாளி வேலை செய்யும்பொழுது முதலில் அவரது சம்பளத்திற்கு ஈடானதை உற்பத்தி செய்து பின்னர் முதலாளிக்கு சேரவேண்டிய உபரி மதிப்பையும் உருவாக்குகிறார். அவரது உழைப்பின் மதிப்பையும் பெற உழைக்கிற நேரத்தை அவசியமான உழைப்பு நேரமென்றும், மீதியை உபரி உழைப்பு நேரமென்றும் அழைக்கிறோம்.

$$\frac{\text{உபரி மதிப்பு உழைப்பு நேரம்}}{\text{அவசியமான உழைப்பு நேரம்}}$$

என்ற விகிதமே சுரண்டலின் விகிதாசாரமாகும்.

சுரண்டலின் அளவை கணக்கிடுவது எவ்வாறு?

உபரி மதிப்பிற்கும், மாறும் மூலதனத்திற்கும் உள்ள விகிதாசாரமே சுரண்டலின் அளவை குறிப்பதாகும்.

மூலதனம் என்பது இரண்டு பாகங்களைக் கொண்டது.

1. கட்டிடம், உற்பத்திக் கருவிகளின் மதிப்பை நிலையான மூலதனம் என்கிறோம். ஏனெனில், இதில் அடங்கியுள்ள மதிப்பு உற்பத்தியின்போது கூடுவதில்லை.

2. மாறும் மூலதனம் என்பது உழைப்பை பெற செலவிடும் பணமாகும். இதுதான் உற்பத்தியின்போது பெருகுகிறது.

$$\frac{\text{உபரி மதிப்பு}}{\text{மாறும் மூலதனம்}} \times 100$$ என்பது சுரண்டலின் அளவாகும்.

$$\frac{\text{உபரி மதிப்பு}}{\text{தொழிலாளர்களின் உழைப்பை பெற செலவிடும் மூலதனம்}} \times 100$$

உற்பத்தியில் ஈடுபடும்பொழுதும், மூலதனம் இரண்டு ரகமாக இருக்கிறது. எந்திரம், கட்டிடம் ஆகியவற்றில் முடக்கியிருக்கும் மூலதனத்தை கொஞ்சம் கொஞ்சமாக தேய்வதால் அசையா மூலதனம் என்று அழைக்கிறோம். அவைகள் சரக்கில் சேர்ந்து, விற்பனை வரவாக வந்தவுடன் மீண்டும் கச்சாப் பொருள் பெற செலவழிக்கப்படுகிறது.

நிலையான மூலதனம், மாறும் மூலதனம், - அசையா மூலதனம், சுழலும் மூலதனம் இரண்டு ரகமாக ஏன் பிரிக்கிறோம்.

அசையா மூலதனம், அல்லது நிலையான மூலதனம் என்பது உபரி மதிப்பை உருவாக்கவில்லை,. மாறும் மூலதனம் அல்லது சுழலும் மூலதனமே உபரி மதிப்பை பெற பயன்படுகிறது.

மூலதனத்தின் வீழ்ச்சி

மூலதனம் குவிய குவிய, அதுவே அதன் வீழ்ச்சிக்கு காரணமாய்விடுகிறது. உபரி மதிப்பை பெறவேண்டும் என்ற ஆசையானது,. சமுதாயத்தையே மேலும் மேலும் முதலாளி, தொழிலாளி என்ற வர்க்கப் பிரிவினைக்கு இட்டுச் செல்கிறது. உழைப்பின் மதிப்பை குறைக்கவும், உபரி மதிப்பில் அளவைக் கூட்டவும் எடுக்கும் முயற்சிகள் வர்க்கப் போராட்டத்தை முன்னுக்கு கொண்டு வருகிறது. ஒரு கட்டத்தில் தொழிலாளி வர்க்கம், அரசியல் அதிகாரத்தை கைப்பற்றி உபரி மதிப்பை சமூகத்தின் நன்மைக்காக திருப்பிவிடுகிறது.

உபரி மதிப்பு எவ்வாறு பங்கிடப்படுகிறது?

லாபம், வட்டி, நில வாடகை என்று முதலாளிகள், பைனான்சியர்கள், நிலப்பிரபுக்கள் உபரி மதிப்பை தங்களுக்

விற்கும் உரிமை இருக்க வேண்டும்., இப்படி ஒரு நிலை ஆதிகாலத்தில் கிடையாது.

உழைப்பு சக்தியை தனி வாழ்விற்கு தேவையானதையும்,, உற்பத்தி கருவியையும் இணைந்து நிற்கவேண்டும். வாழ்வதற்கு உழைப்பு சக்தியை விற்காமல் வேறு வழியில்லை, என்ற நிலையை அடைந்து இருக்க வேண்டும்.

மற்ற சரக்கைப் போலவே உழைப்பும் இரட்டைக்குணம் கொண்டதாகும். பயன்படும் மதிப்பு, பரிவர்த்தனை மதிப்பு என்று இரண்டு குணங்களையும் கொண்டதாகும். உழைப்பு என்பது உபரி மதிப்பை உருவாக்கும் சரக்காகும்.

முதலாளித்துவ சமூகத்தின் அடிப்படை விதிகள்: சுரண்டலை அளப்பது எப்படி

தொழிலாளர்களின் உழைப்பின் உபரி மதிப்பையும் பெறுவதே முதலாளித்துவத்தின் அடிப்படை பொருளாதார விதியாகும்.

ஒரு தொழிலாளி வேலை செய்யும்பொழுது முதலில் அவரது சம்பளத்திற்கு ஈடானதை உற்பத்தி செய்து பின்னர் முதலாளிக்கு சேரவேண்டிய உபரி மதிப்பையும் உருவாக்குகிறார். அவரது உழைப்பின் மதிப்பையும் பெற உழைக்கிற நேரத்தை அவசியமான உழைப்பு நேரமென்றும், மீதியை உபரி உழைப்பு நேரமென்றும் அழைக்கிறோம்.

$$\frac{\text{உபரி மதிப்பு உழைப்பு நேரம்}}{\text{அவசியமான உழைப்பு நேரம்}}$$

என்ற விகிதமே சுரண்டலின் விகிதாசாரமாகும்.

சுரண்டலின் அளவை கணக்கிடுவது எவ்வாறு?

உபரி மதிப்பிற்கும், மாறும் மூலதனத்திற்கும் உள்ள விகிதாசாரமே சுரண்டலின் அளவை குறிப்பதாகும்.

மூலதனம் என்பது இரண்டு பாகங்களைக் கொண்டது.

1. கட்டிடம், உற்பத்திக் கருவிகளின் மதிப்பை நிலையான மூலதனம் என்கிறோம். ஏனெனில், இதில் அடங்கியுள்ள மதிப்பு உற்பத்தியின்போது கூடுவதில்லை.

2. மாறும் மூலதனம் என்பது உழைப்பை பெற செலவிடும் பணமாகும். இதுதான் உற்பத்தியின்போது பெருகுகிறது.

$$\frac{\text{உபரி மதிப்பு}}{\text{மாறும் மூலதனம்}} \times 100$$ என்பது சுரண்டலின் அளவாகும்.

$$\frac{\text{உபரி மதிப்பு}}{\text{தொழிலாளர்களின் உழைப்பை பெற செலவிடும் மூலதனம்}} \times 100$$

உற்பத்தியில் ஈடுபடும்பொழுதும், மூலதனம் இரண்டு ரகமாக இருக்கிறது. எந்திரம், கட்டிடம் ஆகியவற்றில் முடக்கியிருக்கும் மூலதனத்தை கொஞ்சம் கொஞ்சமாக தேய்வதால் அசையா மூலதனம் என்று அழைக்கிறோம். அவைகள் சரக்கில் சேர்ந்து, விற்பனை வரவாக வந்தவுடன் மீண்டும் கச்சாப் பொருள் பெற செலவழிக்கப்படுகிறது.

நிலையான மூலதனம், மாறும் மூலதனம், – அசையா மூலதனம், சுழலும் மூலதனம் இரண்டு ரகமாக ஏன் பிரிக்கிறோம்.

அசையா மூலதனம், அல்லது நிலையான மூலதனம் என்பது உபரி மதிப்பை உருவாக்கவில்லை,. மாறும் மூலதனம் அல்லது சுழலும் மூலதனமே உபரி மதிப்பை பெற பயன்படுகிறது.

மூலதனத்தின் வீழ்ச்சி

மூலதனம் குவிய குவிய, அதுவே அதன் வீழ்ச்சிக்கு காரணமாய்விடுகிறது. உபரி மதிப்பை பெறவேண்டும் என்ற ஆசையானது, சமுதாயத்தையே மேலும் மேலும் முதலாளி, தொழிலாளி என்ற வர்க்கப் பிரிவினைக்கு இட்டுச் செல்கிறது. உழைப்பின் மதிப்பை குறைக்கவும், உபரி மதிப்பில் அளவைக் கூட்டவும் எடுக்கும் முயற்சிகள் வர்க்கப் போராட்டத்தை முன்னுக்கு கொண்டு வருகிறது. ஒரு கட்டத்தில் தொழிலாளி வர்க்கம், அரசியல் அதிகாரத்தை கைப்பற்றி உபரி மதிப்பை சமூகத்தின் நன்மைக்காக திருப்பிவிடுகிறது.

உபரி மதிப்பு எவ்வாறு பங்கிடப்படுகிறது?

லாபம், வட்டி, நில வாடகை என்று முதலாளிகள், பைனான்சியர்கள், நிலப்பிரபுக்கள் உபரி மதிப்பை தங்களுக்

குள் பங்கீடு செய்கின்றனர். இது சுரண்டும் கூட்டத்திற்குள்ளும் நிரந்தர வேறுபாட்டை உருவாக்குகிறது.

மூலதனம் சுழன்று உற்பத்தியில் திரும்ப ஈடுபடுகிறது. ஒரு வருடத்தில் மொத்த உற்பத்தியை மொத்த சமூக உற்பத்தி என்கிறோம். மூலதனங்கள் முழுவதையும் கூட்டி மொத்த சமூக மூலதனம் என்கிறோம். சரக்கு வடிவத்தில்தான் மொத்த சமூக உற்பத்தி இருக்கும். அதனுடைய மதிப்பிற்கேற்ப நிலையான மூலதனம், மாறும் மூலதன்ம், உபரி மதிப்பு என்று இந்த மொத்த உற்பத்தி பிரிகிறது.

இதில், நிலையான மூலதனம் தவிர மற்றவை நிகழ்வை சமூக உழைப்பால் உருவானது; இதனை நாம் தேசிய வருமானம் என்கிறோம். நிலையான மூலதனமும், இறந்தகால உழைப்பும்தான் சமூகத்தில் மொத்த ம்திப்பென்பது, சரக்குகளின் வடிவங்களில் இருந்தாலும், இரண்டு ரகமாக இருக்கிறது. ஒன்று; உற்பத்தி சாதனங்கள்; இரண்டு, நுக்ரும் பொருட்கள்.

டிபார்ட்மெண்ட் – 1 : உற்பத்தி சாதனங்களின் உற்பத்தி
டிபார்ட்மெண்ட் – 2 : நுகரும் பொருள்களின் உற்பத்தி

இவை இரண்டும் சேர்ந்துதான் சமூகத்தின் மொத்த மதிப்பாகிறது. மூலதனம் சுழன்று இயங்குவதில் நெருக்கடிகள் ஏற்படுகிறது. முதலாளிகள் ஒவ்வொரு கட்டத்திலும் உபரி மதிப்பை அடைய முயலுகிறார்கள். பண வடிவம், உற்பத்தி சாதன வடிவம், சரக்கு வடிவம் — மூன்று கட்டங்களை சுழன்று வருகிற மூலதனமாவது சமுதாயத்தில் நிரந்தர வறுமை, நிச்சயமற்ற தன்மை, ஆகியவைதளை உருவாக்கிறது.

மறுபக்கம் மூலதனம் உலகம் பூராவும் பரவுகிறது. இதனால், போட்டி ஏற்படுகிறது. போட்டிகள் ஏகாதிபத்திய யுத்தங்களாக வெடிக்கின்றன. தொழிலாளர்களின் அரசியல் இயக்கம் வளர்ந்து; சமாதானம், சோஷலிஸம் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய திட்டமிட்ட பொருளாதாரம் என்ற கோஷங்களோடு மூலதனத்தின் ஆதிக்கத்தை எதிர்க்கின்றனர். இரண்டு சர்வதேச சக்திகளாக எதிரும் புதிருமாக நிற்கின்றன.

சுதந்திரமாக முதலாளிகள், சுதந்திரமான போட்டி, அரசாங்கம் தலையிடக் கூடாது என்பதே முதலாளித்துவத்தின்

தாரக மந்திரமாகும். ஆனால், 20–ம் நூற்றாண்டில் துவக்கத்தில் மார்க்கெட் பொருளாதாரம் மிகப் பெரிய நெருக்கடியை சந்தித்தது. எனவே, அரசு தலையிட வேண்டிய நிலை ஏற்பட்டது. அரசாங்க ஏகபோக முதலாளித்துவம் என்பது ஏகபோக முதலாளியைப்போல் அரசே நடந்துகொள்ளும் சட்டமாகும்.

அரசும், ஏகபோகமும் ஒன்றாக ஆகிவிடுவதால் முதலாளிகளுக்கு சுதந்திரம் பறிபோனதாக பொருள் இல்லை. ஏகபோக முதலாளிகள் முன்புபோல் சுதந்திரமாக செயல்படுவது தடையிருக்காது. இதன் மூலம் ஏகபோக முதலாளிகளுக்கு சாதகமாக, தேசிய வருமானத்தை திருப்பி விடவும், இராணுவ உற்பத்தியையும் முதலாளிகள் செய்து லாபமடையவும் அரசாங்க ஏகபோக முதலாளித்துவம் உதவுகிறது. ஆராய்ச்சி நிறுவனங்கள் வைத்து புதிய கண்டுபிடிப்புகளை முதலாளிகளுக்கு உதவுகிறது. ஏகபோக முதலாளிகளின் ஆராய்ச்சி முறைகளுக்கு. இது உதவுகிறது. ஹிட்லரின் ஆட்சி முறை முதலாளித்துவ ஏகபோக அரசின் உச்சக்கட்டமாகும்.

உலக முதலாளித்துவ வளர்ச்சி

முதலில் முதலாளிகள் சரக்குகளை ஏற்றுமதி செய்து வியாபாரத்தின் மூலம் லாபம் சம்பாதித்தனர். ஒரு கட்டத்தில் மூலதனத்தை ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தனர். ஒவ்வொரு முதலாளியும் மற்ற நாடுகளை கச்சாப் பொருளின் இருப்பிடமாகவும், சரக்குகளின் சந்தையாகவும் இறுதியில் மூலதனம் போட்டு உபரி மதிப்பை சுரண்டுமிடமாகவும் கருதுகிறார். தேசபக்தி என்ற சீருடையை முதலாளி தூக்கி எறிந்துவிட்டு சுரண்டலுக்கு சர்வதேச சீருடையை தரிக்கிறார்.

பண நெருக்கடி

ஏற்கனவே நாடுகளாக உலகம் பிரிந்து பணப் புழக்கம் என்பது ஒவ்வொரு நாட்டின் எல்லைக்குள் இருக்கிற விவகாரமாய் உள்ளது; இது சர்வதேச ரீதியில் மதிப்பை சுரண்டுவதில் சிக்கல் ஏற்படுத்தியது. தங்கத்தையே மதிப்பின் இருப்பிடமாக நாடுகள் கருதியதால் தங்கமே உலக வியாபாரத்தில் உபரி மதிப்பை முதலாளிகள் தங்கமாக கொண்டு சென்றனர். முதல் உலக யுத்தம் முடிந்த பிறகு தங்கமாக தன் பணத்தை

மாற்றுவதை நாடுகள் செய்தன. ஏகாதிபத்திய நாடுகள் தங்களது ஆதிக்கமண்டலங்களிலே, தங்களது நாட்டு பணத்தை அங்கீகரித்தனர். இதனால் ஆதிக்கமண்டலத்தை தாண்டியிருக்கும் நாடுகளோடு வியாபாரம் செய்வதில் பெரும் சிக்கல் விளைந்தது. இரண்டாம் உலக யுத்தம் முடிந்த தருவாயில் சோஷலிஸ நாடுகளைத் தவிர மற்ற உலக நாடுகள் பண அமைப்பை கீழ்கண்டவாறு ஏற்றுக் கொண்டன.

1. தங்கத்திற்கு பதிலாக டாலர் சர்வதேச செலவாணியாக இனி இருக்கும். ஒரு கிராம் தங்கம் 1.1 டாலர் என்ற மதிப்பிடப்படும். இதனை அமெரிக்க அரசு வழங்க பொறுப்பேற்கும்.

2. நாணய பரிவர்த்தனை முறைப்படுத்த ஐ.எம்.எப். –சர்வதேச நிதி நிறுவனம் செயல்படும். இதில் தலைவனாக டாலர் அமர்ந்தது.

1970 – களில் இந்த டாலர் நாணய முறையில் நெருக்கடி ஏற்பட்டது. அமெரிக்கா தங்க அடக்கத்தை கொடுக்க மறுத்தது. தங்கத்தின் விலையை உயர்த்தியது. ஏகாதிபத்திய நாடுகளின் சமரசம் ஏற்பட்டு 'ஸ்பெஷல் டிராயிங் ரைட்' என்ற முறையில் முன்னணி நாடுகளின் நாணயங்களின் தொகுப்பாக உருவாக்கியுள்ளது. இப்பொழுது டாலர், யென், பிராங், பவுண்டு, மார்க் போன்ற நாணயங்கள் சர்வதேச மார்க்கெட்டில் செலாவணியாகும். பணமே, சந்தையில் ஒரு சரக்காகி வியாபாரத்திற்கு வந்துவிட்டது. பலநாடுகளிலே வங்கி கணக்குகளிலே வைத்திருப்பவர் "பண" வியாபாரம் செய்ய முடியும். பங்கு மூலதனம் என்பது இதற்கு பெரிதும் உதவுகிற சமாச்சாரம் ஆகிவிட்டது. நியூயார்க், பாரீஸ், லண்டன், டோக்கியோ போன்ற நகரங்களில் உலக பங்கு மார்க்கெட் ஒரு பெரிய தொழிலாகிவிட்டது. பன்னாட்டு நிறுவனங்களின் செயல்பாடுகளையும் நாம் அறிவோம்.

முதலாளித்துவ உற்பத்தி முறையின் உபரி மதிப்பை பெறுபது ஒன்றை மட்டுமே இறுதி லட்சியமாக கொண்டிருப்பதாலும் ஒவ்வொரு கட்டத்திலும் நெருக்கடியும், முரண்பாடுகளும் வளர்கின்றன. சர்வதேச இயக்கமும் இதனோடு சேர்ந்தே வளர்கிறது. சோஷலிஸ முகாம், கூட்டுச் சேரா நாடுகளின் இயக்கம் என்பது, புதிய சர்வதேச பொருளாதார உறவிற்கு பாடுபடுகின்றன. ஐக்கிய நாட்டு சபைகளின்

பொதுக்குழு கூட்டங்களிலும் ஏகாதிபத்திய நாட்டு நாணயங்களின் ஆதிக்கத்தினால் எவ்வாறு முன்னேற்றம் தடைப்படுகிறது என்பதை எடுத்துக் கூறுகின்றனர்.

எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் நெருக்கடி என்பது சுழன்று, சுழன்று வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டமும் ஒரு பெரும் பிரச்னையாகும். ஒரு நாட்டின் தேசிய வருமானம் நியாயமாக பங்குபோடப்படுவதில்லை. இதனால், வறுமை, அறியாமை, என்பது பெரும்பான்மையினரின் சொத்தாகிறது. இது நாட்டுக்கு நாடு வித்தியாசமான முறையில் இருந்தாலும் பணக்கார நாட்டிற்கும் இது பொருந்தும். சோஷலிஸம் என்பது திட்டமிட்ட பொருளாதாரம், உழைப்பிற்கேற்ற கூலி என்பது உத்திரவாதம், சோஷலிஸம் என்பது உழைப்பிற்கேற்ற கூலி என்பதால் ஏற்றத் தாழ்வான வருமானம் என்ற கட்டத்தை தாண்டவில்லை என்பது வெளிப்படை. இது சோஷலிஸ சமுகத்தில் சில பிரச்னைகளை உருவாக்கியிருக்கிறது. இந்த சிக்கலை பயன்படுத்தி மீண்டும் முதலாளித்துவ கட்சி முறையை சோஷலிஸ நாடுகளில் கொண்டுவர ஏகாதிபத்தியவாதிகள் முயலுகின்றனர். சோஷலிஸ நாட்டு தொழிலாளி வர்க்கம் இந்த பின்னடைவை சமாளிக்கும்.

இன்று முதலாளித்துவ உற்பத்தி முறை இயற்கையை கெடுக்கும் அளவிற்கு கண்மூடித்தனமாக வளர்ந்துள்ளது. உலகம் பாதுகாக்கப்பட வேண்டுமானால், லாபத்திற்காக உற்பத்தி என்பது போய் சமூக நலனிற்கும், இயற்கையை பாதுகாப்பதற்கும் என்ற நிலை வரவேண்டும். இன்று விஞ்ஞான தொழில்நுட்பம் இயற்கையை பாதுகாக்கும் நிலையை அடைந்துவிட்டது. பொருளாதார காரணங்களினால்தான் இயற்கை கெடுகிறது என்பது வெளிப்படை.

உலக கம்யூனிஸ்ட் இயக்கமும், சோஷலிஸ முகாமும் புதிய சர்வதேச உறவு இயற்கையைப் பாதுகாப்பது திட்டமிட்ட பொருளாதார என்ற கோட்பாட்டின் தலைவர்களாகத் திகழ்கின்றனர்.

வெகுஜன ஸ்தாபனங்களும்—கட்சியும்

கி. வரதராஜன்

பாடக் குறிப்பு

இன்று உலகம் முழுவதும் வெகுஜன ஸ்தாபனங்களுக்கும், கட்சிக்கும் உள்ள உறவு எப்படி இருக்க வேண்டும் என்ற விவாதம் எழுந்துள்ளது என்றால் அது மிகையல்ல.

இன்று சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் ஏற்பட்டுள்ள பிரச்னைகளைப் பரிசீலிக்கும்பொழுதுகூட பல முக்கிய அம்சங்களில் ஒன்றாக இந்த பிரச்னையும் எழுந்திருப்பதைக் காண முடியும். உதாரணத்திற்கு "பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது ஒரு கட்சியின் சர்வாதிகாரமாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சுருக்கப்பட்டுள்ளது" என்ற நிர்ணயிப்புக்குப் பின்னால் தொழிலாளி வர்க்கம் முழுவதும் செயல்படும் அமைப்பான தொழிற்சங்கங்களின் ஜனநாயகபூர்வமான செயல்பாடு எனும் பிரச்னையும், அதில் இக்கட்சிகளுக்கு இருந்த பலவீனமும் அடங்கியுள்ளது.

நமது கட்சியில் அகில இந்திய அளவில் ஒரு காலத்தில் தொழிற்சங்கமும், விவசாய சங்கமும் மட்டுமே நமது ஊழியர்கள் தலைமை தாங்கும் பிரதான ஸ்தாபனங்களாக இருந்தன. ஜனநாயக வாலிபர் சங்கம், மாதர் சங்கம், மாணவர் சங்கம் ஆகியன இன்றுள்ளது போல் வலுவான அகில இந்திய அமைப்புகளாக உருவாகியிருக்கவில்லை. இதனைத் தொடர்ந்து கட்சியும், வெகுஜன ஸ்தாபனங்களுக்கும் உள்ள உறவு கூர்மையாக முன்னுக்கு வந்தது. இதனை ஒட்டி கட்சியின் மத்திய கமிட்டி 1981– ம் வருடம் மார்ச் மாதக் கூட்டத்தில் விவாதித்து ஒரு வழிகாட்டலை அளித்துள்ளது. இது, "வெகுஜன ஸ்தாபனங்கள் பற்றி" என்ற தலைப்பில் சிறு பிரசுரமாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

வெகுஜன ஸ்தாபனங்கள் எவை? எதற்கு?

தொழிற்சங்கங்கள், விவசாய சங்கங்கள், மாணவர், மாதர், வாலிபர் அமைப்புகள், எழுத்தாளர் இயக்கம், கூட்டுறவு அமைப்புகள் ஆகிய வெகுஜனங்கள் பங்கேற்கிற ஸ்தாபனங்களை வெகுஜன ஸ்தாபனங்கள் என்கிறோம். இந்த வெகுஜன ஸ்தாபனங்களின் பணி என்ன என்பதை அறிவதற்கு முன்

"வெகுஜனங்கள்" என்பதின் பொருள் என்ன என்பதை அறிவது அவசியம். தோழர் லெனின் இது பற்றி கூறுவதைப் பார்ப்போம்.

"ஆரம்பத்தில் ஒரு சில ஆயிரக் கணக்கான உண்மையான, புரட்சிகரமான தொழிலாளர்களே வெகுஜனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். இப் போராட்டங்களில், கட்சி உறுப்பினர்களைத் தவிர கட்சி சார்பற்ற மக்களையும் பங்கேற்கச் செய்வதுதான் வெகுஜனங்களை வென்றெடுப்பதற்கான வழியாகும். புரட்சிக்கான சூழ்நிலை போதுமான அளவு பக்குவப்பட்டிருக்கும்பொழுது, 'வெகுஜனங்கள்' எனும் சொல்லின் பொருளும் மாறுகிறது. பெரும்பான்மையான தொழிலாளர்களை மட்டுமின்றி பெரும்பான்மையான சுரண்டப்படும் மக்களைக் கொண்டதாக (லட்சோப லட்சம் மக்களின் சங்கமிப்பாக) 'வெகுஜனம்' என்பதன் பொருள் மாறிவிடுகிறது." (லெனின் நூல் திரட்டு பாகம்–32; பக்கம்:468)

ஆக பல லட்சக் கணக்கான வெகுஜனங்களை வென்றெடுத்து செயல்பட வைப்பதற்காகவே நாம் வெகுஜன ஸ்தாபனங்களைக் கட்டுகிறோம். அவற்றில் செயல்படுகிறோம்.

இப்படி பல லட்சக் கணக்கான வெகுஜனங்களை ஒன்றுபடுத்தி அவர்களை அரசியல் உணர்வுண்டாக்கும் பணியை செய்வதற்காகவே நாம் வெகுஜன ஸ்தாபனங்களைக் கட்டுகிறோம்.

வேறு வகையில் கூறினால், கம்யூனிஸ்ட் கட்சிக்கு மூன்று விஷயங்கள் அதி முக்கியமானவை. அவையாவன:

1. கட்சியின் தத்துவார்த்த கண்ணோட்டமும், அரசியல் கொள்கையும் தத்துவார்த்த அடிப்படையில் சரியாக வகுக்கப்பட்டிருக்க வேண்டும்.

2. மக்களோடு எண்ணற்ற வகைகளில் தொடர்பு, கணக்கற்ற இயக்கங்கள், போராட்டங்கள் மூலமாக அன்றாடம் உறுதிப்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும்.

3. கம்யூனிஸ்ட் கட்சி ஸ்தாபனம், கோட்பாடு ரீதியில் அமைந்து தொடர்ந்து இயங்கி நாளுக்கு நாள் பலப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.

மேற்கண்ட மூன்று அம்சங்களும் பிரிக்க முடியாத முக்கிய அம்சங்கள். இவற்றில், இரண்டாவது அம்சமான 'மக்களுடன் இடைவிடாத அன்றாடத் தொடர்பு' என்பதற்

கான முக்கியமான கருவி 'வெகுஜன ஸ்தாபனங்கள்' ஆகும்.

இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக உண்மையிலேயே விளங்க வேண்டும் எனில் இந்த முன்னணிப் படையின் பின்னால் வலுவான பின்னணிப் படை இருத்தல் அவசியம். இந்தப் பின்னணிப் படையில் பிரதான பாத்திரத்தை வகிப்பது 'வெகுஜன ஸ்தாபனங்கள்' ஆகும்.

சுருங்கக் கூறினால், ஒருநாட்டின் புரட்சியை 'கட்சி மட்டும்' செய்துவிட முடியாது. இதனை நிறைவேற்ற வேண்டியவர்கள் வெகுஜ்னங்களே அத்தகைய வெகுஜனங்க்ளை திரட்டுவதற்காகவும், பயிற்றுவிப்பதற்காகவும் மிக அவசியமாக தேவ்ப்படுவது 'வெகுஜன ஸ்தர்பன்ங்கள்'.

சுருக்கமான வரலாறு

ஆரம்ப கட்டத்தில் தொழிலாளி வர்க்கத்துக்கென ஒரே ஸ்தாபனமாக தொழிற்சங்கங்கள் மட்டுமே இருந்தது. தொழிலாளி வர்க்கத்துக்கென ஒரு கட்சி பிறந்திருக்கவில்லை. ஆகவே, இந்த கட்டத்தில் 'தொழிற்சங்க ஸ்தாபனம்' மட்டுமே தொழிலாளர்களின் விடுதலைக்கும், சோஷலிஸத்திற்கும் இட்டுச் செல்லும் என கருதப்பட்டது.

தொழிற்சங்கங்கள் தங்களது வர்க்க நலன்களுக்காக மட்டும் போராடிப் பயனில்லை. அனைத்து அடக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராட வேண்டும் என்று 1866-லேயே "மார்க்ஸ்" வலியுறுத்தினார். சர்வதேச தொழிலாளர்கள் சங்கத்தின் முதல் மாநாட்டு பிரதிநிதிகளுக்கு "மார்க்ஸ்" அளித்த அறிவுரையில், அவர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"மூலதனத்துடன் ஸ்தல மட்டத்திலும் உடனடியாக நடத்த வேண்டியிருந்த போராட்டங்களிலேயே தொழிற்சங்கங்கள் தீவிரமாக ஈடுபட்டு வ்ந்ததால் கூலி அடிமைத்தன அமைப்புக்கு எதிரான நடவடிக்கையில் அவை 'தங்கள் பலத்தை முழுமையாக உணர்ந்துகொள்ளவில்லை. தங்களது உண்மையான நோக்கங்களோடு மட்டுமின்றி தொழிலாளி வர்க்கத்தின் முழுமையான விடுதலைக்கான பொதுவான நலன்களின் அடிப்படையில் அந்த வர்க்கத்தை ஒன்றுதிரட்டுவதற்கான மையங்களாகவும் தொழிற்ச்சங்கங்கள் முனைப்போடு செயல்படக் கற்றுக்கொள்ள வேண்டும். அந்த திசை

வழியை நோக்கிச் செல்கின்ற சமூக, அரசியல் இயக்கம் ஒவ்வொன்றுக்கும் அவை உதவி புரிய வேண்டும். தொழிலாளி வர்க்கம் முழுவதின் நன்மைக்காக செயல்படும் பிரதிநிதிகள் என்று அவை தங்களைக் கருதிக் கொள்ளும் அதே நேரத்தில் தங்களது சமூகத்தைச் சாராதவர்களையும் தங்களது அணியில் சேர்த்துக்கொள்ளத் தவறக் கூடாது. மிகக் குறைவான கூலியையே பெற்றுவரும் விவசாயத் தொழிலாளிகள் போன்ற சூழ்நிலையில் வலிமையிழந்து நிற்போரின் நலன்களையும் அவை கவனத்தோடு பாதுகாக்க வேண்டும். தங்களது முயற்சிகள் அனைத்தும் பல்லாயிரக் கணக்கான ஏழைகளின் விடுதலையையே நோக்கமாகக் கொண்டதே தவிர குறுகிய கண்ணோட்டமோ, தன்னலமோ நிறைந்ததல்ல என்பதை உலகமறியும் வகையில் செயல்பட வேண்டும்."

இப்படி, தொழிற்சங்கமே அனைத்து மக்களின் விடுதலைக்கும், சோஷலிஸத்திற்குமான ஸ்தாபனமாக அமைய முடியும் என்ற கருத்திலிருந்து அனுபவத்தின் அடிப்படையில் 'தொழிலாளி வர்க்கத்திற்கென தனிக் கட்சி' என்பதன் தேவை உணரப்படுகிறது. கட்சி, தொழிற்சங்கம்; இரண்டும், இரண்டு முக்கிய அமைப்புகளாக மலர்கின்றன. இந்த இரண்டு அமைப்புகள் தோன்றிய உடனேயே அல்லது தோன்று காலத்திலேயே இரண்டுக்கும் உள்ள உறவு என்ன என்ற கேள்வியும் அதை ஒட்டிய சர்ச்சைகளும் எழுந்துவிடுகின்றன.

இரண்டுவித திரிபுகள்

இதனையொட்டி கட்சிக்கும், தொழிற்சங்கத்திற்கும் இருக்கவேண்டிய உறவு பற்றி இரண்டுவித திரிபுகள் ஏற்பட்டது.

1. தொழிற்சங்கங்களுக்கும், கட்சிக்கும் எந்தவித தொடர்பும் இருக்கக்கூடாது. தொழிற்சங்கங்கள் 'நடுநிலைக் கொள்கையோடு' தன்னிச்சையாக செயல்பட வேண்டும் (இது ஒரு பகுதியினர் வாதம்).

2. இன்னொரு பகுதியினர், கட்சியின் நேரடிக் கிளையாக-பகிரங்கமாக கட்சியின் அமைப்பு என அறிவிக்கப்பட்ட ஸ்தாபனங்களாகவே தொழிற்சங்கங்கள் விளங்க வேண்டும் என வாதிட்டனர்.

இந்த இரண்டுவித திரிபுகளுக்கும் எதிராக, மார்க்ஸ்-

எங்கல்ஸ் மற்றும் லெனின் வலுவாக நடத்திய போராட்டத்தின் விளைவாகவே வெகுஜன ஸ்தாபனங்கள் பற்றிய ஒரு சரியான மார்க்சீய–லெனினிய பார்வை பிறந்தது. தொழிற்சங்கங்கள் மற்றும் கட்சி ஆகியவை குறித்த மார்க்சீய மூலவர்களின் இந்த சரியான பார்வை இதர வெகுஜன ஸ்தாபனங்களுக்கும் பொருந்தும்.

மார்ச், 1875– ல் ஜெர்மானிய சோஷலிஸ்ட் தொழிலாளர் கட்சியின் 'கோதா திட்டத்தை' விமர்சித்து பெபலுக்கு எழுதிய கடிதத்தில், கம்யூனிஸ்டுகளைப் பொறுத்தவரை தொழிற்சங்கங்களில் செயல்படவேண்டிய அவசியத்தையும், வழிமுறையையும் பற்றி எங்கல்ஸ் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"தொழிற்சங்கங்கள் என்ற வடிவத்தில் தொழிலாளி வர்க்க அமைப்பு பற்றி கோதா வேலைத் திட்டத்தில் எதுவுமே கூறப்படவில்லை. இது மிகவும் முக்கியமான தவறாகும். ஏனெனில், 'தொழிற்சங்கங்கள்' மூலமாகத்தான் ஒரு வர்க்கம் என்ற முறையில் தொழிலாளி வர்க்கம் மூலதனத்துடனான தனது அன்றாட போராட்டங்களை நடத்துகிறது. இந்த போராட்டங்களில்தான் அது பயிற்றுவிக்கப்படுகிறது. மிக மோசமான–பிற்போக்கான நிலைமைகளில்கூட அவற்றை ஒதுக்கிவிடவோ, உடைத்து நொறுக்கிவிடவோ முடியாது. இந்த அமைப்புகள், ஜெர்மனியில் அடைந்துள்ள முக்கியத்துவத்தை கருதுகையில், கட்சியின் திட்டத்தில் அவை பற்றிக் குறிப்பிடுவது மிகவும் அவசியமானதென்று நாம் கருதுகிறோம்." (மார்ச், 1875)

ஜெர்மனி கட்சியை மட்டுமல்ல, ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் கட்சி (ஆர்.எஸ்.டி.எல்.பி. – அன்று சி.பி.எஸ்.யு.வின் பெயர் இதுவே)யையும் இந்த பிரச்னை விட்டுவைக்கவில்லை. வலுவான சர்ச்சை நடந்தது மட்டுமின்று ஸ்டாக்ஹோம் காங்கிரசில் லெனினுடைய கருத்துக்கு மாறாக சந்தர்ப்பவாதக் கருத்தே பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதாவது தொழிற்சங்கங்கள் 'நடுநிலையில்' சுயேச்சையாக (Independant of Party Neutral Unions) என்ற நிலை எடுத்தது. இதற்கு நேர் மாறாக, லண்டனில் நடைபெற்ற சர்வதேச சோஷலிஸ்ட் காங்கிரஸ் "தொழிற்சங்கங்களை கட்சியுடன் நேரடியாக, நிரந்தரமாக

தொடர்புப்படுத்தியது. ஒரு கட்சி சார்பான சங்கம் என்று அங்கீகார முத்திரை அளிக்கப்பட வேண்டும்" என்றும் தீர்மானித்தது. இந்த இரண்டு போக்குகளும் தவறானது. அதாவது,

1. சுயேச்சையான கட்சிக்கு தொடர்பற்ற நடுநிலை ஸ்தாபனம் என்பதும்,

2. கட்சி அங்கீகார முத்திரை அளிக்கும் கட்சி சார்பான சங்கம் என்பதும் மிகவும் தவறானது என்று பெரும்பான்மையான கருத்துக்கு எதிராக லெனின் போராடினார். அவருடைய சரியான கருத்தை ஸ்டாக் ஹோம் காங்கிரஸிற்கான லெனின் நகல் தீர்மானத்தில் காணலாம். அது கூறுகிறது:–

1. "பொருளாதாரப் போராட்டங்கள், பாட்டாளி வர்க்க போராட்டத்தின் உள்ளடங்கியதொரு அம்சம் என்றே சமூக ஜனநாயகக் கட்சி எப்போதும் கருதி வந்துள்ளது.

2. காங்கிரஸ் கீழ் கண்டவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கருதுகிறோம், முன்வைக்கிறோம்.

(அ) கட்சி சார்பற்றதாகத் தொழிற்சங்கங்களை மாற்றுவதற்கான முயற்சிகளை கட்சி அமைப்புகள் அனைத்தும் மேற்கொள்ள வேண்டும். கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவரவரது தொழில்களில் உள்ள தொழிற்சங்கங்களில் சேருவதற்கு ஊக்கப்படுத்தப்பட் வேண்டும்.

(ஆ) வர்க்கப் போராட்டம் மற்றும் பாட்டாளி வர்க்கத்தின் சோஷலிஸ நோக்கங்கள் என்ற விரிவான கருத்து ஒற்றுமையின் அடிப்படையில் தொழிற்சங்கங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு போதனை அளிக்கப்படுவதற்கும் தங்களது நடவடிக்கையின் மூலம் இந்த சங்கங்களின் தலைமைப் பொறுப்பை அடைவதன் மூலமும், இறுதியாக ஒரு சில நிலைமைகளின் அடிப்படையில் கட்சியுடன் நேரடியான தொடர்பை உறுதிப்படுத்துவதன் மூலமும் இது செய்யப்பட வேண்டும். எனினும் கட்சி சார்பற்ற உறுப்பினர்களை தங்களது அணிகளிலிருந்து எந்த நிலையிலும் வெளியேற்றாமல், பார்த்துக்கொள்ள கட்சி அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்."

லெனினின் இந்தக் குறிப்புரை வெகுஜன ஸ்தாபனங்கள் பற்றி கட்சியின் பார்வையை ஸ்தூலப்படுத்துகிறது.

"தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையான கட்சி அந்த வர்க்கத்தின் பெரும் பகுதியை தனக்குப் பின்னால்

திரட்டுவதற்கு தொழிற்சங்க அமைப்புகள் ஒரு கட்டாய தேவையாகும். அத்தகைய தொழிற்சங்கங்களில் பொறுமையாக விடாப்பிடியான பிடிவாதத்துடன் கட்சி உறுப்பினர்கள் பணிபுரிய வேண்டும். அப்படி, தொழிற்சங்கத்தில் திரட்டப்படும் உறுப்பினர்களின் உணர்வு மட்டம்-கட்சியின் உணர்வு மட்டத்திற்கு மிகக் கீழேதான் இருக்கும். அவர்களுடைய அன்றாட போராட்ட அனுபவங்கள் மூலமாகவும், கட்சியின் இடைவிடாத போதனைகள் மூலமுமே அவர்களை கட்சியிலும், கட்சியைச் சுற்றிலும் நிறுத்த முடியும். ஆனால், எந்த நிலையிலும் பெரும்பான்மையான கட்சி சாராத தொழிலாளர்களிடம் இருந்து இந்த அமைப்புகள் தனிமைப்பட்டு நிற்பதை அனுமதிக்க முடியாது.''

மேலே கூறியவையே லெனின் தொழிற்சங்கங்கள் பற்றி 'ஸ்டாக்ஹோம்' காங்கிரஸுக்கு அளித்த நகல் தீர்மானத்தின் சாரம்.

1914– ல் 'நரோத் நிக்குகள்' தொழிற்சங்கங்கள் கட்சியின் உப உறுப்புகளாக இருக்க வேண்டும் என வாதிட்டபோதும், 1922– ல் 'இடது அதிதீவிரவாதிகள்' "புரட்சிகரமான புதிய தொழிற்சங்கம்'' என்ற கோஷத்தை முன்வைத்தபோதும் லெனின் அவர்களை வலுவாக சாடுகிறார்.

நரோத்நிக்குகள் மற்றும் கலைப்பு ஆசாமிகள் பற்றி லெனின் கூறியதாவது:–

"நாம் நடுநிலைமைக் கொள்கைக்கு வக்காலத்து வாங்கவில்லை. நாம் அதை எதிர்க்கிறோம். அதே நேரத்தில், நரோத்நிக்குகள் மற்றும் கலைப்பு ஆசாமிகளைப் போன்று நாம் நடந்துகொள்ள மாட்டோம். தற்காலிகமாக கிடைத்த சிறு வெற்றியளித்த போதையால் அவர்கள் தொழிற்சங்கங்களுக்கு "மார்க்சீய முத்திரை'' குத்திக்கொள்ளுகிறார்கள். மார்க்சிஸ்ட்டுகள் அதுபோன்று நடந்துகொள்ள மாட்டார்கள். மிக விரைவிலோ அல்லது பின்னாளிலோ சங்கங்கள் அனைத்துமே மார்க்சிஸத்தின் அடிப்படையில் தங்களது நிலைபாட்டை ஏற்றுக்கொள்ளும் என்பதில் அவர்கள் மிகுந்த நம்பிக்கையோடு உள்ளனர். தக்களது கருத்துக்களுக்குத்தான் எதிர்காலம் உண்டு என்பதில் அவர்கள் மிகுந்த நம்பிக்கையோடு உள்ளனர். எனவே, நிகழ்ச்சிகளை அவர்கள் வலிந்து திணிப்பதில்லை. சங்கங்களை கட்டி இழுத்து வருவதில்லை. அவைகளின் மீது முத்திரை குத்துவதோ அல்லது அவைகளை உடைப்பதோ இல்லை.''

இது 1914– ல் நரோத்நிக்குகளுக்கு எதிராக லெனின் கூறியது. 1922– ல் 'இடதுசாரி கம்யூனிஸம் ஒரு இளம்பருவக் கோளாறு' எனும் நூலில் அதிதீவிரவாதிகளை லெனின் கீழ்க்கண்டவாறு சாடுகிறார்.

"கம்யூனிஸ்டுகள், பிற்போக்குத்தனமான சங்கங்களில் செயல்பட முடியாது, செயல்படக்கூடாது என்றும் அது போன்ற வேலைகளை செய்ய மறுப்பது அனுமதிக்கத் தக்கதே என்றும், தொழிற்சங்கங்களை விட்டு விலகி சமரசப் போக்கில்லாத புத்தம் புதியதொரு 'தொழிலாளர் சங்கத்தை உருவாக்குவது அவசியம் என்ற ஜெர்மன் இடதுசாரிகளின் பயங்கரமான புரட்சிகர உபதேசங்கள் சிறுபிள்ளைத்தனமானது; கேலிக்குரிய ஒன்று. "பிற்போக்குத்தனமான தொழிற்சங்கங்களில் கம்யூனிஸ்ட்டுகள் செயல்படக் கூடாது என்ற 'கொள்கை' இடதுசாரிகளின் பொறுப்பற்ற தன்மையை தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. 'வெகுஜன'ங்களைக் கவர்வது என்ற பிரச்னையையும், வெகுஜனங்களைப் பற்றிய அவர்களது தவறான கணிப்புகளையும் இது வெளிப்படுத்துகிறது. 'வெகுஜன'ங்களுக்கு நீங்கள் உதவி செய்ய விரும்பினால், வெகுஜனங்களின் அனுதாபத்தையும், ஆதரவையும் பெற விரும்பினால் நீங்கள் இடையூறுகளுக்கு அஞ்சக் கூடாது. போராட்டத்தையும், பிரச்சாரத்தையும் முறையாக தொடர்ந்து நடத்துவதற்கு மகத்தான தடைகளையும் வென்றெடுக்கக்கூடிய திறமை படைத்தவராக இருக்க வேண்டும். அத்தகைய அமைப்புகளிலும், கழகங்களிலும், சங்கங்களிலும் அது மிகவும் பிற்போக்குத்தனமானதாக இருந்தபோதிலும் கூட எங்கெல்லாம் பாட்டாளி வர்க்கத்தினரும், அரைகுறை பாட்டாளி வர்க்கத்தினரும் இருக்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் செயல்பட வேண்டும்.''

மேற்கண்ட லெனினின் அறிவுரைகள் உணர்த்துவதென்ன?

1. வெகுஜன ஸ்தாபனங்களின் சுயேச்சையான தன்மையையும், அவர்களின் உணர்வு மட்டத்தையும் கணக்கில் கொண்டு அவர்கள் மத்தியில் கட்சி எப்பொழுதும் செயல்பட வேண்டும்.

2. அதே நேரத்தில், கட்சியின் தலைமைப் பாத்திரம் வெகுஜனங்களின் அன்றாட போராட்டங்களில் கம்யூனிஸ்டுகள் முழுமையாக ஈடுபட்டு முன்னோடிகளாக செயல்படுவதன் மூலமும்; வெகுஜனங்களின் உணர்வு மட்டத்தை தொடர்ந்து உயர்த்துவதற்கான பிரச்சாரங்களில் ஈடுபடுவதன் மூலமுமே சாத்தியமாக்கப்பட வேண்டும்.

இதன் பொருள் – கட்சி தனது தலைமைப் பாத்திரத்தை சரிவர நிறைவேற்றாமல் இருந்தால், வெகுஜன ஸ்தாபனங்கள் குறுகிய வட்டத்திற்குள் நின்று 'ஆரம்ப உணர்வு' நிலையிலேயே 'சிறைபட்டு' கிடக்கும். இது வெறும் பொருளாதார வாதத்திற்கு இட்டுச் செல்லும். இதற்கு நேர்மாறாக வெகுஜனங்களின் உணர்வு நிலையைக் கணக்கிலெடுக்காமல் கட்சியோ, அதன் உறுப்பினர்களோ செயல்பட்டால் கட்சி மிகப் பெரும்பான்மையான வெகுஜனங்களிடம் இருந்து தனிமைப் பட்டுப் போகும்.

ஆக, இரண்டு திரிபுகளுக்கும் உண்டாக்கக்கூடிய இரண்டு சீர்கேடுகளையும் தவிர்த்து, சரியான நடைமுறையை லெனின். எடுத்துக்கொடுத்துள்ளார். லெனின் வகுத்த சரியான நடைமுறை என்ன?

தொழிலாளி வர்க்கம், புரட்சியின் தலைவன் – முன்னணிப் படை. இந்த முன்னணிப் படையின் முன்னணிப் படை கட்சியாகும் (தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படை – கட்சி). அதாவது, தொழிலாளி வர்க்கத்தின் முன்னேறிய புரட்சிகரமான உணர்வுடைய ஒரு சிறு பகுதியே கட்சியாக ஆகிறது. ஆனால், புரட்சி என்பதோ தொழிலாளி வர்க்கம், இதர உழைக்கும் மக்கள் (குறிப்பாக விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள்) ஆகியோர் இணைந்து நடத்துவது ஆகும். இன்றைய முதலாளித்துவ அமைப்பை தூக்கியெறிந்து ஒரு புதிய அமைப்பு காணவேண்டும் எனில் புரட்சிக்கு ஆதரவாக தொழிலாளி வர்க்கத்தின் பெரும்பான்மை மட்டுமின்றி உழைக்கும் மக்களின் பெரும்பான்மையை வென்றெடுப்பது மிக மிக அவசியம். ஆனால், புரட்சிக்கு வெல்லப்பட வேண்டிய இந்த ஜனத்திரளோ தங்களது உடனடி பொருளாதார நலன்களைப் பேணவே முதலில் ஆகர்ஷிக்கப்படுகின்றனர். அந்த நோக்கத்துடனேயே அவர்கள் தொழிற்சங்கம் உள்ளிட்ட வெகுஜன அமைப்புக்கு வருகிறார்கள். இந்த பொரு

ளாதார நலன் காக்கும் உடனடிப் போராட்டங்களை நடத்திடாமல் வெகுஜனங்களைப் புரட்சியின்பால் ஆகர்ஷிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. அதே நேரத்தில் உடனடி போராட்டங்களில் ஈடுபடுகிற இந்த ஜனத் திரளை புரட்சியின்பால் ஈர்ப்பது என்ற பணியைக் கட்சியினால் மட்டுமே செய்ய முடியும். இதனைச் செய்ய கட்சி சரியான திட்டத்துடன் செயல்பட வேண்டும். இதன் மூலம் படிப்படியாக வெகுஜனங்களின் உணர்வு மட்டத்தை உயர்த்தி ஜனத்திரளின் பெரும் பகுதியைப் புரட்சிக்கு ஆதரவாளர்களாக ஆக்க முடியும். ஆக்க வேண்டும்.

இதுவே, மார்க்சீய மூலவர்களின் அறிவுரைகளும், உலகில் பல நாடுகளின் அனுபவமும் காட்டும் பேருண்மையாகும்.

வெகுஜன ஸ்தாபனங்களின் வடிவங்கள்

வெகுஜன ஸ்தாபனங்களின் வடிவத்தை பொறுத்தவரையிலும்கூட மேற்கண்ட நோக்கங்களை மனதில் கொண்டு நெளிவு–சுளிவான அணுகுமுறை தேவைப்படுகிறது. இன்று நமது நாட்டில் தொழிற்சங்கம், விவசாய சங்கம், வாலிபர், மாணவர், மாதர் அமைப்புகள் ஆகியவை மார்க்சிஸ்ட்டுகள் வேலை செய்யக்கூடிய தனியான ஸ்தாபனங்களாக அமைந்துள்ளன. ஆனால், இதுவே எப்பொழுதும், எங்கும் நிரந்தரமான வடிவம் எனக் கருதக் கூடாது. இந்தியாவில்கூட, இது நமது விருப்பத்தின் அடிப்படையில் எழுந்ததல்ல. புறச் சூழலின் தேவை காரணமாகவே இப்படி அமைந்தது.

சீர்திருத்தவாதிகளின் தலைமையில் உள்ள சங்கங்களில் வேலை செய்வது; தனியான சங்கம் கண்டு அனைவரும் சேர்ந்த போராட்டங்களை உருவாக்குவது, ஐக்கிய முன்னணி காண்பது உள்ளிட்ட நிலைமைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்றாற்போல் பல வடிவங்களை வெகுஜன ஸ்தாபனங்கள் மேற்கொள்ள வேண்டி வரும்.

லெனினின் வாழ்நாளில் தொழிற்சங்கங்களின் 'சிவப்பு அகிலம்' என்ற ஸ்தாபனம் உருவாக்கப்பட்டது. 1921 ஜூலையில் புரட்சிகர தொழிற்சங்கங்களின் முதல் சர்வதேச மாநாடு மாஸ்கோவில் நடைபெற்றது.

உலக ரீதியில் பாசிஸ அபாயம் தலையடுத்தவுடன் மக்களை வென்றெடுப்பதற்கான தந்திரங்களும், வடிவங்களும்

மாறின. தொழிற்சங்க இயக்கத்தின் ஒற்றுமை பாசிஸத்திற்கு எதிராக பொதுவான எதிர்ப்பு ஆகியவை அதிமுக்கியத்துவம் பெற்றன.

ஆகவே, கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஏழாவது மாநாடு, தொழிற்சங்க இயக்க ஒற்றுமையை உருவாக்குவதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுத்தது.

பிரான்ஸ், பின்லாந்து மற்றும் இதர நாட்டு கம்யூனிஸ்ட் கட்சிகளின் அனுபவங்களின் அடிப்படையில் இத்தகைய ஒற்றுமைக்கான தேவை பற்றி ஏழாவது மாநாடு விவாதித்தது. கம்யூனிஸ்டுகள் இரண்டே நிபந்தனைகளை முன்வைத்தனர். வர்க்கப் போராட்டத்தை நடத்துவது, வெகுஜன ஸ்தர்பனங்களுக்கு ஜனநாயகத்தைக் கடைபிடிப்பது, ஆகிய இரண்டு நிபந்தனைகளே அவை. இதனை ஏற்றால் அரசியல் கட்சிகளிடமிருந்து தொழிற்சங்கங்களின் சுயேட்சையான நிலை என்ற கோஷத்தைக் கம்யூனிஸ்டுகள் ஏற்றுக்கொள்ளத் தயார் என அறிவித்தனர்.

வ்ர்க்கப் போராட்டத்தில் தொழிற்சங்கங்கள் நடுநிலையை வகிப்பதை ஆதரிப்பவர்களாக கம்யூனிஸ்ட்டுகள் மாறிவிட்டனர் என்பதல்ல இதன் பொருள். கம்யூனிஸ்ட்டுகள் முன்னெப்போதும்போலவே பூர்ஷ்வாக்களின் மீது எந்தவிதத்திலும் சார்ந்திருப்பதை எதிர்த்து, தொழிற்சங்கங்களின் மிகவும் தீவிரமான வர்க்க நிலைமைக்காக நின்றார்கள். ஆனால், அவர்கள் ஒன்றுபட்ட தொழிற்சங்கங்களின் ஸ்தாபன சுயேச்சை தன்மையை அங்கீகரித்தனர்.

“அனைத்து அரசியல் கட்சிகளிடமிருந்தும் தொழிற்சங்க்கங்கள் சுயேச்சைய்ானவை என்ற ஒப்பந்தத்திற்கும் நாங்கள் தயாராகின்றோம். ஆனால், தொழிற்சங்க்கங்கள் பூர்ஷ்வாக்களைச் சர்ர்ந்திருப்பதை நாங்கள் தீர்மானகரமாக நிராகரிக்கிறோம். பூர்ஷ்வாக்களுக்கும், பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையில் நடைபெறும் வர்க்கப் போராட்டத்தில் நடுநிலைமை வகிப்பது என்ற நிலையை எடுப்பது சாத்தியமற்றது என்ற எங்களது அடிப்படைக் கண்ணோட்டத்தைக் கைவிடத் தயாராக இல்லை.”

இதற்கு கட்சியின் தலைமை கைவிடுவது என்று அர்த்தமல்ல. ஆனால், அன்றிருந்த நிலைமைகளில் பாசிஸத்திற்கு எதிராக தொழிலாளி வர்க்கம்–முழுவதும் ஒற்றுமைப்படுத்து

வது என்ற தேவை இருந்தபோது, கட்சி அதன் தலைமையை மிகவும் திறமையுடன் வெளிப்படுத்திய வடிவமே இது.

இதைத் தொடர்ந்து 1987– ல் இந்த சிவப்பு தொழிற்சங்க அகிலம் கலைக்கப்பட்டது. சோவியத் தொழிற்சங்கம் ஆம்ஸ்டர்டாம் தொழிற்சங்க அகிலத்தில் இணைவது என்ற பிரச்னையை எழுப்பி, அதற்கு ஒரே ஒரு நிபந்தனையை விதித்தது, அதாவது. பாசிஸத்திற்கும், யுத்தத்திற்கும் எதிராக அகிலம் இடைவிடாத போராட்டம் நடத்த வேண்டும். இந்த நிபந்தனையை ஏற்றால் எங்களது தனி சங்கத்தை கலைத்து ஆம்ஸ்டர்டாம் தொழிற்சங்கத்தில் இணையத் தயார் என்று அறிவித்தனர். இது பின் வேறு சில காரணங்களுக்காக அமுலாகவில்லை.

தொழிற்சங்க அரங்கத்தில் மட்டுமல்ல, இளைஞர் ஸ்தாபனம் பற்றிய விஷயத்தையும் இக்காலத்தில் ஒரு மாற்றம் செய்யப்பபட்டது. கம்யூனிஸ்ட் அகிலத்தின் 7–வது மாநாட்டிற்குப் பிறகு இளைஞர் கம்யூனிஸ்ட் அகிலத்தின் 6–வது மாநாடு (செப்டம்பர்–அக்டோபர் 1935) பாசிஸத்திற்கும், யுத்தத்திற்கும் எதிரான போராட்டத்திற்காக இளம் கம்யூனிஸ்ட் லீகின் தன்மையில் சில மாற்றங்கள் தேவைப்படுகிறது என்ற முக்கியமான முடிவிற்கு வந்தது. இவைகள் தொழிலாளர், இளைஞர்கள் அடங்கிய ‘வெகுஜன ஸ்தாபனமாக மாற்றப்பட்டு ஏற்கனவே ‘தயாராக–கம்யூனிஸ்ட்டு’ களாக உள்ளவர்களை மட்டுமன்றி கம்யூனிஸத்தின் நலவிரும்பிகள் மற்றும் அதைக் கற்றுத்தேற விரும்பிய அனைவரையும் ஒன்றுபடுத்தும் அமைப்பாக மாற்றப்பட்டது. 1936 மார்ச் மாதம் நடந்த நிர்வாகக்குழுக் கூட்டத்தில் இத்துறையில் இளம் கம்யூனிஸ்ட் அகிலத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு விவரிக்கப்பட்டது.

‘இந்த கம்யூனிஸ்ட் அமைப்புகள், தொழிலாளர்–இளைஞர்களுடைய வெகுஜன அமைப்பாக கட்சி அல்லாத ஆனால் அடிப்படையில் புதிய ஸ்தாபனங்களாக மாற்றப்படும்” இந்த மையமான கோஷம், பாசிஸ எதிர்ப்பு உணர்வு கொண்ட இளைஞர்கள் அனைவரையும் வெகு வேகமாக திரட்டும் அமைப்பாக அதை மாற்றியது, இளைஞர்களைப் பெருமளவில் உறுப்பினர்களாக இணைப்பதற்கு கதவுகளைத் திறந்துவிட்டது.

மேற்கூறிய சரித்திர அனுபவம் கூறுவது என்ன? இவை

யனைத்தும் கட்சியுடன் மக்களை இணைப்பதற்கும், கட்சி வளர்ந்து வரும் பங்கினை ஆற்றுவதற்கும் வெகுஜன ஸ்தாபனங்களில் பல்வேறு விதமான நெளிவு சுளிவான வடிவங்களைப் பயன்படுத்துவது தேவை என்பதைக் காட்டுகிறது.

இந்த அடிப்படையில்தான் நமது கட்சியின் அனுபவமும், நிலைமைகளின் தேவைகளுக்கேற்ப நாம் தனியான ஸ்தாபனங்களை உருவாக்கி மீண்டும் பொதுவான நடவடிக்கைகளுக்காகவும், ஒற்றுமைக்காகவும் பாடுபடுகிறோம். ஒற்றுமை மற்றும் வெகுஜனங்களைத் திரட்டுவது ஆகிய கடமைகளுக்கு மற்றவர்கள் தடையாக இருந்து ஆபத்து ஏற்படும் என்று நாம் அச்சப்பட்டபோது நாம் தனியாகப் பிரிந்தோம். ஒற்றுமைக்காகவும், வெகுஜன போரட்ட சக்திகளைக் கட்டவிழ்த்துவிடுவதற்கும் ஒரு நெம்புகோலாக நமக்கு சில சமயங்களில் நமது தனியான ஸ்தாபனம் தேவைப்படுகிறது.

இதற்கு சமீப காலங்களில் சி.ஐ.டி.யு. ஏற்படுத்தப்பட்டது மிகச் சிறந்த உதாரணமாகும். நமது கட்சி ஆரம்பிக்கப்பட்டவுடன், ஏ.ஐ.டி.யு.சிஐயை விட்டு நாம் வெளியேறவில்லை. ஏழு ஆண்டுகள் அந்த பரந்த ஸ்தாபனத்தில் பணியாற்ற முயற்சித்தோம். அங்கு ஆதிக்கம் செலுத்திய தலைமை ஜனநாயக செயல்பாட்டில் விருப்பமின்றி இருந்ததைப் பார்த்த பிறகு, முதலாளித்துவ– நிலப்பிரபுத்துவ வர்க்கங்களுக்கு சேவகம் செய்வதைப் பணியாக அவர்கள் கொண்டிருந்ததால், அந்த அமைப்பிற்குள் இருப்பது ஒற்றுமையைவிட, சீர்குலைவையே ஏற்படுத்தும் என்று கண்டபோர்துதான் நாம் வெளியேற முடிவு செய்தோம். இது நடந்து நான்கு ஆண்டுகளுக்குள் அவசர நிலையை ஆதரித்து ஏ.ஐ.டி.யு.சி. தன்னை இழிவுபடுத்திக்கொண்டது. ஆனால், நாம் பிரிந்து வந்தபோது ஒற்றுமைக்கான போராட்டத்தையும், மக்களை ஒன்று திரட்டுவதையும் மேலும் வலிமையோடு செயல்படுத்த வேண்டும் என்ற உணர்வு அதிகரித்தது. ஒரே ஸ்தாபனத்தில் எது சாத்தியப்படவில்லையோ, அதை பல்வேறு ஸ்தாபனங்களின் ஒன்றுபட்ட நடவடிக்கைகள் மூலம் செயல்படுத்த முடிந்தது. அதனால்தான் சி.ஐ.டி.யு. அமைக்கப்பட்ட உடனேயே, அதனுடைய அணிகள் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக 'ஒற்றுமை வாரத்தை' அனுஷ்டித்தது. அப்போதிருந்து சி.ஐ.டி.யு. ஒற்றுமைக்கான போராட்டத்தை

தொடர்ந்து நடத்தி வந்துள்ளது. மற்ற வெகுஜன ஸ்தாபனங்களின் அனுபவமும் ஒரு தனியான வெகுஜன ஸ்தாபனத்தை அமைப்பதன் மூலமே மக்களை வென்றெடுக்கும் கடமை நிறைவேறிவிடுவதில்லை என்பதையே காட்டுகிறது. இதை அடைவதற்குள், நமது சுயேச்சையான வெகுஜன அரங்கப் பணி தவிர, இதர ஸ்தாபனங்களுடன் ஒன்றுபட்ட நடவடிக்கைகளும் உடன்பாடுகளும் காணவேண்டியது அவசியமாகிறது.

பரந்த வெகுஜன ஸ்தாபனம் – நோக்கங்கள்

நமது வெகுஜன ஸ்தாபனங்களின் சாதனைகளைப் பரிசீலிக்கும் போது நாம் இதை மனதில் கொள்ள வேண்டும். பரந்த வெகுஜன ஸ்தாபனம் என்பதன் பொருள் என்ன? கட்சியில் வழிகாட்டும் பாத்திரம் எவ்வாறு வலியுறுத்தப்படுகிறது. பரந்த வெகுஜன் ஸ்தாபனம், கட்சியின் வழிகாட்டும் பாத்திரம் ஆகிய இரண்டு அம்சங்களும் மிக முக்கியமானவை.

இவ்விஷயத்தில் லெனினின் கீழ்க்கண்ட வார்த்தைகள் நினைவு கூறத்தக்கவை.

> "பொருளாதாரப் போராட்டத்திற்கான தொழிலாளர்களது ஸ்தாபனம் தொழிற்சங்கங்களாகத்தான் இருக்க வேண்டும். ஒவ்வொரு சமூக ஜனநாயகத் தொழிலாளியும் இயன்றவரை இந்த ஸ்தாபனங்களுக்கு உதவி செய்து அவற்றில் பணிபுரிய வேண்டும்.

ஆனால், இது வாஸ்தவமாக இருந்தபோதிலும், சமூக ஜனநாயகவாதிகள் மட்டுமே தொழிற்சங்கங்களில் உறுப்பினர்களாக தகுதியுடையவர்கள் என்று கோறுவது நிச்சயமாக நமது நலன்களுக்கு உகந்ததல்ல. ஏனெனில், அது மக்களின் மீது நமது செல்வாக்கு வளர்வதற்கான வாய்ப்பினை சுருக்கிவிடும். இந்தப் போராட்டங்களின் நிர்வாகத்தை அரசாங்கத்திற்கும் எதிராக ஒன்றுபட வேண்டியதன் அவசியத்தை புரிந்துகொள்ளும் ஒவ்வொரு தொழிலாளியும், தொழிற்சங்கங்களில் சேரட்டும். இந்தத் தொடக்க அளவிலான கருத்தையாவது அடைந்திருப்பவர்கள் அனைவரையும் அவர்கள் ஒன்று திரட்டாவிட்டால், அவைகள் பரந்த அளவிலான ஸ்தாபனங்களாக இல்லாவிட்டால், தொழிற்சங்கங்களில் குறிக்கோளே

சாத்தியமற்றுப்போய்விடும். இந்த ஸ்தாபனங்கள் எந்த அளவிற்கு பரவலாக இருக்கின்றதோ, அந்த அளவிற்கு அவர்கள் மீதுள்ள நமது செல்வாக்கும் பரவலாக இருக்கும். இந்த செல்வாக்கு, பொருளாதாரப் போராட்டங்களின் தன்னெழுச்சியால் மட்டுமின்றி, சோஷலிஸ்ட் தொழிற்சங்க உறுப்பினர்கள் நேரடியாக, உணர்வுபூர்வமாக செய்யும் முயற்சிகளாலும் தோன்றுகிறது.

(என்ன செய்யவேண்டும்? – லெனின்)

இங்கு இரண்டு கருத்துக்கள் இணைக்கப்படுகின்றன.

(1) மிகவும் பின்தங்கியுள்ள நபர்களுக்குவழிகொடுக்கும் ஒரு பரந்த ஸ்தாபனம்.

(2) சோஷலிஸ தொழிற்சங்க உறுப்பினர்கள் (கட்சி) இதர உறுப்பினர்கள் மீது செல்வாக்கு செலுத்த செய்யும் உணர்வுபூர்வமான முயற்சி, கட்சியின் தலைமைப் பாத்திரத்தை வகிக்க இவ்வாறு முயலுவது.

தொழிற்சங்கத்திற்காக இங்கே கூறப்பட்ட கருத்து எல்லா வெகுஜன ஸ்தாபனங்களுக்கும் பொருந்தும்.

வெகுஜன ஸ்தாபனங்களின் குறிக்கோள்கள் தீர்மானிப்பது குறித்து

எல்லா வெகுஜன ஸ்தாபனங்களும் மிகவும் பின்தங்கிய நபர்களை கவரும் வகையில் அமைய வேண்டும். அவைகளுடைய இலட்சியங்களும், குறிக்கோள்களும் பின்தங்கிய நபர்களை துரத்தும் வகையில் இல்லாது உருவாக்கப்பட வேண்டும் . உறுப்பினராவதற்கான நிபந்தனைகள் இத்தகைய நபர்களின் அப்போதைய உணர்வு நிலையை வெகுதூரம் தாண்டி நின்றால் ஸ்தாபனத்தை முன்னேறிய உணர்வுடைய நபர்களின் அமைப்பாக மாற்றிவிடும். அதாவது கம்யூனிஸ்ட்டுகள் மட்டுமே பங்கேற்கும் அமைப்பாக சுருக்கிவிடும்.

தொழிற்சங்க உறுப்பினர் தகுதிக்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கோட்பாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிப்பதன் முட்டாள் தனத்தை லெனின் சுட்டிக் காட்டுகிறார். வெகுஜன ஸ்தாபனங்கள் வெகு விரைவிலோ பின்னரோ புரட்சிகரமான போராட்ட வடிவங்களை எடுத்துக்கொண்டு தற்போதைய சமூக–பொருளாதார அமைப்பை உதறித் தள்ளியே ஆகவேண்டும் என்று

நமது கட்சி நம்புகிறது. ஆனால், இந்தப் போராட்ட வடிவங்களை ஏற்றுக்கொள்வதுதான எந்தவொரு ஸ்தாபனத்திலும் – மாணவர், வாலிபர், மாதர், தொழிற்சங்கங்கள்; உறுப்பினராவதற்கு நிபந்தனை என்று விதித்தால், நாம் வெகுஜனப் போராட்டங்களுக்கு தீங்கிழைக்கிறோம். புரட்சிகரமான தத்துவாரத்த மற்றும் இதர நிபந்தனைகளை விதிப்பது கட்சிஅல்லாத ஸ்தாபனத்தை (Non Party Organisation) 'ரெடிமேட் கம்யூனிஸ்ட்' – களுடைய நெருங்கிய பொக்கிஷமாக பாதுகாப்பதாகும். இதைத்தான் மார்க்சிஸம் – லெனினிஸம் எதிர்க்கிறது.

"கட்சி ஸ்தாபனங்கள் வேண்டும் என்று" அதன் உண்மையான அர்த்தத்தைப் புரிந்துகொள்ளாமல், சில தோழர்கள் பேசினாலும்கூட, நமது கட்சிக்குள் இத்தகைய திரிபுகள் (Deviation) இருப்பதாகக் கூறமுடியாது. செயற்கையான நிபந்தனைகள் காரணமாக மக்களிடமுள்ள இண்ணப்பை இழந்துவிடாததால்தான், நமது வெகுஜன, ஸ்தாபனங்கள் வளர்ச்சியடைந்துள்ளன. இரண்டாவதாக அவைகள் அப்போது நிலவும் வெகுஜன உணர்வோடு தேங்கி அமிழ்ந்து போய்விடவில்லை. வெகுஜன ஸ்தாபனங்களின் பரந்த தன்மைகளைப் பாதுகாப்பது என்பது, அதனுடைய உணர்வினை பகுதி அல்லது பொருளாதாரக் கோரிக்கைகளின் மட்டத்திலேயே நிறுத்துவது என்று பொருள்படுவதல்ல. இந்த ஸ்தாபனத்தை தலைமையேற்று நடத்தும் கட்சி உறுப்பினர்கள், போர்ராட்டங்கள் அரசியல் வளர்ச்சிப் போக்குகளோடும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதோடும், அரசியல் போராட்டங்களில் பங்குபெறுவதோடும் வெற்றிகரமாக இணைக்கின்றனர். நமது ஸ்தாபனங்கள் இந்த இரண்டு பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் பெருமளவிற்கு வெற்றியடைந்து, அதனால் முன்னேற முடிந்துள்ளது. நமது வெகுஜன ஸ்தாபனங்கள், நமது கட்சியின் தேர்தல் போராட்டங்களில் முக்கியமான பங்காற்றி, அவர்களது உறுப்பினர்களை அரசியல்படுத்தி, அவர்களை மேலும் ஒரு உயர்ந்த நிலைமைக்கு உயர்த்தியுள்ளது. இதனால், நாம் முற்றிலும் தவறுகளே செய்யாதவர்கள் என்றோ, நமது ஸ்தாபனத்தின் பரந்த தன்மை சம்பந்தமாக தவறான கருத்தே கொண்டிராதவர்கள் என்றோ அர்த்தமாகாது.

பகுதி கோரிக்கைகளுக்காக மிகப் பெருந்திரளானவர்

கள் நடைமுறைப் போராட்டங்களில் ஈர்ப்பது என்ற வெகுஜன ஸ்தாபனங்களின் பிரதானமாக குறிக்கோளை வலியுறுத்தும்போது, நமது தோழர்கள் சிலரின் மனங்களில் குழப்பம் ஏற்படுகிறது. இதன் பொருள் அரசியல் பிரச்சாரம்,சோஷலிஸத்தைப் பற்றிய பேச்சு, தீவிரமான கொள்கைகளைப் பற்றி பேசுவது ஆகியவற்றை நிறுத்திக்கொள்வதல்ல. வலியுறுத்தப்படுவது என்னவெனில், 'அரசியல்படுத்துவதற்கான' நமது பிரச்சாரம், கல்வி, தீவிரப்படுத்துதல் ஆகியவை அடிப்படையான மக்களுடன் நமது வெகுஜன ஸ்தாபனங்களில் தொடர்பை கத்தரித்துவிடுவதாக அமைந்துவிடக் கூடாது என்பதே. அல்லது, மக்களை குழப்பி, ஸ்தாபனத்திற்கு சம்பந்தப்படாதவர்களாக அவர்களை மாற்றும் நிபந்தனைகளை உறுப்பினர்களாக்குவற்கு தகுதிகளாக விதிப்பதும், அமுலாக்குவதும் தவறாகும் என்பதுதான் வலியுறுத்தப்படுகிறது.

புரட்சியின் கட்டமும் – வெகுஜன ஸ்தாபனங்களும்

மார்க்சீய-லெனினிய கண்ணோட்டப்படி, வெகுஜன ஸ்தாபனங்களின் நடவடிக்கைகள் புரட்சியின் குறிப்பிட்ட கட்டத் தேவைகளை நிறைவேற்றுவதோடு இணைக்கப்பட்டுள்ளது. புரட்சியின் ஜனநாயக கட்டத்தில் அல்லது மக்கள் ஜனநாயகக் கட்டத்தில், வெகுஜன ஸ்தாபனங்களின் குறிக்கோள்களும், முன்னேற்றமும் சோஷலிஸ கட்டத்தில் மாறுபடுகின்றன. புரட்சியின் ஜனநாயக கட்டத்தில் நம்மோடு இணைக்கப்படும் அனைவரும், புரட்சியின் அடுத்த கட்டங்களில் சேர்க்கப்பட வேண்டிய அவசியமில்லை. தன்னை சோஷலிஸ்ட் என்று அறிவித்துக்கொள்ளும் ஒரு வெகுஜன ஸ்தாபனம், புரட்சியின் தற்போதைய கட்டத்தில் பங்காற்ற வேண்டிய பிரிவினரை விலக்கியிருந்தால், அது தனக்கும், புரட்சி இலட்சியத்திற்கும் தீங்கிழைத்துக்கொள்கிறது. உதாரணமாக, சோஷலிஸத்தை உறுதியாக ஏற்றுக்கொண்டுள்ள ஒரு வாலிபர் அல்லது மாணவர் அல்லது மாதர் ஸ்தாபனம், உழைக்கும் வர்க்கங்களிலிருந்து வரும் மாணவர் போன்றோரை மட்டுமே தன்னுடைய உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளும் என்று அறிவித்தால் அது மிகவும் தவறாகும். நமது சில அகில இந்திய வெகுஜன ஸ்தாபனங்கள் சோஷலிஸத்தை தங்களது அமைப்புச் சட்டத்தில் சேர்த்துள்ளன. நமது கட்சித்

திட்டமே போராட வேண்டிய உடனடிக் குறிக்கோளாக சோஷலிஸத்தை முன்வைக்கவில்லை. அது தற்போதைய கட்டத்தை மக்கள் ஜனநாயகக் கட்டம் என்று கணிக்கிறது. மிகப் பெரும்பாலான சிறிய உற்பத்தியாளர்களையும் அவர்களது நிலப்பசியையும் கணக்கிலெடுத்துக்கொண்டு 'உழுபவனுக்கு நிலம் மறுவிநியோகம்' செய்யப்பட வேண்டும் என்ற கோஷத்தை கொடுக்கிறதே தவிர, நிலங்களைத் தேசியமயமாக்க வேண்டும் என்ற குரல் கொடுக்கவில்லை. சோஷலிஸம் என்ற நேரடி கோஷத்தின் மூலம் ஒரு பிரம்மாண்டமான வெகுஜன ஸ்தாபனத்தை இன்று கட்டிவிடலாம் என்று நினைப்பது, தவறானது மட்டுமின்றி புரட்சியின் கட்டம் பற்றி கட்சியின் கருத்தை மீறுவதாகும்.

ஆயினும், நமது நாட்டில் சோஷலிஸம், பூர்ஷ்வா கட்சிகளால்கூட அவர்களது இலட்சியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டது. அவர்களுடைய வார்த்தைகளிலும், பொதுவாகவும், அது (சோஷலிஸம்) தீவிரமான ஜனநாயகம், தற்போதைய அமைப்பில் தீவிரமான சீர்திருத்தம், ஆகியவை தவிர வேறெதையும் குறிக்கவில்லை. நம்மைப் பொறுத்த வரை சோஷலிசத்தை லட்சியமாகக் கொண்டுள்ளோம். ஆனால் அது உடனடியாக அடையக் கூடியது என்றோ நமது உடனடிப் போராட்டங்கள் அதனைக் குறியாக்கொண்டிருக்க வேண்டுமென்றோ நாம் கருதவில்லை. நமது வெகுஜன ஸ்தாபனங்கள் அதனை உடனடி லட்சியமாகவும் முன் வைக்கவுமில்லை. ஆனால் சோஷலிச பிரச்சாரம் நமது இயக்கத்தில் இடம் பெற வேண்டும்.

ஆனால், கம்யூனிஸ்ட்டுகள் என்ற முறையில், நாம் வெகுஜன ஸ்தாபனங்களின் அமைப்புக் கட்டங்களில் அறிவிக்கப்பட்ட சோஷலிஸக் குறிக்கோள்களை தீவிரமாக பாவித்து, சோஷலிஸத்தின் ஒரு உண்மையான, சரியான பொருளை பிரச்சாரம் செய்யும்போதும், இந்த சரியான பொருளோடு ஸ்தாபனத்தைச் சம்பந்தப்படுத்திப் பார்க்கும்போதுதான் தொல்லை ஆரம்பமாகும்.

உதாரணமாக, சோஷலிஸத்தை அதனுடைய அமைப்புச் சட்டத்தில் அறிவிக்கப்பட்ட கொள்கைகளைக் கொண்டுள்ள ஒரு வாலிபர் அல்லது மாணவர் அமைப்பை எடுத்துக்கொள்வோம். சோஷலிஸத்திற்கும் நிலம் உட்பட அனைத்து

உற்பத்தி சாதனங்களும் சமுதாய உடைமையாக்கப்பட வேண்டும். இந்த விஞ்ஞான சோஷலிஸம் எந்த அளவிற்கு விவசாயிகள் அல்லது விவசாயத் தொழிலாளர்கள் குடும்பங்களிலிருந்துகூட வருகின்ற பெருந்திரளான வாலிபர்களைக் கவரும்? புரட்சியின் பிரதான கடமை, ஜனநாயகமாக இருக்கும்போது, சோஷலிஸத் தோற்றங்களும், கோஷங்களும், ஜனநாயகப் புரட்சிப் படையின் ஒரு பகுதியாக விளங்குகிற வெகுஜனங்களின் ஒரு பிரிவினரை ஆகர்ஷிக்கத் தவறுகிறது.

ஆயினும், நமது வெகுஜன ஸ்தாபனங்களின் நடைமுறை அறிவு, அவர்களை இந்தத் தவறுகளைச் செய்வதிலிருந்து தடுக்கிறது. சோஷலிஸம் பற்றிய பிரச்சாரமும் விளக்கமும் பொதுவான விளக்கத்திற்குமேல் போகவில்லை. சோஷலிஸத்தையோ அல்லது அரசியல் பிரகடனம் முழுமையையும் ஏற்றுக்கொண்டவர்களுக்குள் உறுப்பினர்கள் பதிவு கட்டுப்படுத்தப்படவில்லை. பொதுவான அன்றாடப் போராட்டங்களில் முக்கியத்துவம் குறைக்கப்படவில்லை. வாழ்க்கையின் யதார்த்தங்களும், வர்க்க நிலைமையின் யதார்த்தங்களும் ஸ்தாபனத்தின் தலைவர்களை சரியான பாதையில் நிறுத்தியுள்ளன.

வெகுஜன ஸ்தாபனங்களில் ஜனநாயகம்

வெகுஜன ஸ்தாபனங்கள், அவற்றின் பொறுப்புகளை நிறைவேற்ற முழுமையான ஜனநாயகம் அமுலாக்கப்படுதல் அவசியம். மக்களின் முழு முன்முயற்சியையும், ஸ்தாபனத்தின் கொள்கைகளை உருவாக்குவதிலும், போராட்டம் பற்றிய முடிவுகளை எடுப்பதிலும், 'வெகுஜன நடவடிக்கைகளிலும் உணர்வுபூர்வமாக பங்கெடுக்கும் வகையில் செயல்பட வேண்டியது அவசியமாகும். முடிவுகள் எடுக்கும் அதிகாரம் அனைத்தும் ஒரு சிறிய தலைவர்களின் குழுவின் கையில் வைத்துக்கொண்டு, பெரும்பான்மையான உறுப்பினர்கள் வாயற்ற வெறும் பார்வையாளர்களாக இருக்கும்படி குறைத்துவிடக்கூடாது. வேலை நிறுத்தங்கள், பிரச்சாரம், ஆர்ப்பாட்டங்கள் போன்ற வெகுஜன நடவடிக்கைகளின்போது, 'வேலை நிறுத்தக் கமிட்டிகள்' போன்ற பரவலான கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும். இது மிகவும் தேவை. ஏனெனில், வெகுஜன ஸ்தாபனங்களின் இப்படிப்பட்ட வெகுஜனப் போராட்டங்

கள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் அணிகள் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 23-வது மாநாட்டில் பொதுச் செயலாளர் அறிக்கை சுட்டிக் காண்பிக்கிறது. "சாதாரண விவசாயிகள் முடிவுகளைச் செய்வதிலும், கோரிக்கைகளை வகுப்பதிலும், போராட்டங்களை நடத்துவதிலும் ஜனநாயக ரீதியாக பங்கேற்கும்படி செய்யும் அளவிற்கு நமது நடவடிக்கைகள் ஒழுங்குபடுத்தப்படவில்லை. நமது சொந்தமான நடவடிக்கைகள் மூலமாக நம்மை நோக்கி ஏராளமான மக்களை ஈர்க்க முடிந்தாலும்கூட, நம்முடைய செயல்பாட்டின் தன்மை, ஸ்தாபனத்தின் தலைவர்களாகிய நமக்கும், மக்களுக்கும் இடையில் தடுப்பை உருவாக்கியுள்ளது. அவர்கள், ஸ்தாபனத்தை நடத்திச் செல்வதில் மேலும் அதிகமான ஆர்வம் காட்டத் தடுக்கப்படுகிறார்கள். இந்தத் தடுப்புகள் உடைக்கப்பட்டாலன்றி, சாதாரண விவசாயிகள் நமது ஸ்தாபனத்தை அவர்களுடைய சொந்த ஸ்தாபனமாக கருத மாட்டார்கள். இப்படியே நீடித்தால் உறுப்பினர் எண்ணிக்கை வேகமாக உயர்வது என்பது சாத்தியமல்ல."

ஒரு சிறிய தலைமைக்குழு ஒரு வெகுஜன ஸ்தாபனத்தின் முழு வாய்ப்புகளையும் விரிவாக்குவதில் எப்போதும் வெற்றி பெறாது.

நமது வெகுஜன ஸ்தாபனங்கள் வேகமாக வளர்வதற்கான ஏராளமான வாய்ப்புகள் இருப்பதால் இவற்றை நாம் நினைவில் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

தொழிற்சங்கங்களில், குறிப்பாக நமது செல்வாக்கிற்கு ஏற்ப நமது திரட்டப்பட்ட பலம் இல்லை., சரியான மார்க்சீய- லெனினிய முறைப்படி பார்த்தால், பொதுவாக ஜனநாயக ரீதியிலான செயல்பாடு இல்லை. தலைமை அமைப்புகளில் மிகப் பெரும்பான்மை பெற்றிருப்பதோடு, கட்சி உறுப்பினர்கள் அந்த ஸ்தாபனத்தின் பரந்த தன்மையை மறக்கத் தொடங்கிவிடுகின்றனர். இது தொழிற்சங்கங்களில் மட்டும் எழவில்லை. முடிவுகள் செய்வது உட்பட வெகுஜன ஸ்தாபனங்களின் நடவடிக்கைகளில் கட்சி சாராத; மக்களை ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தை முழுமையாக உணர்ந்து நாம் செயல்படுவதாக கூறமுடியாது.

இந்த ஸ்தாபனங்களில் சிலவற்றுள் சில இடங்களில்

அதிகார வர்க்க மற்றும் ஜனநாயகமற்ற செயல்பாடுதான் கட்சியின் கட்டுப்பாடு, வழிகாட்டுதல் என்று வலுவாக நம்பப்படுகிறது.

சோஷலிஸ உணர்வு

வெகுஜன ஸ்தாபனங்களின் பரந்த தன்மையை ஒட்டி, அதற்குரிய நோக்கங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று கூறினால், அப்படியெனில் "சோஷலிஸ உணர்வை" உருவாக்கத் தேவையில்லையா என்ற கேள்வி எழும்.

சோஷலிஸ உணர்வு உருவாக்கபடவில்லையெனில் நாம் வெகுஜன ஸ்தாபனங்களைக் கட்டுவதிலேயே அர்த்தம் இல்லை. அது மட்டுமின்றி சீர்திருத்தவாதிகளுக்கும் நமக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமலும் போய்விடும். ஆகவே, நாம் திரட்டும் வெகுஜனங்களிடம் சோஷலிஸ உணர்வு உண்டாக்கப் பாடுபட வேண்டும் என்பது பிரதான கடமையாகும்.

ஆனால், சோஷலிஸ உணர்வென்றால் என்ன என்பதும்; அதனைச் செய்வது யார்? கட்சியா – வெகுஜன ஸ்தாபனமா? என்ற கேள்விகளும் அதற்குரிய பதில்களும் முக்கியமானவை.

சோஷலிஸ உணர்வென்றால் என்ன என்பது குறித்து தோழர் லெனின் கூறுவதைப் பார்ப்போம்.

"எந்த வர்க்கம் பாதிக்கப்படுகிறதானாலும், சரி, கொடுங்கோன்மை, ஒடுக்குமுறை, வன்முறை, அநீதி சம்பந்தப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் பதில் நடவடிக்கை எடுக்க தொழிலாளி வர்க்கம் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அதுவும், சமூக–ஜனநாயக பார்வை நிலையிலிருந்து பதில் நடவடிக்கை எடுக்க பயிற்றுவிக்கப்பட வேண்டும். இல்லையெனில், தொழிலாளி வர்க்க உணர்வு உண்மையான அரசியல் உணர்வாக இருக்க முடியாது. இதர வர்க்கங்கள் ஒவ்வொன்றையும் அதனதன் அறிவுத் துறை, ஒழுக்கத் துறை, மற்றும் அரசியல் துறை வாழ்வில் உள்ள அனைத்து வெளிப்பாடுகளையும் வைத்து கணிப்பதற்கு தொழிலாளி வர்க்கம் கற்றுக்கொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நம் அரசியல் நிகழ்ச்சிகளிலிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் உழைக்கும் வெகுஜனங்களின் உணர்வு உண்மையான வர்க்க உணர்வாக இருக்க முடியாது".

அதாவது, "வாழ்க்கை மற்றும் செயல்பாடு சம்பந்தப்பட அனைத்து அம்சங்களைப் பற்றிய பொருள்முதல்வாத ஆய்வையும், பொருள் முதல்வாத மதிப்பீட்டையும் நடைமுறையில் செயல்படுத்த தொழிலாளிகள் கற்றுக்கொள்ளாவிட்டால், உழைக்கும் மக்களின் உணர்வு உண்மையான வர்க்க உணர்வு ஆக முடியாது."

(என்ன செய்ய வேண்டும்? லெனின்)

மேலே கூறிய லெனினின் சோஷலிஸ உணர்வு பற்றிய வர்ணனையின் பொருள் என்ன? சோஷலிஸ உணர்வு என்பது தொழிற்சங்கத்தாலோ, இதர வெகுஜன ஸ்தாபனங்களாலோ உருவாக்கப்படுவதல்ல. மாறாக, இது கட்சியால் உருவாக்கப்பட வேண்டியது. கட்சியால் மட்டுமே உருவாக்கப்பட வேண்டியது ஆகும்.

இப்படி, கட்சி செய்ய வேண்டிய இந்த மிக முக்கிய பணியில் பெரும் பலவீனம் இருக்கிறது என "தொழிற்சங்க அரங்கில் நமது கடமை" எனும் தஸ்தாவேஜ் சுட்டிக் காட்டுகிறது.

இந்த பலவீனத்துக்கு பிரதான காரணம் என்ன என்பது பற்றியும் அந்த தஸ்தாவேஜ் சுட்டிக்காட்டுகிறது.

அதாவது, தொழிலாளி வர்க்கத்தின் இடையில் கட்சியின் நேரடி செயல்பாடு மிகவும் பலஹீனமாக இருப்பதே இதற்கு காரணம் என்றும், இந்தப் பணி தொழிற் சங்கத்திடம்–அதில் பணிபுரியும் சில ஊழியர்களிடமும் ஏறத்தாழ "குத்தகைக்கு" விட்டதுபோல் உள்ளது என்பதையும் அந்த தஸ்தாவேஜ் சுட்டிக்காட்டுகிறது.

இத்துடன் தொடர்புடைய இன்னொரு அம்சத்தையும் இங்கு கவனிக்க வேண்டும். கட்சியின் தலையீடு அல்லது செயல்பாடு என்றால் என்ன என்பதே அந்தப் பிரச்னை.

கட்சியின் செயல்பாட்டை தோழர் லெனின் இரண்டு பகுதியாக பிரிக்கிறார். அதில் ஒன்று கிளர்ச்சி, மற்றொன்று பிரச்சாரம்.

இரண்டிற்குமுள்ள வேறுபாடு குறித்து லெனின் கூறுவதாவது:

"வேலையின்மையைப் பற்றி பேசுகிற பிரச்சாரகர் நெருக்கடியின் முதலாளித்துவ அம்சம், சமுதாயத்தில் அவற்

றின் தவிர்க்க முடியாத நிலைமைக்கு காரணம், இச்சமுதாயத்தை சோஷலிச சமுதாயமாக உருமாற்ற வேண்டிய அவசியம் ஆகிய பற்பல விஷயங்கள் விவரமாக பேசவேண்டும். ஒப்புநோக்குகையில் ஒரு சிலரால் மட்டுமே முழுமையாக புரிந்து கொள்ளப்படும் என்றாலும் இந்த சர்வாசம் நிறைந்ததே பிரச்சாரம் ஆகும்''

இதற்கு நேர் மாறாக, "கிளர்ச்சியாளர்'' இதே பிரச்னையில் வேலையில்லாமல் உள்ள தொழிலாளர் குடும்பம் பட்டினியால் இறப்பது போன்ற பலரும் அறிந்துள்ள உண்மைகளை மக்கள் மத்தியில் விளக்கி இத்தகைய அநீதிக்கு எதிராக மக்களிடையே வெறுப்பையும், அதிருப்தியும் ஏற்படுத்தும்பணியை செய்கிறார். அவர் சமூக ரீதியான காரண-காரியங்கள் என்ற சர்வாம்ச விளக்கத்திற்கு செல்வதில்லை. அப்பணியை பிரச்சாரர்களுக்கு விட்டுவிடுகிறார்.''

லெனினிய நிர்ணயிப்பு அடிப்படையில் பார்த்தால் வெகுஜனங்களிடையே கட்சியின் பணி இன்று வெறும் கிளர்ச்சி என்ற மட்டத்தில்தான் நிற்கிறது என்பதை "தொழிற்சங்க அரங்கில் நமது கடமை'' என்கிற தஸ்தாவேஜ் சுட்டிக்காட்டுகிறது. இதில் ஒரு முறிப்பு ஏற்படுத்தாமல், வெகுஜனங்கள் மத்தியில் கட்சியின் பணியை பூரணமாக நிறைவேற்றுவதோ சோஷலிஸ உணர்வுகளை ஏற்படுத்துவதோ சாத்தியமே இல்லை.

இரண்டு திரிபுகள்: இத்தகைய நோக்குடன் செயல்படவேண்டும் எனும்பொழுது ஸ்தாபன ரீதியில் செயல்பாட்டில் உள்ளபலஹீனமும் கவனிக்கப்பட வேண்டும். "சால்கியா பிளீனம்'' இது பற்றி குறிப்பிடுகிறது:

"பல கமிட்டிகளும், தோழர்களும் வெகுஜன ஸ்தாபனங்களைக் கட்சியின் துணை அமைப்பு போல் கையாளுகின்றனர். அவற்றை ஜனநாயக ரீதியில் செயல்படுத்துவது பற்றி அசிரத்தை காட்டுகிறார்கள். அதே நேரத்தில் இன்னொரு போக்கும் காணப்படுகிறது. வெகுஜன ஸ்தாபனங்களை தலைமைதாங்கும் பல கட்சி உறுப்பினர்கள், அவற்றை சுயேச்சையாக கட்சியை ஒதுக்கித் தள்ளிவிட்டு செயல்படுத்துகிறார்கள்''. இந்த இரண்டாவது போக்கு கட்சியின் தலைமைப் பாத்திரத்தை கைவிட்டு, கட்சியின் கட்டுப்பாடு, பாதை ஆகியவற்றிலிருந்து விலகி சுயேச்சையாக இஷ்டம்போல் செயல்படுவது தவிர வேறொன்றுமில்லை.

முதல் போக்கு: வெகுஜன ஸ்தாபனங்களை கட்சியின் துணை உறுப்புகளாக பாவிப்பது, கட்சியின் வழிகாட்டும் பாத்திரம் என்ற கோட்பாட்டை மீறுவதாகும். புதிய தலைமையைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தப்பட்ட பிரச்னையாயினும் சரி, அல்லது கொள்கை சம்பந்தப்பட்ட முக்கிய பிரச்னையாயினும் சரி வெகுஜன ஸ்தாபனங்களுக்குள் முறையான ஆலோசனை நடத்தாமல், அந்த ஸ்தாபனத்தில் கட்சியின் முடிவை விவாதங்களின் மூலம் சோதிக்காமல், கட்சிக்குள் முடிவுகள் எடுக்கப்பட்டால் விரைவிலேயே அந்த ஸ்தாபனம் கட்சியின் 'பை' க்குள் போய்விடும். அதனுடைய உறுப்பினர்கள் உயிரோட்டமுள்ள சிந்தனையையும் அனுபவத்தையும் பிரதிபலிக்கத் தவறிவிடும்.

கட்சியின் வழிகாட்டும் பாத்திரம் என்பது ஒரு வழிப்பாதை இல்லை. கட்சி கொடுக்கும் முனையிலும், வெகுஜனங்கள் பெறும் முனையிலும் மட்டுமே எப்பொழுதும் இருப்பதில்லை. வெகுஜனங்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய தேவையும் கட்சிக்கு எப்பொழுதும் உண்டு. இதுபற்றி ஸ்டாலின் கூறுவதாவது:

இந்த பரஸ்பர உறவுகளைப் பற்றி லெனின், தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிக்கும், தொழிலாளர்-வெகுஜனங்களுக்கும் இடையிலான "பரஸ்பர நம்பிக்கை'' என்று விளக்குகிறார். இதன் பொருள் என்ன? முதலில், அதன் பொருள், கட்சி வெகுஜனங்களின் குரலுக்கு நெருக்கமாக செவி சாய்க்க வேண்டும்; அது வெகுஜனங்களின் புரட்சிகரமான நுண்ணுணர்வை சிரத்தையுடன் கவனிக்க வேண்டும். அது மக்களின் போராட்ட நடைமுறைகளை ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் அதனுடைய கொள்கையை சரியானதா என்று பரிசோதிக்க வேண்டும். இவற்றின் விளைவாக, அது மக்களுக்கு கற்பிக்க மட்டும் கூடாது. மக்களிடமிருந்து கற்கவும் வேண்டும்''.

"இரண்டாவதாக, அது நாளுக்கு நாள் கட்சி, பாட்டாளி மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க வேண்டும் என்று பொருள்படுகிறது. அது, தனது கொள்கை மற்றும் பணி மூலம் வெகுஜனங்களின் ஆதரவை பெறவேண்டும் அது ஆணையிடக் கூடாது மக்களின் நம்பிக்கையூட்டி, அவர்களது

சொந்த அனுபவம் மூலமே கட்சிக் கொள்கை சரியானது என்று உணர்த்த வேண்டும். இவற்றின் விளைவாக, வர்க்கத்தின் வழிகாட்டியாகவும், தலைவனாகவும், ஆசானாகவும் திகழ வேண்டும். இந்த நிபந்தனைகளை மீறுவது என்பது முன்னணிக்கும், வர்க்கத்திற்கும் இடையிலான சரியான பரஸ்பர உறவை கவிழ்ப்பதாகவும், பரஸ்பர நம்பிக்கையை சிறுமைப்படுத்துவதாகவும், கட்சிக் கட்டுப்பாட்டை குலைப்பதாகவும் அமையும்''

கட்சியின் வழிகாட்டும் பாத்திரம் பற்றி எந்தவிதமான சர்வாதிகாரக் கோட்பாடும் கட்சிக்கும், மக்களுக்கும் இடையிலுள்ள இணைப்பை துண்டித்துவிடும். ஆக, முதல்போக்கு அதாவது "கட்சித் தலைமையை'' எந்திரமயமாகப் பிர... ரயங் கிப்பது என்றும் அதன் மூலம் கட்சி வெகுஜனங்களி... அப்ப இருந்து தனிமைப்படும் அபாயத்தை உருவாக்குகிறது.

அதே நேரத்தில், இரண்டாவது போக்கு அத...ார்த்தால் வெகுஜன ஸ்தாபனங்கள் கட்சி வழிகாட்டுதல் இன்றி ச... வெறும் சையாக ஒரு சில தலைவர்களாலேயே நடத்தப்படும் எ... "தொழிற் என்ன விளைவை உண்டாக்கும் என்பதற்கும் சரித்திர... சுட்டிக் பாடங்களை போதித்திருக்கிறது. ...வெகுஜனங்

போலந்தில், தொழிற்சங்க இயக்கம் சுயேச்ை...றைவேற்று தென்று நடத்தப்பட்டது. அதன் விளைவு, அந்த அமைப...த்தி களே எதிர்ப் புரட்சிகளின் கூடாரங்களாக ஆன ச...த்திர... தைப் பார்த்தோம்.

கலாச்சாரப் புரட்சி காலத்தில், சீனத்தில் வெ... ...ல் கள் கட்சி வழிகாட்டுதலன்றி செயல்படுதல் என்பதன் ... பிளீ வென்ன என்பதையும் காண முடிந்தது.

இப்பொழுதும் சில சோஷலிஸ நாடுகளில் வெகு...ாபனங் ஸ்தாபனங்களில் கட்சியின் பாத்திரம் பற்றி ஏற்பட்டு ...ளுகின்ற சிக்கல்கள் என்ன விளைவை உண்டாக்கியுள்ளது என்ப...து பற்றி பார்க்க முடிகிறது.

இத்தகைய திரிபுகளைக் களைந்து கட்சி தனது உறு...னொரு பினர்கள் மூலம் முறையாகத் தலையிடுதலும், வெகுஜன... தலை பனங்கள் ஜனநாயகபூர்வமாக இயங்குவதை உறுதிய... சுயேச்சை ரவாதப்படுத்துவதுமான இந்த இரண்டும் சேர்ந்தே சர...ந்துகிறார் விரிவான வெகுஜன ஸ்தாபனங்களை உருவாக்க... தலைமைப் அதே நேரத்தில், அவற்றில் திரளும் மக்கள் உணர்வ...ாதை ஆகி சிறிதாக உயர்த்தி கட்சியைச் சுற்றி ஒரு கட்டத்தில் நி...ல் செயல் தும் சாத்தியமாகும்.